# சந்தனச் சிதறல்கள்



## கோகிலா மகேந்திரன்

கலை இலக்கியக்கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L 17129

# சந்தனச் சிதறல்கள்

## நாவல்

L
894.8113
கோகிலா

கொக்குவில் பொது நூலகம்
நல்லூர்

**கோகிலா மகேந்திரன்**

தெல்லிப்பழை
கலை இலக்கியக்கள வெளியீடு - 55
2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Santhanach Chitharalkal

Novel

Kohila Mahendran

Viliciddy, Viththakapuram, Tellippalai.

| | | |
|---|---|---|
| Copy right | - | Author |
| Language | - | Tamil |
| First Edition | - | 2018 December |
| Pages | - | 209 + xiv |
| Copies | - | 200 |
| Price | - | 600/- |
| ISBN | - | 978-955-7973-06-7 |
| Publishers | - | Lyceum of Literary and Aesthetic studies - Tellippalai. |
| Printing | - | Amma Achchakam, Inuvil. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

சிவத்தமிழ்ச் செல்வி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

ஈழநாடு

முரசொலி

தொண்டன்

திருமதி தாட்சாயணி

சைவப்புலவர் சு. செல்லத்துரை

கலை இலக்கியக்கள நண்பர்கள்

சுந்தரபாரதி– சிவமலர் தம்பதியினர்

நூலக திறுவனம்

அம்மா அச்சகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மருத்துவத் துறையில் கொடி கட்டிப் பறக்கும் எல்லா மருத்துவர்களாலும் நோயாளிகளின் மனதை விளங்கிக் கொள்ள இயலுவதில்லை. மனங்களென்பவை மிகவும் நுண்மையான சிக்கல் களைத் தம்மகத்தே கொண்டவை. மனவளக் கலை பற்றி அறிவதற்கு உண்மையிலேயே தம் ஆன்மாவை அதில் லயிக்க விட்டவர்களுக்கு மட்டுமே முடியும். அத்துறையிலே பயின்ற மருத்துவர்கள், உளவியலாளர்களும் கூட சில வேளைகளில் அப்படிப்பட்ட சிக்கலான முடிச்சுக்களை அவிழ்ப்பதில் திணறி விடுகின்றனர்.

ஒரு குறுநாவல் தொகுப்பிற்கும், உளவளத்துறைக்கும் என்ன தொடர்பு என நீங்கள் யோசிக்கின்றீர்கள். தொடர்பு இருக்கிறது. அதுதான் இந்தக் குறுநாவல்களை உருவாக்கி உயிர் கொடுத்த கோகிலா மகேந்திரனின் ஆளுமை. ஆரம்பத்தில் அவரை ஒரு கதாசிரியராகவே நான் அறிந்திருந்தேன். அதன் பின் அவரோடு பழகிய காலகட்டங்களில் உளவியலாளராகச் செயற்படுவதில் அவர் காட்டும் நாட்டம் எழுத்தாற்றலை விட விஞ்சியதாக இருப்பதை உணர்ந்து கொண்டேன். எழுத்தாளராகவும் உளவியலாளராகவும் இருப்பதன் விளைவு அவரது எழுத்துக்கள் தோறும் உளவியல் அனுபவங்கள் செறிந்திருப்பதும், உளவியல் தொடர்பான தொடர் கட்டுரைகளை இலக்கியமாக்குவதும் அவருக்கு மட்டுமே சாத்தியமாயிற்று என்பேன்.

உயிரியல் துறை சார்ந்த கல்வியைப் பயின்றிருப்பதன் காரணமாக அவரது எழுத்துக்களில் அறிவியல்பூர்வமான உண்மைகள் சுட்டப்படுவதைக் காணலாம். மருத்துவத்துறை சார்ந்த விடயங்கள் கூட உண்மைத்தன்மையோடு மிகவும் அனாயாசமாக இவரது எழுத்துக்களுள் கையாளப்படுகின்றன. இவரது சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றின் முற்போக்குச் சிந்தனைகளால் கல்வி பயிலும் காலத்திலேயே நான் ஈர்க்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை அவர் அசராமல் எழுதிவரும் உளவியல் தொடர்கட்டுரைகளும் அவர் மீதான பிரமிப்பை இரட்டிப்பாக்குகின்றன.

இந்நூலில் இடம்பெறும் நான்கு குறுநாவல்களும் 1980களில் கதாசிரியரின் இளமைக்காலத்தில் எழுதப்பட்ட கதைகள். இளவயதில் ஏற்படும் இலட்சியத்துடிப்பும், அறிவியல் ஆர்வமும் இக்கதைகளில் பிரதிபலிக்கின்றன. உரிய வகையில் செப்பனிடப்பட்ட கதைகளாக இப்போது வெளிவருகின்றன. இந்தக் கதைகளின் இறுதியில் ஒரு புதுமையைச் செய்திருக்கின்றார் கோகிலா. அதாவது 1980களில் இளமைத் துடிப்பிலிருந்த ஒவ்வொரு கதாபாத்திரங்களும் எந்தெந்த நாடுகளுக்கெல்லாமோ சிதறிப்போய் முப்பதாண்டுகளின் பின்னர் சொந்த ஊருக்கு மீளும் வகையில் அவர்களை ஒன்றுகூட வைத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களால் எடுக்கப்பட்ட முடிவுகள் இன்றைய நிலையில் அவர்களாலேயே மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் விபரிக்கப்படும் போது உண்மையிலேயே அந்தக் குறுநாவல்களின் முடிவில் ஏற்படாத நிறைவினை இத்தொகுப்பின் முடிவில் பெற்றுக்கொள்ளச் செய்யும் வகையில் புது முயற்சியாகவும் பாராட்டும் வகையிலும் அமைந்திருக்கிறது.

அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள ஒரு மனிதனது ஆயுள் போதாது என்பேன். அவ்வளவிற்கு உலகெங்கும் எத்தனையோ கோடி மனிதர்கள், எத்தனையோ மனங்கள், எத்தனையோ பிரச்சினைகள் எனக் காலந்தோறும் விரிந்துகொண்டே போகின்றன அனுபவங்கள். ஒரு மனிதனின் வேதனையை அவன் உணர்கின்ற அதே அளவிற்கு இன்னொருவனால் உணர்ந்துகொள்ள இயலாது. அதற்கு உரித்தான தீர்வையும் முன்வைக்க இயலாது. எனினும் அவனுடைய பிரச்சினைக்கான தீர்வுக்குரிய வழிகாட்டுதலை மட்டுமே ஏனையோரால் செய்ய இயலும். அவ்வாறாக இந்தக் குறுநாவல்களில் வருகின்ற பாத்திரங்கள் பல்வேறுபட்ட நெருக்குதல்களுக்கு உள்ளாகின்ற போதிலும், தாமே தமக்குள் உழன்று தமக்குரிய முடிவுகளை எடுத்துக் கொள்கின்றார்கள். சிலரது முடிவுகள் சரியாகவும், சிலரது முடிவுகள் தவறாகவும் இருக்கலாம். அவர்களது முடிவுகள், அவர்களது வாழ்க்கையை நடத்திச் செல்வதை ஒரு பார்வையாளராகப் பார்த்துக்கொண்டிருக்கவே நம்மால் இயலும்.

முதலாவது குறுநாவல் சந்தனச் சிதறல்கள். பல்கலைக் கழகத்தில் படிக்கின்ற காலத்திலே ஒரு பெண்ணின் மனதில் தோன்றுகின்ற உணர்வுகள், அவள் தன்னை அறிவியல் ரீதியாகப் பகுப்பாய்கின்ற முறை, நிலை, அறிவியல் ரீதியான முடிவில் அவள் திருப்தியுறாமல் விட்டாலும், சமூகப்பணியில் இணையும் விதத்தில் நிறைவடைகின்ற கதை அவளை இறுதிவரை சமூகப் பணியிலேயே இணைத்துவிட்டதை நூலின் பிற்தொகுப்பிலிருந்து அறிய முடிகின்றது. அந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள், யுத்தத்தின் அலைக்கழிப்பு என்பன இடையிடையே கதையோட்டத்தோடு கலந்து, காலத்தின் கண்ணாடியாகப் பிரதிபலிக்கின்றன.

மேலும், இக்கதையில் வரும் கிருப்ஸ் சாதாரண ஆசாபாசங்களுள்ள ஆண் வர்க்கத்தின் பிரதிநிதி ஆகவும், கிறிஸ்தோபர் ஒருவிதத்தில் மனநலக்கூறில் ஏதோ ஓர் அம்சம் பாதிக்கப்பட்டவனாகவும் உலா வருகின்றனர். அவ்வகையிலான மனங்களைக் குறுக்காக வெட்டி வாசகர் பார்வைக்கு வைப்பதற்கு கோகிலா மகேந்திரனால் மட்டுமே முடிவதற்கு அவரது உளவியல் பார்வையே காரணம் என்பதையும் உணர முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குறுநாவலின் பிரதான பாத்திரமான மேரி படிக்கும் காலத்தில், அதாவது சிறு வயதிலிருந்தே வசதிவாய்ப்புள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளாயிருக்கின்றாள். வறுமை அவளைப் பாதித்ததில்லை. கல்வியிலே கூட அவள் விரும்பிய மருத்துவத் துறையைத் தெரிவு செய்யும் வகையில் அறிவாற்றல் பெற்றிருக்கின்றாள். பல்கலைக்கழக வட்டத்திலேயே மிகவும் அழகானவளாக இளைஞர்களால் சுட்டப்படுகின்றாள். கூடப்படிக்கும் ஒருவனாலேயே காதலிக்கப்படுகின்றாள். சமூகத்தில் இம்மூன்று விடயங்கள் தொடர்பான ஏக்கத்தோடு எத்தனையோ பெண்கள் இருக்கையில் இம்மூன்று விடயங்களின் நிறைவோடு தனக்குரிய நிம்மதியையும், நிறைவையும் அவளால் ஏன் பெற்றுக்கொள்ள முடியவில்லை? ஒவ்வொரு மனமும் விசித்திரமான சிந்தனை அடுக்குகளால் நெய்யப்பட்டிருக்கின்றது என்பது இவரது கதையின் ஒவ்வொரு கதாபாத்திரங்களினூடாகவும் புலப்படுகின்றது.

அடுத்த குறுநாவல் நிர்ப்பந்தங்கள். இந்தக் கதையிலும் பல்கலைக்கழக வாழ்க்கையில் நிகழும் சம்பவங்கள் பின்னப்படுகின்றன. முதலாளித்துவத்தின் பிரதிநிதியான மஞ்சுவின் தந்தை. தொழிலாளர் பிரதிநிதியான வேலு. இவர்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகள். வசதியான வாழ்க்கைக்குள் இருந்துகொண்டே பெற்றோரின் பாசத்தை அறியாமல் ஏங்கும் மஞ்சு, தாயின் இறப்போடு தனித்துவிடப்பட்டு, தந்தையின் அதிகார முதலாளித்துவத்திலிருந்து, வேலுவின் இலட்சியங்களால் ஈர்க்கப்பட்டு வெளியேறுவது சற்றே சினிமாப் பாணியாகவிருந்தாலும், அந்தக் கரு தோன்றிய ஆண்டு 1980 என்பதும், அந்தக் கதைக்கு வலுச் சேர்க்கும் வேலுவின் நயமான பேச்சுத்திறனும், அவனது உதாரணங்களும், மஞ்சுவின் முடிவிற்கு வலுச் சேர்க்கின்றன. உலகில் மேரிகளைப் போலவே மஞ்சுக்களும் வாழ்கின்றார்கள் என்பதைச் சிறப்பாக உணர்த்துவதில் கோகிலா பாரபட்சம் காட்டாமலே வெற்றி கண்டிருக்கின்றார்.

1987இல் வெளிவந்த குறுநாவல் வைகறை. ஒவ்வொரு மனிதனும் குழப்பங்கள் நிறைந்த புத்தகம் என்பதை இக்கதையினூடாகச் சொல்கின்றார் கதாசிரியர். உண்மைதான். அந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பங்கங்களின் குழப்பங்களை ஆராய்ந்து தீர்வு சொல்வதற்காகத்தான் இந்தக் கதையின் நாயகி கல்யாணி படைக்கப்பட்டிருக்கிறாள். அவளிடம் வருகின்ற நோயாளியாகிய சிவநேசன் இளமை வயது கடந்தவர். நோயாளி. சிகரெட்டிடம் அடிமையாகித் தன்னை அழித்துக்கொண்டிருப்பவர். கல்யாணி மருத்துவர் ஆகின்ற வரையில் எத்தனையோ இளைஞர்களைக் கண்டவள். அவர்களை ஆகர்சிக்கும் அழகு கொண்டவள். இருப்பினும் அவளது ஈர்ப்பு சிவநேசனை நோக்கியதாக இருக்கிறது. சிவநேசனைச் சூழ இருப்பது பூஞ்சோலை அல்ல. சிறு பற்றைக்காடுதான். எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைப் பூஞ்சோலை ஆக்கவென்று அவள் துணிந்துவிட்டாள். இதுதான் மனம். இதற்குள்தான் இத்தனை விசித்திரங்கள். அதனைக் கடைந்தெடுத்து நம்முன் காட்சிப்படுத்துகின்றார் கதாசிரியர்.

இறுதியில் 'பெண்பனை'. இக்கதை ஒரு பனைமரத்தின் சுயசரிதமாகத் தொடர்கின்றது. சரஸ்வதி விஜயராஜாவின் வாழ்க்கைக் கோலங்களை அணு அணுவாக அனுபவித்து அவளது துன்பங்களில் தானும் துன்புற்று அலைப்புறுகின்ற பெண்பனை, பெண் சுதந்திரம் பற்றியதான கேள்விகளை எழுப்புகின்றது. இளமை கொஞ்சும் காலத்தில் காதலித்து, காதலனின் சுயநலத்தின் வெளிப்பாட்டில் சுருங்கிப்போன ஓர் ஆளுமை மிக்க பெண்ணுக்குள் அடிக்குமேல் அடியாக எத்தனை வேதனைகள். ஒவ்வோர் அடியையும் தாங்கித் தாங்கி மேலே போகின்றாள். விருப்பமில்லாமலே அவள் மேல் திணிக்கப்படும் தாய்மை, எவ்வளவுதான் பெண்ணுரிமை பேசிக்கொண்டிருந்தாலும் ஒரு தனித்த இரவு அவளது இளமையைச் சூறையாடுகிறது. சமூகத்தில் குழந்தையின் பாதுகாப்புக்காகவும் கௌரவத்திற்காகவும் அவளது பெயரில் ஒட்டி வைக்கப்பட்ட விஜயராஜா. அதற்கு மேலாக விரும்பித் தத்தெடுத்த ஆண்பிள்ளை போதைக்கு அடிமையாகும் துயரம். எல்லாவற்றிலிருந்தும் விடுபட அவள் போராடும் தவிப்பு கதை முழுவதும் விரவியிருக்கின்றது.

இவ்வாறு நான்கு குறுநாவல்களினூடாக சமூகத்தில் தான் கண்ட பெண்களின் நிலைகளை மனோவியல் ரீதியாகப் பகுப்பாய்ந்து எளிமையான இனிய நடையில் சற்றும் சோர்வில்லாத வகையில் தமிழுக்கு வழங்கியுள்ளார் கோகிலா மகேந்திரன். அவரது பல்வேறுபட்ட ஆளுமையினூடாகக் கிடைத்த இந்நூல் ஒரு காலகட்ட யாழ்ப்பாணத்து வாழ்வை, அதன் காலப்பின்னணி சிதறாமல் ஆவணப்படுத்தியுள்ளது எனலாம். அவ்வகையில் இந்நூல் அவரது எழுத்தாளுமையின் வளர்ச்சிப் போக்கின் பாங்கினைச் சுட்டி நிற்கின்றது. இந்தக் காலகட்டத்தின் பின்னராக அவரது எழுத்துக்கள் எவ்வளவோ வெளிவந்துவிட்ட போதிலும் ஆரம்பகால எழுத்துக்களை அவற்றின் உயிர்ப்போடு ஆவணப்படுத்துவது அவசியமான ஒன்று. அவ்வகையில் காலத்தின் கண்ணாடியாக இக்குறுநாவல்கள் அமைவதை எந்தக் காலகட்டத்திலும் உணர்ந்துகொள்ள முடியும். இத்தகைய ஒரு எழுத்தாளுமையின் அனுபவங்களிடமிருந்து இன்னும் பல நாவல்களை தமிழ் இலக்கிய உலகம் எதிர்பார்த்திருக்கின்றது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.

வாழ்த்துக்களுடன்
**தாட்சாயணி**

பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
14.11.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கலை இலக்கியக் களத்தின் 32 ஆண்டுகாலக் கலை இலக்கியப் பணிகளில் முக்கிய நிகழ்வாக நூறாவது ஒன்றுகூடல் நடைபெற இருக்கிறது. இவ்வேளை கலை இலக்கியக் களத்தின் 55ஆவது நூல் வெளியீடாகக் கோகிலா மகேந்திரனின் "சந்தனச் சிதறல்கள்" என்னும் நாவல் மலர இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

கோகிலா மகேந்திரன் அவர்கள் இந்த நாட்டின் மூத்த எழுத்தாளர். பன்முகத் திறமையும் படைப்பாற்றலும் நுண்ணறிவும் மிக்கவர். எழுத்துத் துறைக்குப் பெறக்கூடிய அத்தனை விருதுகளையும் பெற்றுக் கலைப்பிரவாகமாக எம்முன் வாழ்பவர். இவர் கலை இலக்கியக் களத்தின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை இணைச் செயலாளராக இடையறாப் பணி புரிவது களத்திற்குக் கிடைத்த பெரும் பேறு ஆகும்.

இவரது கற்பனைத் திறனும், புதுமைகாணும் பண்பும் யாவராலும் நன்கு அறியப்பட்டவை. "சந்தனச் சிதறல்கள்" என்னும் இந்த நாவலில் புதுமையிற் புதுமையான கற்பனையைக் காணமுடிகிறது.

1980இல் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த "நிர்ப்பந்தங்கள்", 1987இல் முரசொலிப் பத்திரிகையில் வெளிவந்த "வைகறை", 1988இல் தொண்டனில் வெளிவந்த "சந்தனச் சிறதல்கள்", 1990இல் எழுதப்பட்ட "பெண்பனை" ஆகியன சங்கமமாகி ஒரு நாவலாக உருவாக்கப் பட்டுள்ளன. முத்தாய்ப்பு வைத்ததுபோல நான்கையும் இணைத்துக் காட்டும் இன்றைய முடிப்பு வியக்கத்தக்கது. இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் வேண்டிய வழிகாட்டல் இதில் பொதிந்துள்ளது. நான்கு தனித்தனியான வண்ண மாலைகள் ஒரு அழகிய குஞ்சத்தில் இணைக்கப்பட்டு முழுமாலையாகத் திகழ்வதுபோல இருக்கிது இந்த நாவல்.

1980இல் பேராதனைப் பல்கலைக்கழகப் பின்புலத்தில் மலர்ந்த மஞ்சுவும் 1987ல் யாழ்ப்பாண வைத்தியசாலையில் மலர்ந்த கல்யாணியும், 1988இல் யாழ் பல்கலைக் கழகப் பின்புலத்தில் மலர்ந்த மேரியும் 1990இல் யாழ்ப்பாணத்தின் ஒரு குக்கிராமத்தில் மலர்ந்த சரஸ்வதியும் காலத்தின் சுழற்சியினால் எங்கெங்கோ புலம்பெயர்ந்து, உருமாறித் தடுமாறித் தத்தம் குடும்பத்தினருடன் சொந்த ஊரில் வந்து சங்கமமாகிப் புதியதோர் உலகம் படைக்கத் திட்டம் தீட்டி ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கத் தொடங்கும் முடிப்பு, அல்லற்பட்டு ஆற்றாது அவதியுறும் நம்மவர்க்கு மன ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் மொழிநடை தனித்துவமானது. மற்றவர்களால் பின்பற்றுதற்கரியது. விஞ்ஞானம், மருத்துவம், உளவியல், சமூகவியல், சமயம் கலந்த நுண்ணிய கருத்துக்களை லாவகமாகச் சொல்லும் ஆற்றல் மிக்கது, வாசகர் கற்பதற்குரிய பல்துறைசார் கருத்துக்களமாக இந்த நாவல் அமைந்துள்ளது. ஆசிரியரின் கற்பனையை மட்டுமன்றி ஆழ்ந்த அகன்ற அறிவுத் திறனையும் இது காட்டுகிறது.

நாவல் கற்பனையேயானாலும் உண்மையில் நடப்பது போலவே எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் வாசகர் மனதில் பதியும் பண்பு உடையது. இன்றைய தமிழர் செய்யவேண்டியது என்ன என்பதற்கு நல்ல வழிகாட்டியாகவும் இருப்பது "கலை பொழுது போக்கல்ல வாழ்வுக்கு" என்பதை மெய்ப்படுத்துகின்றது.

கலை இலக்கியக்களம் தனது நூறாவது ஒன்றுகூடலில் "சந்தனச் சிதறல்கள்" எனும் மங்கலப் பெயரில் அமைந்த இந்த நாவலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.

01.11.2018

**கலாபூஷணம்**
**சைவப்புலவர் சு.செல்லத்துரை**
**தலைவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

க.பொ.த. சாதாரணதரம் படித்த காலத்தில் "மலர்களைப் போல் தங்கை" என்ற குறுநாவலை எழுதினேன். அது எங்கும் பிரசுரமாகவில்லை. சறோ, கலா, இந்திராணி போன்ற எனது வகுப்புத் தோழிகள் மட்டும் வாசித்தனர். ஆயினும் அன்றுமுதல் இன்றுவரை எழுதுவது என்று வந்துவிட்டால் உன்னிப்பாக (flow) அதைச் செய்வேன். அது என் மனதுக்குச் சாந்தி தருகிறது. இந்த நாட்டில் நாம் சந்தித்த பெரும் அனர்த்த காலங்களில் எழுத்தும், நாடகமும் எனக்கு உதவியிருக்கிறது என்பது சர்வ நிச்சயம். வாசகர்களுக்கு உதவியது பற்றிக் கூறுவது அவர்களின் வேலை. ஒருவருக்காவது உதவியிருந்தால் மகிழ்வேன்.

எண்ணங்களோடு வேலை செய்வது தொடர்பில் இப்போது நான் அதிகமாக வாசிக்கிறேன், படிக்கிறேன். விரும்பியவர்களுக்குக் கற்பிக்கிறேன். எண்ணங்களே எமது உணர்வுகள், நடத்தை ஆகியவற்றில் பிரதான பங்கு வகிக்கிறது. எண்ணங்களைக் கையாள்வதில் சிரமம் இருக்கும்போது அவற்றைப் புறத்தேற்றம் செய்வது ஆரோக்கியமான முறை. அது எவ்வளவு கலையழகுடன் வெளிப்படுகிறது என்பது குறித்து விமர்சகர்கள் பேசட்டும். அது அவர்களின் பணி.

'சந்தனச் சிதறல்கள்' என்ற இந்த நாவலில் இணைக்கப் பட்டுள்ள நாலு குறு நாவல்களும் 1980-1990 காலப்பகுதிகளில் எழுதப்பட்டவை. அவை தொலைந்துபோயின என்று நம்பியிருந்தேன். அவுஸ்திரேலியாவில் இருந்து திரும்பிய பிறகு பல வகைகளில் அவற்றைத் தேடி, தொலைந்த அத்தியாயங்களைத் திரும்ப எழுதி இணைத்து அவற்றுக்கு ஒரு நிறைவு அத்தியாயம் எழுதி நாவலாக்கி உள்ளேன்.

பாத்திரங்களின் செயற்பாடுகளில் ஓரளவு யதார்த்தப் பண்புடன் வசனநடையில் எழுதப்படும் ஒரு நூல் என்று சொல்லக்கூடிய அளவு நீளமான படைப்பு நாவல் என வரைவிலக்கணப் படுத்தப்படுமானால் இது நாவல் என்பதில் எனக்கு ஐயமில்லை. அதுவே காத்திரமான, சிறந்த நாவலாக அமைய வேண்டுமாயின் வாசகரை ஈர்க்கும் தன்மை, சுயமான வார்ப்பு, மனதில் காட்சிகளைப் படிமமாக்கும் இயல்பு, உணர்வுகளின் குவிப்பு, உண்மையும் தனித்துவமும் கொண்ட மூலகங்கள், உலக மாந்தர் அனைவருக்குமான பொதுப் பண்புகள், வாசகர் மனதில் "இப்படி இருந்திருந்தால்...?" என்று அமையும் வினா போன்ற அம்சங்கள் விசேடத்துவத்துடன் காணப்படும். அதைப்பற்றி நாவல் பற்றிக் கூறும் தகைமையுடையோர் பேசட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வயது இப்போது 'முதுமை'க்குள் வந்துவிட்டது. முதுமை படைப்பாற்றலைக் குறைப்பதில்லை என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். முதுமை ஆக்கத்திறனைப் பாதிப்பதில்லை என்று ஆய்வுகள் கூறினாலும் மூளையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சொற்களஞ்சியத்தில் இருந்து பொருத்தமான சொற்களை, சொற்றொடர்களைத் தெரிவு செய்வதில் முதுமை பாதிப்பை ஏற்படுத்தத்தான் செய்கிறது. மொழி சரளமாய், ஆற்றொழுக்காய் ஓடிவர முதுமை தடை விதிக்கிறது.

மொழி ஆற்றலுக்கும் பாரம்பரியக் காரணிகளுக்கும் தொடர்பு உண்டு என்கிறது விஞ்ஞானம். எனக்குத் தாய் வழியிலும், தந்தை வழியிலும் அந்தக் காரணிகள் அமைந்த நிகழ்தகவுக்கு இறைவனுக்குத் தான் நன்றி சொல்லலாம். மொழிவளம் சூழலால் மேம்படுகிறது என்பதைக் கருத்தில் எடுக்கும்போது எனது ஆசிரியர்கள் - கவிஞர். செ.கதிரேசர்பிள்ளை முதல் பண்டிதர் க.சச்சிதானந்தன் வரை நினைவில் வருவது தவிர்க்க முடியாதது. பேராசிரியர் நா.சுப்பிரமணியன் முதல் புலவர் ம.பார்வதிநாதசிவம் வரை எமது குடும்ப நண்பர்களாக இருந்த தமிழ் அறிஞர்களும், தமது நூல்கள் ஊடாக என்னோடு இன்றுவரை தொடர்பில் இருக்கும் தமிழ், ஆங்கில வல்லுநர்களும் எனது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தியிருப்பது அதிர்ஷ்டம்.

நாவலோ, குறுநாவலோ, சிறுகதையோ யதார்த்தப் பண்புடன் அமைவது சிறப்பு என்பது அநேகமாக எல்லோருக்கும் தெரியும். நாங்கள் யாரும் முற்றிலும் கற்பனையில் ராஜா ராணிக் கதைகள் அல்லது பேய், பிசாசுக் கதைகள் எழுதுவதில்லை. ஆயினும் ஒரு படைப்பில் இருக்கும் அனைத்து விடயங்களும், பாத்திரங்களும் வரிக்கு வரி உண்மையாக இருக்கும் என்ற சிந்தனைப் போக்கு அண்மைக் காலமாக எமது இலக்கிய உலகில் அதிகரித்திருப்பதாக எனக்குத் தெரிகிறது. பெயர் முதல் சம்பவங்கள் வரை அனைத்தும் அப்படியே எழுதப்பட்டால் அதற்குப் பெயர் "சரித்திரம்" அல்லவா? நவீனம் ஒன்றில் எது புனைவு, எது கற்பனை, எது சுய அநுபவம், எது பிறரிடம் கண்டது, கேட்டது, எது ஊகம் என்று பிரித்தறிய முடியாத முழுமை இருப்பதே சிறப்பு என்பது எனது கருத்து. எனது சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்களில் அப்படியே செய்து வந்திருக்கிறேன்.

இந்த நாவலுக்கு மிகக் குறுகிய கால இடைவெளியில் முன்னுரை வழங்கிய சங்கானைப் பிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் (தாட்சாயணி) புகழ் பூத்த பெண் எழுத்தாளர். அவருக்கு என் அன்பும் நன்றியும் சென்று சேரட்டும்.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தின் நூறாவது நிகழ்வில் வெளியிடப்படும் இந்நாவலுக்குப் பதிப்புரை வழங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தின் தலைவர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் எனது கலை இலக்கிய முயற்சிகள் அனைத்திலும் ஊக்கம் தருபவர். அவருக்கான நன்றி இதய பூர்வமானது.

அம்மா அச்சகம் தவிர இன்னொரு இடத்தில் நூல் செய்வதில் உள்ள இடர்பாடுகள், துன்பங்கள் எனக்கு நன்கு தெரியும். அதனால்தான் அம்மா அச்சகத்தை நாம் சிக்கெனப் பற்றிக் கொண்டோம். முக்கியமாக அவர்களின் "வாக்கு மாறாத விழுமியம்" இன்று காண்பதற்கு அரிதானது. நன்றி என்ற வார்த்தை எனது கருத்தை நிறுவிடப் போதாது.

வாசக நண்பர்களே, உங்கள் விமர்சனங்களை எதிர் பார்க்கிறேன்.

அன்புடன்

17.11.2018

**கோகிலா மகேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்கிடக்கை


| | | |
|---|---|---|
| முன்னுரை | | v |
| பதிப்புரை | | ix |
| என்னுரை | | xi |
| பகுதி 1 - | சந்தனச் சிதறல்கள் | 01 |
| பகுதி 2 - | நிர்ப்பந்தங்கள் | 62 |
| பகுதி 3 - | வைகறை | 92 |
| பகுதி 4 - | பெண்பனை | 143 |
| பகுதி 5 - | 2018இல்... | 202 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்தனச் சிதறல்கள்

## 1

மழை பெய்து புழுதி அடங்கி உலகை இனிமை போர்த்தாற் போல இருக்கிறது.

யாழ் பல்கலைக் கழகத்தின் நடுவே அழகாய் உயர்ந்து நிற்கும் கைலாசபதி அரங்கு!

'மணி பிளான்ற்ஸ்' பசுமைகளின் பின்னணியில், அரங்கின் தெற்குப் புறமாக நீண்டு செல்லும் நடைபாதை வழியே நடந்து செல்லும் மாணவர் கூட்டம் ஒன்று 'கன்ரீனை' அடைகிறது.

திருத்தி ஒழுங்கு செய்த புருவமும், அடி வயிற்றில் இறங்கிவிட்ட - இறக்கி விடப்பட்டுப் பின் பண்ணப்பட்ட சேலையும், 'குறொப்' வெட்டப்பட்ட தலைகளுமாகப் பல நாகரிகப் பெண்கள் உருவங்களாக அக்கூட்டத்தினுள் தென்படுகின்றனர்.

'கன்ரீனின்' முன்புறத்தில் மேரியும் அவள் தோழிகளும் அமர்ந்திருப்பதைக் கண்ட 'கிருப்ஸ்' அவர்களுக்கு முன்னே போய் இருந்து கொள்கிறான்.

"எப்பிடி நேற்றைக்கு 'வைவா'? என்னைப் போட்டு 'சிவா' உருட்டு உருட்டென்று உருட்டிப் போட்டார்!" என்றான் ஒருவன்.

"நீ எங்கை ஒண்டும் படிக்காமல் திரிஞ்சனி... பள்ளிக்கூடப் பெடியள் மாதிரி 'இந்தியன் ஆமி' பாக்கப் போனனி... முந்தநாளும் முண்டாசுக் கட்டைப் பற்றிப் புழுகினனி... என்ன கேள்வி கேட்டிருந்தாலும் உனக்கு உருட்டிற மாதிரித்தான் இருந்திருக்கும்..." என்றான் மதன்.

"இந்த முறை 'வைவா' விலை எங்கடை 'பொடி'யிலை ஒராளுக்குத்தானாம். 'ஹையஸ்ற் மாக்ஸ்' எண்டு கேள்வி..." என்று மேரியைக் கடைக்கண்ணால் பார்த்தபடி கூறினான் கிருப்ஸ்.

மேரியின் மனம் கட்டுக்களை அவிழ்த்துக்கொண்டு ஓடிவிடப் பரபரத்துத் துடிக்கிறது.

"நீ 'சல்' அடிச்சுக்கொண்டு திரியத் திரிய அந்தாள் படிச்சதெல்லே!" என்றான் இதைப் புரிந்துகொண்ட ரவி.

"அந்த 'ஹையஸ்ற்' உனக்கு வந்ததுக்குச் சரிதானே, பிறகேன் கவலைப்படுறாய்...?" என்று ஏற்றிவிட்டான் மற்றவன்.

கதை வேறு பக்கம் திசை திரும்புவதை உணர்ந்த மேரி மீண்டும் அதைச் சாதாரண உரையாடலாய் மாற்றும் முயற்சியாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதோ லக்கிலி நான் படிச்சுக்கொண்டு போன கேள்வியள்தான் எனக்கு வந்தது..." என்றாள்.

"இவள் முதல்நாள் 'லைபிறறியிலை' குகநாதனிட்டை 'டவுற்ஸ்' கேக்கவெண்டு போனவள். அவர் 'பொசிபிள் குயெஸ்ஸன்ஸ்' ஏதும் சொல்லிக் குடுத்தாரோ தெரியாது. எங்களுக்கு வந்து ஒண்டும் சொல்லேல்லை" என்றாள் நளினி.

"இல்லையடி. 'புறொமிஸ்!' அவர் எனக்கு ஒரு கேள்வியும் சொல்லித் தரேல்லை" என்றாள் மேரி அவசரமாக.

தான் முதல்நாள் குகநாதனிடம் 'டவுற்ஸ்' கேட்கப் போன நினைவுகள் அவளுக்குள் எழுந்தன. நரம்புகளில் கணத்தாக்கம் கொண்டு செல்லப்படும் பொறிமுறை தனக்கு விளங்கவில்லை என்று கேட்கவே அவள் குகநாதனிடம் போனாள்.

அதைப் படம் கீறி விளக்குவதற்காக அவர் அவளது கொப்பியை எடுத்துக் கொண்டு பேனையை அவளிடமிருந்து வாங்குகையில் அவரது கை அவள் கையில் பட்டது.

நெஞ்சில் கூர்வாளாக அச்சம் முளைத்தது. பூவின் வண்ணம் கண்டு முகரப்போனால் அது முடைநாற்றம் வீசப் போகிறதா? சீ... அப்படியிருக்க முடியாது. அது தற்செயல் நிகழ்வாகவே இருக்க வேண்டும். ஆனாலும் அவர் அதற்காகச் 'சொறி' கூடச் சொல்லவில்லை என்பது அவளுக்கு ஏமாற்றமாகவே இருந்தது.

இவர்கள் நினைப்பதுபோல் அவர் கேள்விகள் எதுவும் சொல்லிக் கொடுக்கவில்லை. இறுதியாக அவள் 'நன்றி' சொல்லிவிட்டு எழுந்து வரும்போது ஒன்று சொன்னார். "மேரி... எனக்குச் சரியா உம்மைப்போல ஒரு தங்கச்சி இருக்கிறா. மூக்கும், பெரிய கண்ணும், அடர்த்தியான இமையும், சுருள் மயிரும்... சரியா உம்மைப் போலத்தான். அதிலை எனக்கு உம்மைப் பாக்கிற நேரமெல்லாம் என்ரை தங்கச்சி எண்ட எண்ணம் வருது... அந்த எண்ணத்தாலை நான் உமக்குப் பாட விஷயங்களிலை ஏதும் 'ஃபவர்' செய்திடக்கூடாது எண்டு எப்போதும் வலு கவனமா இருக்கிறன்..."

அந்த வசனங்கள் அவளைக் கடுமையாக ஈர்த்திருந்தன. இந்த நினைவுகளில் இருந்து அவள் விடுபட முன்னர், "மேரியிலை எப்பவும் ஒரு இயல்பு - தன்ரை படிப்பு விஷயம் எப்பிடியும் வலு கவனம். 'வெரி ஸ்ரெடி றெகுலர் வேர்க்'..."என்றான் கிருப்ஸ்.

எப்படியோ அவன் இவ்வாறு கூறுகையில் வானம் ஒளிமயமாய்ப் பூக்களைச் சிதறினாற்போல் அவளுக்குள் ஓர் இன்ப அதிர்வு குலுங்குவதை அவள் உணரவே செய்தாள். ஆனாலும் ஏன் அவளால் அவனை விரும்ப முடியவில்லை?

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2

மீண்டும் திசையை மாற்றும் முயற்சியாய்,

"ஏன்? ராமுக்கெல்லாம் 'ஏ.எல் றிசல்ற்ஸ்' என்னைவிட நல்லதுதானே! அப்ப ஏன் இஞ்சை அது மாதிரி 'மாக்ஸ்' எடுக்க ஏலாது? நீங்கள் ஒருத்தரும் ஒழுங்காப் படிக்கிறேல்லை எல்லோ?" என்றாள் மேரி.

"நீர் ஒரு சாதகமான மறுமொழியைச் சொல்லிவிட்டீர் எண்டால் இந்தாள் சந்தோஷமாப் படிக்குமெல்லே?" என்றான் ஒருவன் கிருப்ஸின் முதுகில் தட்டி.

கிருப்ஸ் ஆவலுடன் மேரியின் முகத்தைப் பார்த்தான்.

"மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை எல்லாம் பெறுவீர்கள் என்று கர்த்தரே நீர் சொல்லுகிறீர். நான் உம்மை இப்போது கேட்டுக்கொள்கிறேன். விசுவாசமாய்! கிருப்ஸ் என்னை விரும்புவதைத் தடுக்க மாட்டீரா?"

மனதில் இப்படி நினைத்துக் கொண்டே மேரி மீண்டும் கதையை மாற்ற முயன்றாள்.

"ராம் அடிக்கடி குழைக் காட்டுப்பக்கம் போறதிலை படிக்கிறேல்லைப் போலை..." என்றாள்.

"எங்கடை ஊரை நீர் குழைக்காடு எண்டு சொல்லும். உம்மடை ஊருக்கும் நான் சொல்லுவன்... இப்ப..."

"சொல்லிப் போடாதை. பக்கத்திலை கிருப்ஸ் இருக்கிறான் வாங்குவாய் கன்னம் பறக்க..." என்றான் மற்றவன்.

"ராம் குழைக் காட்டுக்குப் போனாத்தானே மச்சாளைப் பாக்கலாம்..." என்றான் இன்னொருவன்.

"ராம்... மச்சாளை 'மறி' பண்ணிறதைப் பற்றி 'ஜெனிற்றிக்கலி' உங்கடை அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டாள் நளினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அதுக்கென்ன? அது குடும்பப் பரம்பரையிலை கசம், பாரிய உளநோய்... அப்பிடி ஒண்டும் இல்லாட்டில் மச்சாளை 'மறி' பண்ணிறதைப் பற்றிப் பரவாயில்லை எண்டுதானே இப்ப 'ஹவ்லொக் எலிஸ்' சொல்றார்” என்று அவனுக்கு வக்காலத்து வாங்கினான் கிருப்ஸ். பிறகு தானே திரும்பி மேரியைக் கேட்டான்.

“மேரி, ஏன் நேற்று 'ஈவினிங் லெக்சர்ஸ்ஸுக்கு' நிக்கேல்லை?”

“அண்ணா சவுதியிலை இருந்து வந்திருக்கிறார். எங்கடை சேர்ச்சுக்கு ஒரு பெரிய மணி செய்து குடுத்தார். அதோடை ஒரு 'ஸ்பெஷல் பிறேயர் மீற்றிங்'... அதுதான் வெள்ளணப் போனனான்.”

மேரியின் அண்ணா சவுதியில் 'சேவையர்'ஆக இருக்கிறார். இரண்டு வருடத்தின் பின்னர் ஏராளமான பணத்துடன் வீடு திரும்பியிருக்கிறார். சேர்ச்சுக்கு மணி குடுத்து அதை - அந்த நிகழ்வை வீடியோப் படமாகவும் எடுத்து வைத்திருக்கிறார். சவுதிக்குத் திரும்பும்போது கொண்டுபோய் அங்கேயுள்ள நண்பர்களுக்குப் போட்டுக் காட்டப் போகிறாராம்.

ஆசைக் கொடிகளுக்கு அசுர வளர்ச்சிதான்!

---

றொபேட்டின் கேள்விக்கான விடையைத் தனக்குள்ளே தேடினான் கிருப்ஸ்.

பல்கலைக் கழகம் வந்து ஒரு சில நாட்கள்தான் இருக்கும். 'மெடிக்கல் ஃபக்கல்ரி கன்ரீனுக்கு' மேலே உள்ள இடத்தில் ஒருவனுடைய சைக்கிளை மற்றவர்கள் எங்கோ ஒளித்து விட்டார்கள். அதைத் தேடுவதும் சைக்கிள் சொந்தக்காரனான இளங்கோவின் முகத்தில் அசடு வழிவதைப் பார்த்துச் சிரிப்பதுமாகப் பல மாணவர்கள் நிற்கையில், “ஃபக்கல்ரி”க்கு முன்னால் உள்ள 'றோட்'டால் இவர்களின் 'பாஜ்' மாணவர்கள் பலர் போய்க்கொண்டிருந்தனர். ராம் திடீரென்று கேட்டான்,

“மச்சான் உதிலை போற சரக்குகளிலை எது பிழையில்லை?”

எல்லாரும் எல்லாரையும் ஒவ்வொருவராய்ப் பார்த்தனர். ஒருவன் திடீரென்று சொன்னான்,

“முதல் வரிசையிலை போறாள், இரட்டைப் பின்னல், “றெட் ஃபுறொக்”, மேரியோ என்னவோ பெயர். நல்ல மணியான காய். நீட்டு மூக்கும்..., பெரிய கண்ணும்..., நல்ல தலைமயிரும்..., ஆள் வடிவுந்தான். வீட்டிலையும் நல்ல வசதி... ஒரே ஒரு பெட்டையாக்கும்... தமையன்காறன் வெளிநாட்டிலை... பிடிக்கிறவன் லக்கி... ஆனால் ஒண்டு... பிடிக்கிறவன் சமயம் மாற ஆயத்தமாய் இருக்க வேணும்...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே ஏன் தான் 'லக்கி'யாக இருக்கக்கூடாது என்ற எண்ணம் தனக்குள் தோன்றியதோ என்று கிருப்ஸ் சிந்தித்தான்.

அது மட்டுந்தான் என்று சொல்லமுடியாது. அவளின் சிரிப்பைக் காணும் போதெல்லாம் அவனுக்குள்ளே அவனை அறியாமலே ஒரு ஆவல் தூண்டப்படுகிறது.

சமயமாற்றம் பற்றி அவன் எப்போதுமே கவலைப்பட்டதில்லை. அவனுக்கு எல்லாச் சமயமும் ஒன்றுதான். வாழ்க்கையில் ஓர் அமைதியும், நம்பிக்கையும், பாதுகாப்புணர்வும் இருப்பதற்கு ஒரு கடவுளை நம்ப வேண்டும். அது எந்தக் கடவுள் என்பதில் அவன் அதிகமாக அக்கறை காட்டியவன் இல்லை. தனக்குள்ளேயே இப்படிச் சிந்தித்துக்கொண்டு, 'லைபிறறி'யை விட்டு வெளியேறி 'சயன்ஸ் ஃபக்கல்ரி'க்கு முன்னால் வந்து கொண்டிருந்தபோது, தற்செயலாய்த் தலை நிமிர்ந்தான்.

மேரியும் நளினியும் 'செரி'ப் பழங்கள் கொய்வதற்குப் பெரு முயற்சி எடுப்பது தெரிந்தது. திடீரென்று பாதையை விட்டு உள்ளே இறங்கினான் கிருப்ஸ். 'செரி' மரத்தில் குரங்கு போல் விறுவிறென்று ஏறினான். உச்சத்தில் இருந்த சிவப்புப் பழங்களை நிறையவே கொய்து, மேரியிடம் கைநிறையக் கொடுத்தான்.

அதை வாங்கும்போது அவள் சிரித்துக்கொண்டே 'தாங்க்யூ' சொன்னது அவனுக்குள் ஒருபோதும் இல்லாத மனநிறைவை ஏற்படுத்தியது. 'பொக்கற்'றில் இருந்து ஒரு சிறிய 'காட்'டும் பேனாவும் எடுத்தான். அதில் ஒரு அழகிய மீனின் புற உருவம் கீறினான். அந்த மீனின் உடல் பகுதியை 'மேரி' என்ற ஆங்கில எழுத்துக்களைப் பலமுறை எழுதி நிரப்பினான். பக்கத்தில் அதன் சோடி போல் தோன்றக்கூடிய இன்னொரு மீன் கீறினான். அதற்குள் 'லவ் மீ' என்று எழுதினான். உண்மையில் கிருப்ஸ் ஓவியங்களை விரைவாகவும் அழகாகவும் கீறக் கூடியவன்தான்.

இந்தச் சோடி மீன்களுக்குக் கீழே ஆங்கிலத்தில்,

M for magnetic
A for ability
R for really scientific
I for intelligence

என்றும் எழுதினான். மேரி சற்றும் எதிர்பார்க்க முதலே, அவளது கைகளில் இந்தக் காட்டை வைத்துவிட்டு வேகமாய்ச் சைக்கிளை எடுத்துக்கொண்டு விரைந்து பறந்தான். இவன் செய்த வேலையை நளினி கவனிக்காமல் தந்திரமாய் மறைத்துக் கொண்ட மேரி வீட்டிற்கு வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைமாதக் கர்ப்பிணியாய் இருந்த அவர்களின் ஆடு ஒரு குட்டி போட்டிருந்தது. ஆட்டிற்குத் தேவைப்பட்ட தாதி வேலைகளை அம்மா முடித்திருந்தாள். ஒரே ஒரு குட்டி, கடாக்குட்டி!

"அம்மா இனிமேல் இந்த ஆடு வாங்கிற வேலையளை விட்டிட வேணும்" என்று செல்லமாய்க் கடிந்து கொண்டான் சவுதியில் இருந்து திரும்பியிருந்த அண்ணா.

அவன் சவூதியில் மாதம் ஆயிரம் றியால் சம்பளம் எடுக்கிற 'சேவையர்'. மகள் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் 'டொக்டர்' ஆகப் போகிறாள். இந்த அம்மா என்ன... பட்டிக்காடு மாதிரி ஆடும் மாடும் வளர்த்துக் கொண்டு...?

"மேரி இந்த முறை ஆட்டுக்குட்டிக்கு என்ன பேர் வைக்கப் போறாய்?" என்றாள் அம்மா.

உள்ளே போய்ப் புத்தகங்கள், "ஃபைல்"களை வைத்துவிட்டு, உடை மாற்றிக்கொண்டு வந்த மேரி, சற்று யோசித்துவிட்டு, "'கிருபன்' எண்டு வைப்பம்" என்றாள்.

சற்று நேரத்திற்குப் பிறகு, ஆட்டுக்குட்டியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, அதைத் தடவிக்கொடுத்தாள் மேரி. "கிருபன் பாவம்... எங்கடை கிருபன்" என்று அவள் வாய் முணு முணுத்தது. இதென்ன மனம்? அது அவளுக்கே புரியவில்லை!

"நான் போக முதல் இந்த ஆட்டை வித்திட்டுப் போவம் எண்டு யோசிக்கிறன். அம்மாவை விட நீதான் 'வொறி' பண்ணுவாய் போலை இருக்கு..." என்றான் அண்ணா.

"ஆட்டை விக்கிறதுக்கு முதல், அம்மாவின்ரை சீலை, உடுப்பு "ஸ்ரைலை" மாத்தச் சொல்லுங்கோ... நான் எவ்வளவு சொன்னாலும் கேக்கிறா இல்லை! அப்பாவின்ரை அந்தப் பழைய குடையும், செருப்பும்... ஐயோ "ஐ ஹேற் தெம்"அண்ணா... என்று சிணுங்கினாள் மேரி.

"இவை இரண்டு பேரையும் கொஞ்சம் "இங்கிலிஷ் மிக்ஸ்' பண்ணிக் கதைக்கச் சொன்னாலும் கதைக்கினமில்லை. என்ரை 'ஃபிறண்ட்' பாலுவின்ரை 'பேறன்ற்ஸ்' இப்ப எவ்வளவு "ஸ்ரைலாக்" கதைக்கப் பழகிட்டினம்... இதுகள் திருந்தாத பேர்வழியள்..." என்றான் அண்ணா.

உள்ளேயிருந்து இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த அம்மா,

"தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். நாங்கள் இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது போன காலத்திலை எப்பிடியும் இருப்பம். எங்களைத் திருத்திறதிலை நேரம் செலவழிக்க வேண்டாம். மேரியின்ரை விஷயத்தை நீ போக முதல் முற்றாக்கிப் போடு தம்பி..." என்றாள்.

"ஓ... அந்தக் 'கொன்சல்றன்ற் சேஜனை'ப் பற்றி அண்டைக்குப் புரோக்கர் அருளப்பு மாஸ்டர் சொன்னவர்தான். எனக்கு மனதிலை இருக்கு. 'செவன் லாக்ஸ்' கேட்டவராம். குடுக்கலாம், பரவாயில்லை. அதை '.்.பிக்ஸ்' பண்ணிட்டால் நல்லதுதான்..."

அண்ணா இப்படிச் சொல்லி முடிக்கவும் வெளியே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்கவும் சரியாக இருந்தது. எட்டிப் பார்த்தான்.

"வாருங்கோ அருளப்பு மாஸ்டர். இப்பதான் உங்களைப் பற்றிச் சொன்னனான். 'லோங் லை.்.ப்'" என்றான்.

"எதுக்கு நினைச்சனீங்கள்?" என்று சிரித்தபடி உள்ளே வந்தார் அவர்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3

அருளப்பு மாஸ்டர் உயரமானவர். பிரகாசமான கண்கள், சந்தோஷமான முகம், இந்த வேலைக்கு மிகவும் பொருத்தமானவர். இடையில் மேரியைக் கண்டவுடன்,

"ஹலோ மேரி, எப்பிடிப் படிப்புகள் போகுது?" என்றார். முதுகில் பல பார்வைகள் பொருள் பொதியத் துளைப்பது போல அந்தக் கேள்வி.

"இல்லை, அந்தக் 'கொன்சல்ரன்ற் சேஜனைப்' பற்றி அண்டைக்குச் சொன்னீங்கள். அதுதான் கதைச்சனாங்கள்" என்றபடி வந்தமர்ந்தான் அண்ணா.

"ஓ... ஐ சீ..., அதுதானே நானும் சொல்ல வந்தனான். "பாட் லக் ரூ" மேரி... அவருக்கு வேறை ஒரு இடத்திலை டக்கெண்டு "றெஜிஸ்ரேசன்" முடிஞ்சுது. பரவாயில்லை, இன்னும் எத்தினை மாப்பிளையள் இருக்கினம். மேரிக்குப் படிப்பு முடியவேணும்தானே. "வீ வில் ற்றை... ஐ வில் ற்றை மை பெஸ்ட்". நல்லதா ஒண்டு சரிவரும்..." என்று வேகமாகச் சொல்லிக்கொண்டு வந்த அருளப்பு மாஸ்டரின் குரலில் நம்பிக்கைச் சிறகுகளை எப்போதும் இழந்துவிடாது பறக்கும் தன்மை பளீரிட்டது. அவர் விறுவிறென்று ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசும் முறையில் எப்போதும் ஒரு அழகு இருக்கும். அந்தப் பேச்சு முறையே இந்தத் தொழிலுக்கான அவரது சிறந்த ஆயுதம்.

வேகமாய்ப் பேசிக்கொண்டு வந்தவர் திடீரென்று நிறுத்தி, "மேரி... எனக்கு ஒண்டும் வேண்டாம். "ஜஸ்ற் ஏ கிளாஸ் ஒ.ஃப் பிளெயின் வாட்டர் பிளீஸ்..." என்று உள்நோக்கிக் குரல் கொடுத்தார். அவள் தண்ணீருடன் வரும்போது, "நான் சவுதிக்குப் போகமுதல்... மேரிக்கு "பிக்ஸ்" பண்ணிறது நல்லது எண்டு யோசிக்கிறம்... பிறகு நானும் எப்ப வாறனோ தெரியாது..." என்று அண்ணா அவசரப்படுத்தியது மேரிக்குத் தெளிவாகவே கேட்டது.

"கொன்சல்ரன்ற் சேஜனுக்கு றெஜிஸ்ரேசன்" முடிந்த விடயம் மேரியைப் பொறுத்தவரை பெருத்த நிம்மதியைத் தந்திருந்தது. ஆயினும் அண்ணா மீண்டும் அவசரப்படுத்துகிறான். தனக்கு யாரையும் அவசரமாகப் பார்க்க வேண்டாம் என்று அருளப்பு மாஸ்டரிடம் கூறவேண்டும். அண்ணா இல்லாத நேரமாகப் பார்த்துச் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஒரு சந்தர்ப்பம் இரண்டு மூன்று நாட்களின் பின் கிடைத்தது. வீட்டில் எல்லோரும் 'ஷொப்பிங்' போய்விட்ட நேரம் அருளப்பு மாஸ்டர் வந்தார். மேரி மட்டும் வீட்டில் இருந்து படித்துக் கொண்டிருந்தாள்.

'கேற்'றைத் திறந்து நேராக உள்ளுக்கு வந்தவர், மேரி படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு,

"சொறி ரு டிஸ்ரேப் யூ... அண்ணா எங்கை?" என்று கேட்டார். வேறு ஒருவரைப் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறாரோ என்று அவள் பயந்தாள். எனினும் வெளியில் சிரித்துக்கொண்டு, "எல்லாரும் 'ஷொப்பிங்' போயிட்டினம்" என்றாள்.

"உமக்கு 'ஷொப்பிங்' போறது விருப்பமில்லையோ?" என்று கேட்டுக் கொண்டே திரும்ப முயன்றவரை மேரி மறித்தாள்.

"கொஞ்சம் இருங்கோ... உங்களோடை கதைக்க வேணும்..."

"என்னோடையோ? இந்தக் கிழவனோடையோ?" என்று சிரித்தபடி கதிரையில் வந்து அமர்ந்தார் அவர்.

மேரி புத்தகத்தை மூடி வைத்துவிட்டு எழுந்து வந்தாள்.

"நீர் ஏன் 'ஷொப்பிங்' போறேல்லை? உமக்கு வாங்க ஒரு பொருளும் இல்லையோ?" என்று மீண்டும் கேட்டார் அவர்.

"இல்லை, அவசரம் எண்டால் போவன். பொதுவா எனக்குக் 'கிறவுட்' இருக்கிற இடங்கள் விருப்பமில்லை. 'கிறவுட்' இருக்கிற இடத்திலைதான் 'இன்பெக்ஷன்ஸ்' பிடிக்கிறது. "மச் ஒ.ஃப் காபன் டை ஒக்சைட் ஓல் சோ..."

அருளப்பு மாஸ்டர் கேட்டுக் கொண்டேயிருக்க அவள் தொடர்ந்து சொன்னாள், "என்ரை ஃபிறெண்ட் ஒராள் பெரதெனியா "ஃபக்கல்ரி"யிலை 'மெடிக்கல் ஸ்ருடன்ற்...' போன வருஷம் 'பெரகரா கிறவுட்டுக்கை' போயிட்டு வந்து படுத்தவ... 'சம் வைறஸ் இன்.ஃபெக்ஜன் ஒ.ஃப் த லங்ஸ்..' ஆள் உயிரோடை எழும்பவேயில்லை..."

அருளப்பு மாஸ்டர் பேப்பரைப் பார்த்துக் கொண்டே அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார். "எங்கடை 'கம்பஸி'லும் சில பேர் இருக்கினம். கோயில் பயித்தியங்கள்.. 'ஷொப்பிங்' பயித்தியங்கள்... எனக்கு விருப்பமில்லை..." என்று சொல்லும்போது, மேரிக்குத் தன்னை ஒருமுறை கிருப்ஸ் நல்லூர் கோயிலுக்கு வரும்படி கேட்டது நினைவு வந்தது. இவள் "நான் நல்லூருக்கு வருவன். அது பிரச்சினை இல்லை. நீங்கள் 'மெடிக்கல் ஸ்ருடன்ற்'. "யூ மஸ்ற் பீ மோர் சயன்ரிபிக்... கிறவுட்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற நாட்களிலை கோயிலுக்குப் போக எனக்கு விருப்பமில்லை..." என்று கூறி மறுத்துவிட்டாள்.

தானும் கிருப்ஸ்ஸும் இப்படிச் சில அடிப்படை விடயங்களில் வேற்றுமைப் படுதலேதான் இன்னும் கிருப்ஸ்க்குச் சாதகமான பதிலைச் சொல்ல முடியாமல் இருப்பதற்குக் காரணமோ என்று நினைத்தாள். "காதலிக்கிறவர்கள் எல்லோரும் சிறு சிறு விருப்பங்கள், அபிப்பிராயங் களிலும் ஒத்துத்தான் போவினமோ?" என்றும் தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

ஏதோ யோசனையில் ஆழ்ந்து சிறிதுநேரம் மேரி பேசாமல் இருந்ததைக் கவனித்த அருளப்பு மாஸ்டர் பேப்பரை மூடி வைத்துவிட்டு, "சொல்லி முடிஞ்சுதா?" என்று கேட்டார்.

"நீங்கள் பேப்பர் பாக்கிறீங்கள். நான் சொன்னதை எங்கை கேட்டனீங்கள்?" என்று சிணுங்கிப் பொய்க் கோபம் காட்டினாள் மேரி.

"இல்லை, இல்லை நீர் சொன்னதை எல்லாம் நான் வடிவாக் கேட்டுக் கொண்டுதான் இருந்தனான்... இப்ப என்ன சொல்றதுக்கு என்னை மறிச்சனீர் எண்டு சொல்லும்..."

"இல்லை, அது என்னெண்டா... அண்ணா இல்லாத நேரம் சொல்ல வேணும் எண்டு நினைச்சனான். எனக்கு நீங்கள் அவசரமா... யாரையும் 'ஃபிக்ஸ்' பண்ணவேண்டாம். அண்ணா போகும்வரை சும்மா முயற்சி செய்யிற மாதிரி நடிச்சாக் காணும்..."

"அடி சக்கை எண்டானாம்... ஏன் உமக்கு 'யூனிவேசிற்றி'யிலை ஆரும் இருக்கே...? அப்ப ஏன் இவ்வளவு நாளும் சொல்லாமல் இருக்கிறீர்...?" என்று உசாரானார் அவர்.

அவளுக்குள் ஒரு குளிர்ச் சிரிப்பு ஓடி மறைந்தது. தனது உண்மையான நிலையை அவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை. மீண்டும் தனக்குள்ளாகக் கிருப்ஸ் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ஒருநாள் மினி பஸ்ஸில் இவள் இருக்கும்போது, எங்கோ இடைவெளியில் ஏறினான் கிருப்ஸ். இவளுக்கு அருகில் 'சீற்' வெறுமையாக இருந்தது. அவன் ஓடி வந்து அதில் அமர்ந்து கொண்டான். அவன் அவள்மீது உரசிக்கொள்ளாமல் நாகரிகமாகவே இருந்து கதைத்தானாயினும் அந்தச் செயல் அவளுக்குப் பிடிக்கவில்லை.

நன்றாகக் குடிக்கிறான்-சிகரெட்தான்! மற்றது இடைக்கிடை! படிப்பதை வாழ்வில் பிரயோகிக்கத் தெரியாதவன் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பாதவன் அல்லது முடியாதவன் என்பதே இவளுக்கு அவன் பற்றிய கணிப்பு.

'ஹீ இஸ் நொற் சயன்ரிபிக்...'

'மற்றது ரூ மச் ஓ.'.ப் ரோக்கிங்...' நெடுகக் கதைப்பது இவளுக்குப் பிடிக்காதது. ஆனாலும் ஏனோ கிருப்ஸை நினைத்தால் பாவமாகவும் இருக்கிறது.

"நீ விரும்பிற இடத்தைவிட உன்னை விரும்பிற இடம் நல்லதடி..." என்று நளினி வேறு அடிக்கடி சொல்கிறாள். இதையெல்லாம் மனதில் நினைத்துக் கொண்டே,

"இல்லை அங்கிள்... அப்பிடி ஒண்டுமில்லை. எண்டாலும் இப்ப என்ன அவசரம்? படிப்பு முடியட்டும்..." என்றாள் அவள். அவர் ஏதோ புரிந்து கொண்ட சிரிப்புடன் எழுந்து சென்றார்.

---

அந்தியும் சந்தியும் கூடுகிற வேளை ஒன்று!

பிரபஞ்ச மேனியில் நட்சத்திரப் பூக்கள் புத்தாடை போட முயலுகின்றன.

நூல் நிலையத்திற்குக் கிழக்குப் புறம் அமைந்த பெரிய விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகள் நடைபெறுகின்றன. மைதானத்துக்கு முன்னே வீதியின் மறுபுறம் அமைந்த மற்றொரு வகைப் பாசறையிலும் பயிற்சிகள் நடைபெறும் அறிகுறிகள் தென்படுகின்றன.

மேரிக்கும் விளையாட்டில் விருப்பம் உண்டு. ஆகவே நின்று பயிற்சி பெறுகிறாள். நீளம் பாய்தலுக்காக அன்று அவள் பெற்ற பயிற்சி மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருக்கிறது. 'கிருப்ஸ்' குறுந்தூர ஓட்டங்களின் ஆரம்ப நிலைப்படுத்தல் தொடர்பான பயிற்சிகளைப் பயிற்றுநரிடமிருந்து பெற்றுக் கொள்கிறான்.

பல மாணவர்கள் நின்று பல்வேறு விளையாட்டுக்களையும் பயிற்சி பெறும் இடத்தில் இவ்வளவு நேரமும் காணப்படாத கிரிஸ்ரொபர் பயிற்சி முடியும் நேரத்தில் - மாலை ஏழு மணியளவில் - அங்கு தோன்றுகிறான்.

"பூச்சி வந்திட்டுது. பூச்சி வந்திட்டுது" என்று பல மாணவர்கள் கத்துகிறார்கள். சிலர் சீழ்க்காய் அடிக்கிறார்கள். அவன் அது பற்றிச் சற்றும் அக்கறைப்படாதவன் போல், அல்லது அதை எதிர்பார்த்தவன் போல் சிரித்துக் கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்கும்போது முகத்தில் பால் வடிகிறது. சந்தோஷமான முகம்! மற்றைய மாணவர்களின் கேலியினால் வெட்கப்பட்டுச் சிவந்திருப்பது போல இருக்கிறது. சுருண்ட கேசம், மெல்லிய உடல். தன்னைக் கேலி செய்த யாரையும் அவன் நேருக்கு நேர் பார்க்கவில்லை. எப்போதுமே யாரையும் கண்ணுக்குள் பார்த்துக் கதைக்க முடியாது அவனால். பெண்களோடு துப்பரவாகக் கதைக்க மாட்டான்.

"இவ்வளவு நேரமும் 'றூமிலை' இருந்து நல்லா 'கிறாம்' பண்ணிப் போட்டு, இப்ப பாடமாக்கினதை நினைச்சுப் பாத்துக் கொண்டு இஞ்சை வந்து நிக்கிறான்..." என்றான் ஒருவன்.

பயிற்சி முடிந்து உடுப்பை மாற்றிக்கொண்டு மைதானத்திற்கு வந்த மேரி, எப்படி நளினியின் 'றூமிற்குப்' போவது என்று நினைத்துப் பார்த்துக் கொண்டு தெருவிற்கு வந்தாள்.

"என்ன மிஸ்... தனியப் போறீங்கள்?" திரும்பிப் பார்த்தாள்.

கிறிஸ்ரோபர்!

பெண்களோடு ஒருநாளும் கதைக்காத கிறிஸ்ரோபர்!

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4

மேரியை வழியில் காணும் சந்தர்ப்பங்களில் ஓரிரு முறை ஒரு பெண்ணைப்போல் நெளிந்து வளைந்து அவன் வெட்கப்பட்டுச் சிரித்துக் கொண்டது அவளுக்கு நினைவு வந்தது. பொதுவாகப் பெண்களைக் கண்டால் சிரிக்கவும் மாட்டான், தலையைக் குனிந்துகொண்டு போய்விடுவான்.

சோதனைக் காலங்களில் 'டிஸ்கஸன் குரூப்ஸ்' உருவாகும் போது கூட கிரிஸ்ரோபர் தனிதான். "இந்த 'குரூப்ஸில்' சேர்ந்து நேரத்தை வீணடிப்பதுதான் மிச்சம்" என்பது அவன் எண்ணம். அவன் செய்வது அகோர வாசிப்பு. நுண்மதி அவ்வளவு உயரம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அவனது கடின உழைப்பு அவனைப் படிப்பில் மெதுமெதுவாக முன்னுக்குக் கொண்டு வந்திருந்தது. அடுத்தடுத்த சோதனைகளில் அவனே 'ரொப்' பண்ணுவான் என்பதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருந்தன.

இந்த நிலையில் - எந்த நேரத்திலும் அவன் தன்னை முந்திவிடக் கூடும் என்ற நிலையில் - கிரிஸ்ரோபருடன் 'டிஸ்கஸன் குரூப்' சேர மேரிக்கு உள்ளூர நல்ல விருப்பம். அதேநேரம் அவன் யாரையும் சேர்த்துக்கொள்ள மாட்டான் என்ற பயமும் கூட! கதைத்த இந்த அரிய சந்தர்ப்பத்தை அவள் உருப்படியாகப் பயன்படுத்திக் கொள்வோம் என்று நினைத்தாள். "நான் இண்டைக்கு வீட்டை போகேல்லை. சரியான 'லேற்றாய்ப்' போயிட்டுது. நளினியவை இருக்கிற 'றூமுக்கு'த்தான் போப்போறன். கூட்டிக்கொண்டு போய் விடுறியா?"

ஏதோ ஒரு அசட்டுத் துணிவில் கேட்டுவிட்டாள். திடீரென்று ஆகாயத்தைப் பார்த்தாள். இருண்டு வரும் வானம் ஒரு "டெக்னிக் கலர்" சினிமா காட்டுவது மாதிரி இருந்தது. விரைவில் இந்த வண்ணவியல் அழிந்து வானம் முழுவதும் இருண்டு விடும் என்று நினைத்தாள்.

நேரம் போய் விடுகிற சந்தர்ப்பங்களில், பெண்களை அதே 'பாஜ்' ஆண்கள் கூட்டிக்கொண்டு போய் விடுவது சாதாரண நிகழ்வுதான் அங்கே. அவள் ஒன்றும் புதிய விடயத்தைக் கேட்கவில்லை. ஆனால் கிரிஸ்ரோபர் உசாரானான். "சொறி மிஸ்! என்னாலை முடியாது. 'கேள்ஸைக்' கூட்டிக்கொண்டு அவைக்குப் பின்னாலை திரிய எனக்கு நேரமில்லை. எனக்குப் படிக்க நிறைய இருக்கு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிவிட்டுச் சைக்கிளை எடுத்துக்கொண்டு 'ஜிவ்' வெனப் பறந்து போய்விட்டான் அவன்.

அவன் சொன்ன குரலில் 'திமிர்' இருக்கவில்லை. மிக மெதுவாக, பணிவாக, ஒரு 'மென் தன்மையுள்ள பெண்' கதைப்பது போலத்தான் கூறினான். ஆனாலும் சொன்ன விடயம்?

மேரிக்கு இரத்தம் முகத்திற்கு ஏறிக் கண்கள் ஜொலித்தன. எவ்வளவு அவமானம்! பார்வை ஊடுருவும்போது கூச்சம் குறுகுறுக்கத் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ளும் பேர்வழி, எந்த ஆணும் இதுவரை செய்யாத முறையில் அவளை அவமதித்து விட்டானே!

சரி பார்ப்போம்! வாழ்வு என்பது ஒரு சிலுவைப் பாதைதான்! பல்கலைக் கழகத்தினுள்ளே புதிதாகக் கட்டப்பட்டிருந்த 'சேர்ச்சின்' மணி எவ்வித சலனமுமற்றுத் தொங்குகிறது. அதைக் கடந்து வரும்போது மேரி சிறிது நேரம் கண்களை மூடிக்கொண்டாள். காதுக்கு இமை இல்லாததால்தான் அப்படிச் செய்தாள். காதில் அவன் கூறிய வார்த்தைகள் பல முறை திரும்பத் திரும்ப எதிரொலித்துக் கொண்டேயிருந்தன.

"கிருப்ஸ் போன்ற பலர் எத்தனையோ இடங்களுக்குத் தங்களுடன் வரும்படி பலமுறை கேட்டும், போக மறுத்துக் கிறுக்குக் காட்டிய உனக்கு இந்த அவமானம் வேண்டியதே" குரல் ஒன்று கேட்டது. அவள் திரும்பிப் பார்க்கவில்லை. அந்தக் குரல் அவளுக்கு உள்ளேயிருந்தே கேட்டது என்பது அவளுக்குப் புரிந்தது. அவளது அவதானிக்கும் சுயம் எப்போதும் வலிமையானதுதான்.

மூடிக்கொண்ட கண்களைத் திறந்தபோது, கிருப்ஸ் அருகில் நிற்பது தெரிந்தது.

"வீட்டையோ போகப் போறீங்கள் இனி?" நடைபெற்ற விடயம் பற்றி எதுவும் தெரியாதவன் மிகச் சாதாரணமாய்க் கேட்டான்.

"இல்லை. நளினியின்ரை 'றூமிலை' நிக்கப்போறன்." என்றாள். குரல் கிணற்றின் ஆழத்திலிருந்து எழுவது போல் கேட்டது. "தனியப் போகப் பயமில்லையா? பேய் பிசாசு பிடிக்காதா... அழகான பொம்பிளையளை...? "அவன் சிரித்தபடி கேட்டான்.

"பேயாவது பிசாசாவது! பெடியளுக்குப் பயந்தே பேயள் வராது. யேசுவே, மரியாயே, சூசையப்பரே, அந்தோனியாரே எண்டு சொல்லிக்கொண்டு போயிடுவேன்!"

"பிள்ளையாரே, கந்தசுவாமியாரே எண்டு சொல்ல ஒருவேளை ஓடாட்டியும், யேசுவே, மரியாயே எண்டு சொன்னால் கட்டாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிடுங்கள். சரி, நான் சொல்லிக்கொண்டு பின்னாலை வாறன். வாங்கோ..." என்று சைக்கிளை உருட்டிக்கொண்டு நடந்தான் கிருப்ஸ்.

"பகிடியா இருந்தாலும் கூட - தன்னுடைய சமயத்தை எவ்வளவு இலகுவில் எனக்காக விட்டுத் தருகிறான் இவன்" என்று நினைக்காமல் இருக்க மேரியால் முடியவில்லை. அவள் மௌனமாய் நடந்தாள்.

உட்புழுக்கமும் வெளிப்புழுக்கமும் அவளை அழுத்துகின்றன. கண்களில் ஒரு பரிதாபத்திற்குரிய சோர்வு தென்படுகிறது.

"இந்தமுறை 'அசெஸ்மென்ரிலை' கிரிஸ்ரோபர் உங்களை முந்திடுவான் போலை இருக்கு"

கிருப்ஸ் சாதாரணமாகவே உரையாடலைத் தொடங்கினான்.

"அதுதான் எங்கடை "டிஸ்கஸன் குருப்பிலை" கிரிஸ்ரோ பரையும் சேர்த்தால் நல்லது எண்டு நினைச்சனான். அந்தாள்... சேராது... சரியான கிறுக்கு... என்ன?"

"அது ஒரு புத்தகப் பூச்சி. அதோடை முனிவர்... நெடுகத் தனிய இருந்து படிக்கும். "கேள்ஸ்ஸோடை" கதைக்கிறதெண்டாலே அதுக்கு நடுங்கும். ஏதும் பழைய '.:.பிறஸ்' இருக்கோ தெரியாது. "என்னடாப்பா இப்பிடி இருக்கிறாய்?" எண்டு யாரும் கேட்டால், "றீடிங் மேக்ஸ் ஏ மான் பேர்.:.பெக்ற்" எண்டு தத்துவம் சொல்லும். அதின்ரை கதையை விடுங்கோ... அரை விசர்..." என்றான் கிருப்ஸ்.

"எண்டாலும் கிரிஸ்ரோபருக்கு நிறைய விஷயங்கள் பரவலாத் தெரியும் எண்டதை ஒருத்தரும் மறுக்கேலாது..."

"அவனோடை "டிஸ்கஸன் குரூப்" சேர்ந்தால் உமக்கும் 'பெண் பூச்சி' எண்டு பட்டம் வைப்பாங்கள்..."

"வைக்கட்டன். அந்தப் பட்டம் எம்.பி.பி.எஸ் பட்டத்தோடை '.:.பெஸ்ற் கிளாஸ்' சேர்ந்து வர உதவும் எண்டால் பரவாயில்லை..."

"பெண்பூச்சி எண்டாப் போலைதான் ஞாபகம் வருது... அவனுக்கு ஏன் பூச்சி எண்டு பட்டம் வைச்சதெண்டு உங்களுக்குத் தெரியுமே?"

"நெடுகப் படிக்கிறது... புத்தகப் பூச்சி..."

"அப்பிடித்தான் நானும் கனகாலம் நினைச்சிருந்தனான். அண்டைக்கு அவன்ரை "றூம்மேற்" ராஜா சொன்னான், பூச்சிகள் எதையும் எங்கை கண்டாலும் உடனை பிடிச்சுச் சாக்கொல்லிப் போடுவானாம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால் ஆள் சரியான கடவுள் பக்தி எண்டு கேள்வி..."

"ஓ... அவன்ரை "றூமை"ப் போய் ஒருநாள் பாத்தனான். கட்டிலுக்கு மேலே யேசு படம் வைச்சு அதுக்குப் பக்கத்திலை அடுத்த "அசெஸ்மன்ற்" திகதி எழுதி வைச்சிருப்பான். இன்னும் சோதனைக்கு மூண்டு நாள்... இரண்டு நாள்... இன்னும் ஒரு நாள் எண்டெல்லாம் எழுதுவானாம். அந்த மூண்டு நாளும் படிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி 'டைம்ரேபிள்' அவன் போட்டிட்டால், பிறகு கடவுள்தான் வந்தாலும் மாத்த முடியாது. அதுதான் போன "சண்டே றெபியூஜீசுக்கு" உடுப்புச் சேர்க்கவும் ஆள் வரேல்லை..."

"அதுகும் நல்ல பழக்கந்தானே. அப்பிடியானவை வாழ்க்கையிலை எதையும் திட்டமிட்டுச் செய்வினம். தோல்வியடைய மாட்டினம்..."

"ஆனால் அண்டைக்கு எத்தினை நாள் போக முடியாமல் இருந்த கடற்கரைக்கு நாங்கள் போனம். அதுகும் இந்திய அமைதிப்படை வந்திருக்கிறபடியால் போனம். அவன் அண்டைக்கு அருமையான கொஞ்சும் கடல் அலைகளையும் வீசும் இளந்தாழை மணத்தையும் தவற விட்டிட்டான் எண்டுதான் நான் சொல்லுவன். இப்பிடியானவை வாழ்க்கையிலை எதையும் அநுபவிக்க மாட்டினம்..."

"இது யாரின்ரை கவிதை வரி? சொந்தமோ? இரவல்தானோ?" என்று கேட்டு இமை வெட்டினாள் மேரி.

'இரவல்தான்' என்று சிரித்தவன், சைக்கிளை மறுபக்கத்திற்கு மாற்றிக் கொண்டு அவளுக்கு அருகில் நடந்தான்.

மேரி சிறிது நேரம் கரு கருவென்று கிடந்த அவனது கட்டை மயிரைப் பார்த்தபடி மௌனமாய் நடந்தாள். இவனுடைய இந்தக் கட்டைத் தலைமயிர் இவனுடைய ஆளுமையின் எந்தப் பகுதியைக் காட்டுகிறது? அந்தச் சிந்தனை பதிலின்றி மறைய, அகதிகளுக்கு உடுப்புச் சேர்க்கச் சென்ற ஞாயிறு மனதில் வந்தது. அன்று பல்வேறு ஊர்களுக்கும் சென்று நிறைய நிறையவே உடுப்புக்களைச் சேர்த்துக் கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள் இறுதியாகக் காரைநகருக்குச் சென்றபோது 'கசூவாரினா' கடற்கரைக்கும் சென்றனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டிருந்த இடைக்காலம் என்றபடியால் அந்தக் கடற்கரைக்குச் செல்லக்கூடியதாக இருந்தது. சண்டிக் குழந்தை ஒன்றை அடக்க முயன்று தோற்றுப்போன தாய்போலப் பொங்கிவரும் அலைகளை அடக்க முயன்று தோற்றுப் போய்க் கொண்டிருந்த கடல் அவர்கள் எல்லாரையும் மிகவும் ஈர்த்தது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 5

சூடாத பூவாய், சுவைக்காத நறுந்தேனாய் பலகாலம் இருந்துவிட்ட கடல்! கடற்படையின் கெடுபிடிக்குப் பயந்து எத்தனையோ மாதங்கள் யாரும் கிட்ட நெருங்க முடியாதிருந்த கடல் என்ற நினைவு அவர்கள் எண்ணத்தை மேலும் மகிழ்வுப் படுத்தியது. அந்த மகிழ்விலே கிறிஸ்ரோபர் மட்டுந்தான் கலந்து கொள்ளவில்லை.

அவனுடைய 'ரைம் டேபிளில்' அன்று கழிவுத் தொகுதி 'பிசியோலஜி செக்சன்' படிக்கும் முறையாம். அதை அன்று தவறவிட்டால், வேறு எப்போதுமே அதைப் படிக்க நேரம் வராதாம். அதிக நித்திரை விழித்துப் படிப்பது விரைவில் மறந்து விடுமாம். மாணவர்கள் இப்படிப் பேசிக் கொண்டார்கள். அன்று கிருப்ஸ் 'ரிப்ரொப்' உடையில் வழமையை விட அழகாக வந்திருந்தான். கடலில் நீந்துவதற்காகச் சேட்டைக் கழற்றியபோது உடம்பு பளபளவென்று மின்னியது.

வெளிச்சம் எட்டவே முடியாமல்... பல இயற்கை மறைப்புக்களைப் போட்டிருந்த சவுக்கு மரங்கள் இளஞ்சோடிகளுக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று நினைத்தபடி அத்தகைய இடம் ஒன்றிற்குச் சென்ற மேரி, அங்கு இரண்டு செண்பகங்கள் மிக உல்லாசமாய் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு ஓடியதைக் கண்டு உளம் மலர்ந்து சிரித்துக்கொண்டாள். செண்பகச் சோடியுடன் அவள் தனியாய் நின்ற அந்த நிமிஷம்!

திடீரென்று வானமேடையில் மேக ஜதிக்கும் இடியின் நட்டுவாங்கத்திற்கும் மின்னல் நடமாட மழை கரகோஷமாய்க் கொட்டித் தீர்த்தது. எல்லோரும் நனைந்த குறை, நனையாத குறையாக ஓடிவந்து பஸ்ஸில் ஏறிய மனப்பதிவு! நனைந்த உடையில் தன்னை யார் யார் கவனித்திருப்பார்கள் என்றிருந்த பதற்றம்!

"என்ன பேசாமல் வாறீங்கள்?"

"இல்லை. அண்டைக்கு 'பீச்'சிலை "ஸ்பெண்ட்" பண்ணின நேரம் பற்றி நினைச்சுக்கொண்டு வந்தனான்."

"அந்த நேரத்தை நாங்கள் இரண்டு பேரும் எவ்வளவு இனிமையாக் கழிச்சிருக்கலாம்! நீங்கள்தான் 'ஓம்' எண்டு சொல்றீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லையே!" அவனது குரலில் மெல்லிய வேதனையும் விரக்தியும் தொனித்தன.

மேரி இதற்குப் பதில் கூறாமலே, "நளினியின்ரை "றூம்" கிட்ட வந்திட்டுது. நான் இனிப்போவன். "தாங்க்யூ" என்று முன்னால் வேகமாய் நடந்தாள்.

"அப்ப நான் உள்ளை வர வேண்டாமோ?"

"வேண்டாம்"

அவன் திரும்பி சைக்கிளில் ஏறிக்கொண்டான். நளினி இருந்த வீட்டின் முற்றத்துப் பிரகாசமான வெளிச்சத்திற்குக் கண் சுருங்கிப் பிறகு மெல்ல மலர்ந்தாள் மேரி. அவளைக் கண்ட நளினி, "ஆ... நீயே...? வா... வா... "ஸ்போட்ஸ் பிரக்ரிஸ்" முடிஞ்சு தனிய வாறியோ?" என்று கேட்டாள். "இல்லை கிருப்ஸ் வந்தவர்..."

"ஐ... சீ... அப்பிடியே? பிறகென்ன? ஓம் எண்டு சொல்லிப்போட்டு எங்களுக்குக் 'ஹிச்ட் பாட்டி' வைக்கிறதுதானே!" என்று பலத்த சத்தமாய்ச் சொன்னாள் நளினி.

நளினியின் உரப்பான குரலைக் கேட்டு உள்ளிருந்து வண்ணத்துப் பூச்சிகள் போல் கிசுகிசுவெனப் புறப்பட்டு வந்த வேறு பல மாணவிகள்,

"இண்டைக்கு "பக்கெற்றிங்" இண்டைக்குக் கட்டாயம் "பக்கெற்றிங்"தான் என்று கோஷமிட்டனர்.

மேரியின் மனதில் இனம்புரியாத ஒரு குடைச்சல்.

"ஐயோ, அப்பிடி ஒண்டுமில்லையடி, நான் இன்னும் ஓமெண்டு சொல்லேல்லை. நான் தனிய வாறதெண்டுதான் அவர் கூட்டிக்கொண்டு வந்தவர்..." என்று அவள் தயங்குவதற்கிடையில், ஒருத்தி வாளி நிறைய நீர் கொண்டு வந்து, முற்றத்தில் வைத்தே தலையில் கொட்டி அபிஷேகம் செய்துவிட்டாள். மற்றவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். மேரியின் நிலை உண்மையில் பெரிய பரிதாபமாக இருந்தது. ஒரே மாலைப்பொழுதில் இரண்டாம் முறை சுய கௌரவ அழிவு!

இன்று என்ன தேதி என்று நினைத்துப் பார்த்தாள். எட்டாம் தேதி! ஒரு வேளை அதுதான் காரணமோ? அது காரணமாய் இருக்க முடியாது என்று அவளது விஞ்ஞான மனம் இடித்துரைத்தது.

மனதில் எரியும் கவலை உணர்வுகளின் சூட்டை வார்த்தைகளில் ஏற்றமுடியாத நிலையில், நளினியின் படுக்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்த் தொப்பென்று விழுந்தாள் அவள். நளினி கூட அவளைப் புரிந்துகொள்ளவில்லை. ஆக இந்த உலகில் உண்மை நட்பு என்று கூட ஒன்றும் இல்லை... சே!

கொட்டம் அடங்கிய பிறகு நளினி வந்து அவள் அருகில் அமர்ந்தாள். நளினியைக் கண்டவுடன் விசித்து விசித்து வெடித்து வெளியே நன்றாக அழுதாள் மேரி. உள்ளே மிகவும் துவண்டுபோன அவள் நிலையை அது உணர்த்தியது. கிரிஸ்ரோபர் கொடுத்த அவமானகரமும் ஏமாற்றமுமான பதிலால் ஏற்கெனவே தாக்கப்பட்டிருந்த அவள் இதயம் இதைச் சாட்டாக வைத்துக் கரை உடைந்தது. இமைக்கரை உடைத்து வெள்ளம் ஆறாக ஓடியது.

“ஏனடி...? ஏன் இப்ப அழுறாய்? உனக்கு இதிலை விருப்பமில்லையே? இதையெல்லாம் “சிம்பிள்” ஆக எடுக்க வேணுமடி... வேணுமெண்டா தண்ணி ஊத்தின மீராவை ஒருக்காப் பேசிப்போட்டு வந்து படி...” என்றாள் நளினி.

“ஏனெண்டு தெரியேல்லை. எனக்குக் கிருப்ஸிலை பாவம் எண்ட ஒரு உணர்வுதான் ஏற்படுதே ஒழிய, விருப்பம் வருதில்லை. நான் என்ன செய்ய? அதுக்குள்ளை நீங்கள் “பக்கெற்றிங்” அடிச்சு, எல்லாருக்கும் தெரியப் பண்ணிறியள்... நாங்கள் இரண்டு பேரும் வேறை வேறை சமயம் எண்டதைக்கூட மறந்து போறியள்...”

“கருணைதானடி பல சமயங்களிலை காதலா மாறிறது. நீ ஜெயகாந்தன்ரை ‘கருணையினால் அல்ல’ வாசிச்சனியே? அதிலை, அந்த வயது போன நேரத்திலையும் கௌரிக்கு நோயாளியான முதலியாரிலை காதல் வந்ததுக்குக் கருணைதான் காரணம். ஜெயகாந்தன் இல்லையெண்டு சொன்னாலும் கூட அதுதான் காரணம் எண்டு நான் நினைக்கிறன்... உனக்கும் அப்பிடி வரும்... கிருப்ஸ் ஒரு நிமிஷத்திலை உன்ரை சமயத்துக்கு மாறிடுவார். அதைப்பற்றி ஏன் கவலைப்படுறாய்? “கெற் அப்... பீ... சியர்.·.புல்...”

என்று கூறி மேரியைச் சமாதானப்படுத்தி அவளை எழுப்பிக்கொண்டு நளினி அடுத்த “ரூமுக்குப்” போகையில், வெள்ளிகள் சில முளைத்திருந்தன. அந்த அறையில் பல பெண்கள் கூடியதும் பல்கலைக்கழகக் குணமும் புத்துணர்வும் மீண்டும் மீண்டும் முளைவிட்டன. மழை பெய்த பசுமை உலகெங்கும் வியாபித்துவிட்ட உணர்வு எல்லோருக்கும்!

பாடத் தொடங்கிவிட்டனர்!

துக்கத்தின் ஒரு கோடியில் இருந்து, குதூகலத்தின் மறு கோடியை உடனே எட்டித் தொட முடிவது கட்டிளமைக் பருவப் பெண்மைக்கே உரிய பாங்கு என்பதை நிரூபிப்பது போல், மேரியும் அவர்கள் குதூகலத்தில் இணைந்து பாடத்தொடங்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'றூம் அன்ரி' தன் பருத்த தேகத்தை அசைத்துக்கொண்டு விறுவிறென்று உள்ளே வந்தாள்.

"விறாந்தை முழுதும் தண்ணி ஊத்தினியள்... சரியெண்டு பொறுத்துக் கொண்டன். இப்ப காட்டுக் கத்தல்! இதுதான் அண்டைக்கே மாணிக்கவாசகர் பெண்சாதி சொன்னவ, ஆருக்கு அறை குடுத்தாலும் 'கம்பஸ்' குரங்குகளுக்குக் குடுக்காதை மச்சாள் எண்டு. நான் கேட்டிருந்தால் ஏன் இந்தக் கரைச்சல்? நான் பாவங்கள் எண்டு தந்தனான். என்ரை தலையைச் செருப்பாலை அடிக்க வேணும்..." என்று தலையில் அடித்துக் கொண்டு, ஒரு பாட்டம் பெய்து ஓய்ந்த பெருமழைபோல் ஒரே மூச்சில் கொட்டித் தீர்த்தாள்.

"நாங்கள் விறாந்தையிலை தண்ணி ஊத்தேல்லையே! முத்தத்திலையெல்லோ ஊத்தினனாங்கள்..." என்று 'அன்ரிக்கு' முன்னால் கூறுகிற தைரியம் ஒருவருக்கும் எழவில்லை. அவள் யானை போல் அசைந்து மறுபடியும் உள்ளே சென்ற பின்னர், "உது மனிசிக்குக் கலியாணம் செய்யாத வருத்தம். வேறை ஒண்டுமில்லை." என்று ஒருத்தி மெதுவாகச் சொல்ல மீண்டும் அந்த அறையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

போய்க் கொண்டிருந்த ஆந்தை விழிகள் அனல் கக்கும் கோபத்துடன் திரும்பிப் பார்த்தன.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6

எது அழகைக் கொடுக்கிறது? நுனியில் கொஞ்சம் செதுக்கிவிட்டாற் போன்ற அந்த மூக்கா? ரோஜாவும் சந்தனமுமான அவள் நிறமா? அல்லது சுரைக்காய் மாதிரி அழுத்தமும் சரிவுமாகத் தெறிக்கும் அந்த உடல் அமைப்பா? என்ன இருந்தாலும் மென் சிவப்பு நிற 'நதியா' சாறியில் மேரி மிக அழகாகவே இருந்தாள்.

காலையில் புனித அன்னம்மாள் ஆலயத் திருப்பலிப் பூஜைக்குப் போய் வந்தாள். ஒரு மணிக்கு ஆலயத்தில் இருந்து திரும்பியதில் இருந்து 'பேர்த் டே' ஆயத்தங்கள்தான்!

மாலை நேரத்தின் மெல்லிய காற்றில் அவள் மேனி சிலிர்த்தது. அவளது பிறந்த தினத்திற்கு அவளது அழைப்பை ஏற்றுக் கூடப் படிக்கும் மாணவர், மாணவிகள் அனைவருமே வந்திருந்தனர். விரிவுரையாளர்கள் கூடச் சிலர் வந்திருக்கிறார்கள். குகநாதன் வந்திருக்கிறார். சிவா வந்திருக்கிறார். 'அப்ஸ்' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் மிஸிஸ் அப்பாத்துரை வந்திருக்கிறார். கிறிஸ்ரோபர் மட்டும் வரவில்லை. அவன் ஒரு விசித்திரப் பிறவிதான். அவள் அழைப்பிதழ் கொடுக்கப் போனபோதே சொன்னான், "இந்த "பேர்த் டே"... இஞ்சை ஒரு சமயச் சடங்கு போலை மாறிட்டுது. ஒருத்தரும் செய்யாமல் விடலாகாது. விட்டால் ஏதாவது தீமை விழையும் எண்டமாதிரி..."

"நீங்கள் செய்யேல்லையா...?"

"எனக்கு இன்னும் பயித்தியம் பிடிக்கேல்லை..."

"அப்ப, "பேத்டே" கொண்டாடுற எல்லாருக்கும் பயித்தியமா? "ஆர் வீ ஓல் மாட்?"

"அதிலை சந்தேகம் வேறை இருக்கா?"

அவன் 'பொட்டைச் சாரை' மாதிரி 'விர்'ரென்று நடந்தான். அந்த அலட்சியம் அவளை எதுவோ செய்தது. முதல் முறையல்ல... இரண்டாவது முறை! அவன் இன்று வரவில்லை. அழைப்பிதழ் கொடுக்கத் தவறிய சில நண்பர்கள் அது பற்றிப் பொருட்படுத்தாமல் வந்திருக்கிறார்கள். மனித நடத்தையை எப்படிப் புரிந்து கொள்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது நெருங்க நெருங்கப் பூமணக்கும் வேளையின் இனிமைகள் மடலவிழ்கின்றன.

சரியாக நாலு மணிக்கு அவள் இருபது மெழுகுதிரிகளைக் கொழுத்திக் 'கேக்' வெட்டினாள்.

சக மாணவர்களின் "ஹப்பி பேர்த்டே டூ யூ..." கோஷம் வானைப் பிளக்கிறது. மெழுகுதிரிகளைக் கொழுத்தியபோதும்-பின்னர் ஊதி அணைத்த போதும், நேற்று நடந்த மெழுகுதிரிச் சம்பவம் நினைவுக்கு வந்து மனதை உறுத்துகிறது.

பல வீடுகளுக்கும் சென்று அழைப்பிதழ் கொடுத்துவிட்டு, விரிவுரையாளர் குகநாதன் வீட்டிற்கு அழைப்பிதழ் கொடுக்கச் செல்லும்போது நேரம் ஏழு மணியாகிவிட்டது. சைக்கிளில்தான் போயிருந்தாள்.

"மனித மூளையின் செயற்பாடுகளை முழுமையாகப் புரிந்துகொள்ள விஞ்ஞானத்திற்கு இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்?" என்று அவளிடம் இருந்த சந்தேகத்தை அவரிடம் கேட்டு, 'பேர்த்டே' தொடர்பான அழைப்பிதழையும் கொடுத்த சில நிமிடத்தில் மின்சாரம் நின்றுவிட்டது. மின்சாரம் இப்போது யாழ்ப்பாணத்தில் அடிக்கடி கைவிட்டுவிடுகிறது. மனித மூளை தொடர்பான தனது பதிலைப் பாதியில் நிறுத்திவிட்டு, மெழுகுதிரி ஒன்றைக் கொழுத்திக் கொண்டு வந்து வைத்துவிட்டு அவர் சிரித்தார்.

"உமக்கு ஒரு விஷயம் தெரியுமா?" என்று கேட்டார். "என்னவென்று சொல்லாமல், ஒரு விஷயம் தெரியுமா என்றால் என்ன சொல்வது?" என்று அவள் கேட்க,

"தென்னாபிரிக்காவில் ஒரு கன்னிப் பெண்ணை ஓர் இளைஞன் பார்க்க வந்தால், அவள் ஒரு மெழுகுதிரியைக் கொழுத்தி வைப்பாளாம். அந்த மெழுகுதிரி எரிந்து முடியும்வரை அவன் அவளுடன் கதைக்கலாமாம். ஆகவே அங்கே பெண்கள் தங்களுக்குப் பிடித்த இளைஞர்கள் வந்தால்... பெரிய மெழுகுதிரி கொழுத்தி வைப்பினமாம்." என்றார்.

அவர் கொழுத்திக் கொண்டு வந்த மெழுகுதிரியை அவள் பார்த்தாள். அது வழமையாகப் பிரதேசத்தில் காணப்படுவதைவிடப் பெரியதுதான். இவர் என்ன சொல்ல முயலுகிறார் என்று அவள் மனதிற்குள் சங்கடப்படுவதற்குள் அவர் தனது வழமையான மன நிலையை அல்லது விளக்கத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டார்.

"எனக்கு விருப்பமான என்ரை செல்லத் தங்கச்சி என்ரை வீட்டுக்கு வந்திருக்கிறபோது... நான் உயரமான மெழுகுதிரிதானே கொழுத்த வேணும்...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளையின் செயற்பாடு பற்றிய கலந்துரையாடலை அவர் மீள எடுத்துக் கொள்ளவில்லை.

விலகு விலகு என்று ஆர்ப்பரிக்கும் அறிவுடன் மேரி எழுந்து வந்தாள்.

----------------------

"பேர்த்டே" விருந்தில் பல 'கேம்ஸ்' நடந்தது. எல்லாரும் வட்டமாக அமர்ந்திருந்து ஒரு மோதிரத்தை வாயில் வைத்திருக்கும் தீக்குச்சியின் உதவியோடு மற்றவருக்கு மாற்றுவது பீடத்தில் வழமையாக நடப்பதுதான். அந்த "கேமின்"போது மேரியின் ஒரு பக்கம் நளினியும் மறுபக்கம் குகநாதனும் இருந்தனர்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 7

வெளியே தென்னை மரங்களின் சீதளப்பச்சை தெரிந்தது.

நளினியின் நீலக் கருவிழி நீச்சல் குளம் என மாறிவிட்டது. நளினியும் ராமும் ஒரு புறமும், மேரியும் கிருப்ஸ்ஃம் மறுபுறமும் என்று இரண்டு முறை 'ரேபிள் ரெனிஸ்' விளையாடியதில் இரண்டு முறையும் நளினி பக்கம் தோற்றுப் போய்விட்டது.

"தோல்வி எண்றது வெற்றியின்ரை முதல்படி. "டோன்ற் கெற் டிஸ்கரேஜ்ட்..." நாளைக்கே நீ 'கோச்சிட்டை ஹெல்ப்' எடுத்துக்கொண்டு எங்களை வெல்லலாம்... சின்ன விஷயம்..." என்றாள் மேரி.

"கிருப்ஸ்ஸுக்கு 'டபிள்' வெற்றி" என்று சிரித்துச் சமாளிக்கிறாள் நளினி.

விளையாட்டின் ஆரம்பத்தில் "லவ்... ஒன்...", "லவ்... ரூ..." என்று ராம் "ஸ்கோரைச்" சொல்லிக்கொண்டு விளையாடும்போது, கிருப்ஸ் இடையிடை மேரி பக்கம் திரும்பி, "லவ் மீ..." என்று சொல்லிக் கொள்வான். அதைத்தான் நளினி "டபிள்" வெற்றி என்று குறிப்பிடுகிறாள் போலத் தொனித்தது. ஆனால் மேரி அதைக் கேட்காதவள் போலவே விளையாடிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று இந்த நேரத்தில் கிரிஸ்ரோபர் அங்கு வருவதைக் கண்ட ராம்,

"என்ன அதிசயம்? சூரியன் இனிமேல் மேற்கை உதிக்கப் போகுது. பூச்சி விளையாட்டுப் பக்கம் தலை நீட்டுது..." என்றான்.

"இல்லை. நான் விளையாட வரேல்லை... வெளியிலை நிலைமை அவ்வளவு சரியில்லை. பதற்ற நிலை எண்டு தெரிது. மேரியிட்டை இண்டைக்கு "டிஸ்கஸன்" இல்லை எண்டு சொல்ல வந்தனான்..." என்கிறான் கிரிஸ்ரோபர்.

"மேரி... எப்ப தொடக்கம் கிரிஸ்ரோபரோடை "டிஸ்கஸன்?" எங்களை விட்டிட்டோ?" என்று கிருப்ஸ் கேட்டான்.

வெளுத்திருந்த வானம். அதற்கிடையில் ஊமைத் துயரமாய் ஒரு குளிர்காற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது இப்ப ஒரு "ரூ வீக்ஸ்"தான். கிரிஸ்ரோபரும் நானும் மட்டும் செய்த "ஏகிரிமெண்ட்". ராமும் இடைக்கிடை பார்வையாளரா வாறவர்..." என்று தப்ப முனைந்தாள் மேரி. என்றாலும் குரல் பிசிறடித்தது.

"நாளைக்கு 'ரென்சன்' குறைஞ்சால்..." ஐஞ்சுமணி... வழக்கமான இடம்... 'ரொப்பிக்... மஸ்குலர் பிசியோலஜி' என்று சொல்லிவிட்டு, கிரிஸ்ரோபர் நகர ஆரம்பிக்கும்போது,

"ஆ... மறந்திட்டன் அண்டைக்கு மேரியின்ரை "பேர்த்டே"யிலை நான் எடுத்த ஸ்பெஷல் படங்கள்" என்று சில படங்களை "பொக்கற்றில்" இருந்து எடுத்தான் ராம்.

எல்லாரும் அவற்றை ஆவலுடன் பார்த்தனர். உள்ளே மெல்ல மெல்ல ஊர்ந்து வரும் மழை இருளின் கரங்கள்!

ஒரு படத்தைக் காட்டி, "இந்தப் படந்தான் "சுப்பேர்ப்..." என்றான் ராம். அதில் மோதிரம் மாற்றும் விளையாட்டின்போது, குகநாதன் மோதிரத்தை மாற்றுவது, அவளை முத்தமிடுவது போலவே தெரிந்தது.

அந்தப் படத்தைப் பார்த்ததும் கிருப்ஸ்ஸின் முகம் இறுக்கமடைந்தது. வெளியில் இருண்டு வரும் வானத்தைப் போலவே.

எப்போது வேண்டுமானாலும் கீழே இறங்கத் தயாராய் அணி திரண்டு நிற்கும் கறுப்பு வானம்!

கண்களுக்குத் தெரியாத பல இழைகள் தாறுமாறாக உள்ளுக்குள் குழம்புவது போல் உணருகிறாள் மேரி. கிரிஸ்ரோபரும் படங்களைப் பார்த்தான். நகர்ந்து மெதுவாகத் தலை குனிந்து புன்னகைத்துக் கொண்டே பேசாமல் இறங்கிப் போய்விடுகிறான்.

ஒருவரும் எதிர்பாராத நேரத்தில் கிருப்ஸ் அந்தப் படத்தை மேரியிடமிருந்து வெறி பிடித்தவன் போல் பறித்துக் கொண்டான். எல்லோரது கண்ணுக்கும் முன்னாலேயே அதைத் தாறு மாறாய்க் கிழித்துப் போட்டான்.

மேரியின் அந்தராத்மா 'விண்விண்' என்று குத்திக் கொண்டது. நெஞ்சும் தொண்டைக் குழியும் காரணமில்லாமல் உலர்ந்து போயின.

என்ன இது? அவள் நினைவு தப்புகிறதா?

"ஓ நினைவே, பிரக்ஞையே, மேரியை விட்டுப் போய்விடாதே!"

"கிருப்ஸ்!" தன்னால் முடிந்தவரை உரத்துக் கூப்பிட்டாள் மேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திஸ் இஸ் நன் ஒ.்.ப் யுவர் பிஸ்னஸ்" என்று உச்சத் தொனியில் கத்தினாள்.

வெளியே ஒக்ரோபர் பிரச்சினையின் முதலாவது வெடி விண்ணை அதிரச் செய்வது போலக் கேட்டது.

கிருப்ஸ் அதிர்ந்து போனான்.

அவனுக்குள்ளே எழுந்திருந்த பெரிய கோட்டைகள் பல அக்கணத்தில் பொடிந்து போயின.

முதல்நாள் 'பிசியோலஜி லாப்' பில் 'பிளட் ரெஸ்ற்' செய்தபோது நடைபெற்ற நிகழ்வு வேறு மேரியின் மனதில் ஓடி வருகிறது.

ஒவ்வொரு வைத்திய பீட மாணவர்களும் தமது குருதி எந்தப் பிரிவைச் சேர்ந்தது என்று அறிந்திருக்க வேண்டியது மிக அவசியம் என்பதாலும், ஒருவரின் குருதிப் பிரிவை எப்படிச் சோதித்து அறிவது என்பது பற்றிய செயல்முறை விளக்கத்தைக் கொடுப்பதற்காகவும் அன்று அவர்கள் ஒவ்வொருவரது குருதிப் பிரிவுகளும் சோதிக்கப்பட்டன.

மேரியின் கையில் குருதியைக் குத்தி எடுத்து நளினி பரிசோதித்த போது, அந்த முடிவு 'ஏ சய'வாக வந்திருந்தது. இதைக் கிருப்ஸ் அவதானித்திருக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் குருதி 'ஆர்.எச்.சய'வாக இருந்தால், அவள் கணவனும் 'ஆர்.எச்.சய'வாக இருப்பது விரும்பத்தக்கது. கணவன் 'ஆர்.எச்.சக'வாக இருந்து அந்தப் பெண்ணுக்கு உருவாகும் குழந்தை கள் 'ஆர்.எச்.சக'வாக இருக்கும்போது, பிரசவத்தில் பிரச்சினைகள் ஏற்படும். குழந்தை இறந்து பிறக்கும். அல்லது குறைந்த பட்சம் செங்கமாரிக்கு உள்ளாகும். பெண் 'ஆர்.எச்.சய'வாகவும் ஆண் 'ஆர்.எச்.சக'வாகவும் இருக்கும் குடும்பங்கள் பல பிள்ளைகள் பெற்றுக் கொள்ள முடியாமலே போயிருக்கிறது. இது மருத்துவ மாணவர்கள் அனைவருக்கும் தெரிந்த விடயந்தான். மக்கள் தொகையில் 'ஆர்.எச்.சய' குழுவினர் குறைவு. ஆனால் அந்தக் குறைந்த நூற்று வீதத்தினுள் மேரியும் வந்துவிட்டது கிருப்ஸுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். ஒருவேளை மேரி அவன் விருப்பத்திற்குச் சம்மதித்தாலும், அரைக்கிணறு தாண்டி நடுவில் விழுந்த நிலையாகவே இருக்கும். பிறகு இல்லறத்தில் அபசுரம் விழுந்துவிடும்.

கிருப்ஸ் சிந்தித்தான். அவசரமாகத் தனது குருதியை மதனைக் கொண்டு சோதித்தான். அந்த முடிவு 'ஓ சக' என்று வந்தது. "இதை நீ வெளிலை விடாதை" என்று மதனிடம் சொன்னான். முடிவுகளைப் பதிவு செய்யும் கொப்பியில் தனது குருதி இனத்தை 'ஓ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சய' என்று பதிந்தான். மேரி இந்த முடிவைப் பார்த்துப் பெருத்த மன நிம்மதி அடைவாள் என நினைத்தான்.

சிறிது நேரத்தில் விரிவுரையாளர் திருமதி. அப்ஸ் வந்தார். நளினி மேரியின் குருதியைச் சோதித்து முடிவு கண்ட முறை சரிதானோ என்று எழுமாற்றாகச் செய்து பார்த்தார். நளினியின் முடிவு தவறானது என்று தெரிந்தது. மருத்துவ மாணவர்கள் விடயங்களைச் சரியாகச் செய்யப் பழகுவது மிக அவசியம் என்று கண்டித்தார். மனித உயிர்களோடு விளையாட முடியாது என்று போதித்தார். மேரியின் குருதி இனம் 'ஏ சக' என்று திருத்தப்பட்டது.

அடி வயிற்றில் இருந்து ஒரு செதில் கிளம்பி மேலுக்கு வந்தாற் போன்ற ஒரு குலுக்கல் கிருப்ஸிடம் தோன்றியது.

மண்டைக்குள் 'ணிங் ணிங்' என்று உரலில் விழும் உலக்கைகள்!

அவசரமாகக் கிருப்ஸ் திருமதி. அப்பாத்துரையிடம் ஓடினான் "மடம், என்ரை 'பிளட்' இவன் மதன் 'ரெஸ்ற்' பண்ணினவன். பிழையாய் இருக்கலாம் எண்டு எனக்கொரு, 'டவுற்..."

மதன் அவனைத் தொடர்ந்து வேகமாகச் சென்றான்,

"இல்லை மடம், நான் 'ரெஸ்ற்' பண்ணி இவன்ரை "றிசல்ற்ஸ்" 'ஓ சக'தான் வந்தது. இவன்தான் அது பிழையெண்டு 'ஓ சய' எண்டு பதிஞ்சிருக்கிறான்...". உண்மை நிலை மாணவர்கள் எல்லாருக்கும் புரிந்துவிட, அவர்கள் மத்தியில் மெல்லிய சிரிப்பொலி எழுந்தது. திருமதி. அப்ஸும் கடைவாய்க்குள் சிரித்துக் கொண்டார்.

கிருப்ஸ்ஸுக்கு ஒரு மூச்சுத் திணறல்! ஏதோ ஒரு சிறைச் சாலைக்குள் அகப்பட்டு நிற்பது போல! மிஸஸ் அப்ஸ் கூடத் தன்னைக் குறைவாக மதிப்பிட்டிருப்பாரோ? மேரி தலையைக் குனிந்து கொண்டாள்.

மேரி பற்றிய அவனது ஆவல் மிக அதிகமாய் இருந்தபடியால் தான் அந்த 'ஃபோட்டோ'வைப் பார்த்து அவ்வளவு கோபப்பட்டானா? அப்படியானால் மேரி அவனுடன் மிகக் கடுமையாகவே நடந்து கொண்டு விட்டாளா? என்ன இருந்தாலும் அவளுடைய சுதந்திரத்தில் அவன் இவ்வளவு அதிகமாகத் தலையிட்டிருக்கக் கூடாது. சட்டபூர்வமாக எந்த உரிமையும் இல்லாதபோதே அவளது படம் ஒன்றைக் கிழிக்கிறான்... சட்டபூர்வமான உரிமை வந்தால்... அவளது சுதந்திரத்தைக் குழி தோண்டியே புதைத்துவிடுவான். இந்த ஆணாதிக்க வெறிக்கு ஒருபோதும் இடம் கொடுக்கக்கூடாது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8

என்ன நடைபெற்றது என்று சரியாகப் புரிந்து கொள்ளாமல், உணர்ச்சி வசப்பட்டுச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது.

மனதினுள்ளே சற்றுக் குழம்பிக் கொண்டாலும், தான் செய்தது சரியே என்ற முடிவுக்கே இறுதியில் வந்தாள் மேரி.

உடலில் மின்சாரமாய்ப் பாயும் குளிர்!

ஒருவேளை இந்த நிகழ்வு காரணமாய் அவளுக்கும் கிருப்ஸ்ஸுக்கும் இடையில் இருந்த உறவு, அந்த நட்பு முறிந்து போகலாம். போனால் போகட்டும்! அதற்கு விலையாக ஒருவரின் சுதந்திரத்தையும் சுய கௌரவத்தையும் தரமுடியாது.

"நேற்றையான் 'பயோ கெமிஸ்றி நோட்ஸை'த் தாங்கோ பாத்து எழுதிப் போட்டுத் தாறன்..." என்று கேட்டு ராம் நளினியிடம் வாங்கிக் கொண்டு படிகளில் இறங்கினான்.

கிறிஸ்ரோபரைத் தவிர மற்ற "போய்ஸ், லெக்சர்ஸ் ரைமிலை நோட்ஸ்" எடுப்பதில்லை. 'கேள்ஸ்'ஸின் "நோட்ஸில்" தங்கியிருக்கும் ஒட்டுண்ணிகள். பெரும்பாலும். கிருப்ஸ் ஒருவேளை இனிமேல் மேரியிடம் 'நோட்ஸ்' கேட்க மாட்டான்.

------------

கிருப்ஸ்ஸும் மதனும் தங்கியிருக்கும் வீட்டில் இன்னொரு பகல் மடிந்தது.

அன்றும் மின்சாரம் இருக்கவில்லை. கொழுவல் வேலைகளினால் இந்தப் பகுதி அடிக்கடி இருளில் மூழ்கிவிடுகிறது. திசைகளின் தேசமெங்கும் இருட்டின் ஆதிக்கம்.

ஒரு மெழுகுதிரியை மேசையில் கொழுத்தி வைத்துக்கொண்டு அதையே பார்த்துக்கொண்டிருந்தான் கிருப்ஸ்.

"என்னடா, திண்ம மெழுகு திரவமாகிறதும், திரவ மெழுகு ஆவியாகிறதும், மெழுகு ஆவி எரியிறதும் ஆறாம் வகுப்பிலை படிக்கிற "சயன்ஸ் பிறக்ரிக்கல்ஸ்!" இப்ப செய்து பாத்து வலு கவனமா அவதானிக்கிறாய்...?" என்று கேட்டான் மதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீயின்ரை அராஜகத்தாலை மெழுகு கரையுது. திரியும் கருகுது. அதுதான் பாக்கிறன்" என்றான் கிருப்ஸ்.

வாகை மரத்தில் இருந்து ஆந்தை ஒன்று அவலக்குரல் எழுப்பும் ஒலி கேட்டது.

"அது பேரினவாதத்தின்ரை மரண ஓலம்..." என்றான் மதன்.

"நீ எங்கடை இனத்தின்ரை பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கிறாய். நான் சொந்தப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசிறன்..."

கிருப்ஸின் குரலின் உணர்வுகளெல்லாம் பஞ்சுப் பிசிறுகளாய்ப் பறக்கின்றன.

"ஏனடா? உனக்கிப்ப என்ன பிரச்சினை? மேரிக்குப் பின்னாலை மேத்தாவின்ரை கவிதை வரிகளோடை திரிஞ்சாய்... இன்னும் திரியலாந்தானே!"

"அதெல்லாம் முடிஞ்ச கதையாய்ப் போச்சு..."

"ஏனடாப்பா? நான் சொல்லச் சொல்லக் கேளாமல் வால் பிடிச்சனி... என்ன நடந்தது இப்ப...?"

"திஸ் இஸ் நன் ஒ.்.ப் யுவர் பிசினஸ்" எண்டு அவள் நளினி, ராம், கிறிஸ்ரோபர் எல்லாருக்கும் முன்னாலை என்னைத் தூக்கி எறிஞ்சிட்டாள்..."

மேரிக்கும் அவனுக்கும் இடையில் இருந்திருக்கக் கூடிய மெல்லிய நட்பு இழைகளையும் அவன் சின்னாபின்னமாக்கிக் கொண்டு வந்திருக்கிறான் என்பது மதனுக்குப் புரிந்தது.

மெதுவாக அவனுக்கு அருகில் சென்று அவன் விபரித்த சம்பவத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"குகநாதனோடை இப்பிடிப் படம் எடுத்துப் போட்டு அதை வைச்சிருக்க வேணும் எண்டும் விரும்பிறாள். கிறிஸ்ரோபரோடை 'டிஸ்கஸன்' செய்யிறாள் ஒவ்வொரு நாளும். என்னை ஒரு வரி கேட்கவுமில்லை. அப்பவும் நான் பொறுமையாத்தான் இருந்தன். இண்டைக்குச் சரியான 'பூற்ஸ்' தந்திட்டாள் எனக்கு. 'தற்ஸ் ஓல்...' விடு கதையை!" என்று முடித்து மெழுகுதிரியை ஊதி அணைத்துவிட்ட கிருப்ஸ் 'தொம்'மென்று மெத்தையில் விழுந்தான்.

உறக்கத்தைப் போலக் கருணை மிகுந்த ஆறுதல்... உலகில் வேறு எங்கும், எதிலும் பெற முடியாது. "நல்லா நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளட்டும்..." என்று நினைத்துக் கொண்டு தனது புத்தகத்தை விரித்தான் மதன்.

காலையில் வழக்கத்தை விடப் பிந்தியே எழுந்திருந்தான் கிருப்ஸ். மனம் மிகவும் சோர்வுற்றிருந்தது. விரிவுரைகளுக்குப் போக மனம் இல்லை. மதன் மிகவும் வற்புறுத்திய பிறகே குளித்து உடை மாற்றிக்கொண்டு 'சாப்பாட்டு அன்ரி' வீட்டுக்கு வந்தான். அன்று தோசைதான்!

'சாப்பாட்டு அன்ரி' தோசை சுடுவது ஒரு சுவாரசியமான விடயம். 'அன்ரி' வீட்டில் மொத்தம் பதினைந்து பல்கலைக்கழக மாணவர்கள் சாப்பிடுகிறார்கள். எல்லாருக்கும் காலை எட்டு மணிக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் என்பது 'அன்ரி'க்கு வடிவாகவே தெரியும். ஏழரை மணிக்கு ஏறத்தாழப் பதினைந்து பேரும் 'அன்ரி' வீட்டில் கூடிய பிறகே தோசை சுடத் தொடங்குவாள் அன்ரி.

எவ்வளவு சாப்பிடுகிறார்கள் என்றில்லாமல் எத்தனை முறை சாப்பிடுகிறார்கள் என்பதற்கான காசு மொத்தமாக மாதம் மாதம் அறவிடப்படும்.

"நான் வெள்ளெனச் சுட்டு வைச்சிருப்பன். ஆறிப்போம். சுடச் சுடச் சாப்பிட்டால்தான் நல்லா இருக்கும்..."

என்று சொல்லித் தானே சிரித்துக் கொள்வாள். மற்றவர்களின் முகத்தில் என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பது பற்றி அவள் கவலைப்படுவதில்லை. தனது 'ஸ்ரற்றஜி'யை இவர்கள் புரிந்துகொண்டு விட்டார்களா இல்லையா என்பது பற்றியும் அவள் அலட்டிக் கொள்வதில்லை.

ஒவ்வொரு தோசையாகச் சுட்டு - சின்னத் தோசைதான் - பதினைந்து பேருக்கும் வரிசையாகப் போட்டுக்கொண்டு வருவாள். 'முதல் றவுண்ட்' முடிய ஏழேமுக்கால் ஆகிவிடும். இரண்டாவது 'றவுண்ட்' முடியக் கட்டாயம் எட்டு மணி ஆகிவிடும். மூன்றாவது தோசைக்காக யாரும் காத்திருக்க முடியாது என்பது 'அன்ரி'க்கு நன்றாகவே தெரியும்.

அன்றும் அப்படியே நடந்தது. "நாங்கள் வாற நேரம் தோசை முழுவதையும் சுட்டு வையுங்கோ. தேவையானதை எடுத்துப் போட்டுச் சாப்பிட்டுப் போறம்" என்று யாரும் சொல்லவில்லை. வயிறு நிறைந்ததோ இல்லையோ எல்லாரும் மணிக்கூட்டைப் பார்த்துக்கொண்டு இரண்டாவது தோசையுடன் எழுந்து போய்விட்டார்கள். கிருப்ஸ் எழுந்திருக்கவில்லை.

"நான் இண்டைக்கு "லெக்சர்ஸ்ஸுக்கு" வரேல்லை, நீ போ மதன். "அன்ரி"யிட்டை இன்னும் மூண்டு தோசை வாங்கிச் சாப்பிட்டிட்டுப் போய்ப் படுக்கப் போறன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மதனிடம் கூறினான்.

சரியான 'டிப்' அவனுக்கு வந்திருப்பதைப் புரிந்துகொண்டான் மதன், அதிக நித்திரை, அதிக சாப்பாடு!

"சரி, நீ போய்ப் படு. விசர்த்தனமா வேறை ஏதும் செய்ய யோசிச்சுப் போடாதை" என்றான்.

உள்ளம் வெதும்பிப் புழுங்கிச் சோரும் நிலையில் வெறும் சடப்பொருள் போல் தோசையைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான் கிருப்ஸ்.

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9

மின்னோட்டம் பாய்ந்தாற்போல் மேரியின் உள்ளத்தை உலுப்பிவிட்ட அந்த நிகழ்வுக்குப் பின் அவள் வீட்டிற்குப் போகாமல் படிப்பதற்காக நளினியின் "றூமில்" தங்கிய இரவு, வெளியே பிரச்சினைகள் தலைதூக்கியதால் அவளால் வீட்டுக்குப் போக முடியவில்லை மறுநாளும்.

அதற்கு அடுத்தநாள் விடிகாலையில் புறப்பட்டு அம்மன் கோயிலுக்கு வந்து சேர்ந்த ஊர் மக்களோடு நளினியும், மேரியும் இன்னும் சில மாணவிகளும் இணைந்துகொண்டனர்.

பயங்கரமான அடுத்த நாளைப் பார்க்கக் கிழக்கில் கறுப்புத் திரையைக் கழற்றினான் கதிரவன்.

"தேத்தண்ணி இருக்கு, தேவையான ஆக்கள் வந்து குடியுங்கோ!"

தேநீர்க் கிடாரத்துக்கு அருகில் ஓர் இளைஞன் நின்று குரல் கொடுத்த போது அங்கே திரும்பிப் பார்த்த மேரி, அந்த இளைஞனுக்கு அருகில் கிரிஸ்ரோபரும் வேறு சில தெரிந்த இளைஞர்களும் நிற்பதைக் கண்டு மெதுவாக எழுந்து அவ்விடத்துக்குச் செல்லுகிறாள்.

"நான் ஒருநாள் "டிஸ்கஸனைக்" 'கான்சல்' பண்ணினால், நாட்டு நிலை அதை ஒரேயடியாக் "கான்சல்" பண்ணிடும் போலை இருக்கு..." என்றான் கிரிஸ்ரோபர் இவளைக் கண்டவுடன்.

தொடர்ந்து பீரங்கி முழக்கங்கள் கேட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையிலும், அடுத்த நேரம் சாப்பாடு கிடைக்குமா என்று தெரியாமல் மக்கள் தவிக்கின்ற இந்த நேரத்திலும், அடுத்த நிமிடம் உயிர் இருக்குமா என்பது நிச்சயமற்ற இந்தப் பொழுதிலும் அவன் "டிஸ்கஸனைப்" பற்றிக் கதைப்பது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனாலும் அவனுடன் கதைக்க மனம் விரும்பியது. சன நெருக்கமான இடத்தை விட்டுச் சற்று விலகிச் சென்று மேரி கேட்டாள்,

"நீங்கள் ஏன் அண்டைக்கு ஒருநாள் 'டிஸ்கஸன்' "கான்சல்" பண்ணினீங்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது எங்கடை தூரத்து "றிலேசன்" ஒருவர் செத்தது"

"நீங்கள் அதுக்குப் போகாமல் விட்டிருக்க முடியாதோ?"

"விட்டிருக்கலாம். அப்பா அம்மா போனவைதான். எண்டாலும் எனக்கு இறப்பைப் பாக்கிறதும் செத்தவீட்டைப் பாக்கிறதும் விருப்பம்..."

இதைக் கேட்டபோது மேரி மெல்ல அதிர்ந்தாள். பல வகைகளிலும் இவன் புதுமையாக இருக்கிறான்.

முகத்தால் ஒரு முக்கால் வட்டம் போட்டு, கோயிலுக்கு வந்து சேர்ந்து கொண்டிருந்த சனங்களுக்குப் பாணும் தேநீரும் விநியோகிக்கும் இளைஞர்களைக் கவனித்தபடியே,

"அப்ப... நாவல், சினிமா இதுகளிலையும் 'ட்ரஜடி'தான் விருப்பமா?" என்று கேட்டாள்.

"ஓ... நல்ல பாத்திரம் நலிவடையிறதைப் பாக்கிறது ஒரு திருப்தி. இந்தச் சனங்கள் அழுது குழறிக்கொண்டு வாறது பாக்க நல்லா இருக்கு. அதிலை மாத்திரமில்லை... நானே ஒரு இடத்திலை இருந்து 'டேட்றீம்' பண்ணினாக் கூட ஏதாவது கோபமா, பயமா, அதிர்ச்சியா, வெறுப்பா அல்லது வேதனையாத்தான் கற்பனை வரும்...

"எங்களுக்கு அப்பிடி இல்லையே!"

"உண்ணாவிரதம் இருக்கிற போராளியைப் பாக்கவும் எனக்கு ஒரு திருப்தியா இருக்கும். கனநாள் போய்ப் போய்ப் பாத்திட்டு வந்தனான். கடைசியாச் சாகிறதும் பாத்தனான்..."

"நீங்கள் ஒரு வித்தியாசமான ஆள் அப்பா..."

"சரி, அது போகட்டும் - நான் சாதாரண மனுசன்தான். உங்கடை நிலைமையைச் சொல்லுங்கோ. கிருப்ஸ்ஸோடை அண்டைக்குப் பிரச்சினைப் பட்டீங்கள். அந்தக் கவலை மாறிட்டுதோ?"

அன்றைய நிகழ்வைத் தனது மானசீகத் திரையில் பெருப்பித்துப் போட்டுப் பார்த்தாள் மேரி. பல விம்பங்கள் மறை உணர்வுகளைத் தந்தன. சிறிது நேரம் மௌனமாக இருந்தாள். வானத்தில் "ஹெலிகள்" வட்டமிடுவதைப் பார்ப்பது போலவும் இருந்தது. சிந்திப்பது போலவும் இருந்தது. சிறிது நேரத்தின் பின் மேரியே கேட்டாள்,

"கிருப்ஸ் என்னை விரும்பிறது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களை விரும்பக்கூடிய தகுதி அவனுக்கு இல்லை எண்டு நினைக்கிறன்..."

"பிரச்சினை உண்டாக்கின அந்தப் படத்தை நீங்கள் பாத்தனீங்கள் தானே?"

"பாத்தனான்"

"அது என்ரை "பேர்த் டேயிலை" ஒரு 'கேம்' நடக்கேக்கை எடுத்தது. எல்லாருக்கும் முன்னாலை நடந்த விஷயம். எல்லாரும்தான் மோதிரம் மாத்தினவை... அதிலை இரகசியம் ஒண்டுமில்லை. பிழை எண்டுமில்லை. கிருப்ஸ் அதைப் பாத்து ஏன் கோவிக்க வேணும்?"

"யெஸ், அது உங்கடை சுதந்திரந்தான். ஆனால் இந்த இடத்திலை நான் இன்னொரு உண்மையையும் உங்களுக்குச் சொல்ல வேணும். குகநாதனுக்கு இப்ப நாப்பது வயது இருக்கும். கிட்டத்தட்ட இந்த வயதிலை 'செக்சுவல் டிசையர்ஸ்' அதிகரிக்கும் எண்டது ஒரு உண்மை. ஆனபடியால் நீங்களும் கவனமாய் இருக்க வேணும். "கேமிலை" அவர் ஏன் உங்களுக்குப் பக்கத்திலை வந்தார் எண்டும் யோசிக்க வேணும்..."

மேரி மீண்டும் எதையோ பற்றி மிக ஆழ்ந்து யோசித்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

"உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை நீ காண்பதில்லை. ஆனால் பிறர் கண்ணிலிருக்கிற துரும்பையும் காண்கிறாய்..." என்பதை அவள் நினைத்துப் பார்த்திருக்கலாம். கிறிஸ்ரோபரில் எத்தனையோ குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் குகநாதனின் குறைபாடு அவளுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

மேரியைச் சிந்தனையில் இருந்து விடுவிப்பவன் போலத் தன் கையில் இருந்த ஊசி ஒன்றினால் அவள் கையில் 'சதக்'கென்று குத்தினான் அவன்.

அவள் திடீரென்று முகம் சுருங்கி, "ஐயோ... வட் இஸ் திஸ்?" என்றாள். அந்த வலியை அவன் ரசித்திருப்பானோ? "ஒண்டுமில்லை. விளையாட்டுக்கு! உங்களை நனவுலகுக்குத் திருப்ப..." என்றான்.

மேற்கு வீதிப்பக்கம் பாணும் தேநீரும் விநியோகித்த இளைஞர்கள் இப்போது இவர்களுக்கு அருகில் வந்திருந்தனர்.

"வாங்கிச் சாப்பிடுவம், வேறை சாப்பாடு கிடையாது..." என்று கூறிப் பாணை வாங்கினான் கிறிஸ்ரோபர். அவளும் வாங்கிக் கொண்டாள். அந்தப் பக்கம் வந்த வேறுசில பல்கலைக் கழக மாணவர்கள், "என்ன ஐ சே.."யுடன் இவர்களைக் கடந்து சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் கைவிரல்களால் கட்டுப்படுத்த முடியாத நிகழ்வுகள் வெளியே நடந்து கொண்டிருந்தன. சில ஷெல் துண்டுகள் கோயில் அருகாமையிலும் விழுந்து சிதறின.

சிறிது தூரத்தில் அமர்ந்திருந்த நளினிக்குத் தான் இங்கிருப்பதைக் கை அசைத்துத் தெரிவித்த மேரி மீண்டும் பழைய சிந்தனைக்குத் தாவினாள்.

"அதேநேரம் 'சயன்ரிஸ்ற்' பொதுவா "செக்சுவல் டிசையர்ஸ்" குறைஞ்ச ஆக்கள் என்றதும் சரிதானே?"

"தான் கலியாணம் செய்ததை மறந்துபோன "சயன்ரிஸ்ற்" பற்றிச் சொல்லப் போறீங்கள்! கவிஞர்கள், சங்கீதகாரர்கள், ஓவியர்கள்... பொதுவாகக் கலைஞர்களைவிட, விஞ்ஞானிகள் இந்த இயல்பு குறைஞ்சவைதான். ஆனால் அது ஒரு பொது உண்மை மட்டுந்தான். எதுக்கும் விதிவிலக்குகள் நிறைய இருக்கும்..."

"குகநாதன் என்னைத் தன்னுடைய தங்கச்சி போலை எண்டுதான் சொல்லிக்கொள்றார்..."

வானம் நோக்கிப் பெரிதாகச் சிரித்தான் கிறிஸ்ரோபர்.

"ஒரு தாயின்ரை வயிற்றிலை பிறக்காத எந்த இரண்டு பேரும் தாங்கள் சகோதரர்கள் போலை பழகிறம் எண்டு சொல்றதை என்னாலை ஏற்றுக்கொள்ள முடியாது... அக்கா, தங்கச்சி"

"ஏன் முடியாது...?"

"அந்த உறவுக்குப் பெயர் நட்புத்தான். நாங்கள் நண்பர்கள் போலப் பழகிறம் எண்டு சொல்லிக்கொள்ளலாம். அந்த 'நட்பு' என்ற சொல்லு அவர்களுக்குத் திருப்தி தராததாலைதான் அதுக்கு மேலை ஒரு சொல்லைத் தேடினம். அந்தச் சொல்லு... காதல்தான்... அதை ஏற்றுக்கொள்ள மறுத்து... தங்களுக்குள்ளை தாங்களே முரண்பட்டு... ஒளிச்சு விளையாடி... யதார்த்தமற்ற 'சகோதரம்' எண்ட சொல்லைப் பாவிக்கினம்..."

"ஏன்...? நட்புக்கு மேலை உரிமையுள்ள உறவு. ஆனால் 'செக்ஸ்' கலவாத உறவு எண்டால்...?"

"அப்பிடி இருக்க முடியாது..."

"அப்ப... ஒரு தாய் வயிற்றிலை பிறவாத இரண்டு பேர்... ஆணும் பெண்ணும்... சகோதரர் போலப் பழகவே முடியாது எண்டு சொல்லிறியளா?"

❖ ❖ ❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10

"உங்களுக்குத் தெரியுமே! ஒரு தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவைக்கூட 'இடிபஸ் கொம்பிளெக்ஸ்' எண்டு சொல்றது...?"

"ஆனால் இடிபஸ் அந்த உறவை விரும்பி ஏற்றுக் கொள்ளேல்லையே? அவன் அறியாமல்தானே அந்த உறவு ஏற்பட்டது? அதனாலை அவன் பிறகு எவ்வளவு மனவேதனைப்பட்டான்?"

"அவன் அறியாமல் ஏற்பட்டது எண்டு கதையிலை சொல்லப்பட்டாலும் அவனது 'சப் கொன்சியஸ்' அதை விரும்பித்தான் செய்தது... எண்டும் சில உளவியல் அறிஞர்கள் சொல்லினம்... பொதுவா அப்பாமாருக்கு பொம்பிளைப் பிள்ளையிலையும் அம்மாமாருக்கு ஆம்பிளைப் பிள்ளையிலையும் அதிக விருப்பம் இருக்கிறது வழக்கம்..."

"சரி, வெளியிலை எத்தினை பேர் செத்தினமோ தெரியாது. எனக்கும் வீட்டை போக முடியாமல் இருக்கு. மனம் அமைதியா இல்லை. நான் நளினியோடை போய் இருக்கப் போறன்..." என்று எழுந்தாள் மேரி.

"வீட்டை என்னண்டு போறது? தொடர்ச்சியா ஊரடங்குச் சட்டம் போட்டிருக்கிறாங்கள். இந்த ஒரு கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்லிட்டுப் போங்கோ. கிருப்ஸ்ஸோடை இனி உங்கட உறவு எப்பிடி இருக்கும்? மன்னிப்புக் கேட்கப் போறியளோ?"

"வை?" நிச்சயமா இல்லை. அவர் இதோடை விலகிப் போயிட்டா எனக்குப் பரவாயில்லை. திரும்பியும் கதைக்க வந்தா... அதே எண்ணத்தோடை வந்தா என்ன செய்யிறது எண்டுதான் யோசிக்கிறன்..."

"உங்கடை சொந்தப் பிரச்சினையிலை நான் அதிகமாத் தலையிட விரும்பேல்லை. ஆனால் குகநாதனோடை பழகிறதைவிடக் கிருப்ஸ்ஸோடை பழகிறது ஆபத்துக் குறைவு எண்டு மட்டும் சொல்லுவன்..." என்று உரையாடலை முடித்துக்கொண்டு கோயில் வீதி மணலில் சரிந்து படுத்தான் கிரிஸ்ரோபர்.

--------------------

வானம் முழுதும் முகில் மூடி ஓயாது அழுது கொண்டிருந்தது. வானும், மலையும், நிலமும், நதியும், மரமும், இலையும், மலரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருகும், பனியும், மழையும், வெயிலும், காற்றும் எல்லாமே அழுது கொண்டிருப்பது போலவே தோன்றியது மேரிக்கு. வடக்குக் கிழக்கில் வாழ் மக்கள் எல்லோருக்கும் ஏறத்தாழ அதே நிலைதான்! யார் இறந்தார்கள்? யார் இன்னும் இறக்கவில்லை? யார் கை கால்களை வேறெங்கோ விட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்கு வந்து விட்டார்கள்? யார் வீடு, வாசல்களை முற்றாக இழந்தார்கள்? யாருக்கு நாளைக்குத்தான் உறைவிடம் இல்லாமல் போகும்? யார் சிறுகச் சிறுகச் சேமித்த உடைமைகளை, நூல்களை எல்லாம் இழந்தார்கள்? யாருக்கு அதிர்ச்சியில் குருதி உறைந்து போயிற்று? ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை.

குருதியால் நனைந்த இறகுகளைக் கொண்ட ஈக்களாய் கோயில்களில் மொய்த்துப் போயிருந்த மனிதர்கள் மெது மெதுவாகத் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

மேரியும் வீட்டிற்கு வந்துவிட்டாள். வீட்டிற்கு முன்னால் மிக நீண்டு போய்க்கிடந்த தெரு வெகு அந்நியமாய் வெறிச்சோடித் தெரிந்தது இன்று. பட்டினியாய்க் கிடந்தாலும் வீட்டைவிட்டு ஓடிப் போகாதிருந்து உயிர் தப்பிய நாய்கள் சில ஆங்காங்கு திரும்பி வந்துகொண்டிருந்த மனிதர்களை வாலசைத்து வரவேற்றன. சுய மரியாதையை அறுத்து எடைக்கு எடை தராசில் வைக்கும்படி அவை மனிதர்களிடம் கேட்பது போலவும் இருந்தது அந்த வாலசைப்பு.

வீட்டிற்கு முன்னால் நின்ற வேப்பமரம் ஷெல் பட்டு முறிந்து தொங்கியது. நல்ல காலமாய் வீட்டிற்கு அதிக சேதம் ஏற்பட்டிருக்க வில்லை.

சிந்தனையின் திசையை மாற்றவென உள்ளே சென்று புத்தகங்களை எடுத்து வைத்துக்கொண்டு படித்தாள் மேரி. பொதுவாகப் படிப்பது அவளுக்குப் பிடிக்கும். படிக்கும்போது சில சந்தேகங்கள் மனதில் தோன்றின. அவற்றை ஒரு கடதாசியில் குறித்து வைத்துக்கொண்டாள்.

பல்கலைக் கழகங்களோ அல்லது பாடசாலைகளோ எப்போது திறக்கப்படும் என்று கூறமுடியாது. ஆனால் படிப்பது ஒரு பழக்கம். அந்தப் பழக்கம் விட்டுப்போனால் பிறகு வரவழைத்துக் கொள்வது கடினம்.

ஒவ்வொரு நாளும் போகப்போக, நரம்புத் தொகுதியில் சில கலங்கள் மரணித்துக் கொண்டேயிருக்கின்றன. அவை மீள உண்டாதல் மிகத் தாமதமாகவே நடக்கும். இதனால் ஞாபகசக்தி போன்ற உயர்தொழிற்பாடுகளின் வினைத்திறன் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே, ஒரு விடயத்தை நாளை கற்பதைவிட இன்று கற்பது இலகுவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எண்ணம் மனதில் வந்ததும் மீண்டும் அமர்ந்து படிக்கத் தொடங்கினாள். ஆயினும் நீண்ட நேரம் தனிமையில் படிக்கப் 'போர்' அடித்தது. கதைப்பதற்கு அண்ணாவும் இல்லை. அவர் சவூதிக்குத் திரும்பிப் போய்விட்டார். 'கொன்சல்ரன்ற் சேஜனை' மறந்திருப்பார்.

ஊரில் எத்தனை ஷெல்கள் விழுந்தபோதிலும், ஊரின் வழமையான நடவடிக்கைகள் பல நின்றுவிட்ட போதிலும், திருமண நடவடிக்கைகளும், வெளிநாட்டுக்குப் பறக்கின்ற நடவடிக்கைகளும் நின்று போகவில்லை.

ஒன்று வாழ்வுந்தல்! மற்றது சந்ததித் தொடர்ச்சி தொடர்பான உயிரியல் உந்தல்!

யாழ்ப்பாணத்தில் ஓர் ஊரில் இருந்து மற்றொரு ஊருக்குப் போக முடியாதிருந்த நேரத்தில்தான் அண்ணா எப்படியோ வெளிநாடு போய்ச் சேர்ந்தார். சேர்ந்திருக்க வேண்டும் என்பது ஊகம் மட்டுந்தான். கடிதங்கள் எதுவும் இங்கு வரத் தொடங்கவில்லை.

கல்யாணங்களும் நின்று போகவில்லையல்லவா? அம்மா விற்குப் பணியாரத்திற்குப் பதம் பார்ப்பது தவிர வேறு பிரச்சினை இல்லைப் போலத் தெரிந்தது. நான்கு வீடு தள்ளி வசிக்கும் சிவப்பிரகாசம் வீட்டில் திருமணமாம். பணியாரம் சுடும் பெண்கள் கோஷ்டிக்குத் தலைமை தாங்கி அம்மா போய்விட்டார்.

அப்பா ஒன்றுக்கு நாலுமுறை வீட்டைச் சுற்றி நடந்து வந்தார். இதிலே இருந்த பொருளை எடுத்து அதிலே வைத்தார். பின்னர் அதிலே இருந்த பொருளை எடுத்து இதிலே வைத்தார்.

"கிளாஸ்" போன்ற சில பொருள்கள் உடைந்திருந்ததையும் சில பொருள்கள் காணாமற் போயிருந்ததையும் புதிதாகக் கண்டுபிடித்து வந்து மேரியிடம் சொன்னார்.

ஆயிரக்கணக்கான உயிர்களே உடைந்து போய்விட்ட சோகம் மூடிக் கிடக்கும் பூமியில் "கிளாஸ்": உடைந்து போய்விட்டது என்பது மேரியிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அப்பா அது குறித்து அதிகமாகக் கவலைப் பட்டு அண்ணாவுக்குக் கடிதம் எழுதியபோது உடைந்துபோன அல்லது தொலைந்துபோன பொருள்களின் பட்டியலே எழுதிவிட்டார்.

தடையை மீறி ஓடிய வெள்ளம் சமதரையை அடைந்தது போன்றதொரு நிலை சில தினங்களில் ஏற்பட்டது.

ஊரடங்கு நேரங்கள் தளர்த்தப்பட்டிருந்தன. "சாவது துன்பம் அல்ல. சாவது போலப் பயப்படுவதுதான் துன்பம்" என்று கரித்துண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.வ சொல்வாரே, அந்தத் துன்பத்தை எல்லோரும் அநுபவித்தாகி விட்டது. ஒரு நொய்மை நெஞ்சடியில் நிரந்தரமாகிவிட்டது.

மூன்று மாத இடைவெளியின் பின் யாழ்ப்பாண மாநகரத்திற் கான குடிநீர் விநியோகம் ஆரம்பித்திருப்பதாக வானொலியில் அறிவித்தார்கள். 'அன்பு வழி' நிகழ்ச்சியில் உங்கள் மழலைச் செல்வங்களுக்குச் சுத்தமான குடிநீரை அருந்தக் கொடுங்கள். அசுத்த நீரை அருந்த விடாதீர்கள். குழந்தைகள்தான் எதிர்காலச் செல்வங்கள்" என்று அறிவித்தார்கள்.

அப்படியா? உண்மைதான்! இவர்கள் இங்கே வரும்வரை எமது மண்ணின் குழந்தைகளுக்கு யாருமே சுத்தமான குடிநீர் குடிக்கக் கொடுத்ததில்லையோ என்று ஒரு சந்தேகம் மேரிக்கு ஏற்பட்டது.

அடித்தவனே தடவும்போது ஆறுதல் ஏற்படுமா? ஆத்திரம் ஏற்படுமா?

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11

ஒருநாள் மாலை ஐந்து மணி! படித்துக்கொண்டிருந்த மேரி, 'அம்மா, குகநாதன் சேர் வீட்டை போய்க் கொஞ்சம் "டவுற்ஸ் கிளியர்" பண்ணிட்டு வாறன்" என்று சொல்லிச் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

அவரது பழக்கம் பற்றி கிறிஸ்ரோபர் எச்சரித்த பிறகு அவள் குகநாதனைத் தனிமையில் சந்திக்க முயலவில்லை. பலமுறை குகநாதன் உருவாக்கிக் கொண்ட சந்தர்ப்பங்கள் கிறிஸ்ரோபர் சிந்தனையுடன் ஒத்துப் போவது போலத் தோன்றியபோது, அடி வயிற்றில் குழி பறித்துப் புதிய மண் கொட்டினாற் போல அவளுக்குள் இருந்தது.

ஒருநாள் "லெக்சர்" முடிந்த பிறகு வகுப்பிலேயே வைத்துக் குகநாதன் இவளிடம் சொன்னார்,

"தங்கச்சி மேரி உம்மோடை ஒரு சின்ன விஷயம் கதைக்க வேணும். நேரம் இருந்தா ஒருக்கா வீட்டுப் பக்கம் வாரும்..."

அப்போது - உடனே-அந்த வேண்டுகோளை அவள் நிறை வேற்றவில்லை. சில நாட்களில் நாட்டில் குழப்பம் தோன்றிவிட்டது. ஆகவே அதைப்பற்றி அவள் யாரிடமும் ஆலோசனை கேட்கவும் இல்லை. கேட்பது என்று முடிவு செய்தால் கூட... யாரிடம் கேட்பது? கிருப்ஸ் முற்றாகக் கதைக்காமலே விட்டுவிட்டான். சக மாணவி வசந்தியின் 'ரிஜிஸ்ரேசனில்' கண்டவன் மேரி இருந்த பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை.

திடீரெனத் தன்னை எல்லோருமே வெறுத்து ஒதுக்கி விட்டதுபோல...

புண்ணில் முள்ளால் செதுக்கும் வலி! இப்போது குகநாதனின் வேண்டுகோளைப் பற்றிச் சிந்தித்தாள். தான் அவரது வீட்டிற்குப் போவதற்கான சாதகமான காரணங்களையும் சிந்தித்தாள். பாதகமான காரணங்களையும் சிந்தித்தாள்.

ஒருவேளை குகநாதன் உண்மையில் அவளை ஒரு தங்கை போலவே நினைத்து அன்பு காட்டுவதாக இருந்தால், இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளைப் புறக்கணிப்பது அவர்களின் உறவைப் பாதிக்கும். அது அவளின் படிப்பையும் சோதனைகளையும் கூடப் பாதிக்கலாம். எத்தனையோ மாணவர்கள் விரிவுரையாளர்களைக் 'காக்கா' பிடிக்கக் கண்ட கண்ட இடங்களில் 'குட்மோனிங்' செல்வதும், தேடித் தேடிப் போய்க் கதைப்பதும் அவளுக்குத் தெரிந்த இரகசியந்தான்.

அப்படியிருக்கையில் குகநாதன் தானாகத் தருகிற அன்பை, உதவியைத் தூக்கி எறிவது புத்திசாலித்தனம் என்று கூறமுடியாது. கிறிஸ்ரோபர் சொல்வது ஒருவேளை, உண்மையாக இருக்கக் கூடுமாயினும் அது வெறும் ஊகம் மட்டுமே. அவரது அன்பு கபடத்தனமானது என்பது எந்த வகையிலும் நிரூபிக்கப்படவில்லை. இறுதியில் குகநாதன் வீட்டிற்குப் போவதற்குச் சாதகமாகவே அவள் மனநீதிமன்று தீர்ப்பளித்த பிறகு, இன்று அவள் புறப்படுகிறாள்.

மழை நீர் ஊறிய மண்வீதிச் சேறுகளில் வண்டி போக மறுக்கிறது. 'சென்றி'யில் நிற்பவர்களின் பார்வை நெஞ்சின் ஆழத்தைக் குத்துகிறது. பல இடங்களில் இறங்கி நடந்து... பின்னர் ஏறி... குகநாதன் வீட்டில் இறங்குகிறாள். அவர் வீட்டில் இருக்கிறார்.

சிறுநீர் கழிக்கவும் வசதியற்ற நிலையில் கோயில்களில் முடங்கிக் குவிந்து கிடந்த அநுபவங்கள் சில நிமிடங்களுக்குப் பரிமாறப்பட்டன.

தமது வீட்டுக்கு அருகில் ஷெல் விழுந்து ஆறு பேர் ஒன்றாக இறந்து போக, சடலங்களை வளவுக்குள்ளேயே புதைக்கவும் கூட வழி இல்லாமல் போய்... இறுதியில் நாய்களே இழுத்துச் சென்று கிழித்த அவலத்தைக் குகநாதன் விரிவாக விபரித்தார்.

"யாழ்ப்பாணத்திலை ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறு இருக்கு. ரி.வி இருக்கு. றேடியோ இருக்கு. நல்ல வசதியா இருக்கீங்க... நீங்க என்ன இல்லையென்று போராட்டம் நடத்திறீங்க...?" என்று அவர்கள்... அவர்களில் படித்த ஒருவர் தன்னை ஆங்கிலத்தில் கேட்ட அநுபவத்தையும் குகநாதன் விபரிக்க இவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.

தான் கடதாசியில் எழுதிக் கொண்டு வந்த, மூளையின் தொழிற்பாடு தொடர்பான சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தகுந்த விளக்கம் பெற்றுக் கொண்டாள்.

"பிரச்சினைக்கு முந்தி... கடைசிநாள் 'லெக்சர்ஸ்' நடக்கேக்கை ஒரு 'கொமென்ற்' வகுப்பிலை சுத்தினது தெரியுமோ உமக்கு?"

"இல்லை, அது 'போய்ஸ்' பக்கந்தான் சுத்தியிருக்க வேணும். நான் பாக்கேல்லை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் "லெக்சர்" எடுத்துக் கொண்டிருக்கேக்கை கவனிச்சனான். இடையிலை அது நிலத்திலை விழுந்திட்டுது. பிறகு எல்லாரும் மறந்து போய் அதை விட்டிட்டுப் போட்டாங்கள். நான் எடுத்து வாசிச்சனான்..."

"என்ன எழுதியிருந்தது?"

"கருங்காலிக் கட்டை கடும் 'டிப்'பிலை இருக்குது. ஒருத்தரும் கதைக்கப் போய் வாங்கிக்கட்ட வேண்டாம்... எண்டு இருந்தது... கருங்காலிக் கட்டை எண்ட பட்டம் கிருப்ஸ்ஸுக்குத்தானே?"

"ஓமெண்டுதான் நினைக்கிறன்..."

"இதிலை உமக்கும் பங்கிருக்கெண்டு நான் நினைக்கிறன்"

"அவர் இப்ப என்னோடை கதைக்கிறேல்லை"

"அப்ப நீர் 'பூநஸ்' குடுத்தது உண்மைதானே?"

"என்னுடைய சுதந்திரங்களிலை தலையிட வேண்டாம் எண்டு ஒருநாள் பேசிப் போட்டன்..."

அவர் நல்லகாலம் அதற்கு மேல் விபரமாக ஒன்றும் கேட்கவில்லை. மேரி வேகமாய்க் கதையை மாற்றினாள்.

"நீங்கள் வந்து கதைக்கச் சொல்லி அண்டைக்கொரு நாள் சொன்னீங்கள். அப்ப எனக்கு வர முடியேல்லை... பிறகு பிரச்சினை வந்திட்டுது. என்ன விஷயம் சேர்...?"

அவர் சிரித்தார்.

அந்த வீட்டின் சுவர்கள் அந்தச் சிரிப்பைக் கேட்டு மௌனித்திருந்தன.

---

அவர் சிரித்தார்.

துளிர்கள் அவிழ்தலும், மலர்கள் விரிதலும் தொடர்ந்தன.

உருகி முடிந்தன மெழுகுகள்!

பல்கலைக் கழகங்கள் மீண்டும் திறந்தன.

யாழ்ப்பாணத்து மக்கள் பொங்கல் பண்டிகையை மிக உற்சாகத்துடன் கொண்டாடினர் என்று வானொலி அறிவிப்புச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் சிரிக்கிறீங்கள்?"

"இல்லை, இன்னும் நீர் என்னைச் 'சேர்' எண்டுதான் கூப்பிடுறீர். அண்ணா எண்டு கூப்பிடுற விருப்பம் வரேல்லை இன்னும் எண்டு நினைக்கச் சிரிப்பு வருது..."

அவள் ஒன்றும் பேசாமல் இருந்தாள். பிறகு, "இதைச் சொல்லத்தான் இண்டைக்கு என்னை வரச் சொன்னீங்களா?" என்று கேட்டாள்.

"இல்லை எனக்கு "வாற சற்றடே பேர்த் டே..."

"வெரிகுட், அதுக்கு நீங்கள் எனக்கு 'இன்விற்றேசன்' தரப்போறீங்களா?"

"தரத்தான் போறன். ஆனால்... என்ரை தங்கச்சிக்கு மட்டுந்தான் 'இன்விற்றேசன்'. வேறை ஒருத்தருக்கும் இல்லை..."

மேரிக்கு எல்லாம் மூடுபனிக்குள் நிகழும் மர்மங்கள் போலத் தோன்றுகின்றன.

என்ன சொல்கிறார் இவர்?

"................."

"நான் உம்மைப் போல 'கேக்' வெட்டப் போறதுமில்லை. படம் எடுக்கப் போறதுமில்லை..."

"கேக் கூட இல்லையெண்டால் நான் வந்து என்ன செய்யிறது...?"

"என்ரை தங்கச்சி எனக்கு ஒரு அன்பளிப்புத் தரவேணும். நான் கோயிலுக்கு ஒரு அர்ச்சனை செய்விக்க வேணும்... அவ்வளவுதான்..."

இப்போது மேரி திருப்தி அடைந்தாள்.

"ஓ.கே! அதுக்கென்ன? நான் ஒரு "பிறசென்ற்" கொண்டு வந்து தாறன்..."

"நான் கேக்கிற அன்பளிப்புத் தருவீரோ?"

"யாழ்ப்பாணத்திலை வாங்க ஏலுமெண்டால் வாங்கித் தாறன். என்ன "பிறசென்ற்...?"

"கடையிலை வாங்க முடியாது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரி ஒரு கணம் அதிர்ந்தாள்.

"அப்ப...!"

"இந்த அண்ணனுக்குத் தங்கச்சி ஒரு முத்தம் தரவேணும்..."

அவள் கண் இமைக்க மறந்து போனாள்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



12

யுகயுகாந்திரங்கள் காலடியில் நழுவிச் செல்வது போலிருந்தது மேரிக்கு.

அவர் மீண்டும் கேட்டார்.

"ஒரு அண்ணனைத் தங்கை 'கிஸ்' பண்ணுறது என்ன பிழை?"

அவரது குரலில் வசந்த காலத்தின் உரசல் இருந்ததை அந்தி நேர இருட்டு வேளையிலும் அவள் கண்டுகொண்டாள்.

மேரிக்கு நன்றாகவே வியர்த்துப் போயிற்று. சொற்களால் வெளியிட முடியாத உணர்ச்சிச் செறிவு உருகிக் கைகளை நனைப்பது போல இருந்தது.

---

எல்லாத் திசையிலும் இருட்டு நிரம்பிப் போய் இருந்தது. மின்மினிகள் இடையிடை பறந்தன. தவளைகளின் 'குரோ குரோ' எங்கிருந்தோ மெதுவாகக் கேட்டபடி இருந்தது. நேற்று மழை பெய்தது.

உணவுக்காகச் சங்கக்கடைகளின் முன் நீண்ட கியூவில் காத்து நின்றதும், வல்லாரையும், முசுட்டையும், பொன்னாங்காணியும், மொசுமொசுக்கையும் தேடிச் சமைத்து, சோறும் அந்த இலைக்கறியுமாய் உண்டதும் பலராய் ஓடிக்கொண்டிருக்கையில் சிலர் மீது ஷெல் விழுந்து இறந்த போதும், மற்றைய சிலர் அவர்களை அப்படியே விட்டுவிட்டு மனிதத் தன்மை மறந்து ஓடியதுமான நினைவுகள் மெல்ல மெல்ல மறக்கப்பட ஆரம்பித்திருந்தன.

குகநாதனுக்கும் மேரிக்கும் இடையில் ஒரு நெருப்புக்கோடு கிழிக்கப்பட்டு விட்டது. இணக்கமாகிய இழைகள் யாவும் விலகிவிட்டன. ஒரு வாரமாக அவள் "லெக்சர்ஸ்ஸுக்குப்" போகவில்லை. குகநாதனின் 'பேர்த்டே'க்கும் போகவில்லை. கிறிஸ்ரோபர் மீண்டும் தொடங்கியிருந்த "டிஸ்கஸனுக்கும்" போகவில்லை.

பிடிக்கப்பட்ட போராளிகள் பலரும் சயனைட் அருந்தி மரணம் அடைந்து கொண்டிருந்த சம்பவங்களினால் ஊர் கொதிப்படைந்த நேரத்தில், மேரியின் மனம் இதற்காகவும் அதற்காகவும் இன்னும் பலவற்றிற்காகவும் கொதிப்படைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி கேட்டு மணி அடித்த சாமிப்பசுக்களும் சூடு பட்டுச் சுருண்டு போய்க்கிடந்த நினைவுகளுக்காய், வேதனைப்பட்ட அவள் மனம் ஒரு பெண்ணாகப் பிறந்து விட்டதற்காகவும் வேதனைப்பட்டது.

கிறிஸ்ரோபர் சொன்னது இறுதியில் உண்மையாகத்தான் போய்விட்டதா? சகோதரன் என்ற போர்வையில் குகநாதன் அவளைப் பயன்படுத்திக் கொள்ள முனைகிறாரா? என்னதான் இருந்தாலும் கிருப்ஸ் வெளிப்படையாகத் தன் விருப்பத்தைக் கூறிக்கொண்டு திரிந்தானே ஒழிய ஒருபோதும் அவளைத் தொட்டுப் பார்க்க முனையவில்லை. இப்போது நினைத்துப் பார்த்தால் ஒரு வழியில், கிருப்ஸ் அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுக் கோபித்துக் கொண்டதுகூட ஒரு வகையில் நியாயந்தானோ என்று தோன்றியது.

ஆனால்...!

கிருப்ஸ்ஸுக்கும் அவளுக்கும் இருந்த உறவு மீள ஒட்ட முடியாதபடி வெடித்துப் போய்விட்டது.

கண்ணாடி ஒரு முறை வெடித்தால் பிறகு என்ன முயன்றாலும் ஒட்டிவிட முடியாது. ஒட்டினாலும் வெடிப்புத் தெரியும். உறவுகளும்... அப்படித்தான்!

அவளுக்குள்ளே விபரிக்க முடியாத விரக்தி நிரம்பி வழிந்தது. பகல் நேர உளைச்சல்கள் யாவும் இரவு நேரங்களில் அவளை வீறு கொண்டு வாட்டும். அதனால் கடந்த ஒரு வாரமாய் இரவில் முற்றாகவே நித்திரை வரவில்லை.

வெளிமேசையில் இருந்து படித்துவிட்டுத் தற்செயலாய் மறந்து போய்ப் புத்தகங்களை அதிலேயே விட்டுவிட்டு எழுந்து போய்விட்டால், அப்பா அதை எடுத்து இன்னொரு இடத்தில் வைத்துவிடுவார். பிறகு அதைத் தேடுவது பெருஞ்சிரமமாகப் போய்விடும். இதில் இருப்பதை எடுத்து அதிலே வைப்பதும் அதில் இருப்பதை எடுத்து இதிலே வைப்பதுந்தான் அப்பாவின் தொழிலாயிற்று.

திடீரென்று மேரிக்குள் ஒரு யோசனை தோன்றியது. ஓரிரு மாதங்களுக்கு நளினியின் "றூமில்" போயிருந்து படித்தால் என்ன என்று நினைத்தாள். அங்கே இருந்தால் 'லெக்சர்ஸ்'ஸுக்குப் போகாவிட்டாலும் உடனுக்குடன் 'நோட்ஸ்' கிடைக்கும். மேலும் பத்துப் பதினைந்து பேர் சேர்ந்திருக்கும் இடத்தில் மனம் சோர்வடையாது. சோர்வடைய அவர்கள் விடமாட்டார்கள். தனியே அமர்ந்து படிக்க மூளையில் ஒன்றும் ஏறாவிட்டாலும் அவர்கள் சேர்ந்து படிக்கிற பகுதிகளாவது மண்டையில் ஏறும்.

இந்தச் சிந்தனை மனதில் தோன்றியவுடனேயே அதைச் செயற்படுத்தினாள் மேரி. அம்மாவிடம் சொல்லிக்கொண்டு நளினியின் "றூமுக்கு" வந்து சேர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி கிடைக்கும் என்று அங்கு போய்ச் சேர்ந்த மேரிக்கு, அமைதிக்குப் பதிலாக மொல மொல வென்று தேனீப் பிடுங்கல்களே அங்கு வெகுமதியாய்க் கிடைத்தன.

"என்ன மேரி'? கடும் 'டிப்'பிலை இருக்கிறியா?"

"என்னடி கனகாலமாய் உன்னை வகுப்பிலை காணேல்லை?"

"கிருப்ஸ்க்கு நீ 'பூற்ஸ்' குடுத்தனியோ, அல்லது கிருப்ஸ் உன்னை ஏமாத்திட்டனோ?"

"உன்னை ஏன் 'லெக்சர்ஸ்ஸிலை' காணேல்லை எண்டு அண்டைக்கும் குகநாதன் வகுப்பிலை விசாரிச்சார்"

ஒருத்தி மாறி ஒருத்தியாய்க் கிண்டிக் கொண்டே இருந்தார்கள்.

"எனக்கு ஒரு கிழமையாச் சரியான காய்ச்சல். அதுதான் வேறை ஒண்டுமில்லை..." என்று எல்லோருக்கும் சேர்த்துப் பதில் சொல்லிச் சமாளிக்கப் பார்த்தாள் மேரி. கடைசியாக நளினி கேட்ட கேள்வி அவளை உண்மையில் அதிரச் செய்தது.

"குகநாதனுக்கு வாற கிழமை கலியாணமாம். உனக்குத் தெரியுமோ?" என்பதே அந்தக் கேள்வி.

தன்னை வீட்டுக்கு அழைத்து 'பேர்த்டே' பற்றிச் சொன்னவர், திருமணம் பற்றி ஏன் சொல்லவில்லை?

ஒரு அண்ணனுக்குத் தங்கை முத்தம் கொடுப்பது என்ன பிழை என்று கேட்டவர், ஒரு தங்கைச்சிக்குத் தெரியாமல் அண்ணன் திருமணம் செய்வது பிழையில்லை என்று நினைத்துக் கொண்டது எப்படி? 'பேர்த் டே'க்கு அன்பளிப்புக் கேட்டவர், திருமணத்திற்கு ஏன் அன்பளிப்புக் கேட்கவில்லை?

அவளுக்கு எல்லாம் குழப்பமாக இருந்தது. எரியும் சுவாலை மேல் இருந்து வெதும்பும் நிலையைப் பெற்றது உள்ளம்.

ஒருவேளை நாளைக்குத் தான் விரிவுரைக்குச் செல்லும்போது, இதுபற்றி அவர் சொல்லக்கூடும் என்ற நம்பிக்கை மனதில் தோன்றியது. திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட திருமணமாக இருக்கலாம். பெண் யாராக இருக்கும்?

மெதுவாக எழுந்து வெளியே வந்தாள். முன்னால் இருந்த வீதியில் பார வண்டியாய் நடந்தாள் மெல்ல. மாலை நேரங்கள் எல்லாம் சபிக்கப்பட்டவையா அவளுக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முதல் மனைவி எழுபத்தேழு கலவரத்தில் தென்பகுதியில் கொலை செய்யப்பட்டது பற்றிக் குகநாதன் ஒருநாள் இவளுக்குச் சொல்லியிருந்தார். அவள் கொலை செய்யப்பட்டது மாத்திரமல்ல, அவளுடன் தனக்குப் பிள்ளைகளும் இல்லாமல் போனதே தனது பெரிய துர்அதிர்ஷ்டம் என்று அவர் கூறிய நினைவு!

அவரது பெற்றோர், சகோதரர் எல்லாம் தென்மராட்சியில் இருந்தும், அங்கிருந்து பல்கலைக் கழகம் வந்து போவதில் உள்ள சிரமம் கருதியே அவர் வளாகத்திற்கு அண்மையில் இருந்தார். ஒருவேளை பெற்றோர் திடீரென இந்தத் திருமணத்தை ஒழுங்கு செய்திருக்கலாம்.

நாற்பது வயதில் 'செக்சுவல் டிசையர்ஸ்' அதிகரிக்கும் என்ற கிறிஸ்ரோபரின் கருத்து மீண்டும் இப்போது மேரிக்கு நினைவு வந்தது. "நான் ஒரு கிழமையா 'லெக்சர்ஸ்ஸுக்கு' வரேல்லை. எனக்கு ஒண்டும் தெரியாது" என்று சுலபமாயும் சுருக்கமாயும் நளினிக்குப் பதில் சொல்லிவிட்டாள். மனதின் உள்ளே எழுந்த பல கேள்விகளுக்கு விடை காண்பது அரிதாக அமைந்தது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 13

வாகனங்களில் வந்து 'சட்பட்' என்று குதித்தார்கள். திடீரென ஒரு மரத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். இவள் மிகவும் பயந்து போய் நிமிர்ந்து பார்க்கையில், இரவுப் படுக்கைக்கென மரத்துக்கு அப்போதுதான் வந்திருந்த கோழிகள் சில அகப்பட்டுப் போனமை தெரிந்தது.

மேரி திடீரெனக் 'கேற்'றைச் சாத்திக் கொண்டு உள்ளே போனாள். ஒருத்தியைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து 'கரம்' விளையாட அமர்ந்தாள்.

கை காய்களைத் தட்டிக்கொண்டிருந்த போதும், மனம் சிந்தனைகளில் இருந்து முற்றாக விடுபடவில்லை. காய்கள் இலக்கைவிட்டு எங்கோ பறந்து கொண்டிருந்தன. வெகு சுலபமாக மேரி தோல்வியடைந்தாள். ஆனால் அது பற்றி அவள் கவலை கொள்ளாமலே மறு ஆட்டத்திற்கு ஆயத்தமானாள்.

அந்தி நேரத்தில் - இரவும் பகலும் கூடும் இந்தச் சந்தி வேளையில் செக்கர் வானத்தின் கீழே பூமி எல்லாம் தங்கத் தகடாய் மாறும் இப்பொழுதில் அவளால் மன ஒருமைப்பாடு பெற முடியவில்லை.

நாளைக்குக் கட்டாயம் "லெக்சர்ஸ்ஸுக்குப்" போகவேண்டும் என்று நினைத்தாள் மேரி. கிறிஸ்ரோபருடன் மாலை நேர "டிஸ்கஸனுக்கும்" போக வேண்டும். விரிவுரை முடிந்ததும் குகநாதனைச் சந்தித்துத் தான் ஒரு வாரமாகக் கடும் காய்ச்சலில் இருந்தபடியால் அவரது விருப்பப்படி 'பேர்த் டே'க்கு வரவில்லை என்று சொல்லவேண்டும். வேறு அதிகமாகக் கதையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அந்த நேரத்தில் அவர் தனது திருமணம் பற்றிச் சொல்லக் கூடும். சொல்லாமல் விட்டால் அது இன்னும் நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்து அந்த உறவையும் துண்டித்துக் கொள்ளலாம்.

கிருப்ஸ், குகநாதன் போன்றவர்களுடன் ஒப்பிடுகையில் கிறிஸ்ரோபர் மிக உயர்ந்தவனாக இப்போது மேரியின் சிந்தனையில் தோன்றினான். 'பொண்டிங்' நடைபெறும் இடங்களில் தான் ஒருபோதும் நிற்பதில்லை என்று ஒரு நாள் சொன்னான்.

தனக்கு ஒருபோதும் 'டிப்', 'ஃபிரஸ்' போன்றவை வருவதில்லை என்றான் இன்னொரு நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ்ஸில் ஒரு பெண்ணுக்குப் பக்கத்தில் அமரச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் அதில் இன்னொரு பெண் அமரச் சந்தர்ப்பம் கொடுப்பதை விடுத்துத் தான் ஒருபோதும் அந்த இடத்தில் அமருவதில்லை என்று இன்னொரு நாள் சொன்னான். தனக்குத் தன்னைத் தவிர வேறு யாரிலும் நம்பிக்கை இல்லை என்றான் மற்றொரு நாள்.

'கரம்' உட்பட எந்த விளையாட்டுக்களும் விளையாடத் தெரியாத புத்தகப் பூச்சி அவன் என்பது உண்மையாயினும் அவன் ஒரு 'மொடெஸ்ற் மான்' என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

தான் "பாத் ரூமுக்குப்" போவதைக் கூட யாரும் பார்த்துக் கொண்டிருந்தால், அவன் 'பாத் ரூமுக்குள்' நுழைய மாட்டான் என்று ஒருநாள் ராம் சொன்னதும் இப்போது நினைவு வந்தது. அவ்வளவு 'மொடெஸ்ற்'!

இரண்டாவது முறையும் மேரி 'கரம்' விளையாடுவதில் தோல்வி அடைந்தாள். அத்துடன் 'இனிப் போதும்' என நிறுத்திக் கொண்டு போய்ப் படுத்துவிட்டாள்.

அடுத்த நாள் விரிவுரைக்குச் சென்றாள். ஆனால் குகநாதன் வரவில்லை. தனது திருமண ஏற்பாடுகளைக் கவனிக்க அவர் ஊருக்குச் சென்று விட்டார் என்று சொன்னார்கள். விரிவுரையாளர்கள் எல்லோருக்கும் தனித்தனி அழைப்புக் கொடுத்திருக்கிறார் என்றார்கள். மாணவர்களுக்குப் பொதுவாக ஓர் அழைப்பு 'நோட்டிஸ் போர்ட்'டில் இருக்கிறது என்றார்கள். அவளுக்குப் பெரிய ஏமாற்றமாய்த்தான் இருந்தது. சொந்தச் சகோதரனை விடவும் உம்மிடம் அதிக அன்பு வைத்திருக்கிறேன் என்று சொன்னவர்...! உலகில் எல்லாமே வெறும் நடிப்பு என்று தோன்றியது. யாரிடத்திலும் உண்மை அன்பும் இல்லை. உண்மையான அறநெறி ஒழுக்கமும் இல்லை! டால்ஸ்ரோயின் 'வட் இஸ் ரு பீ டன் அன்ட் லை.'.ப்' என்ற கதையில் 'மனிதன் அன்பினால் வாழுகிறான்' என்று கூறப்படும் அடிப்படைத் தத்துவம் கூடப் பிழை என்று தோன்றியது. மரத்தில் அகப்பட்ட கோழிகள் நினைவு வேறு அடிக்கடி வந்து கொண்டிருந்தது.

மாலையில் கிறிஸ்ரோபருடன் 'டிஸ்கஸனுக்குப்' போனாள். ஒரு நாய் இன்னொரு நாயைக் கடிப்பதைப் பார்த்துக் கொண்டு கிறிஸ்ரோபர் அமர்ந்திருந்தபோது மேரி போய்ச் சேர்ந்தாள். இவளைக் கண்டவுடன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறியள்?"

"இல்லை, அது 'லவ் பைற்' அதுதான் சிரிக்கிறன்" என்றான் அந்த நாயைச் சுட்டி.

"எண்டாலும் அந்த நாய் வேதனைப்படுதுதானே...?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேதனைப்படத்தான் வேணும். தன் அன்புக்குரியவளை அடிக்காத, அவள் தலைமயிரைப் பிய்த்தெறியாத, அவள் உடைகளைக் கிழித்தெறியாத காதலன் அவளை இன்னும் உண்மையில் நேசிக்கத் தொடங்கவில்லை எண்டுதான் நான் சொல்லுவன்"

இதற்கு மேல் அது பற்றிய விவாதத்தில் ஈடுபடாமல் ஒருமணி நேரத்திற்கு மேல் இருவரும் படித்தார்கள்.

'மதிய உணவிற்குப் பின்னர் சுடுநீரில் குளிக்கும் ஒருவர் சிலவேளை மரணத்தைச் சந்திக்க வேண்டியிருப்பது ஏன்' என்பது பற்றிய கேள்விக்கு கிரிஸ்ரோபர் விளக்கமான பதில் சொல்லிக் கொண்டிருக்கையில் மேரி வானத்தை வெறித்துப் பார்த்தபடி இருந்தாள்.

"என்ன? திடீரெண்டு எங்கையோ யோசிக்கிறியள்?"

"எல்லாம் அநியாயமாய் இருக்கு. எதிரொலி இல்லாமல் இந்த அநியாயங்களை ஏற்றுக்கொள்ள முடியேல்லை..."

"எதைச் சொல்லிறியள்?"

குகநாதனைப் பற்றி கிரிஸ்ரோபர் கொண்டிருந்த அபிப்பிராயம் முற்றிலும் சரியானதே என்பதை விபரமாகச் சொல்ல நினைத்தாள் மேரி. மனதிற்குள்ளே எப்படிச் சொல்வது என்று முடிவு செய்து கொண்டு வாயைத் திறக்கும் நேரம் அந்த மரத்தடிக்குத் திடீரென வந்த மதன்,

"இதென்ன இரண்டு பேரும் இதிலை இருக்கிறியள்? உங்களுக்கு விஷயம் தெரியாதா?" என்று கேட்டான்.

"ஏன்? என்ன?"

"பெரிய பிரச்சினை தொடங்கிட்டுது. எந்த நேரமும் இவ் விடத்துக்கு எதுவும் நடக்கலாம். றேடியோவிலை திருப்பியும் ஊரடங்கு அறிவிச்சுப் போட்டாங்கள்... நீங்கள் வீடுகளுக்குப் போங்கோ..."

சைக்கிளை விரைவாக மிதித்துக்கொண்டு அவர்களைக் கடந்தான் மதன்.

கிரிஸ்ரோபருக்குச் சொல்லவென்று நினைத்த சம்பவங்கள் - புதிய உண்மைகள் - அதுகாறும் அவளுக்குத் துலங்கியிராத வெளிச்சங்கள் எல்லாவற்றையும் மனதில் சுமந்துகொண்டு பதற்றத்துடன் நளினி வீட்டை அடைந்தாள் மேரி.

பல்கலைக் கழக வளாகத்தில் ஒரு குறிஞ்சா மரம் 'பரகூற்' போன்ற வடிவத்தில் அமைந்த மயிர் முடிகளைக் கொண்டு அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துக்கள் மெதுவாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தன. அவை ஒவ்வொன்றாகக் கீழே வரும்போது, அவற்றைக் குறி வைத்துக் 'கவண்' அடித்துக் கொண்டேயிருந்தான் ஒரு சிறுவன். அந்தச் சிறுவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மேரி. அவன் வளாகத்தின் மூன்றாவது மாடியில் ஏறி நிற்கிறான். எப்படி ஏறி இருப்பான்? அவனுக்கா வழி சொல்ல வேண்டும்? எல்லாமே அவனுக்குத் தெரிந்த வழிகள்தானே! மேரி எண்ணிக்கொண்டே இருந்தாள். முப்பத்தெட்டு வித்துக்கள் அவன் குறி வைத்த 'கவண்' கல்லுக்குச் சிதறிப் போயின. தப்பி வந்த இரண்டு வித்துக்களையும் மைதானத்தில் நின்று கொண்டிருந்த அவன் நண்பன் பிடித்துக் கொண்டான். பிறகு இவனும் இறங்கி வந்தான். இருவரும் மைதானத்திலே தாங்கள் பிடித்த குறிஞ்சா வித்துக்களை ஊதி விளையாடினர்.

சுற்றிவர எல்லாத் திசைகளிலும் வெடி ஒலிகள் கேட்டன. துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள், 'ஹெலி' சுடுகின்ற சத்தம், எங்கோ தொலைவில் விமானம் குண்டு போடும் சத்தம், தெற்கிலே மிகப் பதிவாக மிராஜ் விரைந்து செல்லும் ஒலி! பின்னர் மிக அருகில் 'மெஜின் கன்' சத்தங்கள்!

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 14

மிகுந்த போராட்டத்தின் பிறகே நித்திரையாகிப் போனாள் மேரி. தனது உடைகளை யாரே களைந்து எறிவது போல் ஒரு கனவு கண்டு விழித்தாள்.

பின்னர் மறுபடியும் நித்திரையாகிப் போய்... யாரோ தன்னைத் தெருவில் கிடத்தித் தனக்கு மேல் டாங்கிகளைச் செலுத்திச் செல்வது போல் கனவு கண்டு மீண்டும் விழித்தாள். மறுபடியும் 'கனவுதானே' என்று நிம்மதியடைந்து நித்திரையாகிப் போனாள். விடியற்காலையில் அவளது நெஞ்சுக்குள்ளேயிருந்து ஒரு குண்டு வெடித்து உடல் முழுதும் சிதறிப் போனது போலிருந்தது. விழித்துப் பார்த்தாள். உடல் சிதறிப் போகாமல் அப்படியே முழுதாய்க் கட்டிலில் கிடந்தது. கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. கால வரையறையின்றிப் பல்கலைக் கழகம் மூடப்பட்டு விட்டதாய் ராம் வந்து கூறினான்.

கிருப்ஸ் இறந்து போய்விட்டான் என்பது கனவா அல்லது உண்மைதானா?

இவ்வளவு நேரமும் உள்ளுக்குள்ளே கேட்டுக் கொண்டிருந்த ஒலி இப்போது நாடி, நரம்புகளில் எல்லாம் பரவிவிட்டாது போல உணருகிறாள். நாடிகளிலும் வெடிப்பது போல... நாளங்களிலும் வெடிப்பது போல... நரம்புகளிலும் வெடிப்பது போல!

தனக்கு உண்மையில் மனநோய்தான் ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகம் தோன்றியது.

ஒவ்வொரு இரவும் இருளும்போது ஒரு பயம்! இருண்டு விட்டால் இரவு அவளைக் கொலை செய்துவிடும் என்பது போல! ஒவ்வொரு இரவும் விடியும்போது ஓர் அச்சம்! விடிந்து விட்டால் வெளிச்சம் அவளை விசாரிக்கும் என்பது போல!

அவள் மாத்திரமல்ல! பிரதேசத்தில் வாழுகிற ஒவ்வொரு மனிதரும் கடந்த ஓரிரு மாதங்களாக இப்படித்தான் வாழுகிறார்கள்.

தொடர்பு சாதனங்கள் எதுவும் தொழிற்படவில்லை. மின்சாரம் நின்று போய்விட்டது. ஏழை வீட்டில் மாத்திரமில்லை - சவூதியில் இருந்து லட்சக் கணக்காய் வந்து கொண்டிருந்த பணக்கார வீடுகளிலும் கூடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி தொழிற்படவில்லைத்தான். வானொலி பாடவில்லை. புதினப் பத்திரிகைகளைக் கண்ணிலும் காணவில்லை.

தற்செயலாகவேனும் வீதியில் யாராவது இறங்கினால் உயிர் பிரிவது கட்டாயம் என்ற நிலை. பக்கத்து வீட்டில் என்ன நடந்தது என்பதுகூட யாருக்கும் சரியாகத் தெரியவில்லை. நாய்கள் குரைப்பதும், எண்ணெய் மணப்பதும் பெரும் பயங்கர நினைவுகளைக் கொணர்ந்தன.

எந்தக் கடையிலும் மின்கலம் வாங்க முடியாததால் - பழுதடைந்து ஒழுகும் நிலையில் இருக்கும் மின்கலங்கள், வானொலிச் செய்தியை மட்டும் மிகப் பலவீனமான குரலில் ஒலிபரப்பின. அதுவும் கூடத் தெளிவாகக் கேட்காத நிலை.

வீட்டை விட்டு வெளியேறி, ஆலயங்களிலும் பாடசாலை களிலும் தங்கியிருப்பவர் போக - மீதியாகத் தவறி வீடுகளில் இருப்பவர்கள் வீதிகளில் இறங்கினால் - உயிர் பிரிந்துவிடும் என்ற நிலை.

உணவும், நீரும், காற்றும் இருந்தால்தான் யாரும் உறைவிடம் பற்றி யோசிப்பார்கள். உறைவிடமும், அன்பும், பாதுகாப்பும் இருந்தால்தான் கல்வி, வேலைவாய்ப்பு, சுதந்திரம் என்று எண்ணங்கள் வரும். ஒருவருக்கு உணவே கிடையாதபோது, அவர் சுதந்திரம் என்ற சொல்லையே மறந்து விடுவார். இப்போது ஒவ்வொருவரும் அந்த நிலையில்தான்.

கூட்டுறவுக் கடைகளின் முன்னால் ஒரு கிலோ அரிசி பெறுவதற்குத் தவமிருக்கும் நீண்ட கியூவில் நிற்க மேரியின் அப்பாவும் போய்விட்டார். சந்தை கூடும் நிலை இல்லாதபடியால், பருப்புடன் இன்னொரு கறி வைப்பதற்குப் பக்கத்துக் வளவில் தூதுவளை கொய்து கொண்டிருந்தாள் மேரி. மறைவிடமற்ற வெளியான காணியில் தூதுவளை கொய்யும்போது மேலே கேட்ட "ஹெலிச்" சத்தம் நெஞ்சை ஒரு கணம் உறைய வைத்தது. ஊரடங்குச் சட்ட நேரம்! ஒருவேளை தன்னையும் மேலிருந்து பார்த்துவிட்டுச் சுடுவானோ?

தூதுவளை கொய்த பாதியில் திரும்பி வீட்டை நோக்கி வந்தாள் மேரி. திடீரென்று காது செவிடு படும்படி ஒரு சத்தம் - விமானம் ஒன்று அவள் தலையில் இறங்குவது போல இருந்தது. பயத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். ஒரு பனையளவு உயரத்தில் இரண்டு மிராஜ் போர் விமானங்கள் ஒன்றை ஒன்று துரத்திச் செல்வது போல் வேகமாய்ச் சென்று மறைந்தன. அவள் வீட்டினுள் நுழைந்துவிட்டாள். இரண்டாவது முறையாகக் கிரிஸ்ரோபர் அவள் வீட்டிற்கு வந்திருந்தான். அவளது பிறந்த நாளன்று வந்ததன் பின் இன்றுதான் வருகிறான். உள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறமும் பலமாகத் தாக்கப்பட்டிருந்த நிலையில் கிரிஸ்ரோபரைக் கண்டது மேரிக்கு ஆறுதலாக இருந்தது.

"எப்பிடி வந்தியள்?"

"படிக்கிற மூட் இல்லை. ஒழுங்கையளுக்குள்ளாலை வந்தன்..."

"உங்களுக்கு ஒருநாளும் 'மூட் அவுற்' ஆகிறதில்லை எண்டு சொல்லுவீங்கள்..."

"ஆனால் இப்ப எல்லாருமே ஒடிச்சுப்போட்ட கிளை மாதிரி வந்திட்டம். வேரில்லை! காயத்தான் வேணும்..."

"றூமிலைதான் இருக்கிறியளோ?"

"அந்தப்பக்கம் ஒருத்தரும் இருக்கேலாது. உங்களுக்குத் தெரியுமே ராமுக்கு நடந்தது?......"

"......நாங்கள் எல்லாம் 'பரசூட்' சம்பவத்திலண்டு இரவே வெளியேறிட்டம். அவன் தென்மராட்சிக்குப் போறது கஷ்டம் எண்டு இருந்தவன். பிறகு ஆஸ்பத்திரிலை 'ஹெல்ப்' பண்ணப் போயிருக்கிறான். ஆளைக் காணேல்லை....."

"மை கோட்! பாவம், கடவுள் நல்ல மனிசரையும் தண்டிக்கிறார்!"

"கடவுளின்ரை செயல்களுக்குக் காரணம் சொல்ல முடியாமல் ஒரே மயக்கமாத்தான் இருக்கு எனக்கும்..."

சிறிது நழுவினால் மரணம் கௌவிக்கொள்ளும் என்ற நிலையில், ஒவ்வொருவருமே இருப்பதை எண்ணிப் பார்த்தாள் மேரி. நியாயங்கள் எல்லாம் அநாதைகளாகி விட்டன. சிறிது நேர மௌனத்தின் பின் கிரிஸ்ரோபர் சொன்னான்,

"எனக்கு ஒரு விசித்திர ஆசை"

"சொல்லுங்கோ'

"ஈசோப்பின் கதை தெரியுமே உங்களுக்கு?"

"எதைச் சொல்லுறியள்?"

"பண்டைய உரோமாபுரியிலை கிரேக்கத்து அடிமையளை ஒரு வெளியிலை விட்டு, நல்ல பசியோடை இருக்கிற சிங்கம், புலியளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அடிமையளைச் சாப்பிட விடுவினமாம். இந்த நிகழ்ச்சி உரோமாபுரியின்ரை வருடாந்த விழாவிலை நடக்கும். இதைச் சனங்கள் சுத்தியிருந்து பாக்கும்..."

"ம்..."

"ஈசோப்பும் அப்பிடி ஒரு அடிமைதான். அவன் முள் எடுத்துக் காப்பாத்தின ஒரு சிங்கத்தை அவனுக்கு மேலை ஏவி விட்டபடியால் அது அவனைக் கொல்லாமல் அவனை நக்கிவிடுது..."

"ம்..."

"அப்ப உரோமாபுரியிலை செய்தமாதிரி இப்ப கொலைவெறி பிடிச்சு அப்பாவிச் சனங்களைச் சுடச் சொல்லுறவையை ஒரு வெளியிலை விட்டு, காட்டிலை இருக்கிற சிங்கம், புலி, கரடி, நரியளைக் கொணந்து விடவேணும். அதுகள் அவையைக் கொலை செய்யிறதை நாங்கள் எல்லாம் சுத்தியிருந்து பாக்க வேணும்..."

கிறிஸ்ரோபரின் குரல் சுருதி ஒவ்வொரு சுரமாகக் கடந்து வந்து இறுதியில் உச்சத்திலிருந்து அந்தக் கேள்வியை வீசுகிறது.

"என்ரை விருப்பம் சரியோ பிழையோ?"

அவனது குரல் ஒரு அக்கினிக் கோட்டைக் கிழிப்பதை மேரி அதிசயமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கையில் தன் பொக்கற்றிலிருந்த ஒரு பிளேட்டை எடுத்துத் தானே தன் கையில் 'சர்' என்று வெட்டினான் கிறிஸ்ரோபர். அதில் இருந்து வெளியேறும் குருதியை ஒருவித மகிழ்வுடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்குள் கூழாகும் வெறியைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு மேரி சொன்னாள்,

"வெளிச் சூழலாலை நாங்கள் எல்லாம் நல்லாப் பாதிக்கப் பட்டிருக்கிறம். நாங்கள் ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொள்றதையும் உதவிறதையும் தவிர வேறை ஒண்டும் செய்ய முடியாது..."

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15

நேரந் தவறிய சாமக்கோழி ஒன்று மூச்சடக்கிக் குரலைத் தனக்குள் தக்க வைத்துக்கொண்டது.

கிரிஸ்ரோபர் ஒரு 'சாடிஸ்ற்' என்பதைத் தான் ஒரு வைத்தியத்துறை மாணவியாய் இருந்தும் இவ்வளவு காலமும் எப்படி உணராமல் இருந்தோம் என்பது மேரிக்குப் புரியவில்லை.

அவனது செயற்பாடுகள் ஒவ்வொன்றையும் விருப்பங்கள் ஒவ்வொன்றையும் இப்போது நினைத்துப் பார்த்தால், அது சந்தேகமின்றித் தெரிகிறது.

எங்கோ ஒரு புள் ஓலமாய்க் கூவிற்று. அது தன் துணையைத் தொலைத்ததோ? மேரிக்கு வாழ்வில் எல்லாமே தொலைந்து விட்டதான ஓர் உணர்வு.

கிரிஸ்ரோபர் இறுதியாய்த் தமது வீட்டிற்கு வந்திருந்த பொழுதை மீண்டும் நினைத்துப் பார்த்தாள். தன்னில் இருந்து குருதி வடிவதைத் தானே பார்த்து மகிழ்ந்தது போல் இருந்தவன் திடீரென்று கேட்டான், "இப்ப... நான் உங்களிட்டை ஒரு அநுதாபத்தை எதிர்பார்த்துத்தான் வந்தனான்"

எப்போதுமே தன் நிலை, கௌரவம் இவைகளில் இருந்து கீழ் இறங்க விரும்பாத கிரிஸ்ரோபர் இப்படிக் கேட்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"என்ன மாதிரி அநுதாபம்?"

"எங்கடை வீட்டிலை இரண்டு நாளாய் ஒரு நேரந்தான் சாப்பிடினம்..." அவளுக்குப் புரிந்தது - அவன் தொடர்ந்தான். "அப்பாக்கு இன்னும் "பென்சன்" வரத் தொடங்கேல்லை. கடன் தாற நிலையிலை அயல் வீட்டுக்காறர் ஒருதரும் இல்லை. எல்லாரும் இருபது ரூபாய்க்குத்தானே அரிசி வாங்கினம்... உருளைக் கிழங்கு, சீனி எல்லாம் விலை கூடிட்டுது..."

"உங்களுக்கு எவ்வளவு தேவை?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆயிரம் ரூபா தந்தீங்களெண்டால் பெரிய உதவியாய் இருக்கும். அப்பா பென்சன் எடுத்த உடனை திருப்பித் தருவன்..."

மேரி மனதுக்குள் குளிர்ந்தனள் என்றுதான் சொல்லவேண்டும். கிறிஸ்ரோபருக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதை அவள் விரும்பினாள். அவள் மனதின் உள்ளே ஒரு நம்பிக்கைக் கதிரொளி ஆவல் தோய்ந்த வண்ணங்களை அழகு மயமாய்ச் சித்திரிக்கிறது.

அண்ணா சவூதிக்குப் போக முன்னர் கைச்செலவுக்கென அவளிடம் தந்துவிட்டுப் போன பணத்தில் ஆயிரம் ரூபாவை உடனே எடுத்து வந்து கிறிஸ்ரோபரிடம் கொடுத்தாள். நன்றி கூறிப் பணத்தைப் பெற்றுக்கொண்டவன், "குகநாதன் சேரைக் காணேல்லையா" என்று கேட்டான். அந்தக் குத்தல் அவள் முகத்தைச் சிவக்கச் செய்தது.

"அந்த உறவு முடிவுக்கு வந்தது உங்களுக்குத் தெரியுந்தானே!"

"ஏன்?" கிறிஸ்ரோபர் உண்மையில் அதிர்ந்து போனவன் போலக் கேட்டான்.

"குகநாதனைப் பற்றி நீங்கள் சொன்ன அபிப்பிராயம் சரி எண்டுதான் ஒருநாள் விளங்கிக் கொண்டன். நான் விளங்கிக் கொண்டன் எண்டு அவருக்கும் விளங்கிட்டுது..."

"தலையும் நரைச்ச பிறகு ஒரு கலியாணமும் செய்திட்டார்"

"ஆனால் அவர் எதையும் 'ஒப்ரிமிஸ்ரிக்'காகத்தான் எடுப்பார். ஒருநாள் தலைமயிர் நரைத்துவிட்டதைப் பற்றி என்னோடை கதைச்சவர். நீங்கள் 'டை' பாவிக்கலாம் எண்டு நான் சொன்னன். அவர் சொன்னார், 'டை பாவிக்கிறது தோலுக்கு நட்டம். நாங்கள் 'டொக்ரேஸ்' தெரிஞ்சு கொண்டு அப்பிடிச் செய்யப்பிடாது. மற்றது தலைமயிர் நரைக்கிறதிலும் நன்மையிருக்கு' எண்டார்"

"என்ன நன்மையாம்?"

"தலைமயிர் கொஞ்சம் நரைச்சிருந்தாத்தான் அவை சொல்லிற சொல்லுக்குச் சமூகத்திலை மதிப்பிருக்குமாம். ரசல் முந்திச் சொன்னமாதிரிச் சொன்னார்..."

அவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் சங்கக்கடைக் 'கியூ'வுக்குப் போயிருந்த அப்பா அரிசியுடன் திரும்பி வந்தார்.

"பிள்ளை மேரி, உங்கடை குகநாதன்..." மேரி எழுந்து வெளியே வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவற்றை பொம்பிளை... தற்கொலை செய்திட்டுதாம்... ரவி சொல்லிப் போட்டுப் போறான்..."

"ஏனாம்?" மேரி அதிர்ந்தாள்.

"இதெல்லாம் கேக்கிற கேள்வியே மோனை... காலம் அப்பிடி... இசக்குப் பிசக்கா ஏதோ நடந்திட்டுது போலை... மனிசி அவமானம் தாங்க மாட்டாமல் ஏதோ குடிச்சிட்டுது..."

மேரி திரும்பவும் உள்ளே வந்து அமர்ந்தாள். அவள் கண்கள் ஒரு புள்ளியில் நிலைத்திருந்தன. அந்த நிலை அவள் மிகவும் அதிர்ச்சி அடைந்திருப்பதைச் சுட்டியது. மரம்... கோழி... பல சொற்கள், படிமங்கள் மனதில் வந்து போயின.

"விழுந்த ஞாயிறு எழும்பிறதுக்கு முந்தி எதுவும் நடக்கலாம் எண்டு ஆயிட்டுது. எனக்குச் சரியான பயமா இருக்கு. எங்கடை வீட்டுப்பக்கமும் என்னவோ தெரியாது..." என்று கூறிக்கொண்டு எழுந்தான் கிரிஸ்ரோபர்.

புகையும் நெருப்பில் நெய்ப்பந்தை விட்டெறிந்தாற்போல், உள்ளும் புறமும் மிகவும் குழம்பிப்போய் இருந்த மேரியையும் இந்தச் செய்தி இன்னும் பாதித்து விட்டதை கிரிஸ்ரோபரும் உணர்ந்திருக்க வேண்டும்.

"சிங்கம், புலி போலை விலங்குகள்தான் தங்கடை காதலுக்காக இன்னொரு விலங்கோடை சண்டை பிடிச்சு இரத்தம் சொட்டச் சொட்ட வாறது... இப்ப மனிசரும் அப்பிடி ஆயிட்டுது..."

கிரிஸ்ரோபர் இதற்குப் பதில் கூறவில்லை. சில விநாடிகள் பேசாதிருந்தான். பிறகு, "குகநாதனுக்கு இல்லறம் பொருத்தம் இல்லை. இரண்டாவது பொம்பிளையும் போயிட்டுது..." என்று தனக்குத்தானே கூறுவதுபோலக் கூறிக்கொண்டு காசை எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

நினைவுகூடத் தொடர முடியாத வேதனையுடன் படுத்துக்கிடந்த மேரி எழுந்து வெளியே வந்தாள். கிருப்ஸ், ராமுக்கு நேர்ந்த கதி, மிஸஸ் குகநாதன், இறுதியில் கிரிஸ்ரோபர்... எதையும் மனம் ஏற்றுக்கொள்ள மறுத்து அடம் பிடித்தது. ஆனால் யாவும் யதார்த்தங்கள் என்று ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

வீதியில் வெள்ளைப் பிரம்புடன் 'அன்ரனி' வந்து கொண்டிருந்தான். விரியும் அழகுடன் பொழுது புலர்வதை ஒருபோதும் பார்த்திராத அன்ரனி! வழக்கமாக அவன் இந்த நேரத்தில் இந்த வழியில் போவதுண்டுந்தான்! ஆனால் அவனைப் பற்றி மேரி ஒருபோதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்துப் பார்த்தது கிடையாது. கிறிஸ்ரோபர் ஒரு 'சாடிஸ்ற்' என்று புரிந்துகொண்ட பின் வரும் இரவுகள்! அந்த இரவுகளுக்குத் துணை நிற்கும் பயங்கர நிசப்தம். அந்த நிசப்தத்தை இடையிடை கிழிக்கும் துப்பாக்கி வேட்டுக்கள்.

பெயருக்குப் பின்னே பல பட்டங்கள்... அண்ணா சவூதியில் உழைப்பது போல உழைத்துச் சேர்க்கும் பணம்... அழகான வீடு... பெரிய கார்... வீட்டில் வேலைகளைச் செய்ய வேலையாட்கள்... காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு ஆங்கிலம் பேசும் ஒயில்...! இவைகளை நினைக்கும்போது, பனியில் நனைந்த இனிமையாய் வரும் அற்புத சுகம்... அது இன்று வரவில்லை.

இந்த 'அன்ரனி' போலவே, எல்லாருக்கும் திடீரெனக் கண்கள் குருடாகிப் போனால்...? இவனைப் போலவே நுண்மதியில் குறைபாடு இருந்தால்...? அப்போது மற்றவனுக்குத் தீமை செய்வது இலகுவில் முடியாது. 'ஸ்ரற்றஜி' எல்லாம் கைவராது!

"அன்ரனி எங்கை போறீங்க?"

அவளது குரலில் கனிவான மிருதுத்தனம் நயமாய் இறங்கியிருந்தது. தனது வீட்டுக்கு அயலில் வசிக்கும் இந்த 'அன்ரனி'யைத்தான் இதுவரை ஒரு மனிதனாகத்தானும் நினைத்துக் கதைத்திராத அதிசயத்தைத் தனக்குள் எண்ணி வியந்தாள் மேரி.

"சேர்ச்சுக்குப் போறன். கேட்டது மேரியோ? அந்த டொக்டர் பிள்ளை...?"

"ஓம்... நான் இன்னும் டொக்டர் ஆகேல்லை..."

"ஆவீங்கள்தானே... ஏன் சிஸ்டர்... உங்களுக்கு எப்ப 'கம்பஸ்' தொடங்குது...?" சிரித்தபடியே கேட்டுக்கொண்டு நடந்தான் அன்ரனி.

"தெரியாது. இந்த உலகமும் படிப்பும் பட்டமும் பணமும்... அங்கை வாற உறவுகளும் எல்லாம் போலிதான் அன்ரனி. எல்லாச் செயற்பாட்டிலையும் சுயநலம்... எங்கையும் ஆதிக்க வெறி... ஈகோ..."

அவளது குரல் உடைந்து துன்பம் வெளிப்பட்டது.

"எல்லாத்தையும் யேசுவிட்டை ஒப்படைப்பம் வாங்கோ சிஸ்டர்..."

இரண்டு வார்த்தையில், ஒற்றைச் செய்கையில் தூய அன்பைக் காட்டி நெஞ்சைத் தொட்டுப்போக எல்லாராலும் முடியாது. அன்ரனியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முடிந்தது. அவன் தெளிந்த மனதுடன் மகிழ்வாய் இருந்தான். அவனால் எப்படி முடிகிறது?

தனக்கும்... 'கம்பஸி'ல் படிக்கும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் எல்லாருக்கும் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் ஊரில் உள்ள, நாட்டில் உள்ள, உலகில் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் திடீரெனக் கண்கள் குருடாகிப் போகவேண்டும் என்ற விசித்திரமான ஆசை ஒன்று மனதை நிறைக்க,

"நானும் சேர்ச்சுக்கு வாறன் அன்ரனி..." என்று கூறி, அவனது கையைப் பற்றி மென்மையாக அவனைப் பாசத்துடன் அழைத்துச் செல்கிறாள் மேரி.

முற்றும்.

**(தொண்டன் சஞ்சிகையில் பிரசுரமானது - 1988 செம்மையாக்கலுடன்)**

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிர்ப்பந்தங்கள்

## 1

"வேலு இலட்சியவாதி மட்டுமல்ல, தன் இலட்சியங்களுக்கு ஏற்படக் கூடிய தடைகளை மிகத் தந்திரமாகவும், திறமையாகவும் தாண்டிச் செல்லும் விவேகமும் உடையவன். நானாக இருந்தால் இலட்சியங்கள், ஆசைகளுக்குத் தடையும் தொல்லையும் வரும்போது மனம் முறிந்து செயலிழந்து என் பலவீனத்தை எல்லோருக்கும் காட்டிக்கொள்வேன்" என்று மஞ்சு தனக்குள்ளாக நினைத்துக் கொள்கிறாள்.

"ப்ளோரில்" அடுத்த 'கேம்' ஆரம்பமாகிறது. இதற்குள் எங்கிருந்தோ மஞ்சுவின் பக்கத்தில் தோன்றிய செல்வராஜ், "மிஸ் மஞ்சுளா! நீங்க ஒரு "கேமிலும் பாட்டிசிப்பேற் பண்ணேல்லை..." "கம் ஒன்... லெட் அஸ் கோ ஃபோர்த நெக்ஸ்ட்" என்று அவளை வலிந்து இழுக்க முனையும்போது பின்னால் நின்று கொண்டிருந்த வேலு, "செல்வராஜ், நீ இங்கேயா நிற்கிறாய்? அந்தக் கோணரிலை சுகி உன்னைத் தேடிக் கொண்டிருந்தா..." என்று சொல்ல, செல்வராஜ் அந்த சுகியைத் தேடிக்கொண்டு போக... மஞ்சுவின் சங்கடத்தைக் குறிப்பாக உணர்ந்து ஏதோ சாட்டுப் போக்குச் சொல்லிச் செல்வராஜை அவளிடமிருந்து அகன்று போகச் செய்தமைக்காக அவள் உள்ளம் மானசீகமாய் வேலுவுக்கு நன்றி சொல்கிறது.

அடுத்த "கேமில்" வெற்றி பெற்ற குழுவின் தலைவரை மற்ற மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து தலைக்கு மேல் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தடிக்கிறார்கள். கல்லூரிக் கீதத்துடன் 'ஒன்று கூடல்' முடியும்போது இரவு ஒரு மணியாகிவிட்டாலும் எல்லா மாணவர்களும் மிக உற்சாகமாக வெளியேறி அன்று நடந்த பல சுவையான நிகழ்ச்சிகள் பற்றி உரையாடியவாறே தத்தம் வீடுகளை நோக்கிப் புறப்படுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட கல்லூரியில் இருந்து பல்கலைக் கழகம் வந்தவர்கள் 'கல்லூரி ஒன்றுகூடல்' வைத்தால், அவர்களின் நண்பர்களும் போய்விடுவார்கள். சாப்பிட, விளையாட, 'சல்' அடிக்க! மஞ்சுவும் பாரதியும் புறப்படும்போது வேலுவும் அவர்களுடன் செல்கிறான்.

"மனிதன் செய்யிற செயல்கள் எல்லாம் அவனுக்குப் பிடிச்சதாய் இருக்க வேணும் எண்டு அவசியமில்லை. சிலவேளையிலை, ஏதோ ஒரு புறத்தாக்கத்துக்கு உட்பட்டு, தன்ரை சுய கட்டுப்பாட்டையும் மீறி நடக்கத்தான் வேண்டியிருக்கு". ஏதோ யோசனையில் வந்த வேலு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரெனப் பேச்சைத் தொடங்குகிறான். "நீங்களும் பாரதியும் பிடிக்காத செயலையும் பிடிச்சமாதிரிக் காட்டிக்கொண்டு தப்பிடுறீங்கள். என்னாலைதான் அது முடியேல்லை..." மஞ்சு முனகுகிறாள். "நாய் வேசம் போட்டாக் குலைக்கத்தான் வேணும். படிக்க வேணும் எண்ட ஆசையிலை யூனிவேர்சிற்றிக்கு வந்திட்டம். இஞ்சை உள்ள வாழ்க்கை முறையள், பழக்க வழக்கங்கள் சிலதைப் பின்பற்றித்தானே ஆகவேணும். வெறுப்புகளைப் பிரத்தியட்சமாக் காட்டிக் கொள்ளிற உங்கடை குணம் பிற்கால வாழ்க்கையிலையும் உங்களுக்குப் பல பிரச்சினையளை உருவாக்கப் போகுது..."

வேலுவின் அறிவு பூர்வமான ஆலோசனைக்கு எதிர்வார்த்தை பேசாமல் மௌனமாக நடக்கிறாள் மஞ்சு. எப்போதுமே இப்படித்தான் அவளின் ஒவ்வொரு செயலிலும் அதீத அக்கறை எடுத்துக்கொண்டு, ஏதோ ஒரு உரிமை உடையவர் போல வேலு ஆலோசனை சொல்லும்போதோ அல்லது கண்டிக்கும்போதோ கூடப் பாம்பாட்டியின் குழலுக்குப் பணிந்து பெட்டிப்பாம்பாக அடங்கிப் போகிறாள் மஞ்சு.

"நேரம் இப்பவே ஒரு மணிக்கு மேலையாகுது. இனியும் கதைச்சு நேரத்தைப் போக்காட்டாமல், கெதியாப் படுங்கோ. அப்பதான் 'மோர்னிங்' நேரத்துக்கு "லெக்சர்ஸ்ஸுக்கு" வரலாம்" என்று கூறிக் 'குட்நைற்' சொல்லித் தன் விடுதியாகிய ஜெயதிலகா ஹோலை நோக்கி நடக்கும் வேலுவின் தொனியில் ஒரு தந்தையிடம் இருக்கக்கூடிய கண்டிப்பும் இருப்பதை உணர்ந்தவளாய் விஜயவர்த்தனா விடுதிக்குள் நுழைகிறாள் மஞ்சு.

"ஒரு முதலாளியின் மகள், செல்வம் கொழிக்கும் வீட்டிலே பிறந்தவள், பணக்காரர்களுடனேயே எப்போதும் பழகியவள், பல்கலைக் கழகத்தில் பெரிய மட்டத்தினருக்கே உரித்தான 'பார்ட்டி'களிலும், விளையாட்டுக்களிலும் கலந்து கொள்ள ஏன் தயங்குகிறாள்? ஓர் ஏழைப் பெண்ணுக்குரிய குண இயல்புகள் இவளிடம் எப்படி வந்தன?" என்று வேலு சிந்திப்பாரோ? அவளுடைய வாழ்க்கை முறையில் அவளுக்கே ஏற்பட்டுப்போன வெறுப்புகள் அவளை இவ்வாறு மாற்றிவிட்ட நிர்ப்பந்தங்கள் பற்றி அவர் எப்படி அறிந்திருக்க முடியும்?

இவ்வாறான சிந்தனையுடன் நித்திரையாகிப்போன மஞ்சு காலையில் ஏழு மணிக்கு 'பிறேக் பாஸ்ட் பெல்' அடிக்கும்வரை கண் விழிக்க முடியாத ஆழ்ந்த உறக்கத்தில்தான் இருந்தாள். விடிந்த பின் கண்டுகொண்டிருந்த ஏதோ தெளிவில்லாத பயங்கரக் கனவின் பிடியில் இருந்து திடீரென்று விடுவித்துக் கொண்டு "டைனிங் ஹோலுக்குப்" போகும் வழியில் ரஜனி ஓடி வருகிறாள்.

"மஞ்சு, உனக்கு "ஜவ்னாவிலை" இருந்து 'டிரங்கோல்' வந்திருக்கு..." என்று அவள் கூறியதும், 'ஒபீசை' நோக்கி வேகமாக ஓடியதும், ஓ! 'ஃபானைக்' கையில் எடுத்துக் கொண்டதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவுக்கு "சீரியஸ்", உடனே வா" என்ற மாமாவின் குரல் கேட்டதும், 'சூட்கேசைத்' தூக்கிக்கொண்டு அகப்பட்ட 'ரெயினைப்' பிடித்துக் கொண்டதும், "ஸ்டேசனில்" இருந்து பிடித்துச் சென்ற கார் வீட்டுக்கு நூறு யார் தூரத்தில் வரும்போதே... பறை மேளம் அவள் செவிகளில் விழுந்ததும்... எல்லாமே ஒரு கனவு போல...!

"கொஞ்ச நேரம் அழுகிறதை நிப்பாட்டுங்கோ... ஆராவது தேவாரம் படிக்கட்டும்..." என்று செல்லையா சொன்னவுடனேயே, சவத்தின் தலைமாட்டில் குந்தியிருந்து சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்த பொன்னையா மாமா குரலைச் செருமிச் சுருதி சேர்த்துக்கொண்டு ஆரம்பித்துவிட்டார்.

"பால் நினைந்தூட்டும்... தாயினும் சாலப் பரிந்து... ஆ... ஆ... பால்நினைந்தூட்டும்... ம்... ம்..."

அவர் ஆலாபனை செய்து கொண்டிருக்கும்போதே நல்லையாச் சித்தப்பா உள்ளே ஓடிப்போய்... தேவாரப்புத்தகம் ஒன்று எடுத்துக்கொண்டு வந்து... கூட்டத்தின் நடுவில் சப்பாணி கொட்டி உட்கார்ந்துகொண்டார். "எங்கெழுந் தருளுவது இனியே... ஏ... ஏ... ஏ... ஏ..." என்று பொன்னையா மாமா இன்னதென்று ஒருவராலும் அடையாளங் காண முடியாத ஒரு ராகத்தில் இழுத்துக் கொண்டிருக்கும் போதே நல்லையாச் சித்தப்பா தொடங்கிவிட்டார்.

"பிணியெல்லாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடிறப்பும் அஞ்சேன்" அந்த இரண்டு பேரில் யாருமே பண் முறையில் தேவாரம் திருவாசகம் பாடக் கூடியவர்கள் அல்ல என்பது இருவருக்குமே தெரிந்திருந்தாலும், தன்னைத் தொடர்ந்து படிக்க விடக்கூடாதென்ற எரிச்சல், இந்த வீட்டில் எனக்கென்ன முன்னூடு என்ற எண்ணத்தில்தான் நல்லையர் வந்து தன்னைக் குழப்புகிறார் என்பது புரிந்தபோது பொன்னையருக்கு உள்ளம் உள்ளுக்குள் வெந்து மறுகியது.

"என்ன இருந்தாலும் செத்தது என்ரை தங்கச்சிதானே! நான் படிக்கிறதை எவர் தடுக்க முடியும்?" மனதிற்குள் முனகிக் கொண்டே அவர் அடுத்த பாடலைத் தொடங்குகிறார். வெளியே இருந்து பார்ப்பவர்களுக்கு இருவரும் மிக ஒற்றுமையாய் மாறி மாறித் தேவாரம் படிப்பது போல் தோன்றும் அந்த நிகழ்வில் சூட்சுமமாய் நிலவுகின்ற போட்டியும் பூசலும் ஊமையடித் தாக்குதல்களும் விவகாரத் தெளிவு உள்ளவர்களுக்கு மட்டுமே புரியும். மஞ்சுவுக்கும் அது புரிகிறபோது, தாய் போய்விட்ட வேதனை ஒரு புறமிருக்க, அங்கு நடந்து கொண்டிருக்கிற நிகழ்வுகள் எதுவுமே மனதிற்கு நிம்மதியைத் தராமல்... எங்காவது எழுந்து ஓடவேண்டும் போன்ற ஒரு துறுதுறுப்புடன் தவித்தாள் அவள். கண்களில் கனத்த நீர்த்துளிகளைச் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். ஏனோ அவளால் பெரிதாக அழமுடியவில்லை. அப்படிச் செய்ய அவள் விரும்பவுமில்லை. வார்த்தைகளற்று யோசிக்கிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, மௌனமாய் உட்கார்ந்து மானசீகமாய் விம்முகிறபோது "அம்மா இறந்து போனதும் நல்லதுதான்" என்று தோன்றுகிறது அவளுக்கு.

அப்பாவின் நண்பர்கள் போல் தோன்றிய சில பெரிய புள்ளிகள் முதலாளி வர்க்கத்தின் அடையாளச் சின்னமாகிய கார்களில் வந்து, வரிசையாய் பல மலர்வளையங்களை அம்மாவின் தலைமாட்டில் வைத்து, கட்டிலை ஒரு முறை சுற்றி வந்து அப்பாவிடம் சொல்லிக் கொண்டு விடை பெற்றுச் செல்லுகிறார்கள். அந்தச் சில நிமிடங்களில் கூட,

"நீங்கள் நேற்றுக் கேட்ட விஷயம் பற்றி நாளைக்கு நான் "ஃபோன்" பண்ணிறன்" என்றும், 'ராம் அண்ட் பிரதேர்சிலை' விசாரிச்சுப் பாருங்கோ..." என்றும், "அந்த "இன்கம்ராக்ஸ் அசெசர்" பொல்லாத ஆள். கவனம்!" என்றும் அவர்கள் பரிமாறிக் கொண்ட தொழில் ரகசியங்கள் மஞ்சுவின் காதுகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் விழுகிறபோது அவள் உள்ளம் நெருப்பில் விழுந்த மசுக்குட்டியாய் நொந்து வலிக்கிறது.

"இவர்களில் யார் உண்மையில் அம்மாவின் இறப்பில் கவலை கொண்டு இங்கே வந்தார்கள்...? அப்பாவே யந்திரமாக இருக்கும்போது அவர்கள் எல்லாம் ஏன் கவலைப்படவேண்டும்? மனிதாபிமானங்கள் எல்லாம் மறைந்த நிலையில் இவர்கள் சேர்த்து வைக்கிற பணம்... கடைசியில்...?" சங்கிலி சங்கிலியாய்த் தொடர்ந்து வரும் நினைவுக் கோவைகள் இடையில் தொடர்பின்றி அறுந்து போகின்றன.

மாலை மூன்று மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகும்போது, கிரியை நடைபெறும் முற்றத்தை மெழுகுதல், குளிப்பாட்டும் இடத்திற்கு நீர் கொண்டு வந்து சேர்த்தல், குருக்கள் கேட்கிற சகல பொருள் களையும் கொண்டு வந்து கொடுத்தல், அம்மாவைக் குளிப்பாட்டும் இடத்திற்குத் தூக்கிச் செல்லுதல்... போன்ற சகல வேலைகளையும் அப்பாவின் கண்ணாடித் தொழிற்சாலையின் தொழிலாளர்களே செய் கிறார்கள். தொழிற்சாலையில் இருப்பது போலத்தான்... அதே மாதிரி ஓர் "ஈசிச் செயரில்' காலுக்கு மேல் கால் போட்டுக்கொண்டு அமர்ந்திருக் கிறார் அப்பா. காரியங்கள் என்னவோ கொஞ்சமும் பிசகாமல் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

தனது சால்வையினால் இடையிடையே அவர் முகத்தை ஒற்றிக் கொள்ளும்போதும் அது வியர்வைக்காகவா அல்லது கண்ணீருக்காகவா என்று மஞ்சுவால் பேதம் காண முடியவில்லை. சில மணித்தியாலங்களாக எந்தவித உணர்ச்சியுமின்றி எஃகுபோல் இறுகிக் கனத்து நின்ற மஞ்சு திடீரென்று,

"வாரி வழங்கிற கையும் இப்போ வழங்கவில்லை. ஆரை நம்பி நாங்கள் அடி எடுத்து வைப்பமிங்கே..." என்று ஒரு தொழிலாளியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி வைத்த ஒப்பாரியில் தன்னை மறந்து நெகிழ்ந்து மாலை மாலையாகக் கண்ணீர் விட்டாள். அப்பாவிடம் இருந்து சம்பளத்திற்கு மேலாக யாரும் ஒரு சதமும் வாங்க முடியாது என்பதும், அம்மா அப்பாவிற்குத் தெரியாமலே ஐந்தும் பத்துமாகக் கொடுத்து விடுகிற விஷயமும் அவளுக்குத் தெரியுமாதலால், அந்த ஒப்பாரியில் தொனித்த உண்மையின் கனம் அவளைச் சற்று அசைத்துத்தான் விட்டது.

எல்லாம் முடிந்துவிட்டது. அப்பா என்ற யந்திரத்துடன் இரண்டு நாட்களை ஒருவாறு நகர்த்திவிட்டு, மூன்றாம் நாள் பேராதனைக்குப் புறப்பட்டாள் மஞ்சு. 'சரசவி உயன'வில் இறங்கிப் பாலத்தைக் கடந்து ஹோலுக்கு முன்னால் உள்ள வீதியில் நடக்கும்போது முன்னால் வேலு வந்துகொண்டிருப்பது அவரது பிரத்தியேகமான நடையில் இருந்து தெரிகிறது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் பொது நூலகம்
நல்லூர் பிரதேசசபை

## 2

"குட் மோர்னிங் மிஸ் மஞ்சு" வழக்கமாகத் தொனிக்கும் கம்பீரமோ கலகலப்போ இல்லாமல் வரட்சியாக ஒலிக்கிறது அவர் குரல்! அவள் இருக்கும் சோகம் கவிந்த சூழ்நிலையில் அவளுடன் கலகலப்பாகப் பேசுவது பண்பில்லை என்று நினைத்தாரோ என்னவோ!.

"குட் மோர்னிங் வேலு..." "லைபிரரிக்குப்" போறீங்க போலை இருக்கு. 'ரெஸ்ருக்கு' இன்னும் காலம் இருக்கு..." சாதாரணமாகக் கலகலப்பாகக் கதைக்க வேண்டும் என்று மிகக் கடுமையாக மஞ்சு முயற்சி செய்தாலும் அது முழு வெற்றி அடையவில்லை.

"ஹோலில்" இருந்தா... ஏதோ ஒரு 'ரொப்பிக்'கிலை விவாதம் வந்திடும். என்ரை 'ஒப்பினியன்ஸ்' மற்ற "போய்ஸ்" ஓடை ஒத்துப் போகாது. அதிலையும் தொழிலாளர் பிரச்சினை எண்டு வந்திட்டால், பிறகு நாள் முழுக்க விவாதிக்க வேண்டிவரும். உங்களுக்குத் தெரியுந் தானே... "லைபிரரிக்குப்" போனால் ஏதும் "யூஸ்.ஃ.புல்லா" வாசிக்கலாம்... 'பை த வே...' ஏதோ கேட்க நினைத்தவர் போலத் தொடங்கிக் கேட்க விரும்பாதவர் போல் நிறுத்திக்கொண்ட கேள்வியைப் புரிந்து கொண்டு மஞ்சு சொல்கிறாள்,

"ஏதோ நடந்தது நடந்து போச்சு. அம்மாவின்ரை உயிர் பிரியிற நேரத்திலை அவவுக்குப் பக்கத்திலை இருக்க முடியேல்லை எண்டதைத் தவிர எனக்கு வேறை கவலை இல்லை. அப்பாவோடை இருந்து கஷ்டப்படுறதை விடப் போயிட்டது நல்லது..." தன்னைத் தானே ஆறுதல் படுத்துவது போல் அவள் பேசிக் கொண்டாலும், கண்களில் முட்டி வந்த கண்ணீரை உள்ளுக்குள் விழுங்கிக்கொள்ள முடியாமல் அவள் திணறும்போது இரண்டு சொட்டுக்கள் தெறித்துத் தரையில் உருளு கின்றன.

"உங்கடை 'மதர்' செத்திட்டா எண்டு 'ரெலிபோஃபான்' வந்து நீங்கள் போனது எங்களுக்கு அடுத்த நாள்தான் தெரிய வந்தது. இல்லாட்டி நாங்கள் யாராவது உங்களை யாழ்ப்பாணம் கூட்டிக்கொண்டு போயிருப்பம். இப்பிடியான நேரத்திலை, இந்த நிலையிலை நீங்கள் தனியப் போயிருக்கப்பிடாது. ஏதோ முன் பின் தெரியாத ஆக்களிட்டை உதவி கேக்கத் தயங்கிற மாதிரி... என்னட்டைக் கூடச் சொல்லாமல் போயிட்டீங்கள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலு... இந்த மாதிரி ஒரு அன்பும் அக்கறையும் வீட்டிலை கிடைக்குமாயிருந்தால்... 'மஞ்சு தனியப் போக வேண்டாம், நான் வாறன்' எண்டு சொல்லக்கூடிய தந்தையாக என் அப்பா இருந்தால்...? அவர் சேர்த்து வைக்கிற சொத்து முழுதும் எனக்குத்தானா? யாருக்கு வேண்டும் அந்த நாய் தின்னாக் காசு? நீங்கள் மட்டும் ஏன் என்னிடம் இவ்வளவு உரிமை எடுத்துக்கொண்டு உதவி செய்யத் துடிக்கிறியள்...?" என்று ஊமையாய்ப் புலம்பும் மஞ்சுவின் உள்மன ஒலி வெளியே கேட்கவில்லை.

"செத்த வீட்டுக்கோ, அல்லது வேறை ஒரு "ஃபங்சனுக்கோ யூனிவேர்சிற்றி ஃபிரண்ட்ஸை றிசீவ்" பண்ணக்கூடிய நிலைமையிலை எங்கடை குடும்பம் இல்லை எண்டு உங்களுக்குத் தெரியுந்தானே... தவிரவும்..." என்று ஏதோ மென்று விழுங்கிச் சொல்லுகிறாள்.

"யூனிவேர்சிற்றி "ஃபிரண்ட்ஸ்" எல்லாரையும் கூப்பிடச் சொல்லி நான் சொல்லேல்லை. தனியப் போயிருக்க வேண்டாமே..." என்று கண்டிப்புடன் சொல்லத் தொடங்கியவர், மஞ்சுவின் விழிகளில் மறுபடி துளிர்த்த நீரைக் கண்டு போலும், "ஓல் ரைற், இப்ப இதிலை நிண்டு கதைக்க வேண்டாம். நீங்க "றூமுக்குப்" போய் "றெஸ்ற்" பண்ணுங்கோ. நான் "ஈவினிங்" வந்து "ஹோஸ்டலிலை" சந்திக்கிறன்" என்று சொல்லிவிட்டு மெதுவாக நகரும் வேலுவைத் தொடர்ந்து பார்க்க விரும்பும் விழிகளைக் கட்டுப்படுத்தித் தன் சுய கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தாலும் மஞ்சுவின் இதயக் கண்களில் அந்தப் பார்வை விலகவில்லை.

"வெள்ளைக் காற்சட்டையும் வெள்ளைச் "சேர்ட்டுமே" எப்போதும் அணியும் தூய்மையான தோற்றமும் நிமிர்ந்த நேர் கொண்ட நடையும், பார்த்தவுடன் யாரையும் கவர்ந்து கொள்ளக்கூடிய அந்த வசீகரமான புன்னகை மலர்ந்த முகபாவமும்... தோலின் நிறம் கறுப்பாக இருந்தாலும் கூட... அவர் கண்களில் சுடர் விடுகின்ற அந்த ஏதோ ஒன்றிலேயே ஒரு மயக்கம் ஏற்படுகிறதே! வெளித்தோற்றம் மட்டுந்தானா? எதையும் நின்று நிதானித்து யோசித்துத் திடமான, ஆனால் தீர்க்கமான முடிவுக்கு வரும் மனோபாவமும், எவருடைய பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு அதில் தானும் பங்கு கொண்டு ஒன்றிப் போகும் பாங்கும், பரந்த அறிவும், கூர்மையான ஆலோசிக்கும் திறனும் எல்லாமேதான் மயக்கத்தை ஏற்படுத்தக் கூடியன. ஆனாலும்... ஆனாலும்... அவர் ஒரு தொழிலாளியின் மகன்..." சிந்தனை தன்பாட்டில் சிறகடிக்க அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போகிறாள் அவள்.

'றூம்மேற்' பாரதி தன் மேசையில் இருந்து ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டு இருந்தவள் மஞ்சுவைக் கண்டவுடன் எல்லாவற்றையும் மூடிவிட்டு விரைவாக எழுந்து வந்து,

"நல்லாக் களைச்சுப் போய் வந்திருக்கிறாய். 'ரீ' போட்டுத் தரட்டே? அல்லது காலையிலை தந்த 'பிரெட்டும்' பருப்பும் எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சிருக்கிறன். சாப்பிடுறியா?" என்று கேட்கிறாள். அவள் காட்டும் அந்தப் பரிவு உடலுக்கும் உள்ளத்துக்கும் ஒருங்கே பெரிய ஆறுதலைத் தருகிறது.

"ரீ" போடுறதெண்டால், பக்கத்து 'றூமிலை ஹீற்றிங் கொயில்' இரவல் வாங்க வேணும். கரைச்சல்தானே! பாண் இருந்தால் தா. சாப்பிடுறன்..." என்று சொல்லிக்கொண்டே, "சூட்கேசைத்" தன் "கபேட்டில்" வைத்துவிட்டுக் கட்டிலில் சாய்ந்து கொள்கிறாள் மஞ்சு.

"படுத்தால் நித்திரையாப் போடுவாய். பிறகு உன்னை எழுப்பேலாது. இந்தா இதைச் சாப்பிட்டிட்டுப் படு..." என்று கூறிப் பாரதி தந்த பாணைக் கையில் வாங்கிக்கொண்டே விரக்தியாய்ச் சிரிக்கிறாள்.

"நித்திரை கொண்டால் எழுப்பேலாத நான் நித்திரை கொண்டு மூண்டு நாளாச்சுது... தெரியுமே உனக்கு...?" அவளது இதழ்க் கடையில் தோன்றி மறையும் அந்தச் சோகச் சிரிப்பை உற்று நோக்குகிறாள் பாரதி.

பக்கத்தில் வந்து அமர்ந்து மஞ்சுவின் கையைப் பிடித்தபடியே, "நீ இண்டைக்கு வருவாய் எண்டு நான் கொஞ்சமும் எதிர்பார்க்கேல்லை. பாண் கூடப் பத்துப் பதினொரு மணிக்குப் பசிச்சால் சாப்பிடலாம் எண்டுதான் எடுத்து வைச்சனான். கஷ்டப்பட்டுப் போனனி. ஆறுதலா நிண்டு எட்டுச் செலவையும் முடிச்சுக்கொண்டு வந்திருக்கலாம். நாளும் போக மனமும் ஆறி இருக்கும். இங்கை "நோட்ஸ்" எல்லாம் நான் தருவன்தானே!" என்று கேட்கிறாள்.

"நான் அங்கை இருந்து என்ன செய்யிறது? அம்மா இரண்டு கிழமையா 'மெனிஞ்சைட்டிஸ்' வந்து "ஹொஸ்பிற்றல்ல" கிடக்கேக்க கிடைக்காத அப்பாவின்ரை அன்பும் ஆறுதலும் அரவணைப்பும்... ஒரே ஒரு பிள்ளை, செல்லப் பிள்ளை எண்டு எனக்கு இதுவரை கிடைக்காத பரிவும், பாசமும் இனிமேல் கிடைக்கப் போகுதே? விடிய ஆறு மணிக்குப் 'ஃபக்ரறிக்குப்' போய், இரவு பத்து மணிக்கு மேலை அவர் திரும்பி வரும் வரையும் நான் விசரி போலை முகட்டைப் பாத்துக்கொண்டு இருக்கிறதே?" அடக்கி வைக்கப்பட்டிருந்த சோகங்கள் யாவும் உறங்கியது காணும் என்பது போல் மறுபடி விழித்துக்கொள்ள, மீண்டும் அவற்றை நித்திரையாக்க முயற்சி செய்கிறாள் மஞ்சு.

"சரி, சரி... நீ இப்ப படுத்து நித்திரை கொள். பிறகு எல்லாம் கதைக்கலாம்" என்று கூறி மஞ்சுவைப் படுக்கச் செய்துவிட்டுத் தன் மேசையில் போய் அமர்ந்துகொள்கிறாள் பாரதி. உடுத்திருந்த சேலையை மாத்திரம் கழற்றிக் 'காங்கரில்' போட்டுவிட்டு, "ஸ்கேட்டுடன்" படுத்துச் "சீற்றால்" தலை முதல் கால்வரை மூடிக் கொள்கிறாள் மஞ்சு.

இரண்டு கட்டில், இரண்டு மேசை, இரண்டு "கபேட்" இவ்வளவும் மட்டும் கொண்டதே அந்த 'யூனிவேர்சிற்றி ஹொஸ்டல்' அறை. அவளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணியில் தொங்க விடப்பட்டுள்ள 'காங்கரில்' ஓரிரு உடுப்புகள் போடலாம்.

ஐந்தாம் வகுப்போ, நாலாம் வகுப்போ படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு நாள்... ஒரு சோதனையில் கணித பாடத்தில் நூறு புள்ளி பெற்றுவிட்ட எக்களிப்பில்... அந்த மகிழ்ச்சிகரமான உணர்வைப் பகிர்ந்து கொள்வதற்காக, அப்பா வருகின்ற நேரமாகிய இரவு பத்து மணிவரை விழித்திருந்து அதைச் சொன்னபோது, உடுப்பு மாற்றிக் கொண்டிருந்த அப்பா... "உன்ரை "பேப்பர்" பாக்கேக்கை, ரீச்சர் நித்திரை... நித்திரையாகிட்டா போலை இருக்கு. கண்ணை மூடிக் கொண்டு நூறு போட்டிட்டா..." என்று சொன்னதும் ஏதோ ஒரு வகையில் அப்பாவிடம் பாராட்டுதலை எதிர்பார்த்த அந்தப் பிஞ்சு உள்ளம், வெடித்துச் சிதறி நித்திரையாகிப் போனதும், அதன் பிறகு படிப்பு விசயம் எதையுமே அப்பாவிடம் பகிர்ந்து கொள்ளாமல் விட்டதும், க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகள் வந்தபோது கூட அப்பா அதைப்பற்றி நினைவே இல்லாமல் இருந்ததும்...

ஏதேதோ சிந்தனைகள் தெளிவில்லாமல் மனதைப் போட்டுக் குழப்ப எப்படியோ நித்திரையாகிப் போகிறாள் மஞ்சு.

மாலை மயக்கம் மெதுவாக மறைந்த, இருள் மெல்லக் கவிந்து கொண்டிருக்கும் நேரம், தனது அறையில் இருந்த யன்னலினூடாக வெளியே பார்த்துக் கொண்டிருக்கிறாள் மஞ்சு.

மென்மையான மஞ்சள் ஒளி, விடுதிக்கு வெளியே இருக்கும் வெட்டப்பட்ட புற்றரையில் விழுந்து அழகு காட்டும் விந்தையைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும்போது "றோட்டில் யூனியர்" மாணவர்கள் அணிநடையில், "இடம்... வலம்... டம்... வலம்... டம்... டம்..." என்று கத்திக்கொண்டு வருவது கேட்கிறது. போன வாரந்தான் வந்திருந்த "யூனியர்ஸ்ஸுக்கு" இரண்டு வாரம் இப்படியான 'ராகிங்' நடக்கும். படித்துக் கொண்டிருந்த பாரதியும் எழுந்து வந்து யன்னலூடாகப் பார்க்கிறாள். ஒவ்வொரு மாணவனுக்கும் காதுகளில் பூ வைத்து... கால்சட்டையில் ஒரு காலை முழங்கால் வரை மடித்துவிட்டு... முதுகில் ஏதோ எழுதிய கடதாசிகளை (பட்டங்களா?)க் குத்திவிட்டுக் கொண்டு... அவர்களை அணிநடை நடக்க வைத்திருக்கும் கோலம், பார்க்கச் சிரிப்பாக இருந்தாலும் அந்த மாணவர்கள் மனதில் எவ்வளவு அவதியும் அவமானமும் சங்கடமும் நிறைந்திருக்கும் என்பதை யோசிக்கிறாள் மஞ்சு. 'கேள்ஸ்' 'ஹோலுக்கு' முன்னால் வந்தவுடன், அவர்களை 'ஐஸ் றைற்' போடச் செய்து மரியாதையாக நடக்க வைத்திருப்பதைப் பார்த்து பல மாணவிகள் கைதட்டி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கும்போது, சென்ற வருடம் தங்களுக்கு நடைபெற்ற 'ராகிங்' திரைப்படம் போல மனதில் ஓடிவந்து நிழலாடுகிறது இவளுக்கு! தொடர்ந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னொரு மனிதரின் துன்பத்திலே நாங்கள் மகிழ்வு காணுகின்ற மனப்பாங்கை வெட்டிச் சரிக்க வேண்டிய இடம் இந்தப் பல்கலைக் கழகம். இங்கே இந்த 'ராகிங்' போன்ற நிகழ்ச்சிகளில் பகிடியாகத் தோன்றி முளைக்கின்ற மனப்பாங்குதான்... பிற்காலத்தில் ஒரு நிறுவனத்தை நடத்திச் செல்கின்ற பொறுப்பு எங்கள் தலையில் விழுகிறபோது, தொழிலாள வர்க்கத்தின் உழைப்பிலே... அவர்கள் சிந்துகிற வியர்வைத் துளிகளிலே எங்கள் சொகுசான வாழ்வைக் கட்டி எழுப்புகிற வெறுக்கத்தக்க இயல்பை எம்முள் புகுத்திவிடுகிறது. நிச்சயமாக இந்த 'ராகிங்' பல்கலைக் கழகத்தில் இருந்து ஒழிந்து போவதற்கு மாணவர் மன்றம் உதவவேண்டும். முன்னின்று செயற்பட வேண்டும்..." என்று மாணவர் மன்றக் கூட்டத்தில் வேலு கொட்டி முழங்கியதும் நினைவுக்கு வருகிறது.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3

அன்று! பல்கலைக் கழகத்திற்குக் காலடி வைத்த முதல் நாள்... மனதில் பயப் பிராந்தியுடன் 'சரசவி உயன' "ஸ்ரேசனில்" இறங்கும்போதே சீனியர் மாணவர்கள் பலர் வந்து மஞ்சுவையும் அவளுடன் கூட வந்த மாணவர்களையும் சூழ்ந்து கொண்டார்கள். "மிஸ்... தள்ளுங்கோ... நில்லுங்கோ... உங்கடை பேர் சொல்லாமல் ஓடுறீங்கள்..." என்று கூறியபடியே தாடியும், மீசையும் வளர்த்த முகத்துடனும், பருமனான கருநிற உடலுடனும் காணப்பட்ட ஒரு மாணவன், கூட்டத்தை விலக்கி முன்னே செல்ல முயன்ற பாரதியையும் மஞ்சுவையும் வளைத்துக் கொண்டான். சுற்று முற்றும் விழித்து விழித்துப் பார்த்தாள் மஞ்சு. அறிந்த மனிதர்களோ, தெரிந்த முகங்களோ யாரும் தென்படவில்லை. அவனோ தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டான்.

"என்ன மிஸ் முழிக்கிறீங்க... பல்கலைக் கழகப் பழக்க வழக்கம் ஒண்டும் தெரியாது போலை இருக்கு... இங்கே "சீனியர்ஸைக்" கண்டால்... "யூனியர்ஸ்" 'குட் மோர்னிங்' சொல்லி, "சலூற்" அடிக்க வேணும். அதுதான் 'மனேர்ஸ்' தெரியுமா?" என்று கேட்டு அவன் உறுக்கும்போது, "தெரியாது" என்று மஞ்சுவும் பாரதியும் முணு முணுக்கிறார்கள்.

"தெரியாட்டா... இனிமேல் பழக வேணும்..., 'நவ் டூ இற்...' என்று அவன் வெருட்ட, இவர்களும் 'குட் மோர்னிங்' சொல்லி, கைகளை உயர்த்தி மடித்து நெற்றியில் பிடித்துத் தலையைத் தாழ்த்தி 'சலூற்' அடிக்கிறார்கள். ஏதோ பெரிய ஹாஸ்யம் நடந்தது போல் அவனது கூட்டாளிகள் எல்லாம் பலமாகக் கைதட்டிச் சிரிக்க அந்த உற்சாகத்தில் அவன் தொடர்ந்து கேட்கிறான், "மிஸ் எந்த "ஸ்கூல்லை" இருந்து வாறீங்க...?"

"வானபுரம் கிண்டு கொலீஜ்..."

'கொலீஜ்... நோ... இற் இஸ் ர காற்றிள் ஷெட்'... அது ஒரு கால் நடைப் பட்டி... 'நவ் றிப்பீற்...' வானபுரம் 'கிண்டு காற்றிள் ஷெட்...'

"வானபுரம் கிண்டு காற்றிள் ஷெட்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோ, யூ ஆர் காற்றிள்." நீங்கள் ஆடு மாடுகள்... சரியா? ஆடு மாதிரிக் கத்துங்கோ..." என்று அவன் கத்த மறுபடியும் பெரிய சிரிப்பொலி.

இந்த நேரத்தில்தான் தூரத்தில் வேலு வருவதைப் பாரதி அவதானிக்கிறாள். வேலு பாரதியின் கல்லூரியில் அவள் வகுப்பில் படித்தவர். முதல் முறையில் பல்கலைக் கழகத்திற்கு வந்துவிட்டாலும், தன்னை அறிந்தவர் ஒருவரைக் கண்டுவிட்ட ஆறுதலில், பாரதி மஞ்சுவிடம் திரும்பி "வேலு வருகிறார்" என்று முணு முணுத்ததும் கூட அந்தக் குண்டுக் கறுப்பனுக்குக் கேட்டுவிட்டது. "யாரது வேலு? உம்முடைய மாமனா? மச்சானா? ஒரு "சீனியர் ஸ்ருடன்ரைப்" பற்றிச் சொல்லேக்கை... 'மை ஒணறபிள் சீனியர் மிஸ்டர் வேல்ராஜா' எண்டு சொல்லவேணும். தெரியுமா?" என்று கண்ணை உருட்டி மிரட்டுகிறான்.

வேகமாக வந்த வேலு அந்தக் குண்டுக் கறுப்பனின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்ல அவனும் தலையாட்டுகிறான்.

"சூட்கேசைத்" தூக்கிக்கொண்டு முன்னாலை நடவுங்கோ..." என்று வேலுவும் விறைப்பாகவே சொல்லுகிறார். 'ஸ்ரேசனில்' இருந்து கண் மறையும் தூரம் வரை வந்த பிறகுதான் வேலு சாதாரணமாகக் கதைத்தார்.

"யூ... நோ..." இவங்கள் பிடிச்சால் உங்களை லேசிலை விட மாட்டாங்கள். அதுதான் நான் ஒரு பொய் சொல்லி உங்களைக் கூட்டிக்கொண்டு வந்தனான்..."

"அவனிட்ட என்ன இரகசியமாய்ச் சொன்னீங்கள்?" பாரதி கேட்டாள்.

"இவை இரண்டு பேரும் என்ரை ஊரிலை இருந்து வரினம். ஊரிலையே கொஞ்சம் திமிர் பிடிச்ச "கேள்ஸ்" இவையளைச் சரியான முறையிலை கவனிக்க வேணும். எனக்குத் தனிப்பட்ட கறளும் இருக்கு. நான் கனநாளாத் திட்டம் போட்டிருந்தனான். இவை "யுனிவேர்சிட்டிக்கு" வரட்டும் எண்டு... இவையளை என்னட்டை விடு மச்சான்..." எண்டு சொன்னன். நான் சொன்னது உண்மை எண்டு நம்பிட்டான்..."

"அப்ப எங்கடை திமிரை அடக்க என்ன செய்யப் போறியள்?" என்று குறும்பு தொனிக்கக் கேட்டாள் பாரதி.

"ஒண்டு இரண்டு இல்லை. நிறையத் திட்டங்கள் இருக்கு. இப்ப சொல்ல ஏலாது. காலம் வரும்போது சொல்லலாம்..." என்று சொல்லிக்கொண்டே அவர்களைக் "ஹோலுக்குப்" பக்கத்தில் இருந்த 'சயன்ஸ் ஃபக்கல்ரிக் கன்ரீனுக்கு' அழைத்துச் சென்று 'மில்க்' வாங்கித் தருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்போதைக்கு இதுதான் "ராகிங்" இந்த "மில்க்" இரண்டு பேரும் குடிச்சு முடிக்க வேணும்..." என்று கூறி இரண்டு போத்தல் 'ஸ்ரெறிலைஸ்ட் மில்க்' ஓடர் கொடுக்கிறார். தான் குடிக்கவில்லை என்பதைக் கவனிக்கிறாள் மஞ்சு.

அன்று மாத்திரமல்ல... தொடர்ந்தும் இரண்டு வார "ராகிங்கில்" இருந்து பல மாணவ, மாணவியரைக் காப்பாற்றுவதற்குப் பல வேறு உத்திகளை அவர் கையாண்டவர் என்பதைப் பின்னர் மஞ்சுவும் பாரதியும் அறிந்து கொண்டனர்.

துளசிச் செடிகள் மணமானவைதான். ஆனால் ஆயிரம் ஆயிரமாய்ப் பற்றை பற்றையாய்ப் படர்ந்து கிடக்கும் துளசிச் செடிகளுக்கு நடுவில் ஒரே ஒரு ரோஜா மலர்ந்திருந்தால்... அந்த ரோஜாவால் கவரப்படுவது வியப்பில்லைத் தானே!

உள்ளங்களிடையே... படித்த பல உள்ளங்களிடையே... வித்தியாசமாய்த் தோன்றிய வேலுவைப் பற்றிப் பாரதிக்குத் தெரிந்தவற்றைக் கேட்டு அறிந்து கொண்டாள் மஞ்சு. அவர் ஒரு தொழிலாளியின் மகனாம். அவருடைய அப்பா யாழ்ப்பாணத்தில் ஒரு தனியார் கண்ணாடித் தொழிற்சாலையில் நாட்கூலியாக வேலை செய்கிறாராம். வீட்டிலே மிகவும் கஷ்டமாம்...

பாரதி இவற்றைச் சொன்னபோது, உள்ளத்தின் உள்ளே ஒரு முள் சறுக்கென்று குத்தியது போலிருந்தது மஞ்சுவுக்கு. யாழ்ப்பாணத்தில்... தனியார் கண்ணாடித் தொழிற்சாலை... ஒருவேளை...?

கடந்த காலம் என்ற நினைவலைகளுக்கிடையில் மூழ்கிச் சுகம் கண்டு கொண்டிருந்த மஞ்சுவை எழுப்பியது கீழே இருந்து ஒலித்த குரல்!

"றூம் நம்பர் 150, விசிட்டேர்ஸ்...!" வேலுதான் வந்திருக்க வேண்டும் என்ற நினைவில் பாரதியையும் அழைத்துக்கொண்டு விரைகிறாள். "பெஸ்ற் புளோரில்" இருந்து கீழே இறங்கும் படிகளில் தன்னை அறியாமலே துள்ளித்துள்ளி இறங்குகிறாள் போல இருக்கிறது.

"வேலு வந்திருக்கிறார் எண்ட உடனை கவலை எல்லாம் மறந்து போச்சு!" என்று பின்னால் வந்த பாரதி கேலி செய்யும் போதுதான், "ஓ... நோ... விசிட்டேர்ஸை ஏன் "டிலே" பண்ணுவான்..." தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறாளா?

"விசிட்டர்ஸ் ஹோலில்" வட்டம் வட்டமாக அடுக்கப்பட்டிருந்த கதிரைகளில் ஒரு வட்டத்தில் மூவரும் அமர்ந்து கொள்கிறார்கள்.

"லாஸ்ற் இயர்" நான் எழுதின "ரியூரோறியல்" கேட்டீங்க. கொணந்திருக்கிறன் படிச்சிட்டு ஆறுதலாத் தாங்கோ..." என்று எங்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கோணத்தில் கதையைத் தொடங்குகிறார் வேலு. மஞ்சு அவர் தந்த அந்த "ஃபைலைப்" பெற்றுக்கொண்டு பிரித்துப் பார்க்கிறபோது, "மஞ்சு மத்தியானம் சாப்பிட்டவவா?" என்று பாரதியைப் பார்த்து அவர் கேட்பது, 'ஒரு தாயிடம் மட்டும் இருக்கக்கூடிய கனிவும், அன்பும், ஆதரவும் இவரிடம் எப்படி அடைக்கலம் புகுந்தன?' என்ற வியப்பை மஞ்சுவிடம் ஏற்படுத்துகிறது.

அன்னை இறந்து ஆறாத்துயரில் அமிழ்ந்து போய்க்கிடந்த நாட்களிலாவது ஒரு நாள்... ஒரு நேரம்... "மஞ்சு சாப்பிட்டியா?" என்று அப்பா கேட்டிருந்தால்... அவர் கேட்க மாட்டார். அவருக்குக் கவலைகள், உறவுகள் பெரிதில்லை. காசுதான் பெரிது.

"சாப்பிடேல்லை... வேண்டாம் எண்டு சொல்லிட்டால்... நான் விட்டிடுவனா?" என்று பாரதி கேட்கிறாள்.

"நோ... ஐ மீன்..." வீட்டிலை ஏதோ நிகழக் கூடாத இழப்பு நிகழ்ந்திட்டுது. எல்லாமே போயிட்டது போல ஒரு விரக்தியும் வேதனையும் இந்த நேரத்திலை வரத்தான் பாக்கும்... "பட்..." அன்புக்குரிய ஒரு உயிர் போயிட்டாலும்... இன்னும் பல உயிர்கள் இருக்கிறம்... அவையளிட்டை அன்பு காட்டிறதுக்காக... அவையளின்ரை அன்பைப் பெற்று மகிழ்றதுக்காக... இன்னும் கனகாலம் உற்சாகமாய் வாழ வேண்டித்தான் இருக்கு... எண்ட நினைவு மனதை விட்டு அகலாமல் நீங்கள்தான் பாத்துக்கொள்ள வேணும்." தனக்குச் சொல்ல விரும்பிய ஆறுதல் வார்த்தைகளை நேரே சொல்லச் சங்கடப்பட்டுப் பாரதியிடம், 'இன்டிரெக்ட்' ஆகச் சொல்கிறார் என்பதைப் புரிந்துகொண்டு மௌனமாக உட்கார்ந்திருக்கிறாள் மஞ்சு. பாரதி ஏதோ பதில் சொல்ல வாய் எடுப்பதற்குள், உள்ளே இருந்து வந்த விஜி பாரதியைக் கூப்பிடுகிறாள்.

பாரதி, "எக்ஸ்கியூஸ் மீ போர் டிஸ்ரேபிங்..." நான் காலையிலை கேட்ட 'நோட்ஸ்' தர ஏலுமா?"

"இருங்கோ... எடுத்துக் குடுத்திட்டு வாறன்.." என்று சொல்லி விஜியைக் கூட்டிக்கொண்டு முதல் மாடியில் உள்ள தங்கள் அறைக்குப் போகிறாள் பாரதி.

"எனக்கும் கூட இண்டைக்கு மனநிலை அவ்வளவு சரியில்லை. உங்களைக் கட்டாயம் பார்த்து ஒரு ஆறுதலுக்காவது ஏதாவது கதைக்க வேணும் எண்டபடியா வந்தனான். குறிஞ்சிக் குமரன் கோயில் பக்கம் போயிட்டு வந்தா அமைதியா இருக்குமெண்டு யோசிக்கிறன். "சோ... மே... ஐ.. கோ...?" என்று வேலு எழுந்துகொள்ள முயற்சி செய்யும்போது அவசரமாகக் குறுக்கிடுகிறாள் மஞ்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெயிற்..." என்ன அவசரம்? மனநிலை உங்களுக்குச் சரியில்லாமல் போகும்படி என்ன நடந்தது...? எங்களுக்குச் சொல்லலாமா...?"

திடீரென்று வேலுவின் முகத்தில் ஆழ்ந்த சிந்தனைக் கோடுகள் தோன்றுகின்றன. கதிரையின் பின்புறத்தில் நன்றாகச் சாய்ந்து தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறார். கண்கள் இமை வெட்டாமல் ஒரு மூலையில் உள்ள புள்ளியில் நிலை குத்தி நிற்கின்றன.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 4

வேலுவின் அப்பா அந்தக் கண்ணாடித் தொழிற்சாலையில்தான் வேலை செய்கிறாரோ என்று அவள் சந்தேகம் கொண்டது நியாயமானதுதான். ஆனாலும் வேலு வந்து செய்யுமளவிற்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது அவருக்கு? அப்பாதான் இத் தொழிற்சாலை முதலாளி என்பது இவருக்குத் தெரியுமா, தெரியாதா? வர்க்க பேதம், தொழிலாளர் பிரச்சினை என்று வந்துவிட்டால், அதிரடிகளாய் வெடித்துத் தள்ளுகிறவர் இங்கே பேசாமல் இருப்பாரா? சிறு சிறு சலனங்களாய் மனதில் பல சிந்தனைகள் மஞ்சுவிடம் கோலமிடும்போது...

"முதலாளியம்மா வந்திருக்கிறா..." யாரோ ஒரு தொழிலாளி மஞ்சுவை இனம் கண்டு மற்றவர்களுக்கும் சொல்லி விடுகிறார்.

"முதலாளி மேலை இருக்கிறார், அம்மா..." அவள் வரக்கூடாத இடத்துக்குத் தவறுதலாய் வந்துவிட்டதாக நினைத்துவிட்ட இன்னொருவன் "வாருங்கோ கூட்டிக்கொண்டு போறன்..." என்று உதவிக்கு வருகிறான்.

"இல்லை, நான் அப்பாட்டை வரேல்லை... உங்களைப் பாக்கத்தான் வந்தனான்..." என்று அவள் சிரிக்கும் போதுதான் எதேச்சையாய்த் திரும்பிய வேலுவின் கண்கள் அவளைச் சந்திக் கின்றன.

அவன் நெருங்கி வந்து கதைப்பான் என்ற எதிர்பார்ப்பில் அவள் சில விநாடிகள் தரித்த போதும்... அவன் இவளைக் கண்டு கொள்ளாதன்போல் தன் வேலையில் மீண்டும் மூழ்கிப் போனான். அவன் வராத காரணத்தைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில், ஒரு சோக இரக்கம் அவளை ஆட்கொள்ளத் தானும் வலிய முனைந்து கதைக்க முடியாத ஒரு நிர்ப்பந்தத்தில் அப்பாவின் அறைக்கு வழி காட்டிச் சென்ற தொழிலாளியின் பின்னால் நடந்தாள் அவள்.

வேகமாகச் சுழலும் மின் விசிறியின் கீழ் சுழல் நாற்காலியில் அமர்ந்து, "சிகரெட்" வாயில் புகைய... ஆழமான சிந்தனையுடன் ஒன்றிப் போயிருந்தார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீட்டிலை இருக்க... "டல்லா" இருந்தது. அதுதான் ".·.பக்ற்றியை" ஒருக்கா "விசிற்" பண்ணுவம் எண்டு வந்தனான்..." அவருக்கு முன்னால் சுயாதீனமாக அமர்ந்து கொண்டாள்.

"தற்ஸ் குட்" என்றார். "டிரிங்க் எடுக்கிறியா?" என்று கேட்டுவிட்டு, அவளின் பதிலுக்குக் காத்திராமல், 'ஒரு கிறேப் யூஸ்' கொண்டு வரும்படி 'ஓடர்' கொடுத்தார். மௌன விநாடிகள் சில கழிந்த பின், தொழில் பிரச்சினைகள் பற்றி ஒன்றுமே, ஒருநாளும் மஞ்சுவுடன் கதைத்தறியாத அவர், அன்று ஏதோ நினைத்தவராய், "வேல்ராசா" எண்டு ஒரு 'போய்' உங்கடை 'பாஜ்ஜிலை' இருக்கிறானோ?" என்று கேட்டார். 'என்ன நடந்துவிட்டது?' என்று அதிர்ந்தாள். அதைத் தன் முகத்தில் காட்டிக்கொள்ளாமல், "இருக்கிறார்... ஏன்...?" என்றாள். அவன்ரை ".·.பாதர்" கனகாலமா இங்கை வேலை செய்யிறார். அவனும் இடைக்கிடை வந்து வேலை செய்யிறவன்... இந்த 'ஹொலி டேய்ஸ்ஸு'க்'குள்ளை அவன்தான் வந்து தகப்பன்ரை வேலையைச் செய்தவன்... செய்து போட்டுச் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போறதுக்கு... வீணா என்ரை விஷயங்களிலை தலையிடுறான். 'லேபரஸ்' எல்லாரையும் கூட்டி வைச்சுக்கொண்டு கூட்டம் நடத்துறான். மாதச் சம்பளம் தரவேணுமாம். "அப்போயின்ற்மென்ற் லெட்டர்" தரவேணுமாம்... வேலை செய்யிற இடங்களுக்கு '.·.பான்' போட்டுத் தரவேணுமாம்... வருஷத்திலை குறிப்பிட்ட நாள்கள் சம்பளத்தோடை மருத்துவ லீவு தரவேணுமாம்... அப்பிடி இப்பிடி எண்டு அவனோடை பெரிய தலையிடியா இருக்கு... அவனையும் தகப்பனையும் சேத்துக் கெதியா ".·.பக்றி யாலை" கலைக்க வேணும். அதுதான் யோசிச்சுக் கொண்டிருந்தனான்...

இது இவள் எதிர்பார்த்ததுதான். தனது மனதிற்கு அநீதி என்று தெரிகிற விடயங்களோடு உக்கிரமாய்ப் போரிடுதல் வேலுவின் பிறவிக் குணம் என்பது அவளுக்கு நன்கு தெரியும். இங்கே உள்ள அநீதிகள் களையப்பட வேண்டும், தொழிலாளர்களின் நிலையான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று அவளும் கூடத்தான் விரும்பினாள். அவன் போராடத் தொடங்கிவிட்டான் என்பதை அறிந்தபோது, வெறுமை வெளியில் சருகாகப் பறப்பது போல மனம் இலேசாகி இனித்தது. ஆனாலும் அப்பாவின் பிரச்சினைகளை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு இடத்தை விட்டு நழுவினாள் மஞ்சு.

* * *

அன்று ஐப்பசி வெள்ளிக்கிழமை... நண்பகல் சாப்பாட்டுக்குப் பின் 'லெட்டர்ஸ்' பார்க்க 'லெட்டர்ஸ் போர்ட்'டுக்குப் போயிருந்த பாரதி ஓடி வந்தாள்.

"மஞ்சு, உனக்கு 'நியூஸ்' தெரியுமா? இண்டைக்கு 'ஈவினிங்' குறிஞ்சிக் குமரன் கோயில்லை வேலு 'அமைதியான வாழ்வு' என்ற 'ஹெடிங்கிலை' 'ஸ்பீச்' குடுக்கப் போறாராம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ வாசிப்பதில் அக்கறையாய் இருந்த மஞ்சு, தலை நிமிர்ந்து பார்க்கிறாள், "எப்பிடித் தெரியும்?"

"நான் என்ன பொய்யே சொல்லுறன்...? என்னை 'பிலீவ்' பண்ணாட்டிக் கீழை இந்து மாமன்ற 'நோட்டீஸ் போர்ட்' இருக்கு, போய்ப் பாத்திட்டு வா..."

"ஓல் ரைட். ஐ பிலீவ் யூ!,' அதுக்கு இப்ப என்ன செய்ய வேணும்...?"

"வீ சுட் கோ அண்ட் லிசின் ரு கிம்" அமைதியான வாழ்வைப் பற்றிய அவருடைய அபிப்பிராயம் கேட்டா... "இன்ரறெஸ்ரிங்கா" இருக்கும் எண்டு சொல்லுறன்..."

பின்னேரம் நாலு மணிக்கு விரிவுரைகள் முடிந்ததும் முடியாததுமாக, ஓடோடி வந்து, 'ரீ' எடுத்துவிட்டு, 'லேற் பாஸ்' எடுத்துக்கொண்டு குளித்துப் புறப்பட ஆயத்தமாகிறார்கள். நீர் முற்றாக வடியாத தலையைத் தளையத் தளையத் பின்னிக்கொண்டு அதில் ஒரு ஒற்றை ரோஜா சொருகிக் கொண்டு, அந்த மேகவர்ண நைலக்ஸ் சாறி உடுத்திக்கொண்டு நெற்றியில் விபூதி பூசிக் கறுப்புச் சாந்தும் இட்டுக்கொண்டு வெறுங்காலுடன் புறப்படும்போது, உடலைப் போல் உள்ளத்திலும் ஏதோ ஒருவிதத் தூய்மை மெதுவாகப் பரவுவது போன்ற உணர்வு!

எந்தக் கடினமான வேலையையும் சுலபமாகச் செய்யக்கூடிய வழி வகைகள் உள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் கடவுளிடம் போகும் போதாவது சிறிது கஷ்டப்படுவோமே என்பது போல், வெறுங்காலில் கற்கள் உறுத்தப் பாதையின் இரு பக்கமும் உயர்ந்து வளர்ந்து நிற்கும் புற்கள் தோலில் உரசிச் சுணைக்க, வளைந்து வளைந்து மேலே ஏறும் பாதையில் ஏறி ஏறிச் செல்வதில் உள்ள இனிமை தனித்துவமானது. அந்த இனிமையுடன் மேலே சென்று "ஓகஸ்ட்" கலவரத்தில் சிதைக்கப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்றுள்ள கோயிலின் சிற்ப வேலைகளை மீண்டும் ரசித்து, ஒரு சிறு கடதாசித் துண்டைக் கூடக் காண முடியாத அந்தப் புனிதமான சுத்தத்தினால் மீண்டும் கவரப்பட்டு, அழகு மயில்களின் மகிழ்வான நடனத்தைப் பார்த்து ரசித்துச் சரியாக ஆறு மணிக்கு ஆரம்பமாகும் பூஜையையும் கண்டு நிமிர்ந்தபோது, நேரம் ஆறரை மணி.

சுற்றிவர வட்டமாக அமர்ந்திருக்கும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் நடுவில், இந்து மன்றத் தலைவரின் அறிமுகத்தைத் தொடர்ந்து, கம்பீரமாக எழுந்து நிற்கிறார் வேலு. நிலம் கூட்டுவது போலக் கட்டப்பட்டிருந்த அந்தச் சிவப்புக் கரை வேட்டியும், முழுக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடி மறைத்திருக்கும் 'கிறீம்' கலர் 'சேர்ட்டும்' உயரமான அவரின் தோற்றத்திற்கு என்றுமில்லாத ஓர் எழிலை வழங்குவதுபோல் தோன்றுகிறது மஞ்சுவுக்கு.

"நான் முற்றிலும் எதிர்பாராத விதமாய்ப் பெருங் கூட்டமாய்த் திரண்டு நிற்கும் சகோதர சகோதரிகளுக்கு, என் உளம் நிறைந்த நன்றி கலந்த வணக்கங்களைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்..."

என்று வேலு தொடங்கும்போது, அந்தக் குறு குறு கண்கள் தன்னையே பார்ப்பதுபோல் தோன்றுகிறது அவளுக்கு. வெறும் மனப்பிரமையோ?

"முதலாளின்ரை 'டோட்டரோடை' சரிசமமா நிண்டு கதைக் கிறதுக்கு நான் பொருளாதார ரீதியாத் தகுதி இல்லாதவனா இருக்கலாம். அதுதான் உங்களைக் கண்ட பிறகும் அந்த இடத்திலை நான் வந்து கதைக்கேல்லை..." என்று அன்று ".'.பக்ரறியில்" கதைக்காமல் நின்றதற்குக் காரணம் சொன்னாரே! தான் ஒரு தொழிலாளியின் மகன். தானே ஒரு தொழிலாளி என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கிறதா அவரிடம்? சமூக அநீதிகளைக் கடுமையாக எதிர்ப்பது, பேராசைப்படுவது, பகல் கனவு காண்பது, பழி வாங்குவது, வேடிக்கை செய்வது, போரில் இறங்குவது, பிறர் காரியத்தில் தலையிடுவது, கலைத்துறையில் ஈடுபடுவது, மேலதிகாரிகளை இகழ்வது... இவை தாழ்வு மனப்பாங்கின் விளைவான நடத்தைக் கோலங்களாக இருக்கலாம் என்று தான் எங்கோ வாசித்த நினைவு ஒரு சுழலாட்டம் போட, மெதுவாகச் சிரித்துக் கொள்கிறாள் அவள்.

வேலுவிற்குப் பக்கத்தில் ஒட்டியது போல் உட்கார்ந்திருக்கும் பாஸ்கர் தன்னையே விடாது பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற பிரக்ஞை வரும்போது, வேலுவின் மேலிருந்த அவள் நயனங்கள் அவளை அறியாமல் நழுவித் தரையில் பதிந்து கொள்ளக் காதுகளில் அவரது கம்பீரமான குரல் விழுந்துகொண்டே இருக்கிறது.

"இந்து மன்றச் செயலாளர் நண்பர் சிவானந்தன் அண்ணா எனக்குத் தந்த தலைப்பு மிகவும் சிக்கலானதாக இருந்தபோதிலும், என் அறிவுக்கெட்டிய வரை இதனை ஆராயப் புகுகின்றேன். அமைதியான வாழ்வுதான் ஒரு மனிதன் வாழக்கூடிய வெற்றிகரமான வாழ்வு என்று சொல்லலாம். நாம் விரும்பியோ அல்லது முற்றிலும் விரும்பாமலோ, எமக்குப் பிடித்தோ பிடிக்காமலோ ஒரு வாழ்வு எங்களுக்குத் தரப்படுகிறது. குறிப்பிட்ட ஆளுமை, பரம்பரை அலகுகள் கொண்ட தாய், தந்தை, சகோதர, சகோதரிகள் எமக்குப் பொருத்தமான அல்லது பொருத்தமற்ற வாழ்விடம் போன்ற சில விடயங்கள் எமது கட்டுப்பாட்டில் இல்லாமல் எமக்குத் தரப்படுகிறது. அப்படியான சிக்கல்களுக்கு மத்தியில், அமைதியான வாழ்வு என்பது சிலவேளை பெரும் போராட்டமாகவே அமைந்து விடுகிறது. இதைப்பற்றி மேலே சிந்திக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல், குழந்தைகள் விளையாடுகிற, "மாஸ்டர் மைண்ட்" என்ற ஒரு சுவாரஸ்யமான விளையாட்டை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். இருவர் பங்குபெறும் அந்த விளையாட்டில், ஒவ்வொரு நிறத்திலும் பத்துக் கட்டைகளாக ஏழு நிறத்தில் எழுபது கட்டைகள் இருக்கும். அதில் ஏதாவது நாலு கட்டைகளை ஒருவர் எடுத்து மறைவான ஓர் இடத்தில் ஒரு 'கோட்' தயாரிப்பார். பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் என்ற ஒழுங்கில் அந்தக் 'கோட்' இருப்பதாக வைத்துக் கொள்வோம்.

மற்றவர் அந்தக் 'கோட்டை'ப் பார்க்காமலே அதை 'டியூபிளிக்கேற்' பண்ண - பிரதி செய்ய - முயற்சி செய்வார். முயற்சி செய்யும் ஒவ்வொரு முறையிலும் அவர் விடும் தவறுகள், ஒரு குறிப்பிட்ட வகையில், 'கைட் கோட்' மூலம் உணர்த்தப்படும். உதாரணமாக இவர் பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் என்று வைத்தால், முயற்சியில் ஒரு தவறு இருப்பது அவருக்கு உணர்த்தப்படும். அதை விவேகத்துடன் உணர்ந்துகொண்டு அவர் தனது தவறைத் திருத்த முயற்சி செய்ய வேண்டும். தவறு திருத்தப்படாத ஒவ்வொரு முறையும் மறுபக்கத்திற்கு ஒவ்வொரு புள்ளி கிடைக்கும் என்பதை நடுவர் உறுதி செய்வார்.

யாரோ இரு குழந்தைகள் இந்த விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பதை ஒரு முறை நான் பார்க்க நேர்ந்தபோது... எனக்கு மனித வாழ்க்கையின் விளையாட்டை அப்படியே அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டுவது போல் தோன்றியது...

முகத்தில் தவழும் ஒரு மந்தகாசப் புன்னகையுடன் மிக அநாயாசமாக வேலு தொடருகிறார்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5

"இறைவனும் இப்படித்தான். 'அமைதியான வாழ்வுக்கு வழி' என்றுதான் போட்டு வைத்திருக்கும் 'கோட்'டை யாருக்கும் காட்டுவதில்லை. ஆனால் அவன் எங்களுடன் 'மாஸ்டர் மைன்ட்' விளையாடுகிறான். எண்ண முடியாத வலிகள், கணக்கில்லாத பாதைகள், விதம் விதமான புறப்பாடுகள், வகை வகையான முடிவுகள் - அந்த அமைதியான வாழ்வுக்கான 'கோட்'டைக் கண்டு பிடிக்க ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமாக முயலுகின்றனர். வறுமையின் கொடுமையால் வேதனையுறும் ஒரு மனிதரை எங்கோ பார்த்துவிட்ட ஒருவர் செல்வத்தைச் சேர்த்துவிட்டால் வழி சரியாகிவிடும் என்று நினைக்கின்றார். யாரை எப்படி வதைத்தாவது பணம் சேர்த்துவிட வேண்டும் என்று துடிக்கின்றார்.

எத்தனையோ கோடீஸ்வரர்கள் மன அமைதியின்றித் தற்கொலை செய்துகொள்வதை அவர் அவதானிக்கவில்லை. அல்லது புறக்கண் கண்டும் கூட அது பற்றி ஆழ்ந்து சிந்திக்கவில்லை. இறைவனின் 'கைட்கோட்டின்' ஒரு பகுதியை இவர் காணவில்லை. வறியவர்களின் துயரங்கள் வீதிகளிலும், மர நிழல்களிலும், குடிசை வீடுகளிலும் அரங்கேறுவதால் அவற்றைச் சுலபமாகப் பார்க்கிறார். ஆனால் பணக்காரரின் துன்பங்கள் எட்டாவது மாடி கொண்ட பெரிய வீட்டின் உயரமான பகுதிகளில் குளிரூட்டப்பட்ட அறைகளில் நிகழ்வதால் இவருக்குத் தெரியவில்லை.

படிப்பறிவு அற்றவர், எழுத்துக்களின் கோவையைச் சொல்லாக்கிச் சொற்களை வசனமாக்கி வாசிக்கத் தெரியாதவர் ஒருவர் பட்ட துன்பத்தைக் கண்ட இன்னொருவர், அறிவு பெற்றுவிட்டால் - பட்டங்கள் பல பெற்றுவிட்டால் அமைதியான வாழ்வு வந்துவிடும் என்று நினைத்துப் பிழையாக வழி நடத்தப் படலாம். வேறொருவர் புகழ் அடையப் புதிய பாதையில் சென்று பார்க்கிறார். மற்றொருவர் வீரம் வேண்டும் என்று சண்டைப் பயிற்சிகளில் ஈடுபடுகிறார். எந்தப் பாதையில் சென்றாலும் அங்கே அவர்கள் காணும் அல்லது சந்திக்கும் அநுபவங்களே அவர்களுக்குத் தடைக்கற்களாக இருக்கின்றன. அவைதான் இறைவனின் பெரு நுணுக்கம் கொண்ட 'கைட் கோட்ஸ்'. அதைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட்டதால், வெற்றி பெற்ற சிலர் மகாத்மா காந்தி, லிங்கன், விவேகானந்தர் போன்றவர்கள் எமக்காகச் சில குறிப்புகளை எழுதி வைத்து விட்டுச் சென்றிருப்பதால் எமது வேலை பல மடங்கு சுலபமாக்கப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த 'கைட் கோட்'டை அறியும் சந்தர்ப்பம் இல்லாமல் அறிவு இல்லாமல் தமது மனம் போனபடி பல பாதைகளில் அலைந்து கொண்டு இருப்பவர்களைப் பார்த்தால்.... அவர்கள் மீது கோபப்படுவதில் பயனில்லை என்று உணர்ந்து அநுதாபப்படுவோம். களவெடுப்பவர், பொய் சொல்பவர், காம வெறியர், கொலைகாரர், லஞ்சம் வாங்குபவர், தொழிலாளியின் உழைப்பைச் சுரண்டி வாழ்பவர் - இவர்கள் எல்லாம் உண்மையில் குற்றவாளிகள் இல்லை. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் இல்லை. பாதை தெரியாமல் அலையும் பரிதாபத்திற்குரியவர்கள், பாவம். அவர்கள் மீது அநுதாபம் கொண்டு உதவி செய்ய முற்படுவோம். அவர்கள் தவறான பாதையில் சென்று, அமைதியின்றி அல்லற்படப் போகிறார்கள் என்பதை எம்மால் முடிந்தவரை அவர்களுக்கு உணர்த்தி எல்லோருமாக அந்தச் சரியான பாதையில் செல்ல முனைவோம். தனியே போவது கடினமாக இருக்கும் என்பதால் - எமக்குப் பிடித்தவர்களை - எம்மிடம் அன்புள்ளவர்களை - எமது அன்புக்குப் பாத்திரமானவர்களை அழைத்துச் செல்வோம்.

வேலு தொடர்ந்து கொண்டே போகிறார். ஓர் அமைதியான வாழ்வைப் பற்றி எவ்வளவு தெளிவாக, எத்தனை மகோன்னதமாகச் சிந்தித்திருக்கிறார். வறுமை தாண்டவமாடினாலும், பாசம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர்! தன் தந்தையிடம் எவ்வளவு பாசம் இருந்தால், "அப்பு வருத்தக்காரர் ஆகிவிட்டார். இனி வெக்கேக்கை நிண்டு வேலை செய்ய அவராலை முடியாது. ஆனால்... கொஞ்ச நாள் வேலைக்குப் போகாட்டால்... அந்த வேலை பறி போயிடும். அதனாலைதான் நான் யாழ்ப்பாணத்திலை நிக்கிற நாளிலை - நான் அப்புவுக்காக வேலை செய்யிறன் - அந்த நாட்களிலையாவது அவர் கொஞ்சம் 'றெஸ்ற்' எடுக்கட்டும் பாவம்..." என்றும் "இன்னும் என்ன? இரண்டு வருஷந்தானே! என்ரை படிப்பு முடிஞ்சிட்டால், அப்பு இப்பிடிக் கஷ்டப்படத் தேவையில்லை. ஏதோ... என்ரை கையாலை உழைச்சு... அப்புவின்ரை பாரத்தைக் குறைச்சுப் போடுவன்..." என்றும் சொல்லிக் கொள்கிறபோது, அவர் கண்களில் அந்த ஒளிப்பிரவாகம் தெரியும்.

நினைவுகளின் தேக்கத்தில் அமிழ்ந்து போயிருந்த மஞ்சு, கரகோஷங்களின் ஒலி வானைப் பிளக்கும் போதுதான் 'பேச்சு முடிந்துவிட்டது' என்பதை உணர்ந்தவளாய்த் தானும் தட்டிவிட்டு எழுந்து கொள்கிறாள். திரும்பி வரும்போது வேலு தங்களுடன் வருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். பாஸ்கர் போன்றவர்களின் தவறான நினைவுகளுக்குத் தூபம் போடக்கூடாது! என்று நினைத்துச் சுவாமி சுற்றுவதற்கு முதலே பாரதியையும் இழுத்துக் கொண்டு வெளியேறுகிறாள்.

"போய்ஸ்" ஒருத்தருமில்லாமல் தனியப் போறது பயமடி. நிண்டு திருவிழா முடிய மற்றவையோட போவம்..." என்று தயங்கிய பாரதியை "பயம் ஒண்டுமில்லை. வாடி! அப்பிடிப் பயமெண்டால் கோயிலுக்கு வந்திருக்கப் பிடாது..." என்று சமாதானம் சொல்லி இழுத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாலும், ஒரு நூறு யார் தூரம் நடந்து வருவதற்குள், பயம் லேசாக மனதைப் பற்றிக் கொள்கிறது. புல்லுக்குள் யாரும் மறைந்து நின்றாலும் தெரியாது! அதற்குள்... அவர்களுக்குப் பின்னால் யாரோ மிக வேகமாக வரும் காலடியோசை வேறு கேட்டபோது... இதயமே நின்றுவிட்டதென்று ஓர் உணர்வு கவ்விக் கொள்ளத் திரும்பிப் பார்க்கவும் துணிவில்லாமல்... சேலைத் தலைப்பால் தலையையும் கழுத்தையும் மூடிக்கொண்டு வேகமாகப் பாதை ஓரமாக நடக்கிறார்கள். பின்னால் வருபவர் முந்திச் சென்றால் நிம்மதி!

"ஏதோ பெரிய வீரச் செயல் செய்யிற வீராங்கனையள் எண்டுதான் நினைப்பு... என்ன...?" யாருடைய குரல்? ஓ... வேலுதான்!

பின்னால் வந்தது வேலுதான் என்பது புரிந்த பிறகு அடங்கிப் போயிருக்க வேண்டிய இதயப் படபடப்பு மேலும் அதிகரித்தது மஞ்சுவுக்கு. பயத்தினால் வந்த படபடப்பின் மேலாக... வரக்கூடாது என்றுதான் நினைத்த வேலு வந்துவிட்டார் என்ற நினைப்பினால் வந்த நிறைவு அல்ல சங்கடம் அல்லது பய உணர்வுகள் கலந்து ஒரு நிலை... அந்தப் படபடப்பை ஏற்படுத்தி விட்டது. சில விநாடிகள் மௌனங்களால் கரைக்கப்பட, என்ன பதில் சொல்வது என்ற திகைப்பிலும்... என்ன சொன்னால் எப்படிப் புரிந்து கொள்வாரோ என்ற மயக்கத்திலும்... ஏதாவது கதைக்க வேண்டுமே இப்போது என்ற நிர்ப்பந்தத்திலும்... சில நிமிடங்கள் கழிக்கப்பட... வேலுவே தொடர்ந்து பேசுகிறார்.

"சப்போஸ்..." நடக்கக் கூடாமல் ஏதும் நடந்திட்டால்... "லெட் அஸ் இமாஜின்..." அதுக்குப் பிறகு இந்த வரட்டுக் கௌரவங்களை எல்லாம் என்ன செய்வீங்கள்? "போய்ஸ்" எல்லாரும் கோயில்லை நிக்கேக்கை இப்பிடித் தனிய ஓடி வாறத்துக்கு... என்ன 'எமேஜன்சி' வந்திட்டுது?"

வழக்கம் போலவே அந்தக் கடுமையை உரிமையுடன் கூடியது போலத் தொனிக்கும் அந்தக் கடுமையை, அன்புடன் கலந்து கேட்கும் கண்டிப்பை அவளால் ஜீரணிக்க முடியாமல் திணறும்போது, பாரதிதான் முணு முணுக்கிறாள்.

"நிண்டு, திருவிழா முடியப் போகலாம் எண்டு நான் சொல்ல, மஞ்சுதான் அவசரப்பட்டவ..."

"ஐ நோ!" யாருடைய துணையுமில்லாமல் தனிய ஓடுறதிலை... வரக்கூடிய "டி.ஃபிக்கல்ரீஸ்" பற்றி ஒண்டும் யோசிக்காமல் அவசரமா ஓடுறதிலை... மஞ்சுவை ஒருத்தரும் 'வின்' பண்ண ஏலாது... "ஐ நோ கேர் வெல்..." என்று அவர் சொல்லும் போது அந்த வசனத்தின் ஆழம் அவளுக்குப் புரியத்தான் செய்கிறது. 'அடிக்கிற கைதான் அணைக்கும்' என்ற சினிமாப் பாடல் சரியா...? அடுத்த நிமிடமே... தன் கோபத்தை மறந்து கலகலப்பாகக் கதைக்கத் தொடங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோ... சோ..." இண்டைக்குக் கோயிலுக்கு வந்த காரணம் என்ன? என்ன விசேஷம்...? படிக்க ஒண்டும் இல்லையா...?" இதற்கும் பாரதியே பதில் சொல்லுகிறாள்.

"இரண்டு காரணம். ஒண்டு உங்கடை பேச்சு. அதைக் கேக்கவேணும் எண்ட ஆசை. மற்றது நாளைக்கு மஞ்சுவின்ரை பேர்த்டே. அதுக்கு 'அட்வான்ஸ்' ஆக் கும்பிடும் வெள்ளிக்கிழமை..."

"நாளைக்குப் பிறந்த நாள் என்பதை இவள் ஏன் வேலுவிடம் சொல்ல வேண்டும்? யாரிடம் எதைச் சொல்வது, எதைச் சொல்லாமல் விடுவது எண்டு தெரியாத வெகுளியா இருக்கிறாளே... அல்லது வேணுமெண்டே சொல்லிறாளா?" எதையும் முடிவு செய்ய முடியாத நிலையில் எப்படி இருந்தாலும் அறைக்குப் போய் நல்ல திட்டுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறாள் மஞ்சு.

"ஐ... சீ..." நாளைக்கு மஞ்சுவின்ரை "பேர்த்டேயா?" பணக்காரர் வீட்டு "பேர்த் டே..." அப்ப எங்களுக்கெல்லாம் பெரிய 'ற்றீற்' கிடைக்கும் என்ன?" இப்போது கேள்வி நேரடியாக அவளிடமே கேட்கப்படுவதால் மஞ்சுதான் பதில் சொல்லியாக வேண்டும்.

'பணக்காரர் வீடு' என்பதில் அவர் கொடுத்த அழுத்தத்தைக் கவனித்துக் கொண்டே, 'பேர்த் டே' எண்றது கொண்டாடப்பட வேண்டிய நாள் எண்டு நான் நினைக்கேல்லை. "தே ஆர் த அன்பிளசன்ற் றிமைண்டேர்ஸ் ஒ.ஃப் த அட்வான்சிங் ஏஜ்..." நடந்து கொண்டிருக்கிற வயசை நினைப்பூட்டிற துயரமான நாட்கள்..." என்கிறாள் இவள்.

"அதுவும் அப்படியா? ".ஃபிலோசபி" வேறை மாதிரி ஆயிட்டுது. சரி போகட்டும்..." என்று சொல்லி நெற்றியில் கவிழ்ந்து விழும் தலைமயிரைத் தட்டி விட்டுக் கொண்டு மெதுவாகச் சிரிக்கும் வேலுவுடன் சேர்ந்து பாரதியும் சிரிக்கிறாள். தொடர்ந்து கதை வேறு திசையில் திரும்புகிறது.

"நீங்கள் கேட்க வந்த பேச்சு எப்பிடி இருந்தது? உங்கடை உண்மையான "ஒப்பினியன்" சொல்ல வேணும்... பிழை இருந்தால் 'கிறிற்றிசைஸ்' பண்ண வேணும்..." நிதானமாகக் கேட்கிறார்.

"நீங்கள் ஒரு அமைதியான வாழ்க்கையைப் பற்றி இவ்வளவு தூரம் யோசிச்சிருப்பீங்கள் எண்டு நான் நினைக்கேல்லை..." பாரதி தன் கருத்தைக் கூறும்போது, மஞ்சுவும் தன் உண்மையான அபிப்பிராயத்தைச் சொல்கிறாள்.

"ஒரு மணித்தியாலம்... ஒண்டரை மணித்தியாலம் மேடையிலை ஏறிப் பேசினம்... பேச்சு முடிஞ்சாப் பிறகு மனசிலை நிக்கும்படியா ஒரு கருத்தும் இருக்காது... வெறும் கவர்ச்சி மாத்திரம் தெரியும்... போயிடும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையைப் பற்றிப் பேசிறதெண்டா மாட்டைப் பற்றியும், புல்லைப் பற்றியும், தோட்டத்தைப் பற்றியும் எல்லாம் அலம்பிப் போட்டு, தங்களைப் பற்றியும் புழுகிப்போட்டு... கடைசியா மாட்டைக் கொணந்து பனையிலை கட்டுவினம்... இண்டைக்கு 'ஸ்பீச்' ஆகப் பதினைஞ்சு நிமிஷம்! ஒரு சொல்லுக்கூடத் தேவையில்லாமல் பாவிக்கப் படேல்லை... "பேப்பர், பென்சில் கொணந்திருந்தால் 'நோட்ஸ்' எடுத்திருக்கலாம்... பரவாயில்லை... இப்ப போய் 'றூமிலை' இருந்து எழுதலாம்... ஒரு சொல்லும் விடாமல் எழுதலாம்..." அவள் சொல்லி முடித்ததாகத் தெரியவில்லை. இன்னும் நிறையவே சொல்ல இருப்பதாகப் படுகிறது. வேலுவின் இதழ்களில் தோன்றி மறையும் ஒரு நிறைவான சிரிப்பை அந்த இருட்டிலும் மஞ்சு உணரத் தவறவில்லை.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

வேலுவின் சிரிப்பைப் பார்த்துக் கொண்டு நடந்ததில் காலில் பலமாக ஒரு கல்லுத் தட்டி விரலைக் கிழிக்க, எம்பிக் குதித்து, "ஐயோ" என்று சொல்லி விடுகிறாள் மஞ்சு. "என்ன?" என்று கேட்கிறாள் பாரதி.

"ஒண்டுமில்லை. ஒரு சின்னக் கல்லுக் குத்திப் போட்டுது. வெறுங்கால் தானே!" என்று அவள் சொல்லி முடிக்க முதலே, குனிந்து அவளின் காலைப் பார்த்து, "நல்லா நோகுதோ?" என்று கேட்கிறார் வேலு. அவரது அநுதாபத்தை இப்படிச் சிறு சிறு விஷயங்களில் கூடப் பெற்றுக்கொள்வதில் நிறைவுடன் கூடிய ஒரு சங்கடம் ஏற்படவே, "இல்லை, இல்லை" என்று வேகமாக மறுத்தபடியே விரைவாக நடக்கிறாள் அவள்.

"எங்களுக்கு உங்களிலை ஏற்படுற அனுதாபம்... உங்களுக்கு உங்களிட்டை வேலை செய்யிற தொழிலாளரிட்டை ஏற்படுதில்லையே... அது தான் எனக்குக் கவலை..."

திடீரென்று பெரியதோர் முள்ளெடுத்து மஞ்சுவின் இதயத்தில் ஆழமாகக் குத்திவிடுகிறார் வேலு. இங்கே நின்றார் திடீரென்று கண்ணாடித் தொழிற்சாலைக்கு ஏன் போனார் என்று புரியாத திகைப்பில் சொல்ல வந்த வார்த்தைகளும் நெஞ்சில் அடைத்து உருவிழந்து அமிழ்ந்து போக - ஒன்றும் பேசாது நடக்கிறாள் மஞ்சு.

"உங்கடை அப்பா இருபது வயதுக்கு மேலை எந்தத் தொழிலாளியையும் தன்ரை தொழிற்சாலையிலை வைச்சிருக் கிறேல்லை... தெரியுமே உங்களுக்கு?" அவர் இந்த விடயத்தில் புகுந்துவிட்டால் ஒரு பெரிய மழை பெய்துதான் ஓயும் என்பதை அறிந்து மஞ்சு தொடர்ந்து மௌனமாகவே நடக்கிறாள்.

"ஏன் அப்பிடி?" பாரதியின் கேள்விக்கு அவரது மன உறுத்தல்கள் பதிலாக அமைகின்றன.

"படிக்காதவங்களாய் இருந்தாலும், இருபது வயசுக்கு மேலை சுயமாச் சிந்திக்கிற ஆற்றல் வந்திடும் - மனம் முதிர்ச்சி அடைஞ்சிடும் - சொன்னதை அப்பிடியே அச்சொட்டாச் செய்ய மாட்டாங்கள் - தங்கடை நசுக்கப்பட்ட உரிமையளுக்காகப் போராட வேணும் எண்ட எண்ணம் வந்திடும். இந்த எண்ணங்கள் தொழிலாளிட்டை வந்திட்டா... அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளிக்குச் சாவு மணி! மஞ்சுவின்ரை அப்பாக்கு அது நல்லாத் தெரியும். "கி இஸ் கிளெவர்" அதுதான் ஏதாவது சாட்டுச் சொல்லி... இருபது வயது தாண்டினவையை எல்லாம் அனுப்பி விடுறார். வயது போனப்பிறகும் முதலாளிக்கு விசுவாசமாய் இருப்பினம் எண்ட நம்பிக்கையிலை அப்பு மாதிரி இரண்டொருத்தரை வைச்சிருக்கிறார். அதிலையும் நான் போய் அப்புவுக்காக வேலை செய்யிறது பிடிக்கேல்லை. இப்ப... அப்புவை வெளியேற்றிறதுக்குச் சாட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார். அப்புவுக்கு வேலை இல்லாட்டி நான் படிச்சு முடிக்கேலாது..."

இன்னும் கூட மஞ்சுவின் மௌனம் கலையவில்லை. அதை இன்னும் நீடிக்க விடக் கூடாது என்பது போல்,

"மஞ்சு "சைலண்டா" வாறதைப் பாத்தா, அவவும் அப்பாவுக்குச் 'சப்போட்' போலை இருக்கு..." என்று வேலு வலிந்து அவளைச் சண்டைக்கு இழுப்பதைப் புரிந்துகொண்டு ஒரு நிதானத்தோடு,

"அப்பா செய்யிறதை எதிர்க்க வேண்டிய சந்தர்ப்பம் இன்னும் எனக்கு வரேல்லை. அப்பிடி ஒரு நிர்ப்பந்தம் வாறபோது, என்ரை எண்ணங்கள் தெரியும்..." என்று தெளிவாகக் கூறியவாறு விடுதியை அண்மித்துவிட்ட உணர்வுடன் அதனை நோக்கி நடக்கிறாள்.

அடுத்த நாள்! மஞ்சுவின் பிறந்த நாள்! "மெனி ஹப்பி றிற்றேன்ஸ் ஓ·ப் த டே!" "விஷ் யூ எ ஹப்பி பேர்த் டே!" என்று அடுக்கடுக்காக வாழ்த்தும் பல குரல்களுக்கிடையில் எழுந்து, குளித்து, காலைப் போசனம் முடித்துக் கொண்டு கடிதங்களைப் பார்ப்பதற்காக 'போர்ட்'டுக்குப் போகும்போது, "இன்று வாழ்த்துத் தெரிவித்த இவர்களில் உண்மையில் நான் சந்தோஷமாக, அமைதியாக வாழ வேண்டும் என்று மனமார விரும்புகிறவர்கள் எத்தனை பேர்? எல்லாம் வாயளவில்தான்! அப்படி வாளயவில் மட்டும் வாழ்வதே ஒரு நாகரீகமாகி விட்டது" என்று எண்ணிக் கொள்கிறாள். கடிதங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வரும்போது, தற்செயலாகப் பூ வேலை செய்யப்பட்ட - இடைவெளி கொண்ட - சுவரினூடாக அவள் பார்வை வெளிச் செல்லும்போது கையில் ஒரு மலர்க் கொத்துடன் வேலு நிற்பதை அவள் கண்கள் சூழ்ந்து கொள்கின்றன.

'உண்மைதானா? கனவா?' மனம் நம்ப மறுக்கிறது.

"இண்டைக்குப் போல எப்பவும் நீங்கள் சந்தோஷமாய் இருக்க வேணும். என்னுடைய வாழ்த்துக்கள்..." என்று அவர் தமிழில் சொல்லும்போது, காதில் நிறைந்து போயிருந்த, "மெனி ஹப்பி றிற்றேர்ண்ஸ்" என்ற வார்த்தைகளில் காணப்பட்ட போலிகள் எல்லாம் மறைந்து, உள்ளத்தின் அடியிலிருந்து வரும் உண்மையான ஒலி காதுகளில் பாய்வது போலத்தான் இருக்கிறது. 'மெனி ஹப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிற்றேர்ண்ஸ்ஸுக்கு' எல்லாம் 'தாங்ஸ்', 'தாங்யூ' என்றே உதட்டளவில் சொல்லிச் சொல்லி ஓய்ந்து போயிருந்தவள், வேலு வாழ்த்திய போது ஒரு பதிலும் சொல்லாமல் வாய் மூடி மௌனியாக நிற்பதன் அர்த்தங்கள் அவளுக்கே புரியவில்லை.

அந்த 'ரோஜா' மலர்களை அவரிடமிருந்து வாங்கும்போது, சர்வாங்கமும் நடுங்குவது போல் இருக்கிறது அவளுக்கு. இந்த மலரின் பொருள் என்ன? அவள் மீதான தனது பிரத்தியேகமான அன்பை இதன் மூலம் வெளிக் காட்டிக்கொள்ள முனைகிறாரா? அல்லது...? அந்த உள்நோக்கத்தை - சரியான செய்தியைப் புரிந்துகொள்ளும் ஒரு முயற்சியாய் - அவர் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள் அவள். புன்சிரிப்பு மாறாத - களங்கமற்றிருந்த அந்த முகத்தில் எதையும் புரிந்து கொள்ள முடியாமல் அவள் திணறி.

"நான் இதை உங்களிட்டை வாங்கிறதும், நீங்கள் தாறதும் சரி எண்டு நினைக்கிறீங்களா?" என்று கேட்கிறாள்.

"சரியும், பிழையும் பாக்கிற ஆக்களின்ரை கண்களைப் பொறுத்திருக்கு... பின்னாலை மன மகிழ்வைத் தரக் கூடிய ஒரு செயல் சரியானது எண்டும் பின்னாலை வேதனையைத் தரக்கூடியது தவறானது எண்டும் நான் சொல்லுற வரைவிலக்கணத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டா - இது சரியான செயல்தான்..."

அவர் சொல்வது அவளுக்குப் புரிவது போல இருந்தாலும், அதைத் தெளிவு படுத்தும் நோக்குடன், "பின்னாலை மனமகிழ்வைத் தாறதெண்டால், வாழ்க்கை முழுதும் என்னோடை துணையா வர நீங்கள் தயாரா?" என்று கேட்டு விடுகிறாள் அவள். அந்த ஒரு கணத்தில், தான் ஒரு பெண் என்பதையே மறந்து, யுக யுகாந்திரமாகத் தான் அவருடைய மனைவியாக இருந்து வந்திருப்பது போன்ற ஓர் உணர்வுடன் மன மொட்டின் முகிழ்ப்பில் அந்தக் கேள்வி வந்து விட்டது.

வான வெளியின் நிர்மானுஸ்யம் போல் அவள் முகத்தில் ஒரு வெறுமை. இப்படி ஒரு கேள்வியை அவர் எதிர்பார்க்கவில்லைப் போல இருக்கிறது. தொண்டைக் குழியில் கல்லுப் போட்டது போலச் சில கணங்கள் திக்கு முக்காடியவரின் நெஞ்சினுள்ளே வார்த்தைகள் திரண்டு உருவம் பெறச் சில நிமிடங்கள் எடுத்தன.

"உங்களோடை துணையா வாறதுக்கு எனக்கு ஒரு மறுப்பும் இல்லை. ஆனா... ஆற்றின் இரண்டு கரையள் எப்பவும் விலகாமல் நடந்து கொண்டிருந்தாலும் அவை ஒண்டாச் சேர முடியுமா? எண்டு யோசிக்கிறன்"

"ஓகோ! வறுமையும் செல்வமும் ஒண்டாச் சங்கமிக்கிறது யதார்த்தமா நடக்கக் கூடிய காரியம் இல்லை எண்டு சொல்கிறாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பிடியெண்டா என் எதிர்பார்ப்புகள் அவரது மறுத்தல்களில் கலைக்கப்பட்டுச் சிதறிப் போகப் போகுதா? நான் வரைந்திருக்கும் அழகான ஓவியம் என்ரை கண்ணீரிலையே கரைஞ்சு வெளிறிப் போகப் போகுதா? நான் எழுதி வைத்திருக்கும் இனிய கவிதை ஓலக் கவிதையாக மாறி ஒலிக்கப் போகுதா?"

ஏதோ தொடர்பற்ற சிந்தனைகளில் மூழ்கிப் போனவளைத் திடீரென உசுப்பிவிட்டது போல் மறுபடியும் வேலுவின் குரல்!

"நான் இவ்வளவு நாளும் இதைப்பற்றி ஒண்டுமே யோசிக்கேல்லை. "ஐ லைக் யூ! ஐ வான்ற் ரு ஹெல்ப் யூ!" அதெல்லாம் வேற விஷயம். ஆனா... உங்களைத்தான் 'மறி' பண்ணப்போறனோ எண்டு நான் இன்னும் யோசிக்கேல்லை. பாஸ்கர் அந்தக் கவிதையை எழுதி வைச்சபோது கூடப் பொய்யா ஒரு வதந்தி பரவிவிடக் கூடாதெண்டுதான் நான் அவனை அடிச்சனான். நீங்களெல்லாம் நாங்கள் ஏணி வைச்சு எட்டினாலும் எட்ட முடியாத உயரத்திலை இருக்கிறியள் எண்டுதான் இதுவரைக்கும் நினைச்சனான். ஆனா... உங்களுக்கு அந்த எண்ணம் இருக்கு எண்டு தெரிஞ்சபோது... கொஞ்ச நேரம் திகைச்சுப் போயிட்டன்..."

"அப்ப... இந்த ரோஜாப்பூ எல்லாம் ஏன் கொணந்தனீங்கள்?" கேட்கவில்லை அவள். அவளுக்காய் வேலு இதுவரை செய்ததெல்லாம் ஒவ்வொன்றாய்... ஒன்றன் பின் ஒன்றாய்... மனத்திரையில் அணிவகுத்து வர... அந்தச் சிந்தனை அலையை அறிந்தவர் போல் அவர் பேசுகிறார்.

"ஒரு நண்பிக்குக் கொண்டு வாற மாதிரித்தான் இந்தப் பூவைக் கூடக் கொண்டு வந்தனான்... ஒரு நாளும் வேறு எந்தப் பெண்ணுக்கும் நான் பூக் கொடுக்கவில்லை என்பதும் உண்மைதான்... இப்ப... உங்கடை எண்ணம் தெரிஞ்சாப் பிறகு ஒரு முடிவுக்கு நான் வந்திருக்கிறன்..."

வேலு சற்று நிறுத்தியபோது, அந்த முடிவை அறிந்து கொள்ளும் ஆவலில் அவள் விழிகளை அகலத் திறந்து அவரைப் பார்த்தாள்.

"நான் ஒரு புதுப் பாதையிலை போகப் போறன்... அந்தப் பாதையிலை போறத்துக்கு நீங்கள் சம்மதிச்சால்... காலம் முழுதும் நான் உங்களைக் கூட்டிக் கொண்டு போவன்..."

அவர் சொல்வது என்னவென்று இன்னமும் தெரியாமல் அவள் மேலும் உற்றுப் பார்த்தாள்.

"ஐ ரெல் யூ...!" உங்கடை அப்பாவின்ரை "ஃபக்ரறிக்கு" முன்னாலை... நானும் 'கோப்பரேற்றிவ் பேசிசிலை' ஒரு "ஃபக்ரறி" போடப் போறன். அதிலை ஆயிரக் கணக்கான பங்குதாரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினம். தொழிலாளர்கள் எல்லாருக்கும் மாதச் சம்பளம். ஞாயிற்றுக் கிழமை எல்லாருக்கும் லீவு. எந்த ஒரு தொழிலாளியும் எட்டு மணித்தியாலத்துக்கு மேலை வேலை செய்யத் தேவையில்லை. அப்பிடிச் செய்ய வேண்டி வந்தா... அவருக்கு 'ஓவர்டைம்' 'பே' பண்ணுவம். தொழிற்சாலையிலை சேர்ந்து கொள்ளிற ஒரு தொழிலாளிக்கு நியமனக் கடிதம் குடுப்பம். அவர் பெரிய குற்றம் எதுவும் செய்யாத வரை அறுபத்தைந்து வயது வரை 'வேர்க்' பண்ணலாம். வருஷத்திலை அவருக்கு இருபத்தொரு நாள் 'மெடிக்கல் லீவ்' இருக்கும். "பப்ளிக் ஹொலிடேய்ஸிலை" வேலை செய்யத் தேவையில்லை. "ஃபக்ரறி" தொழிலாளியின்ரை வசதியளைச் செய்து குடுக்கும் 'ஃபக்ரறி'யிலை வாற லாபத்தை எல்லாப் பங்குதாரருக்கும் தொழிலாளியளுக்கும் பங்கிட்டுக் குடுப்பம். அதிலை "ஜெனரல் மனேஜரா" நீங்கள் தான் இருக்க வேணும். உங்களுக்கும் மாதச் சம்பளந்தான்." அவரது சிந்தனைக் கோவைகள் இன்னும் அறுபடவில்லை என்பதை அநாயாசமாகச் சுழலும் அந்த விழிகள் தெரிவிக்கின்றன.

"தொழிலாளர் நிண்டு வேலை செய்யிற "ஹோலுக்க ஃபான்" போட்டுக் குடுப்பம். "ஏயர் கொண்டிசன் செய்வம்..." "ஃபக்ரறியிலை" ஏதும் "அக்சிடென்ற்" நடந்தா... அந்தத் தொழிலாளியின்ரை வைத்தியச் செலவைக் 'கவர்' பண்ணக் கூடிய மாதிரி ஒரு 'இன்சூரன்ஸ்' போடுவம்." வேலு கூறிக்கொண்டு வந்த அதே தொனியில், அதே ராகத்தில் மஞ்சு இதைச் சொன்னபோது, பொங்கி வந்த சிரிப்பை அடக்க முடியாமல் வேலு சிரிக்கத் தானும் சேர்ந்து மலர்ந்து சிரிக்கிறாள் மஞ்சு.

"எங்கடை "ஃபக்ரறி" இயங்கத் தொடங்கிட்டா - தன்ரை "ஃபக்ரறிக்கு" மூடுவிழா நடத்த வேண்டிய அல்லது அதைத் தன் மகளுக்கே எழுதித் தந்துவிட வேண்டிய நிர்ப்பந்தம் மஞ்சுவின்ரை அப்பாவுக்கு ஏற்படப்போகுது!"

வேலுவின் சிரிப்பு இன்னும் பெரிதாகி மலைகளில் தெறித்து எதிரொலிக்கிறது.

**(ஈழநாடு வாரமலரில் பிரசுரமானது - 1980
செம்மையாக்கலுடன்)**

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை



## 1

யாழ்ப்பாணம் நோக்கி வர இருக்கும் பஸ்ஸில் ரஞ்சனி ஏறி அமர்ந்து விட்டாள். அம்மா, சகோதர, சகோதரிகள் எல்லோரும் ஏறிக்கொண்டு விட்டார்கள்.

அப்பா... அண்ணா...?

திடும்மென இருவரின் நினைவும் அவள் மனக்கண் முன் எழுந்து மனதினை அலைக்கழிக்கிறது. அவளையுமறியாமல் விழிக்குள் நீரானது குளங்கட்டிக்கொள்ள, மெல்லத் துடைத்து விடுகிறாள் ரஞ்சனி.

'தேடுதல்' என்ற போர்வையில் இவர்களை மட்டுமா அவர்கள் இழந்தார்கள்?

உற்றவன், பெற்றவன், உயிர்கள், உடைமைகள், உயிர்க்குயிரான கற்பு அத்தனையையும் இழந்து வெறுமை ஒன்றே பெரும் சொத்தான நிலையில், வாழ்ந்த ஊரை விட்டுப் பிறந்த இடம் நாடி, அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

முன் சீற்றில் அமர்ந்திருந்த அம்மா பஸ்ஸின் யன்னலினூடாக அந்த அண்டை வெளியைப் பார்வையால் வெறிக்கிறாள். இதுதான் என்ற நிதானிப்பு அவள் பார்வையில் இல்லை என்பது ரஞ்சனிக்குப் புரிந்தது.

"அம்மா"

அவளுக்காக அந்த ஜீவனுக்காக எல்லா இழப்புக்களையும் தாங்கி உயிர் தரித்திருக்கிறாளே! மிச்சம் மீதியாய் இருக்கின்ற உயிர்களுக்காக, அவர்களையும் அநாதைகள் ஆக்கிவிடக் கூடாதே என்பதற்காக, எப்படி எல்லாம் வாதிட்டாள்!

இழக்கக் கூடாததை, உயிரினும் மேலான ஒன்றை இழந்த பின்னால் வாழத்தான் வேண்டுமா என ரஞ்சனி துடித்த துடிப்பு அந்த ஆண்டவன் ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும்.

"ஆண்டவன்! அப்படி ஒருவன் இருப்பது உண்மையெனில் இப்படி ஒரு நிலைக்குத் தள்ளியிருப்பானா?"

விரக்தி வேதனையின் விளிம்பில் நின்று வெம்பி, "இனி நான் *வாழவே கூடாது"* என்று *கத்திக் கதறித் தற்கொலை முயற்சியில்* ஈடுபட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நானும் உன்னோடை வாறன்" என்ற அம்மாவின் கசிந்துருகலில் மனம் தேறிய போதும், இப்போதும் அவளின் இதயத்தின் அடித்தளத்தில் முள்ளாய் ஏதோ ஒன்று தைத்துக் கொண்டே இருந்தது.

"அக்கா, பஸ் எப்பக்கா வெளிக்கிடும்?"

"கொஞ்ச நேரத்திலை வெளிக்கிடும்"

பத்து வயதுத் தங்கையான சுஜிக்குப் பதிலிறுக்கிறாள் ரஞ்சனி. இவளைப்போல இதே பத்து வயதுக்குட்பட்ட ஜீவனாய் நான் இருந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் அவளையுமறியாமல் அவளுக்குள் குடி புகுந்தது.

"நீயும் செத்துப் போறதாய் இருந்தா, உன்ரை முடிவைத்தான் நானும் எடுப்பனடி..."

"ஐயோ... அம்மா நான் இனி இருந்தென்னத்துக்கு?"

"கட்டின புருஷன், மலைக்கு மலையாய் இருந்த ஆம்பிளைப் பிள்ளை, கண்ணுக்குக் கண்ணாய் வளந்த நீ... உங்களை எல்லாம் துலைச்சுப் போட்டுப் பிறகு என்னை என்னத்துக்கு? நானும் சாகிறன்..."

முரண்டு பண்ணிய அம்மாவை அன்பாயும் வலுக்கட்டாயமாயும் அடக்குவதற்கிடையில் ரஞ்சினிக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

கண்ணீரிற் கரைந்துருகும் அம்மா, நண்டும் சிண்டுமாய்ப் பின்னால் இருக்கின்ற தம்பி, தங்கைகள்... ஒன்றுமே தெரியாத இவ்விருள் சூழ் உலகில் அவர்களை அநாதைகளாக்கத் தோன்றாதவளாய்... எல்லா வேதனைகளும் ரஞ்சனியின் மனத்தைப் பெரும் பாறையாய் அழுக்குகின்றன.

இதுவரை காலமும் வாழ்ந்து எதையும் சாதிக்காவிட்டாலும், இனிமேல் வாழப்போவதால் அம்மா, தம்பி, தங்கைகள்... இவர்களுக்கொரு அத்திபாரமாய் தான் அமையக்கூடும் என்ற நினைவு கடுகளவு நிம்மதியைத் தருகிறது.

சுஜி, ராஜன், லதா, மனோ என உடன் பிறப்புகள் எல்லோரது முகங்களும் அடுக்கடுக்காய் அவள் மனக்கண் முன் எழுந்து மறைந்ததில், அவளுக்குள் வித்திட்டிருந்த 'சாக வேண்டும்' என்ற பலம் சிறிதே பலவீனப்பட்டுப் போனது.

தன் சொந்தக் கண்ணீரையும், மனச் சோகங்களையும் துடைத்தெறிய லாயக்கில்லாத தன் கரங்கள் பிறரைத் தாங்கப் போகின்றனவே என்று நினைக்கையில் ரஞ்சனிக்கு ஒரு புறம் வேதனையாகவும் மறுபுறம் சிரிப்பாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு, உடைமை எல்லாவற்றையும் இழந்து இனியும் இங்கிருப்பதால் பிரயோசனம் இல்லை என்ற நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள அப்பாவின் சகோதரியின் வீட்டுக்குப் புறப்படப் போவதாய் அம்மா சொன்னபொழுது, 'சடக்'கென ஒரு கணம் திடுக்குற்றுப் போனாலும், இதைத் தவிர இப்போதைக்கு வேறு எந்த முடிவையும் எடுக்க இயலாது என்ற நிலையில் அதுபற்றி ரஞ்சனி எந்த அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை.

சிறுவயதில் இருந்து உள்ளத்தின் அடித்தளத்தில் கோடிக்கணக்காய் அவள் வளர்த்து வைத்திருந்த அத்தனை கற்பனைகளும் சிதைக்கப்பட்டு, உணர்வினை இழந்த வெறுங்கூடாய் சாவியில் ஆடும் பொம்மையாய், அம்மா காட்டிய வழியில் நடந்து வருகிறாள்.

ஒரு குலுக்கலோடு பஸ் புறப்பட்ட அசைவில் நிஜத்துக்கு வருகிறாள் ரஞ்சனி.

இந்த ஊருக்கு அப்பா மாற்றலாகி வந்தபோது ஒரு இளஞ்சிட்டாய் - எத்தனை சந்தோஷத்தோடு வந்தாள்.

திரும்பப் போகிறேன் என்று அவள் கிஞ்சித்தும் நினைத்திருப்பாளா?

பத்து வருடங்கள்!

பாலர் பருவந்தொட்டு, கன்னியாகி, தன் வயதுத் தோழிகளோடு விளையாடியது, படித்தது, எதிர்காலத்தைப் பற்றி என்னென்ன வெல்லாமோ நிறைய நிறையக் கற்பனைகள் பண்ணியது - அத்தனையும் மளமளவென்று அவள் மனக் கண்முன் ஒரு கணத்தில் வந்து போனதில், கண்ணில் நீர் குளங் கட்டிக் கொள்கிறது.

"ஏனக்கா அழுறீங்கள்?"

"................"

எதுவுமே சொல்லத் தோன்றாமல், கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். அம்மாவும் திரும்பிப் பார்க்கிறாள். அந்த வதனமும் இருண்டு கறுத்துப் போய்க் கிடக்கிறது.

அயல் வீடு, பக்கத்து வீடு, பள்ளித் தோழமை... என்று எத்தனை சிநேகிதிகள் ரஞ்சனிக்கு. குருவிக் கூடொன்றைக் குரங்கு குலைத்தது போலத் தன்னைப் போல் எல்லோரும் எதையெதை எல்லாம் இழந்து அவதிப்படுகிறார்களோ என்று வேதனைப்பட்டாள் ரஞ்சனி. தன் வேதனையினூடே பிறரைப் பற்றிய ஏக்கங்கள் அவள் மனதை அரித்தன.

"அக்கா, சுஜி நித்திரையாப் போனாள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லதாவின் குரலில் மீள்கிறாள் ரஞ்சனி. அவனைத் தூக்கித் தன்னோடு சாய்த்துக் கொள்கிறாள். எந்தச் சலனமும் இல்லாமல் புறச் சூழலின் தாக்கம் எதுவுமே இல்லாமல் உறங்குகிற சுஜியையே ஆழ்ந்து நோக்குகிறாள்.

"நான் நிம்மதியாத் தூங்கி எத்தனை நாள்?"

தொண்டைக் குழிக்குள் பந்தாய் வந்தடைந்த துயரத்தினை எச்சிலோடு சேர்த்து விழுங்கிக் கொள்கிறாள்... புறப்படும்போது அம்மா சொன்ன அந்த வாசகம்...

"இஞ்சை நடந்ததொண்டையும் அங்கை போய்ச் சொல்லப்பிடாது. எங்கடை இழப்பும் வேதனையும் எங்களோடை இருக்கட்டும். ஏனெண்டால் எல்லாற்றை மனமும் பக்குவப்பட்டதில்லை. முக்கால்வாசியும் சந்தர்ப்ப வாதிகள்..."

அம்மா எதை எதற்காக மறைக்க முற்படுகிறாள் என்பது ரஞ்சனிக்குப் புரிந்தது. மற்றவர்களைச் சந்தர்ப்பவாதி என்று குறை கூறுகின்ற அம்மா கூட ஒரு விதத்தில் தானும் அந்த வட்டத்தினுள் தள்ளப்படுகிறாள் என்பதை ஏன் உணரவில்லை?

தன் வாய் நாற்றம் தனக்குத் தெரியாமல், பிறர் வாய் நாறுவதைப் பற்றித் தூற்றுவதுதானே மனித இயல்பு.

காலத்தால் அள்ளுண்டு போன நாட்களெல்லாம் அடுக்கடுக்காய் ரஞ்சனியின் நெஞ்சுக்குள் வந்து போனதில் மனது மேலும் கனத்தது. மறக்கத் துடிக்கின்ற நினைவுகளே மீண்டும், மீண்டும், மீண்டும் அவளுக்குள் எழுந்து சித்திரவதை செய்கின்றன. நிகழ்வுகள் இப்போது நடப்பதுபோல் தோன்றுகிறது.

பழைய பானை ஒன்றுக்குள் போட்டு மண்ணுக்குள் மூடி வைத்ததில் பறி போகாமல் தப்பிய நகைகள், யாழ்ப்பாணத்தில் அப்பாவின் பேரில் உள்ள இரண்டு பரப்புக் காணி - இவை தவிர அவர்களுக்கென்று வேறு எதுவும் இல்லை.

'போய் மாமி வீட்டிலை இருந்துகொண்டு, இருக்கிற காணிக்கை ஒரு கொட்டில் போட்டுக்கொண்டு இருக்க வேணும். குடிசையெண்டாலும் தனக்குத் தனக்கென்று இருக்கிற வரையிலைதான் மதிப்பு' என நீளமாய் நினைத்துக் கொண்டே போகிறது ரஞ்சனியின் மனம்.

பிறந்த இடம் என்று பாதுகாப்பாய் ஏதோ இருக்கிற துணிவில் நாம் புறப்பட்டு விட்டோம். எந்த நாதியுமே இல்லாத எத்தனையோ ஜீவன்கள் இருக்கின்றனவே, அவர்களுக்கு என்ன கதி என்பதனையும் ரஞ்சனி நினைத்துப் பார்க்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து வந்த அவர்களின் பாதங்கள் யாழ் மண்ணை முத்தமிட்டன.

"நகையள் பத்திரமாய்க் கிடக்கோ எண்டு பார் ரஞ்சனி..."

"பத்திரப்படுத்த வேண்டிய என்னையே பறி குடுத்து விட்டனாம். உயிரே இல்லாத இந்தச் சடப்பொருளுக்கொரு பக்குவம்..."

எரிச்சலாய் எழுந்தது மனதில்

பலவந்தமாய் உறக்கம் கலைக்கப்பட்ட எரிச்சலில், சுஜி சோம்பல் முறிக்கிறாள்.

ஒரு கையில் ஒரு சில உடுப்புகள், நகைகள் அடங்கிய பெட்டியும் மறுகையில் சுஜியின் பற்றிய கரங்களுமாய் மாமி வீட்டிற்குப் போவதற்கான பஸ் பிடிப்பதற்காக அவர்கள் வருகிறார்கள்.

முன்னைய பொழுதானால்...

அப்பாவோடு வந்திறங்கிய மாத்திரத்தில் டாக்ஸி பிடித்து, மளமளவென ஏறிக்கொண்டு, எவ்வளவு குதூகலமாய் மாமி வீட்டின் முன்னால் போய் இறங்குவோம்... ஆனால் இப்போது...?

துன்பங்கள் மனித மனங்களைப் பக்குவப்படுத்த வல்லனவா?

"அக்கா, திரிகோணமலை அகதியளுக்கு நிதி சேகரிக்கிறம்..."

"நாங்களே அகதியள். எங்களிட்டை இருந்து அகதியளுக்கு நிதியா?"

நிதி சேகரிப்பவர்களை விரக்தியான புன்னகையோடு நிமிர்ந்து பார்க்கிறாள் ரஞ்சனி. கையில் உள்ளதில் எடுத்துக் கொடுத்துவிட்டு, அம்மாவின் பின்னால் தம்பி, தங்கைகளோடு பஸ்ஸில் ஏறிக் கொள்கிறாள்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2

நாற்சந்தியில் இருந்து கிழக்கே நீளமாய்ச் செல்லும் வீதியருகே நிமிர்ந்து நின்ற வைத்தியசாலையில் கீழ் மாடியின் அழகான அறை ஒன்றில் விரைவாக நுழைந்து தனது நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தாள் கல்யாணி. இவள் தான் அமருவதற்காக அந்த நாற்காலியைத் தொட்டிழுத்த போதும், அதன் மேல் உட்கார்ந்த போதும் நாற்காலியின் குளிர்ச்சி அவளுக்குள்ளே இறங்கியது.

சாளரங்களில் ஒன்றைத் திறந்துவிடுமாறு தாதியிடம் கூறினாள். பாட்டம் பாட்டமாய் உள்ளே வந்த கொண்டல் காற்று "சாரம் அற்றது வாழ்வு" என்று இரைந்துகொண்டு செல்வதுபோல அவளுக்குத் தோன்றியது ஒரு கணம்! வெளியே வானத்தைத் தொட விரும்புவதுபோல் உயரமாய் வளர்ந்து தூங்கும் இலைகளைச் சுமந்தபடி நின்ற 'அசோகா' மரங்கள் சாளரத்தினூடாக அசைந்தன! இந்த மரங்களுக்கு ஏன் இந்தப் பேராசை?

முதலில் உள்ளே நுழைந்த பெண் நோயாளியின் முகம் குளிர்ந்த இரும்பாய் இறுகிக் கறுத்துக் கிடந்தது. தனக்குக் கடுமையானதோர் நோய் ஏற்பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் மனதில் ஏற்படுகிறபோது எந்த நோயாளியின் முகமும் இப்படி மாறுவது இயல்புதான்!

தனது மார்பிலிருந்து மஞ்சள் நிறமான திரவம் வெளியேறுவதாய் அந்த நோயாளி இவளிடம் முறையிட்டபோது, இவளுக்குள் மார்புப் புற்றுநோய் பற்றிய சந்தேகம் எழுந்தது.

"நீங்கள் கர்ப்பமாய் இருக்கிறியளா?"

"இல்லை"

"பால் குடிக்கிற சின்னக் குழந்தை இருக்குதா?"

"...இல்லை"

அந்தப் பெண்ணைக் கட்டிலில் படுக்க வைத்து மேற்புறச் சட்டையை அகற்றி மார்பைப் பரிசோதித்தாள். தோற்றத்திலேயே முலைக்காம்பு உட்சென்றிருப்பதையும் அதற்கு மேலே ஒரு சிறிய வீக்கம் தென்படுவதையும் அவதானித்தாள். தனது கைகளினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக முலைக்காம்பை அழுத்தினாள். மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறத்தில் ஒரு திரவம் வெளியேறியது. அத்திரவம் குறிப்பாக ஒரு சிறிய துவாரத்திலிருந்து மட்டும் வெளியேறுவதை அவதானித்துக் கொண்டே, தன் கைவிரல் நுனிகளை அவள் மார்பில் வைத்து மேலே உள்ள தோலை வட்டம் வட்டமாக உருட்டித் தடவிப் பார்த்தாள்! தொடுகைக்குக் கடினமாக இருந்த ஒரு கடலையளவு கட்டி அவளது கைகளில் அகப்பட்டது. அது, தோலுக்குக் கீழே ஓடித்திரியாமல், ஒரே புள்ளியில் நிலை கொண்டிருப்பதாயும் தோன்றியது. அந்தக் கட்டியின் மேற்பரப்பு, தொடுகைக்கு அழுத்தமற்றதாயும் இருந்ததில் அவளது சந்தேகம் மேலும் வளர்ந்தது. அந்தக் கட்டி தீமையானதா என்பதை உறுதி செய்யும் பொருட்டு, 'பயோப்சி' சோதனை செய்யும்படி எழுதினாள்.

"அம்மா இந்தச் சோதினை ஒருக்காச் செய்யவேணும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, தலையில் காயத்துடன் ஒரு நோயாளியை 'ஸ்ரெச்சரில்' வைத்துத் தள்ளியபடி உள்ளே நுழைந்தான் கந்தசாமி. பின்னால் வந்த டி.எம்.ஓ அந்தக் 'கேசை'க் கவனித்தார்.

"ஷெல் விழுந்தது..." என்று கதைப்பது கேட்டது. அவசரமாக அந்த நோயாளியைப் பரிசோதித்துவிட்டு உடனே 'தியேட்டருக்கு' அனுப்பினார் டி.எம்.ஓ. ஷெல் வீச்சுப் பற்றி வெளிநோயாளிகள் 'கிசுகிசு'வென்று கதைப்பது தெளிவற்றுக் கேட்டது.

இவள் நோயாளியிடம் திரும்பி மீண்டும்,

"உங்கடை நெஞ்சிலை ஒரு சின்னக் கட்டி இருக்குது. அது சில வேளை தீமை செய்யாத கட்டியாயும் இருக்கலாம். பயப்பிடாதேங்கோ. எதுக்கும் இதைக் கொண்டு போய் அந்த அறையிலை குடுங்கோ. அவை உங்களுக்கு என்ன செய்யவேணும் எண்டு சொல்லுவினம். பிறகு 'றிசல்ற்ஸ்' ஓடை என்னட்டை வாங்கோ..."

கண்களில் குடிகொண்ட சோகம் கலந்த பீதியுடன் அந்த நோயாளி எழுந்து "ஏதோ உங்களை நம்பித்தான் அம்மா வந்திருக்கிறன்..." என்று கூறியபடி வெளியேற அடுத்த நோயாளியை அழைப்பதற்கான அழைப்பு மணியை அழுத்தினாள் இவள்.

வாசலில் நின்ற பொன்னம்மா 'அற்றென்டன்ற்' "இரண்டாம் நம்பர்" என்று குரல் கொடுத்ததைத் தொடர்ந்து, நடுத்தர வயதுள்ள, படித்தவர்போல் நல்ல சுத்தமான உடையில் தோன்றிய ஒரு மனிதர் உள்ளே வந்தார். இன்னொருவர் டி.எம்.ஓ விடம் போனார்.

"தலையிலை குத்தினபடி இருக்கிற 'ஷெல் பீசுக்கு' 'றிங் பாட்' போட்டு வடிவா முதலுதவி செய்திருக்கினம் ஆரோ இந்தப் பேஜண்டுக்கு" என்றார் டி.எம்.ஓ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த உதவி எல்லா நோயாளியளுக்கும் கிடைக்கிற வரைக்கும் நாங்கள் பாடுபட வேணும்" இவள்.

"இருங்கோ..."

அவர் இருப்பதற்கிடையில் அவரது தோற்றத்தை ஒரு முறை நிமிர்ந்து பார்த்து மட்டிட்டுக்கொண்டாள்.

"குட் மோர்னிங் டொக்டர்..." இருமலுக்கிடையில் சொன்னார்.

"யெஸ், குட் மோர்னிங்..."

மருத்துவருக்குக் 'குட் மோர்னிங்' சொல்லும் நோயாளிகள் மிகக் குறைவு. அவர்கள் தங்கள் தங்கள் பிரச்சினைகளின் எண்ணச் சுழல்களோடுதான் உள்ளே வருவார்கள். 'குட் மோர்னிங்' சொல்லும் இவர்... காதடியில் அதிகமாய் நரைத்திருந்த மயிர், வயதை ஐம்பது வரை மதிப்பிட உதவியது. 'ரிக்கற்'றைப் பார்த்தாள்.

"பெயர்... சிவநேசன்..."

சுயநலம், இரக்கமற்ற அரக்கக் குணம், அசுத்தம் இவற்றின் மொத்த உருவே ஆண்கள் என்றும், ஆண்களில் எழுபத்தைந்து சத வீதத்தினர் அயோக்கியர், மீதி இருபத்தைந்து வீதத்தினர் அசடுகள் என்றும் ஏதோ ஒரு கதையில் சி.பாலசுந்தரி எழுதியது ஏனோ திடீரென்று இப்போது நினைவு வந்து... அந்தத் தன்மைகள் இவருக்கு எவ்வளவு தூரம் பொருத்தமாயிருக்கும் என்ற எண்ணத்தினுள் ஒரு முறை போய் வந்தது குரங்கு மனம். பொருத்தமில்லாத நேரங்களில், பொருத்தமில்லாத விடயங்களை நினைத்துக்கொள்ளும் மனம்.

நல்ல சுத்தமான வெளிர்நீல, 'ரெறி கொற்' சேட்டும், தடித்த 'புளூ'வில் ரவுசரும், கால்களில் கறுப்புச் சப்பாத்தின் உள்ளே வெள்ளை 'சொக்சும்', மூக்கின் மேல் தங்கபிரேம் கண்ணாடியும், முகத்தில் மெல்லிய வாசனை தரும் 'கோயா'வுமாய்த் தோன்றும் இந்தப் 'பேசண்டை' அசுத்தத்தின் மொத்த உருவம் என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. இந்த மாதிரி வரும் 'பேசண்ட்ஸ்' இந்த அகோர யுத்த சூழலில்... மிக மிகக் குறைவு. அப்படியானால் சுயநலம், இரக்கமற்ற அரக்க குணம் என்பனவும் இவருக்குப் பொருந்தாதோ?

'ரிக்கற்'றின்படி வயது நாற்பத்தைந்து.

"என்னை விடப் பத்து வயது அதிகம்" என்ற நினைவு அவளுக்குள் ஏற்பட்டதற்குத் தற்செயலைத் தவிர வேறு காரணங்கள் சொல்ல முடியாது நிச்சயமாய்!

வெளியே பறந்த 'ஹெலிகொப்டரின்' இரைச்சலினால், தண்ணீர் நடுங்கியது போல இவளது கவனம் திடீரென்று கலைந்தது. தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமிக் கொண்டிருந்த நோயாளியிடம், வண்ணத்துப்பூச்சியைப் பிரசவிக்கப் போகும் கூட்டுப்புழுவில் தோன்றுவது போல் ஒரு சிறு அசைவு.

"வெளிலை கூரையிலையும், சுவரிலையும் பெரிய 'றெட் குறொஸ்' அடையாளம் போட்டிருக்கிறம். ... இது ஆஸ்பத்திரி எண்டு தெரியட்டும் எண்டு..." தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல் அவள் மிஸ்டர் சிவநேசனுக்குத்தான் சொன்னாள்.

"அட்றெஸ்... ஆசிரியர், நேசன் - த.பெ. இல. 55, யாழ்ப்பாணம்..."

குனிந்து வாசித்தாள், நிமிர்ந்து பார்த்தாள். அந்தக் கண்களில் மட்டும் நோயாளி என்று தெரிந்தது. "அயோக்கியர், அசடு" என்ற இரண்டு பிரிவிலும் இவர் அடங்க மாட்டார் போல் இருக்கிறதே என்று நினைத்தபடி,

"இது தொழில் முகவரி போலை இருக்கு. "ஹோம் அட்றெஸ்' குடுத்திருக்கலாமே" என்றாள்.

"என்ரை வீட்டிலை ஒருத்தரும் இல்லை. மிக வயது போன என்ரை அம்மாவைத் தவிர...! எனக்கு ஏதும் நடந்தாலும் 'ஒபீஸுக்கு'த்தான் அறிவிக்க வேணும்..."

அவர் மெதுவாகச் சிரிக்க முனைந்தார். அந்தச் சிரிப்பிலும் மெல்லிய சோகம் இழையோடியது போல அவளுக்குத் தோன்றியது.

"ஓல் றைற்... நவ்..." உங்கடை பிரச்சினை என்ன?"

இவ்வாறு அவள் கேட்டுக்கொண்டிருந்த போது, வெளியே காத்திருந்த நோயாளிகளிடத்தில் சலசலப்புத் தோன்றியது. பலர் ஒரே நேரத்தில் கதைப்பது கேட்டது. பொன்னம்மாவைக் கூப்பிட்டு என்னவென்று விசாரித்ததில் மிகவும் பிந்தவந்த ஒரு நோயாளி பொன்னம்மாவின் உதவியுடன் வரிசையில் முன்னுக்கு வந்துவிட்டதைப் புரிந்து கொண்ட ஏனைய நோயாளிகள் போர்க்கொடி உயர்த்தி யிருப்பது தெரிந்தது. "இனிமேல் இப்பிடிச் செய்ய வேண்டாம் என்று அண்டைக்கும் சொன்னனான்" என்று மெதுவாகப் பொன்னம்மாவைக் கண்டித்து அனுப்பினாள். சிவநேசனைப் பார்த்து "ம்... சொல்லுங்கோ..." என்றாள்.

"எனக்கு இப்ப ஒரு மாதமா... மூச்சு விடக் கஷ்டமாயிருக்கு. இருமல்... நெஞ்சுவலி..."

"தலையிடி இருக்கா?"

"இல்ல..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"... சளி வருதா?"

"நல்லா இருமினால் கொஞ்சம் வரும்..."

"சளி என்ன நிறமா இருக்கு?"

"மஞ்சளாய்..."

தனது "ஸ்ரெதஸ் கோப்"பின் உதவியுடன் அவரது நுரையீரலைச் சோதித்தாள்.

"நல்லா உள்ளுக்கு இழுத்து மூச்சு விடுங்கோ..."

அவரது தோள்களை மெதுவாகப் பிடித்தபடி 'லங் சவுண்ட்ஸ்' கேட்டாள்.

"நேர்ஸ்... ரெம்பிறேச்சர் பாருங்கோ..." என்று கூறிவிட்டு, "நீங்க லேசா... 'அஸ்மற்றிக்' போல இருக்கு... சளியும் இருக்கு..." என்றாள்.

"ரெம்பிறேச்சர் நோர்மல்..."

"ஆஸ்மா எனக்கு நாலைஞ்சு வருஷமா இருக்கு. நான் அதைப் பெரிசு படுத்தேல்லை. 'வீசிங்' இருந்தா 'வென்ரோலின்' போடுவன். இப்ப... கொஞ்ச நாளா நெஞ்சுப் படபடப்பு இருக்கு..."

அவரது முகத்தில் மெல்லிய சுருக்கங்கள் தோன்றின.

"நீங்கள் வேறை ஆரிட்டையும் காட்டி மருந்து எடுத்ததா?"

"இல்லை..."

"தமிழ் வைத்தியம்... ஆயுர் வேதம்..."

"இல்லை..."

"சில நாட்டு வைத்தியர்மார் மூலிகை எண்டு சொல்லி 'பிரிட்னிசொலேன்' குளிசையைக் கலந்து குடுக்கினம். தொடர்ந்து அதைப் பாவிச்சா நட்டம் வரும்..."

"நான் அப்பிடி ஒண்டும் குடிக்கேல்லை..."

"றைற்... நீங்கள் உண்மை சொல்றீங்கள் எண்டு நான் நம்பிறன். டொக்டரிட்டை உண்மை சொல்லாமல் பிரச்சினைப்படுற பலரைப்பற்றி நீங்கள் அறிஞ்சிருப்பீங்கள்..."

"யெஸ்..."

" 'வென்ரொலின்' குளிசையின்ரை 'சைட் இபெக்ற்'றாலையும் சில வேளை 'பல்பிற்றேசன்' வரும். நீங்கள் ஒரு 'விற்றமின் சிறப்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கிறது நல்லது. எழுதித் தாறன். குடிச்சுப் பாருங்கோ... சளி இருக்கிறதாலை 'அன்ரி பயோற்றிக்கும்' தாறன்..."

மருந்து எழுதிக் கொடுக்கும்போது திடீரென்று ஏதோ நினைவு வந்தவளாய் "உங்களுக்கு 'ஸ்மொக்கிங் ஹாபிற்' இருக்கா?" என்று கேட்டாள். அவர் கண்களைத் தாழ்த்தி ஒரு குற்றவாளி போன்ற நிலையில் இருந்து சொன்னார், "இருக்கு..."

"ஹவ் மெனி பக்கற்ஸ் ஏ டே...?"

"சிக்ஸ் பக்கற்ஸ்..."

இவளது முகத்தைப் பார்க்காமல் பேசியதே அவருக்கு வசதியாய் இருப்பதாய்த் தோன்றியது. அவருக்குள் ஒரு உணர்வு வெட்கத்துடன் ஒடுங்கித் தலை குனிந்து கொள்கிறதா?

" 'ஸ்மோக்கிங்' பழக்கம் இருக்கிறவைக்குத் தொடர்ந்து இருமல் இருந்தா... 'யூ... நோ' அது - 'வார்னிங் சிக்னல்' ஆயும் இருக்கலாம்..."

"ஒ.ஃ.ப் லங் கான்சர்..."

"............"

"அதுக்கு என்ன செய்யச் சொல்றீங்க...?"

அவள் சில கணங்கள் மௌனமாய் இருந்தாள். பின்னர் கேட்டாள், "நேசன் பத்திரிகையிலை ஆசிரியத் தலையங்கம் எழுதிறது நீங்களே?"

"ஆ... யெஸ்... அதிகமா நான்தான்..."

"சமகாலப் பிரச்சினையளை மிச்சம் அழகா ஆழமா எழுதிறீங்கள். நான் அதிகமா வாசிக்கிறனான்..."

"தாங்யூ... எங்கடை மக்களுக்கு நான் செய்யக்கூடிய உதவி அதுதான். மக்களை விழிப்படைய வைக்கிறது..."

இப்போது அவள் அவருடைய பழைய கேள்விக்குப் பதில் கேள்வி கேட்டாள்.

"நீங்கள் இந்தப் பழக்கத்தை நிறுத்தினா என்ன?"

"பல முறை முயற்சி செய்து பாத்திட்டன். முடியாமல் இருக்கு..."

"ஆஸ்பத்திரிலை நிக்க விருப்பமா...?"

"பரவாயில்லை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டொரு நாள் நில்லுங்கோ... நான் உதவி செய்யிறன்..."

அவரை 'மெடிக்கல் வாட்'டில் அநுமதிப்பதற்கான துண்டை எழுதிக் கொடுத்து நிமிர்ந்தபோது,

"ஐஞ்சாம் நம்பர்..." என்று பொன்னம்மா குரல் கொடுப்பது கேட்டது.

பொன்னம்மாவின் சாப்பாட்டுக் 'கரியரை' அவளது கணவன் 'லேபரர்' ராமு கொண்டு வந்து கொடுக்க அவள் கையில் வாங்கிக்கொண்டதை அவதானித்த டி.எம்.ஓ.,

"உள்ளுக்கை என்ன இருக்கு?" என்று சிரித்தபடி கேட்டார்.

பொன்னம்மாவும் ராமுவும் சேர்ந்து 'சைக்கியாற்றிக் வாட்' நோயாளிகளுக்கு வழங்கப்படும் முட்டைகளைத் தமது சாப்பாட்டுப் பெட்டிகளில் போட்டு, வீடு கொண்டு செல்வதை இரண்டு நாளுக்கு முன்னர் டி.எம்.ஓ கண்டு எச்சரித்தாராம். இவள் கேள்விப்பட்டிருந்தாள்.

அந்தக் கேள்வியை வாங்கிக்கொண்ட பொன்னம்மாவின் முகம் ஒரு நிமிடம் ஒரு பதிலும் சொல்லவில்லை. ஒரு நோயாளி போய் அடுத்த ஆளைக் கூப்பிடுவதற்குரிய இடைவெளியில் தன்னைச் சமாளித்தவாறு, "இல்லை ஐயா, இது என்ரை சாப்பாடு... அப்பிடி இனிமேல் செய்யமாட்டன்" என்று டி.எம்.ஓ வுக்கு அருகில் வந்து கூறினாள். கையில் ஐந்தோ பத்தோ வாங்கிக் கொண்டு வரிசையில் பின்னுக்கு நிற்கும் நோயாளிகளை முன்னுக்குக் கொண்டு வந்து விடுவதும், நோயாளிக்கு வழங்கப்படும் முட்டையைத் தான் எடுத்துச் செல்வதும் பொன்னம்மாவின் தவறா? அல்லது சமுதாயப் பொருளாதார நிலையில் தவறா?

வெளியே நோயாளிகள் அதிகமாய் நின்று நெரிபடுதல் தெரிந்தது. "இண்டைக்கு மூண்டு மணி செண்டாலும் பாத்து முடிக்க மாட்டம் போலை இருக்கு..." என்றாள் இவள்.

"எங்கடை பழைய செல்வரத்தினத்தார் மாதிரித்தான் பாக்க வேணும்..." டி.எம்.ஓ.

செல்வரத்தினம் பழைய காலத்து ஆர்.எம்.பி. அறைக்குள் வரும்போதே நிறையத் துண்டுகளுடன் வருவார். ஐம்பது துண்டுகளில் "கிளீன் அண்ட் ட்றெஸ்" என்று எழுதுவார். 'மேல் நேர்ஸ்' அப்பாத்துரை, அவற்றை வெளியே கொண்டு போய் "புண்ணுக்கு மருந்த கட்ட வந்தவை எல்லாம் இஞ்சாலை வா..." என்று கூப்பிட்டு ஒவ்வொரு துண்டாகக் கொடுத்து அனுப்புவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு ஐம்பது துண்டுகளில், 'பனடோல், விற்றமின் சீ' எழுதுவார். 'காய்ச்சல், இருமல், தலையிடி உள்ளவை எல்லாம் வா..." மற்றொரு தொகுதி "வயித்துக்குத்து, வயிற்றோட்டம், சத்தி...!" பதினைந்து நிமிடங்களில் நோயாளிகளில் பெரும் பகுதியினர் அசைந்துவிடுவார்கள். சென்ற வருடந்தான் 'செல்வரத்தினத்தார்' ஓய்வு பெற்றார். அந்த மாதிரி 'விரைவாக' வேலை செய்ய இவர்களால் முடியவில்லை.

வடக்குப் புறத்து யன்னலூடாக யாரோ தெரிந்த முகம் நடந்து போவது போலத் தெரிந்தது. எட்டிப் பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. இவ்வளவு நேரத்தில் இவ்வளவு தூரம் போனால் அது பூரணிதான் என்று நினைத்துக் கொண்டாள். எங்கே செல்கிறாள்?

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3

மூன்றாம் வாட்டின் பராமரிப்பு பிரசித்தமான ஆலயம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

நிதி வழியும் பராமரிப்பு!

பழைய காலத்து நாற்சார் வீடுகளில் இருப்பது போல் இரண்டாம் வாட்டுக்கும் மூன்றாம் வாட்டுக்கும் இடையில் நிலாவொழுகும் முன்றில். அதில் நிறைய நிறையப் பூத்துச் சொரியும் பவளமல்லிகை மரங்களின் மனதிற்கிதமான மணம்.

சொரியும் பூரணை நிலவு!

நேரம் முன்னிரவு எட்டு மணிதானிருக்கும். அன்று அவளுக்கு "நைற் டியூற்றி."

அதிக நேரம் செலவு செய்யத் தேவையான அல்லது விசேட கவனம் தேவையாகிற நோயாளிகளை இப்படியான நேரத்தில் வந்து பார்ப்பது அவள் வழமை.

"நேர்ஸ்" சித்திரா பின்னால் வந்து கொண்டிருந்தாள். உயர் குருதி அமுக்கத்திற்கென 'அட்மிற்' பண்ணப்பட்டிருந்த அப்பு ஒருவர் கட்டிலுக்குக் கீழே குந்திக்கொண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

"அப்பு! ஆஸ்பத்திரிலை வெத்திலை போடப்பிடாது. தெரியாதோ?" என்று சற்று உயர் குரலில் கூறியபடி இவள் வந்தாள்.

நோயாளிகளைக் கண்டிக்க வேண்டிய நேரங்களில் கண்டிக்கா விட்டால் அவர்கள் வைத்தியசாலையின் ஒழுங்கு விதிகளைக் கண்டபடி மீறி விடுவார்கள். ஆனாலும் நோயாளிகளைக் கண்டிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் அவளுக்குத் தான் ஒரு நோயாளியாக ஒரு முறை வைத்திய நிபுணர் சிவசங்கரியிடம் போய் வகையாக வாங்கிக் கட்டியது நினைவுக்கு வராமல் போகாது.

அப்போது அவள் க.பொ.த உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். சில காலமாக "மூலநோய்" இருந்து வந்தது. மலம் கழிப்பது மிகச் சிரமம். மலத்துடன் குருதி வெளியேறும். சில மாதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை வைத்தியம் செய்து பார்த்து ஒன்றும் சரிவராத நிலையில்தான் சிவசங்கரியிடம் போயிருந்தாள்.

அவர் இவளைப் படுக்கச் சொன்னார். படுத்தாள். தசைகளை இறுக்காது காலை விரிக்கச் சொன்னார். செய்தாள். இருந்தாலும்... கட்டிளமைப் பருவம்...... இயல்பான நாணம்.... அவரது சோதனைக்கு வசதியாக இருக்க வில்லைப் போலும்...

"உனக்குச் சொன்னது புரியேல்லையா? நீங்க எல்லாம் கலியாணம் கட்டினாப் பிறகு பத்துப் பிள்ளை பெற இஞ்சை வருவீங்கள்.... இப்பதான் பெரிய...." சொல்ல முடியாத சொற்கள் மனதைச் சுளீரெனக் குத்தும் தொனி. நோயாளி தனது நோய் பற்றி எவ்வளவு பயம், வேதனை, பதற்றத்துடன் வைத்தியரிடம் வருகிறார்! அந்த நோயாளிக்குத் தைரியமூட்டி ஆறுதல் சொல்ல வேண்டிய வைத்தியர்கள் தாங்களே பிரம்மம் என்பது போல் அகம்பாவம் கொண்டு அவர்களைக் கேலி செய்வது? புண்படுத்துவது? தான் வைத்தியராக வந்தால் எப்படி இருக்க வேண்டும் என்ற சிந்தனை அப்போதுதான் மனதுள் பெரிய லட்சியமாக உருவெடுத்து வந்தது. பதவி வரும்போது பணிவு வரவேண்டும்.

மிஸ்டர் சிவநேசன் படுக்கையில் மெதுவாகச் சாய்ந்தபடி எதையோ படித்துக்கொண்டிருந்தார். "துயிலும் ஒரு நாள் கலையும்" என்ற நாவல்!

இவளைக் கண்டவுடன் எழுந்து அமர்ந்து இலேசாக முறுவலித்தார். விலகிச் சென்ற மனதுக்கு முக்காடு போட்டு மறைத்தாள்.

"நான் உங்கடை வாசிப்பை 'டிஸ்ரேப்' பண்ணேலை எண்டு நினைக்கிறன்..."

இதைச் சொல்லும்போது அவளுக்குள்ளே ஒரு இனம் தெரியாத பரபரப்பும், பயமும், இன்பமும் ஏன் தோன்றுகின்றன? மார்பு மயிர்கள் பெனியனுக்கு மேலே தெரியப் படுத்திருக்கும் இந்த ஆண்மை அவளைச் சலனப்படுத்துகிறதா?

இருக்க முடியாது! இவரைவிட இளமையும் அழகுமாக எத்தனை ஆண்களை இதே 'வார்ட்டில்' இவள் நோயாளிகளாகக் கண்டிருக்கிறாள்!

இவளைப் பெண் பார்க்கவென்று எத்தனை ஆண்கள் வந்து போயிருக்கிறார்கள்? இவளோடு எத்தனை ஆண்கள் படித்திருக்கிறார்கள்? அவள் ஒருபோதும் உணர்வுக் கட்டுப்பாட்டை இழந்ததில்லையே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதெல்லாம் ஏற்படாத ஒரு...! ஒரு வேளை இந்த 'எடிற்றர்' அறிவும் அழகும்...? ஒரு கணத்தில் அவள் தன்னைச் சமநிலைப்படுத்திக் கொண்டாள்.

"நோ... நெவர்... நீங்கள் எனக்கு உதவத்தானே வருவீங்கள்...?"

"உங்கடை 'பேர்த்டே' எப்ப?"

கொஞ்ச நேரம் அந்த இரவு அப்படியே நின்றது. எதிர்பாராமல் இந்தக் கேள்வி சிதறியவுடன் அவரது கண்கள் விரிந்தன. விரிந்த உடனே பொசுக்கென்று ஒடுங்கின. ஒடுங்கியதும், உதடு மலர்ந்து பெரிதாகச் சிரித்து, "இந்தக் கேள்விக்கும் என்ரை வருத்தத்துக்கும் என்ன தொடர்பு?" என்றார்.

"தொடர்பு இருக்கு. சொல்லுங்கோ...!"

"இந்த மாசந்தான். பதினேழாந்திகதி! இன்னும் இரண்டு நாள் இருக்கு..."

"நல்லதாப் போச்சு... உங்கடை இந்தப் பிறந்த தினத்தோடை... இந்த 'ஸ்மோக்கிங்...." நிக்கப் போகுது. சரி தானே?"

அவர் சற்று அதிர்ந்தவர் போலக் காணப்பட்டார். படுக்கையின் அருகில் இருந்த 'பிளக்' கில் அவர் போட்டிருந்த காற்றாடியின் காற்று அவள் முகம் முழுதும் தடவி விலகியபோது அவர் கேட்டார்,

"அவ்வளவு கெதியா எப்பிடி? மெதுவாகத்தானே குறைக்க வேணும் - எனக்கு ஆஸ்பத்திரிலை 'ஸ்மோக்' பண்ணாம இருக்கிறதே கஷ்டமாயிருக்கு..."

"இல்லை... திடீரெண்டு நிறுத்துவம் - நாளைக்கு நான் உங்களை 'டிஸ்சார்ஜ்' பண்ணி விடுறன். நாளைக்கும் அதுக்கு அடுத்த நாளும் உங்களாலை எவ்வளவு முடியுமோ... அவ்வளவு குடியுங்கோ... இதனாலை ஒரு அருவருப்பு நிலை வரும் வரைக்கும் குடியுங்கோ. இந்த இரண்டு நாளும் குடிக்கிற சிகரெட் கட்டையளைச் சேத்து வையுங்கோ."

அவர் மெதுவாகத் தலை அசைத்தார்.

"பெட் நம்பர்" இருபத்திரண்டுக்கு நாளைக்குக் காலமை 'பிளட் சுகர்" எடுக்க வேணும்... அந்தாள் வீட்டாலை கொணந்த மருந்தை விழுங்கிப் போட்டு நிக்குது..." என்று முறைப்பாடு செய்தாள் நேர்ஸ் சித்திரா.

"பேசண்ரோடை" கோபிக்காமை... கதைச்சுச் செய்யுங்கோ..." என்று சித்திராவுக்குப் பதில் கொடுத்தாள். சிவநேசன் பக்கம் திரும்பி, "உங்கடை 'பேர்த்டே" அண்டைக்குக் காலமை எழும்பின உடனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாச் சிகரெட்டுகளையும் நெருப்புப் பெட்டியளையும் எறிஞ்சு போடவேணும். கடைப் பக்கம் போகக்கூடாது... "லைற்றர்" வைச்சிருக்கிறியளா...?

"இல்லை..."

"குட், அண்டைக்குக் காலமை இஞ்சை வாங்கோ... 'டென்ரிஸ்ரிட்டைப்" போய் உங்கடை பல்லு எல்லாம் 'கிளீன்' பண்ணுங்கோ... அண்டைக்கு முழுதும் நீங்கள் 'பிசி'யா இருக்க வேணும். எங்கையும் "லைபிறறிலை" போய் ஏதும் வாசிக்கலாம். ரி.வி.யிலை படம் பாக்கலாம். யாரும் '.'.ப்ரண்ட்ஸ்' வீட்டை 'விசிற்' பண்ணலாம். அந்த '.'.பிரண்ட் ஸ்மோக்' பண்ணாதவரா இருக்கோணும். இரண்டு மூண்டு நாளுக்குரிய 'எடிற்ரோறியல்' எழுதலாம். அண்டைக்கு முதல் நீங்கள் புது மனுசன்..."

அவர் எல்லாவற்றையும் மௌனமாக ஏற்றுக்கொண்டார்.

"றைற்... இப்ப உங்கடை 'வீசிங்' எப்பிடி இருக்கு?"

"நொற் பாட்...!"

"ஓ.கே. நேர்ஸ்" மருந்து தருவா. குடிச்சிட்டுப் படுங்கோ. 'டின்னர்' எடுத்திட்டீங்களா?"

"யெஸ், தாங்க்யூ..."

"குட் நைற்..."

லேசான அலுப்புடன் அந்த அலுப்பின் முடிவிலும் அவருக்காகக் கலந்த சிரிப்புடன் அவ்விடத்தை விட்டு வெளியேறி... அடுத்த நோயாளியைப் பார்க்கச் சென்றாள்.

சற்று நேரத்திற்கு முன்னர்தான் 'என்றெக்ஸ்' குடித்து இறக்கும் நிலையில் வந்த கேஸ்.

முருகேசு 'நேசல் ரியூப்' போட்டுக் கொண்டிருந்தான். முருகேசு, சுத்திகரிப்புத் தொழிலாளி.

"முருகேசு, யார் சொன்னாலும் இந்த வேலையளை நீ செய்யப்பிடாது..." என்று சொல்லிக்கொண்டு அருகே சென்றபோது, "சித்திரா மிஸ்தான் சொன்னவ" என்றான் அவன். சித்திராவைப் பார்க்க நிமிர்ந்த போது அவள் தலையைத் தாழ்த்திக் கொண்டமை "இது உண்மை" என்று நிரூபித்தது. அப்போது 'வாச்சர்' வந்து சொன்னார்,

"டொக்டர் உங்களைப் பாக்க எண்டு "போய்ஸ்" வந்து வெளியிலை நிக்கினம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாறன் எண்டு சொல்லுங்கோ..."

'என்றெக்ஸ்' கேசுக்கான அவசிய அலுவல்களைச் செய்துவிட்டு...

குதியுயர்ந்த சப்பாத்துக்கள் வேகமாக நடந்தன. "வாட்"டில் சித்திராவின் ஆட்சி ஆரம்பமாகியது. வாட்டின் முன் பக்கத்தில் நின்று கொண்டு, "எல்லாரும் வா, மருந்து வாங்க...." என்று உயரத் தொனியில் கத்தினாள்.

பெண்கள் இயல்பிலேயே இனிமை நிரம்பியவர்கள். ஒத்துணர்வு உடையவர்கள் என்பதனால்தான் அவர்கள் "தாதி" வேலைக்குப் பொருத்தமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்தச் "சித்திரா"வும் ஒரு பெண்தானே!. ஏன் இவள் நோயாளிகளுக்கு அருகில் வந்து மருந்துகளை வழங்கக் கூடாது?

மருந்து விநியோகம் முடிந்தவுடன் ஊசி மருந்தை எடுத்துக் கொண்டு வந்தாள். ஒரு சிறு பையன் "நியூமோனியா"வால் பாதிக்கப்பட்டிருந்தான். ஊசியைக் கண்டவுடன் படுக்கையில் இருந்து எழுந்து ஓட முயற்சி செய்தான். தந்தையார் எவ்வளவோ கஷ்டப்பட்டு அவனைப் பிடித்துக் கொள்ள முயன்றார்.

"அப்பாவும் பிள்ளையும் நல்ல ஆட்டம். சொன்னபடி அசையாமல் இருக்க வேணும். இல்லாட்டி அந்தத் தூணோடை கட்டி வைச்சிட்டுத்தான் ஊசி போடுவன்..." இரைந்தாள்.

விளக்கேற்றிய சீமாட்டி புளோரன்ஸ் நைற்றிங்கேலுடன் இன்றைய வைத்தியர்களையும், சித்திராவையும் ஒப்பு நோக்கிப் பார்த்தது சிவநேசனின் மனம்.

"உனக்கு இண்டைக்கு எப்பிடி இருக்கு"? அடுத்த கட்டிலில் விசாரித்தாள்.

"எனக்கு ஈ.எஸ். ஆர் குறைஞ்சிட்டுதெண்டு டொக்டர் சொன்னவர்' "நீங்கள் எல்லாரும் டாக்குத்தருக்குப் படிச்சு.... இஞ்சை பெரிய கரைச்சல். ஏதோ உங்களை விட்ட ஆக்கள் இல்லை எண்டமாதிரி உங்கடை மறுமொழியள்...." கத்தினாள்.

தனக்கும் எவ்வளவு வசைமாரி விழுமோ, விழப்போகிறதோ என்று பயந்தபடி சிவநேசன் படுத்திருந்தார். ஒவ்வொரு மனிதனும் குழப்பங்கள் நிறைந்த புத்தகமாக இருக்கிறான். படித்துப் புரிந்து கொள்வது அருமையாக இருக்கிறது. இந்தச் சித்திராவுக்குள்ளே என்ன குழப்பங்களோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல காலம்! சிவநேசனுடன் எதுவும் பேசவில்லை. ஆனாலும் அவளது முகம் ஏனோ கண்ணாடிக் குழம்புபோல் கொதித்தபடியே இருந்தது.

வழியில் ராமு எதிர்ப்பட்டான். சமையல் அறையிலிருந்து அவர்களின் 'குவாட்டர்ஸ்' ஐ நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.

கையில் ஒரு கடகம் நிறையத் தேங்காய்ப்பூ!

இவளைக் கண்டதும் செயற்கையாகச் சிரித்து, வழிவிட்டு, ஒதுங்கி நின்றான். அந்தச் செயலில் ஓர் அசாதாரணத் தன்மை இருந்தது போல உணர்ந்தபடியால், "என்ன ராமு கொண்டு போறீங்கள்...?" என்று கேட்டாள்.

"அது... மத்தியானம் புழிஞ்ச... தேங்காய்ப்பூ... அம்மா" என்று தடுமாறினான். அவள் கீழே வைக்கப்பட்ட கடகத்தைக் கவிழ்த்து விட்டாள். தேங்காய்ப் பூவினால் மறைந்திருந்த பல தேங்காய்கள் சிறிது தூரம் ஓடிப்போய்ப் பின்னர் தமக்குரிய நடனத்துடன் நின்றன. "டி.எம்.ஓ ஐயாட்டைச் சொல்லிப் போடாதேங்கோ" அவன் உடம்பை இரண்டாக வளைத்துப் பரிதாபமாகக் கெஞ்சிக் கொண்டு நின்றான்.

"நெடுகக் களவு செய்யிறது அகப்பட்டால் கால்லை விழுறது..." என்று கூறிக்கொண்டே நகர்ந்து சென்றாள். சுள்ளென்று அவன் மேல் விழுந்த வார்த்தைகளைப்பற்றி அவன் சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. "என்னம்மா செய்யிறது? ஏழெட்டுப் பிள்ளையள். ஒண்டும் கட்டுதில்லை" வாழ்க்கை மரத்தில் ஆசைப் பூக்கள் நிறையப் பூக்கின்றன. அவை எல்லாம் பழமாவதற்குப் பணம் தேவைப்படுகிறது. பணம் போதியளவு கிடையாதபோது "எப்படியும் அதைச் சேர்த்துவிட" மனம் முயலுகிறது. சிந்தனையுடன்.

சாலை நீளம் நடந்து திரும்பியபோது, அந்த இளைஞர்கள் அவளுக்காகக் காத்திருந்தார்கள். ஒரு நொடியில் அவள் அவர்களை இனம் கண்டுகொண்டாள். இவர்கள் ஏன் இவளைத் தேடி வந்திருக்கிறார்கள்? மனம் இடித்துக் கொண்டது.

தான் அண்மையில் எல்.ஆர்.ரி செய்யவும் இல்லை. செய்த வைத்திய நிபுணருக்கு உதவவும் இல்லை என்று நிம்மதியுடன் நினைத்துக் கொண்டாள். இவர்கள் கேட்பது சரியாக இருந்தால் இணங்கவேண்டும் என்றது மனம்.

இடிந்த நெஞ்சம், இணங்கிய நெஞ்சுமாய் அவர்களைப் பார்த்து, "என்ன? சொல்லுங்கோ தம்பி?" என்றாள். இன்னும் பல கேள்விகள் முகத்திலிருக்க இக்கேள்வி தனியாக அவற்றிலிருந்து ஒடிந்து விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கள் சுகாதாரப் பிரிவிலிருந்து வருகிறோமாம். அருகில் உள்ள கிராமம் ஒன்றில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு நாள் முதலுதவி வகுப்புகள் நடத்த உதவுமாறு கேட்டுக்கொண்டார்கள். சமுதாயத்தின் மிக அவசரமான தேவைகளில் ஒன்றாய்... ஒவ்வொரு வளர்ந்த மனிதனுமே முதலுதவி பற்றிய அறிவு பெற்றிருத்தலின் முக்கியத்துவம் அவர்களுக்குத் தெரியாததல்ல! அடுத்த சில தினங்களில் தான் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய நோயாளிகள் பலர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள் என்ற சிந்தனை குறுக்கே விழுந்து படுத்தபோதும், "எனக்கு இஞ்சை நிறைய வேலை இருக்கு... எண்டாலும் உங்களுக்கும் உதவத்தான் வேணும். ஒரு இரண்டு மணித்தியாலம் 'கிளாஸ்' எடுக்க வாறன்..." என்றாள்.

அவர்கள் நன்றி கூறிச் சென்றுவிட்டார்கள். அன்று நள்ளிரவுக்கு மேலும் தூக்கம் அவள் நயனத்தை நாடாமல் தள்ளியே இருந்தது. தலை இலேசாக இடித்தது. யன்னலினூடாக நுழைந்த நுளம்பு அவளை மெதுவாக நுள்ளிப் பார்த்தது.

அன்றைய 'நேசனை' எடுத்து ஆசிரியர் தலையங்கத்தை வாசித்தாள். 'பரீட்சையைக் குழப்பாதீர்' என்ற தலைப்பில் அது எழுதப்பட்டிருந்தது.

"பரீட்சையைக் குழப்பி, அதனால் கல்வி பாதிக்கப்பட்டு, பாடசாலைகள் அல்லோலகல்லோலப் படுவதை விரும்புபவர்கள் சமூகத்துக்கு உதவாத மன நோயாளிகள் எனக் கொள்க" என்று அது முடிவடைந்தது.

இதை மிஸ்டர் சிவநேசன் எழுதியிருப்பாரோ அல்லது அவர் வைத்திய சாலைக்கு வந்தபோது, அங்குள்ள உதவி ஆசிரியர்கள் எழுதியிருப்பார்களோ என்று நினைத்துப் பார்த்தாள். வசனங்கள் அமைக்கப்பட்ட முறை, ஒழுங்கு, பொதுவாக அதன் நடை ஆகியவற்றில் வழமையான அழகு தென்படுவதால், இதை அவரே ஒரு சில தினங்களுக்கு முன் எழுதிக் கொடுத்திருக்கலாம் என்று நினைத்தாள். இனி அவர் வரும்போது, இது பற்றிக் கேட்கலாம் என்றும் முடிவு செய்தாள்.

சமூகத்துக்கு உதவாத மனநோயாளிகள்!

'மன நோயாளி' என்ற இந்தப் பிரயோகம் எத்தனை விதம் விதமான இடங்களில் எத்தனை வகை வகையான மனிதர்களைக் குறிக்கப் பாவிக்கப் படுகிறது!

பூரணிக்குக் கூட, 'மூளை கழண்டு போச்சு' என்று ஒருவர் சொன்னாராம்! சென்ற வாரம் பூரணி இவளைக் கண்டபோது, "என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கடை 'சைக்கியாற்றிக் வாட்டிலை' எனக்கும் ஒரு 'பெட்' போடுறியா?" என்று கேட்டுச் சிரித்தாள்.

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் நின்றிருந்தவர்களை... இவளது அக்கா உட்பட - சுட்டுத்தள்ளிவிட்டு "துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் ஒரு மன நோயாளி..." என்று இரண்டு நாள் கழித்து வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவித்த அழகு?

தினம் தினம் சவக்காட்டில் வெற்றிச் சங்கூதி வரும் பெருமை மனிதர்களுக்கு! அதுவும் ஒரு மனநோயா?

சென்ற வாரத்தில் ஒரு நாள் இவள் தனது 'வாட்'டை நோக்கி நடந்து செல்கையில் கண் வைத்திய நிபுணரின் கிளினிக்குக்காக வாங்கில் காவலிருந்த நோயாளிகளில் ஒருவர் மற்றவருக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார், "காட்டுமிராண்டியாய் இருந்த மனுஷன், மிருகக் குணத்தோடை ஒருதனை இன்னொருத்தன் கொலை செய்தும், பிடிச்சுச் சாப்பிட்டும் இருந்த நிலை... எத்தினை மில்லியன் வருஷங்களாய்... படிப்படியாய் முன்னேறி... மிருகத்தனம் நாகரிகமடைஞ்சு... இண்டைக்கு வளர்ச்சி அடைந்த நாடுகளிலை... 'கொலை செய்தான்' எண்டு சந்தேகமில்லாமல் நிரூபிக்கப்பட்ட நிலையிலையும்... மரணதண்டனை விதிக்கிறது சரியோ... எண்டு வாதிட்டுக் கொண்டிருக்க... இஞ்சை தியானத்துக்கும் விழுமியங்களுக்கும் பேர்போன சமயங்கள் ஊறின எங்கடை நாட்டிலை... மனுசரை மனுசர் ஒரு சரியான காரணம் இல்லாமல் நாய் மாதிரிச் சுடுற காலம் வந்திட்டுதே... உந்த உடுப்புகளுக்குள்ளை நுழைஞ்சவன் எல்லாம் மனநோயாளியோ...? இல்லாட்டி எப்பிடி இந்த மாதிரிச் சுட்டுத்தள்ள, வெட்டித்தள்ள மனம் வரும்...?"

"எல்லாப் பக்கமும் மனநோயாளிகள் தொகையே அதிகரித்து விட்டதா...?" இவள் நினைக்கிறாள்.

மற்ற நோயாளி பதில் சொல்கிறார், "அவங்களும் தங்களிலை பயந்து தானே! பாம்பு ஏன் கடிக்குது? தன்னை ஆரோ கொல்லப் போறான் எண்டு பயந்து..."

யன்னலுக்கூடாகத் தெரிந்த வயல்வெளிகள் அவளது வாழ்க்கை போல... வரண்டு...!

இன்னும் நித்திரை வரவில்லை!

கலைப்படாதவளாக, யோசிக்காதவளாக, திட்டமிடாதவளாக இருந்தால்... மற்றவர்களைப் போல், 'நைற் டியூட்டி' நேரத்திலும்கூட அமைதியாகத் தூங்குவது சாத்தியப்பட்டிருக்கலாம்.

இன்னும் இன்னும் நித்திரை வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளும் புறமும் எல்லை கடந்த ஏகாந்தப் பெருவெளியும் ஓசை அடங்கி உறைந்து போக... எத்தனையோ சிக்கலான நோயாளிகளின் குணங்குறிகள் அடையாளங்களைக் கொண்டு அவர்களின் நோய்களை இனம் கண்டு, வைத்தியம் செய்து குணப்படுத்தும் தனக்குத் தன்னுடைய இந்தச் சின்னப் பிரச்சினைக்கு... நித்திரை வரத் தாமதமாகும் பிரச்சினைக்குத் தகுந்த மருந்து தேட முடியாமல் இருக்கும் விந்தையை நினைத்து ஒரு கணம் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

பகலில் நோயாளிகளின் முன் தோன்றுகிற மிகத் திறமையான டொக்டரான தனது முகமும், இப்போது பல விதப்பட்ட சிந்தனைகளுடன் படுக்கையில் புரளும் பலவீனமான முகமும் எவ்வளவு வித்தியாசமானவை என்று நினைத்தபோது...

'கோலிங் பெல்' ஒலித்தது.

"இந்த நேரத்திலை ஆர் வந்திருப்பினம்?"

நித்திரை இன்றி இருந்தபோதும் எழுந்து சென்று கதவைத் திறக்க அலுப்பாக இருந்தது. உள்ளே அம்மாவின் இருமல் ஒலி, அம்மா விழிப்பாக இருக்கிறார் என்று கூறியது. "அம்மா... ஒருக்காப் பாருங்கோ ஆரெண்டு...!" என்றாள். அம்மா எழுந்து சென்றார். திரும்பி வந்து, "அது உன்ரை சிநேகிதி பூரணி... பிள்ளையைக் கொணந்திருக்கிறா..." என்றார். அடுத்த கணமே போர்வையை உதறி எறிந்துவிட்டு வெளியே போன இவள்,

"வா பூரணி! காலையிலை கருங்காக்கா நீ வாற சேதி சொன்னது... என்ன இந்த நேரத்திலை...?" என்றாள். அடுத்த கணமே பூரணியின் பிள்ளையையும் அவளது முகத்தையும் பார்த்துவிட்டுத் தான் கவிதை கூறும் நேரம் இதுவல்ல என்று உணர்ந்தவள் போல் "நான் உன்னைப் பற்றி அடிக்கடி நினைப்பன். வர முடியிறேல்லை" என்றாள்.

"இவனைப் பாரன். பின்னேரம் போலை மெதுவாக் காய்ச்சல் இருந்தது நான்... 'பனடோல் சிறப்' குடுத்தனான். பிறகு எட்டு மணிலை இருந்து காய்ச்சல் கூடிக்கூடி நெருப்பு மாதிரிக் கிடக்கு உடம்பு. சில நேரம் "ஃபிற்ஸ்" வந்தாலும் எண்ட பயத்திலைதான், உன்னை எழுப்பினாலும் பரவாயில்லை எண்டு..."

தாய்மையின் கண்ணீர் பூரணியின் கண்களை நிறைத்திருந்தது.

"ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கலாம்... கூட வசதியாயிருந் திருக்கும்"

"உனக்கு இண்டைக்கு 'நைற் டியூற்றி' இல்லையெண்டு தெரியும். நீ பாத்தாத்தான் ஒரு நிம்மதி..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளிடம் அதிகமாய் வீட்டில் எதுவும் இல்லை. ஆயினும் சொந்தத் தேவைக்கு இருக்கும் வெப்பமானியை எடுத்து வந்து பூரணியின் இரண்டு வயதுப் பாலகனின் உடல் வெப்பநிலையை அளந்தாள்... 104° F!

பிள்ளையைக் காற்றோட்டமுள்ள கட்டில் ஒன்றில் படுக்க வைத்து, உடைகளைத் தளர்த்தி, குளிர் நீரினால் ஒத்தடம் வைத்தாள்.

அவன் தனது பிஞ்சுக் கரங்களினால் "வாண்டாம் வாண்டாம்" என்று இவளது கைகளைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தான்.

"பொல்லாத பொடியன் தான் உன்ரை பொடியன்" என்று பூரணியைப் பார்த்துக் கூறிச் சிரித்தாள்.

நுண்ணுயிர் கொல்லி மருந்தும் பனடோலும் கொடுத்தாள்.

"யூரின் பாஸ் பண்ணினவன் தானே?"

"ஓம்"

"நிறம் ஏதும் வித்தியாசமாய் இருந்ததா?"

"இல்லை"

"விடியப் பாத்துச் செய்யலாம். அதுவரைக்கும் இவன் இங்கை இருக்கட்டும். நீயும் இங்கை படுக்கலாம் பூரணி..."

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4

பூரணி தன்னுடன் வந்த பெண் பிள்ளைகள் இருவரையும் பார்த்து, "நீங்கள் போய் வீட்டைப் பூட்டிக்கொண்டு படுங்கோ. நான் காலமை வாறன்" என்று அனுப்பிவிட்டாள்.

"இவை, உன்ரை வீட்டிலை வாடகைக்கு இருக்கிற பிள்ளையள் தானே?"

"ஓம், அவை போவினம். கிட்டத்தானே!"

அவர்கள் போய்விட்டார்கள்.

வீரிட்டு அழுது கத்திக்கொண்டிருந்த குழந்தை இவளது கவனிப்பின் பின் சில நிமிடங்களில் அமைதி அடைந்து தூங்க ஆரம்பித்தது.

"இது சும்மா 'றெஸ்பிறேற்றரி இன்பெக்ஷன்'தான். வைரஸ்! காலமை காய்ச்சல் குறைஞ்சிடும். நீ பயப்படாமல் படு"

"நீ இப்பிடிச் சொல்லேக்கை எவ்வளவு ஆறுதலா இருக்கு மனதுக்கு! சில 'டொக்ரேஸ்' ஒண்டுமில்லாத வருத்தங்களையும் சிலவேளை பெரிசுபடுத்தி ஆக்களைப் பயப்பிடுத்திப் போடுவினம்."

"ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?"

"இப்ப இரண்டு மூண்டு வருஷத்துக்கு முந்தி... அப்ப எனக்கும் பிரச்சினையளாலை மனதிலை கொஞ்சம் பதற்றம். அதோடை கழுத்திலை மெல்லிய வீக்கம்...!"

"தைரோயிட்"

"ஓ... மெடிக்கல் "ஸ்ருடன்ற்" ஒருத்தர் என்னைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு "சேஜனிட்டைக்" காட்டினார்..."

"பிறகு...?"

"அவர் பாத்திட்டுத் 'தைரோ ரொக்சிகோசிஸ்' எண்டு ஒப்பரேஷன் செய்ய வேணும் எண்டிட்டார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கைசற்றி"யின்ரை பல குணங்குறியள் "தைரோ ரொக்சிகோசிஸ்" குறியளைப் போலை இருக்கும்..."

"நான் ஒப்பரேஷனுக்குப் பயந்து போகேல்லை. அயடின் எடுத்தன். வீக்கம் குறைஞ்சிட்டுது... அவர் வீணா என்னைப் பயப்பிடுத்தினதுதானே...?"

"அப்ப... 'டொக்ரேஸ்' எல்லாரும் இப்பிடியான ஆக்கள் தானெண்டு முடிவு செய்திட்டியோ?"

"இல்லை... இல்லை... உன்னைப்போல "டொக்ரேஸு"ம்" இருக்கினம். இப்பிடியும் இருக்கினம்..."

குழந்தையின் தலை அருகில் வைக்கப்பட்டிருந்த "டம்ளரின்" வெளிப்பக்கத்தில் புகையாக, அரும்பாக, முத்தாக... ஈரம் துளிர்த்துக் கோடாக வழிந்தது. உள்ளே... இன்னும் கரையாத ஐஸ் துண்டின் அமிழ்ந்த மிதப்பு...!

"நீ படு கல்யாணி! நான் முழிச்சிருந்து பாத்துக் கொள்ளுவன். ஏதும் வித்தியாசமெண்டால் உன்னை எழுப்பிறன். அம்மா... நீங்களும் போய்ப் படுங்கோ..."

அருகே இருந்த கட்டிலில் கல்யாணி படுத்துக்கொண்ட சிறிது நேரத்தின் பின் பூரணி கேட்டாள்,

"என்ன அப்பாவைக் காணேல்லை? வழக்கமா இந்த வெளிக் கட்டிலிலை படுத்திருப்பார்..."

"அவர் இண்டைக்கு ஊர்காவலுக்குப் போட்டார்..."

"இந்த வயதிலையோ?" பூரணி நம்ப முடியாமல் கேட்டாள்.

"எங்கடை ஊரிலை எல்லா வீட்டிலை இருந்தும் ஒவ்வொரு ஆம்பிளையள் 'ரேண்' வைச்சுப் போயினம். எங்கடை வீட்டிலை பெடியள் ஒருத்தரும் இல்லை. அப்பா தான் போறன் எண்டு போறார்..."

சந்தேகம் விரல் நுனியில இருக்கத் தொடுவதுபோல் குழந்தையை மெதுவாகத் தொட்டுப் பார்த்தாள் பூரணி.

"அரை மணித்தியாலத்திலை காய்ச்சல் குறையும். ஏனப்பா பயப்படுறாய்?"

ஒரு வசனத்தில் கிடைத்த வாஞ்சை இவளை நிம்மதியில் அமிழ்த்தி விட்டதுபோலும்.

"நீ இருக்கேக்கை நான் ஏன் பயப்படுறன்?" என்றாள் தொண்டை அடைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணியைப் போன்றதொரு சிநேகிதி கிடைக்க ஆயிரம் முறை தவம் செய்திருக்க வேண்டுமே? மனதிற்குள் ஆயிரம் பூக்களின் வாசனை கம்மென்று வீசியது.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி என்னைப் பற்றி அடிக்கடி நினைக்கிறதாச் சொன்னாய்?" பூரணி கேட்டாள்.

"ஓம்... அண்டைக்கு ஆஸ்பத்திரிக்கு முன்னாலை நடந்து போனாய்? நான் எழும்பி வந்து பாத்தனான். ஆளைக் காணேல்லை. ஏன் வந்தனி?"

"ஆ... அது அண்டைக்கு ஆஸ்பத்திரியிலை நடக்கிற முதலுதவி வகுப்புக்கு வந்தனான்..."

"உனக்கு மூளை கழண்டு போச்சுது எண்டு ஆரோ சொன்னதாப் போன மாதம் றோட்டிலை கண்டபோது சொன்னாய். அதுதான் 'மூளை கழருதல்' என்பதற்கு என்ன வரைவிலக்கணம் எண்டும் யோசிச்சனான்..."

"கல்லெண்டாலும் கணவன், புல்லெண்டாலும் புருஷன் எண்டு ஆம்பிளையளைத் தூக்கித் தலையிலை வைச்சுக்கொண்டு திரியாத பொம்பிளையள் எல்லாம் 'மூளை கழண்டவை' எண்டு சில பேர் நினைக்கினம். சுய கௌரவம் உள்ள பொம்பிளையள் "தலை கழண்டவை' எண்டு சிலபேர் சொல்லினம். ஆம்பிளையளின்ரை குறைபாடுகள் ஒண்டையும் காணாமலே இருந்திடுற பொம்பிளைதான் மன ஆரோக்கியம் நிறைஞ்ச பொம்பிளை எண்டு நினைக்கினம் போலை. எங்கடை பள்ளிக்கூடத்திலை ஒரு ரீச்சர் இருக்கிறா..."

"சொல்லு..."

"அவன்ரை மனுசன் இஞ்சை ஒரு குறிப்பிட்ட வீட்டிலை ஒவ்வொரு நாளும் இரவு பத்து மணி வரைக்கும் இருந்து கதைச்சு மினக்கெடுவார்..."

"உனக்கு எப்பிடித் தெரியும்?"

"ஊருக்குத் தெரியுந்தானே. வேறை கனபேர் அவரை அந்த வீட்டிலை கண்டிருக்கினம்..."

"சரி, சொல்லு..."

"அவ வீட்டிலை தனக்குள்ள வேலைக் கஷ்டங்களைப் பற்றி எனக்கு ஒருநாள் சொன்னா. அப்ப நான் கேட்டன். உங்கடை மிஸ்டர் கொஞ்ச வேலையளைச் செய்யலாந்தானே... அவர் செய்து தரமாட்டாரோ எண்டு..."

"ம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரவு பத்து மணிவரைக்கும் எங்கையோ ஒரு "வீடியோ சென்ரறிலை" அவருக்கு வேலையாம். பாவமாம். அவரை எப்பிடி வீட்டிலையும் வேலை செய்யச் சொல்லிக் கேக்கிறதாம்..."

"மனுஷி அப்பிடி நம்பிக்கொண்டிருக்குது..."

"காலம் முழுதும் அப்பிடி நம்பிக்கொண்டே இருக்க வேணும். இவர் எல்லா வீட்டுக்கும் போய்வர வேணும். அவதான் மனநிலை சரியான பொம்பிளை. எனக்கு மூளை கழண்டு போச்சுது. சொல்லட்டன்... நானே உந்தக் கதையளைப் பற்றிக் கவலைப்படேல்லை. நீ ஏன் கவலைப்படுறாய்?"

"இல்லை, ஒருத்தருக்குப் பாரிய உளநோய் இருக்கோ இல்லையோ எண்டு றோட்டிலை போற ஒருத்தர் தீர்மானிக்கேலாது என்ன? அதை ஒரு 'சைக்கியாற்றிஸ்ற்'தான் முடிவு செய்யவேணும்..."

"காலம் போகப் போகக் கன "பேஜன்சைப்" பாத்துக் களைச்சுச் 'சைக்கியாற்றிஸ்ற்'மாரும் கடைசி காலத்திலை பிழை விடலாம். அவைக்கும் நல்லா இருக்கிறவைக்கு மனம் பிழை போலத் தோன்றலாம்... ஆனபடியாப் புதுசாப் படிச்சு வந்த - இன்னும் 'பேர்ண் அவுற்' ஆகாத 'சைக்கியாற்றிஸ்ற்' சொல்லவேணும்..."

கல்யாணி எழுந்து போய்க் குழந்தையின் வெப்பநிலையைப் பார்த்தாள். 102°F!

"காய்ச்சல் குறையுது. பயப்பிடாதை!"

"அது சரி, நான் வரேக்கை ஒரு பத்து, பத்தரை இருக்கும். நீ என்ன அவ்வளவு நேரமும் நித்திரை கொள்ளேல்லையோ அல்லது இடையிலை முழிச்சனியோ?"

"நோ, நான் இண்டைக்கு அவ்வளவு நேரமும் நித்திரை கொள்ளேல்லைத்தான்..."

"ஏன்? ஆஸ்பத்திரிலை ஏதும் பிரச்சினையா கல்யாணி?"

உண்மைகளைப் புதைகுழிக்குட்படுத்திப் புறம் வீற்றிருக்கும் பொய்மையின் பூச்சுக்கள் நிறைந்த இந்த உலகில், சிறு வயது முதல் தன்னுடன் படித்த பூரணியின் நட்பு ஒரு உண்மையான ஆத்மார்த்தமான தொடர்பு என்பதால்... தன் மன எண்ணங்களையும் அவளிடம் சொல்வதில் தவறில்லை என நினைத்தாள் இவள்.

சிலரிடம் சிலவற்றைச் சொல்ல முடியாது. சிலரிடம் சிலவற்றைச் சொன்னாலும் பங்கிட்டுக்கொண்டு ஒத்துணர்வைப் பெற்ற திருப்தி வராது. ஆனால் பூரணியிடம் பங்கிட்டுக்கொண்டு ஆறுதல் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு மனம் திறந்து கதைக்க ஒருத்தருமில்லை உன்னைத்த..."

"சரி, பிரச்சினையைச் சொல்லன்..."

"ஆஸ்பத்திரியில பிரச்சினை, சொந்தப் பிரச்சினை..."

பூரணி இவளை உற்றுப் பார்த்தாள்.

"ஆஸ்பத்திரிலை என்ன பிரச்சினை?"

"ஃபாமஸிஸ்ட்" வடிவேலு, ஒரு "பேசண்டுக்கு" நான் "எறித்திரோ மைசின்" எழுத... அதுக்குப் பதிலா விற்றமின் குளிசையைக் குடுத்திட்டு... இதை வீட்டை கொண்டு போயிட்டார். நான் அறிஞ்சிட்டன்..."

"எப்பிடி?"

"அந்தப் "பேசண்ட்" எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை இருக்கிறது. குளிசையைக் கொண்டு இஞ்சை வந்திது. சாப்பிட முந்தியோ பிந்தியோ குடிக்கிறது எண்டு கேக்க... பாத்தா... விற்றமின் பி..."

"ம்..."

"இவை இதுகளை வெளிலை கொண்டுபோய் "ஃபாமசியளிலை" விக்கினமாம்..."

"இது எங்கடை மக்களுக்கு... நெருக்கடியான ஒரு காலகட்டத்திலை செய்யிற பச்சைத் துரோகம்..."

"இதைப் பற்றிப் பேப்பரிலையும் வந்தது. 'நேசன்' பத்திரிகையிலை வந்தது. பெடியள் வந்து என்னட்டைக் கேட்டாங்கள்... இந்த வேலை செய்யிறது ஆரெண்டு..."

"நீ சொல்லிட்டாய்...?"

"ஓம்... எனக்குத் தெரிஞ்சதைச் சொன்னன். வடிவேலுவிட்டைக் காசும் போதியளவு இருக்கு. அவற்றை வேலையை எந்த வகையிலையும் நியாயப்படுத்த ஏலாது. பெடியள் வடிவேலுவைப் பிடிச்சு வெருட்டியிருக்கிறாங்கள் போலை. அவருக்கு என்னிலை ஒரு சந்தேகம். உவவுக்குப் படிப்பிக்கிறன் பாடம் எண்டு உறுமிக்கொண்டு திரியிறாராம்..."

நீண்ட பெருமூச்சொன்று அவளது உணர்வுகளுக்கு வேதனை கொடுத்தபடி வெளியேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திரியட்டன்... ஒண்டும் செய்யமாட்டார். தெரியுந்தானே... ஏதும் செய்தால் என்ன நடக்கும் எண்டு. சும்மா வாய் வெருட்டுத்தான்... நீ பயப்பிடாமல் இரு. சரியானதைச் செய்திட்டு ஒரு நாளும் வேதனைப்படப்பிடாது..."

நரகத்தைச் சொர்க்கமாக்குவதும், சொர்க்கத்தை நரக மாக்குவதும் மனந்தான் என்று 'மில்ரன்' கூறியதைக் கல்யாணி நினைத்துக்கொண்டாள்.

"உன்ரை "அட்வைஸ்" எப்பவும் மனதுக்கு ஆறுதலா யிருக்கும்..."

"சொந்தப் பிரச்சினை எண்டது என்ன?"

"அது... இவ்வளவு காலமும் இல்லாமல் இண்டைக்கு என்ரை மனம் சலனப்பட்டிருக்கு. இப்ப இரண்டு மூண்டு நாளா..."

இவளது கண்களில் கனவுகள் அதிகரித்திருப்பதாய்ப் பூரணிக்குத் தோன்றியது.

"விளங்கேல்லை நீ சொல்றது..."

சிவநேசனைப் பற்றிப் பூரணியிடம் விபரமாய்ச் சொன்னாள் கல்யாணி. இறுதியில்,

"ஏனெண்டு தெரியேல்லை. அவரை ஒரு "பேசண்ட்" ஆக மட்டும் பாக்க என்னாலை முடியேல்லை. அதுக்கு மேலை கவனிக்கச் சொல்லி மனம் சொல்லுது. இது என்னுடைய பலவீனமா?" என்று கேட்டாள். பூரணிக்குத் தெரியும் கல்யாணி வெளித்தோற்றத்தில் வலு கடுமை! ஆனால் அவளின் இன்றியமையாத மறுபுறம் - அது மென்மை மனம் - அதில் ஒரு பூந்தோட்டம் போடலாம்.

"இது ஒரு கருணை கலந்த அக்கறையாக இருக்காதா? காதல்தானா? என்ன காரணம் அந்த மனிதர் உன்னைக் கவர...?"

"அதுதான் எனக்கும் தெரியேல்லை. அறிவு பூர்வமா உயர்ந்த நிலையிலை இருக்கிற ஒருத்தர்... இப்பிடிக் கவனிக்க ஆளில்லாமல் அழிஞ்சு போறாரே... எண்ட இரக்கம் ஒரு காரணமா இருக்கலாம்... ஆனால் அதுக்கு மேலையும்..."

"சிந்தனையளைக் கட்டுப்படுத்திறது கஷ்டம். ஆனா செயற்பாட்டைக் கட்டுப்படுத்தலாம். நீ கதைக்கிறதிலை - செய்கையிலை அவதானமா இரு. அவசரப்படாதை - பிறகு என்ரை வாழ்க்கை மாதிரி அரைவாசிலை முடிஞ்சிடும். அவரைப் பற்றிச் சகல விபரங்களையும் அறிஞ்ச பிறகுதான் - மிச்சத்தை யோசிக்க வேணும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு பூர்வமாச் சிந்திச்சு முடிவுகளை எடுக்க வேணும். உணர்ச்சி வசப்பட்டு எடுத்திடக்கூடாது..."

"நீ இப்ப பாலசிங்கத்தை விட்டுப் பிரிஞ்சு தனிய வாழிறதாலை உன்ரை வாழ்க்கை தோல்வி அடைஞ்சிட்டுதெண்டு நினைக்கிறியோ?"

"இல்லை, தோல்வி அடைஞ்சிட்டுது எண்டு நான் சொல்லமாட்டன். என்னாலை உலகத்திலை கனபேர் நன்மை அடையினம்... ஆனா ஓரளவு சமநிலை குழம்பிட்டுது. என்ரை பிள்ளை அப்பா இல்லாத பிள்ளையாத்தானே வளரப்போறான். அதனாலை வரக்கூடிய உளப்பாதிப்புகளோடை..."

"இந்தச் சமநிலைக் குழப்பத்துக்கு அடிப்படைக் காரணம் என்னவெண்டு நினைக்கிறாய்?"

"பொருத்தமில்லாத திருமணந்தான். அவர் சொல்றதை அப்பிடியே செய்யக்கூடிய, படிக்காத, சுயசிந்தனையும் சுயகௌரவமும் இல்லாத ஒரு பொம்பிளையை அவர் செய்திருந்தால் ஒருவேளை குடும்பம் குலைஞ்சிருக்காது. அப்பிடிக் கன பொம்பிளையள் இருக்கினந்தானே! அல்லது என்னைப் புரிஞ்சு கொள்ளக்கூடிய, என்ரை சுதந்திரத்திலை தலையிடாத, முற்போக்கான சிந்தனை உள்ள ஒரு ஆம்பிளை கிடைச்சிருந்தா... நானும் வாழ்ந்திருப்பன். அது முடிஞ்ச கதை. ஆனா... சிவநேசனைப் பற்றி நல்லா அறியவேணும். உங்களுக்கிடையிலை சிந்தனைப் போக்குகள் ஒத்து வரவேணும்...!"

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5

பூரணி கதைப்பதைக் கேட்டுக்கொண்டே வெப்பமானியை எடுத்துக் குழந்தையின் அக்குளில் வைத்துக்கொண்ட கல்யாணி, "குட்... காய்ச்சல் நல்லாக் குறைஞ்சிட்டுது... நீ காலமை குழந்தையை வீட்டை கொண்டு போகலாம்..." என்றாள்.

பூரணி சிரித்தாள். பொட்டில்லாத அவளது நெற்றியால்கூட அந்தச் சிரிப்பின் நிறைவைக் குழிக்குள் தள்ளிவிட முடியவில்லை. சிறிது நேரம் இருவரும் பேசாமல் படுத்திருந்தார்கள்.

"கல்யாணி... நித்திரை ஆகிட்டியா?"

"இல்லை, சொல்லு..."

"எங்கடை வீட்டிலை வாடகைக்கு இருக்கிற வசந்தி... இப்பிடித்தான் கொஞ்ச நாள் தான் ஆரோ ஒரு பெடியனை விரும்பிறன் எண்டு... ஒரே ஆரவாரம். "பிறசெண்டு"கள் குடுக்கிறது... வாங்கிறது... எந்த நேரமும் எல்லாரிட்டையும் அதே கதை..."

"ம்..."

"நான் என்ன இந்தப் பிள்ளை வெக்கப்படாமல் இப்பிடி எல்லாம் கதைக்குது எண்டு நினைப்பன்..."

"பிறகு...?"

"அந்தப் பெடியன் வீட்டிலை சம்மதிக்கேல்லையாம். இப்ப தான் அதை விட்டிட்டன் எண்டு சாதாரணமாய்ச் சொல்லுது..."

"எங்களாலை ஏன் அந்த மாதிரி மாற முடியேல்லை..."

"ஆனால் எனக்கு அப்பிடி மாற விருப்பமில்லை..."

சோளகம் நுழைவதற்காய்த் திறந்துவிட்ட சாளரத்தினூடாக வரிசையாக மின்னிய மூன்று வெள்ளிகளும் அவர்களின் யன்னலைக் கடக்கு முன் அவர்கள் இருவரும் கதைத்தபடியே உறங்கிப் போனார்கள். பாரந்தாங்கிய ஒரு முகில் மழையைப் பிரசவித்து இலேசாகி மேலே எழுவதுபோல இருவரது மனமும் இலேசாக இருந்ததால், அதிகாலையில் அவர்கள் நித்திரை விட்டெழுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே 'மார் செற்' போர்விமானங்கள் பனை மூடிய அவர்கள் கிராமத்தைச் சுற்றிக் குண்டு மாரி பொழிய ஆரம்பித்துவிட்டன. 'ஆட்லறி ஷெல்'கள் கூவிக்கொண்டு கிராமத்தை நோக்கிப் பறந்துவந்தன. கடலில் நிலை கொண்டிருந்த பீரங்கிப் படகில் இருந்து குண்டுகள் வீதிகள் தோறும் விழுந்து வெடித்தன.

வீடு முழுவதும் அதிர்ந்து நிற்கிறது. வீட்டின் பின்புறத்தில் ஒரு தென்னை குண்டு பட்டு எரிந்தது. பூரணியின் மகன் அலறி அடித்துக்கொண்டு எழுந்து தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டான். எல்லோரும் ஓடிச்சென்று பதுங்கு குழியில் படுத்துக் கொண்டார்கள். ஒப்பாரியும் ஓலமுமே கிராமத்தின் தேசிய கீதமாயின.

"நாடி ஒட்டி, நெற்றி விரிந்து, 'சைக்கிள் சீற்' மாதிரி முகம். பச்சை நிறத்தில் கோலவுடை, கம்பீரமான தொப்பியும், மீசையும்..."

படத்தை நிமிர்ந்து பார்த்தவுடன் ஆழக்குழிக்குள் விழுந்துவிட்ட விழிகள் அவள் பார்வையை நிச்சயமாய் உறுத்தின. அவை வெகுவாக இடுங்கியவை. அவன் சிரித்துக் கொண்டிருப்பதாலேயே அந்தக் கண்கள் பூரணமாக மறைந்து விட்டதுபோல் தோன்றுகின்றனவா? இவன் உண்மையாகவும், பொய்யாகவும் ரொம்பவும் சிரிப்பவனாக இருந்திருப்பான் என்று கல்யாணி நினைத்தாள்.

முதலுதவிப் பயிற்சி நடைபெறும் பாடசாலை ஒன்றுக்குப் போவதற்காக மினிபஸ் எடுப்பதற்கு அவள் சந்திக்கு வந்தபோதே, சந்தியில் பெரிதாக மாட்டப்பட்டிருந்த அந்தப் படம் அவள் சிந்தையைக் கவர்ந்தது. இன்னும் பல அஞ்சலிச் சுவரொட்டிகள்! அவற்றின் கீழே ஆண்டவன் படைப்பு - ஆள்பவன் அழிப்புத் தேதிகள்!

பார்வை - மினிபஸ் வருகிறதா எனப் பார்ப்பதற்காக ஒரு முறை வீதியில் தைத்து விலகியது. கயிறடித்தது போல் நேராகக் கண்ணுக்கெட்டிய தூரம் ஓடும் வீதி!

அருகில் இருக்கும் செய்திப் பலகை - பத்துப் பதினைந்து பேர் குழுமி நின்று அதைக் கவனமாக வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். நாளைய நாளின் கனம் எண்ணி அங்கலாய்க்கும் மனங்கள் முகத்தளவாடியில் தெரிகின்றன. விமர்சனக் கடிதங்களை அருகில் உள்ள தபாற்பெட்டியில் போடுமாறும் இன்று அதில் எழுதப்பட்டிருக்கிறது.

சந்தியின் மேற்குப் புறம் இருந்த சிவன் கோயில் கோபுரத்தின் ஒரு பகுதி உடைந்து சிதறிக் கிடக்கிறது. அன்றிரவு நடைபெற்ற 'பொம்பர்' தாக்குதலின் விளைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சனம் கொஞ்சம் பதுங்கு குழிக்கை பாதுகாப்பாய் இருந்திட்டுது. கோபுரத்தாலை பதுங்கு குழிக்கை உள்ளட ஏலாதுதானே!"

அவளைப் போன்ற நினைவு பக்கத்தில் உள்ள கிழவருக்கும் ஓடியதால் அவர் இதைச் சொல்லியிருக்கலாம். அவரைத் திரும்பிப் பார்த்தாள். 'காலமாயிற்று' என்று கூறும் வெண் பஞ்சு மயிருடன் நீளமான முகம்.

அறுவடை முடிந்த வீதியோர வயல்கள் வனாந்தரமாகத் துகள் பறக்கின்றன.

"இண்டையான் 'நேசன்' பாத்தனீங்களே? அவஸ்திரேலியாப் பாராளுமன்றத்திலை பேசியிருக்கிறாங்கள் - எயர் லங்கா ஜெட் விமானத்தை ஒரு கோடி நாப்பது லட்சம் டொலருக்கு வாங்கினவையாம்..." இது ".'.பிறீவ் கேசு"டன் வேலைக்குச் செல்ல நின்ற இன்னொருவர்.

'நேசன்' என்றவுடன் சிவநேசன் ஓடிவந்து நின்றார் அவள் மனதில்.

அவரது பிறந்த நாள் அன்று காலையிலேயே அவர் ஆஸ்பத்திரியில் வந்து சேர்ந்துவிட்டார். மாலையில்தான் அவள் அவரைச் சென்று பார்த்தாள். போகும்போது தன்னுடன் ஒரு விளையாட்டுத் துப்பாக்கியும் பென்சிலும் கொண்டு போனாள்.

முன்னே இருந்த பூந்தோட்டத்தில் சிவப்பிலும், றோஸ் நிறத்திலும், மஞ்சளிலும், வெள்ளையிலும் பூத்து நிறைந்திருந்த ஓட்டுச் செவ்வரத்தையைப் பார்த்துக்கொண்டு நின்றார் சிவநேசன்.

பழுத்தும், உதிர்ந்தும், துளிர்த்தும், பூத்தும் - வாழ்தலின் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கும் அந்தப் பூ மரத்தில் அவர் எதனை ரசிக்கிறார்?

"விஷ் யூ ஏ ஹாப்பி பேர்த் டே" என்று சொல்லிக்கொண்டே அருகில் சென்றாள். அவர் சிரிக்க முனைந்தார். ஆயினும் அந்தச் சிரிப்பில் உயிர் இல்லாதது போல் இருந்தது.

"எனக்கு ஏதோ 'பிறெசென்ற்' கொணந்திருக்கிறியளோ?" என்று கேட்டார் - அவள் கைகளைப் பார்த்தபடியே. அந்தக் கேள்வியில் அவர் தன்னைச் சுற்றி நெருங்கி வந்திருப்பது போல் அவள் உணர்ந்தாள். "யெஸ், இதுதான் "பிறெசென்ற்" என்று கூறி, சிகரெட் குண்டு பொருத்தப்பட்ட விளையாட்டுத் துப்பாக்கியை அவரிடம் கொடுத்தாள் அவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதை நீங்கள் அடிக்கடி பார்த்துக் கொள்ளுங்கோ. 'சிகரெட்' என்கிற குண்டு உங்களை நோக்கிச் சுடப்படுவதான ஒரு கற்பனைப் படிமத்தை மனதிலை வளக்க இது உதவும்..."

"..........."

அவர் ஒன்றும் பேசவில்லை. ஒரு வேளை உண்மையாகவே ஏதும் ஒரு பெரிய 'பிறசென்றை' அவளிடம் அவர் எதிர்பார்க்கிறாரோ?

"சோ... ஹவ் டு யூ... பீல்...?"

"லிற்றிள் டிப்பிறெஸ்ட்..."

"வாயிலை ஏதும் வைக்க வேணும் எண்ட 'சென்சேசன்' வரும். அப்ப அந்தப் பென்சிலை வைச்சுக்கொள்ளலாம். ஆஸ்மா கூடியிருந்தது. அதற்கான மருந்தை அவள் எழுதிக் கொண்டிருக்கையில் அவர்களின் 'வாட்'டைக் கடந்து நெற்றி முழுதும் நீறணிந்த ஒருவர் மனநோயாளர் 'வாட்'டை நோக்கி விரைந்து கொண்டிருந்தார்.

இவள் கைதட்டி அவரை அழைத்தாள். அவர் திரும்பி வந்து குனிந்து நின்றார்.

"பார்வை பாக்கிறதுக்குத்தானே போறீங்க...?"

"இல்லை... அம்மா... வந்து... நான்... இஞ்சை..."

"எல்லாம் தெரியும். உங்கடை பார்வையளையும் சூனியம் எடுக்கிற வேலையளையும் ஆஸ்பத்திரிக்கு வெளிலை வைச்சுக் கொள்ளுங்கோ... அநுமதி இல்லாமல் 'வாட்'டுக்குள்ளை வரக்கூடாது... திரும்பிப் போங்கோ..." என்று அவரைத் திருப்பி அனுப்பினாள்.

கழுவாத முகமும், பரட்டைத் தலையும், ஒழுங்கற்ற உடையுமாய் அந்த வாட்டிலிருந்து வெளியேறிய ஒரு பெண் நோயாளி அந்தப் பாதையால் போன ஒரு தாதியைப் பார்த்துவிட்டு,

"ஹலோ ஹலோ சுகமா? ஆமா நீங்க நலமா?" என்று அபிநயத்துடன் பாடினாள்.

வைத்தியசாலையின் படுக்கைகளைப் பிடித்துக் கொண்டு மாதக் கணக்கில் இருக்கும் பாரிய உள நோயாளர்களுக்குத் தனி இல்லம் அமைக்க வேண்டும் என்று வைத்தியர்கள் பேசிக்கொள்வது அவளுக்கு நினைவு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநேசன் வந்து கட்டிலில் அமர்ந்தார்.

"சேவ் - சிகரெட்ஸ் ஸ்மோக்" பண்ணிறதைப் பற்றி உங்கடை அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார். அந்தக் கேள்வியில் அவரது மனத்திடம் குறைந்திருப்பது தொனித்தது.

"சேவ் - சிகரெட்" எண்டு ஒண்டும் இல்லை. அதுகளிலை நோய் வாற நிகழ்தகவு கொஞ்சம் குறைவு. அவ்வளவுதான்..."

"இப்ப... எல்லாரும் கேக்கிற ஒரு கேள்வியை நான் உங்களிட்டைக் கேக்கப் போறன். சிகரெட் குடிக்கிற எல்லாருக்கும் நுரையீரல் புற்றுநோய் வரேல்லைத்தானே! மற்றது... சிலவேளை சிகரெட்டைத் தொடாதவைக்கும் புற்றுநோய் வருதுதானே... அப்ப...?"

"யெஸ், நல்ல கேள்விதான். இப்ப நாட்டிலை எல்லாரையும் பதுங்கு குழி வெட்டச் சொல்லிச் சொல்ல, சில சனம் கேக்குதாம்... குழிக்கு மேலை குண்டு விழாதோ எண்டு..."

"குழிக்கு மேலை குண்டு விழுற சந்தர்ப்பம் குறைவு. அப்பிடி விழுந்தாலும் காயம் வாற சந்தர்ப்பம் குறைவு..."

"அதுதான் - அதுதான் இங்கையும் - நிகழ்தகவு நல்லாக் குறையும். சிகரெட் பிடிக்கிறாள் ஒராள் வீட்டிலை இருந்தா... அந்த வீட்டிலை இருக்கிற சிகரெட் பிடிக்காத ஆக்களுக்கும் நிகழ்தகவு கூடும். "மொஸ்கிற்றோ கொயில்" புகை... பொதுவிலை மாசடையிற காற்று... இதுகளும் நிகழ்தகவுகளைக் கூட்டலாம்..."

"லங் கான்சரை" விட, வேறை ஏதும் நோய் வரக்கூடிய ஆபத்தும் இருக்கோ?"

"யெஸ்! இதய நோய்கள் 'எம்பிசீமா' குரல்வளைக் கான்சர், சிறுநீர்ப்பைக் கான்சர்... இதுகள் கூட வாற 'சான்ஸ்' புகைக்கிறவைக்கு மற்றவையைவிட அதிகந்தான்..."

"எனக்கு இந்தச் 'சிகரெட்'தான் இவ்வளவு நாளும் ஒரு மன அமைதியைத் தந்து கொண்டு வந்தது. இனிமேல் நான் ஒரு மன நோயாளியா வந்திடுவனோ எண்டு எனக்குப் பயமாயிருக்கு..." என்று சிவநேசன் கூறும்போது அவர் முகம் மிகவும் கறுத்துப் போனது. மூச்சு விட மிகவும் கஷ்டப்படுவதும் தெரிந்தது. இவருக்குத் தன்னால் முடிந்த வரையில் உதவ வேண்டும் என்ற சிந்தனை கல்யாணிக்குக் கூர்மை பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... சிகரெட் குடிக்கிறதாலை... உளவியல் ரீதியா... ஒரு தற்காலிக நிறைவு ஏற்படுந்தான். ஆனால்... கொஞ்சம் தண்ணிக்குள்ளை ஒரு எரியிற சிகரெட் துண்டைப் போட்டுப் பாருங்கோ. அந்தத் தண்ணி பழுப்பு நிறமா மாறும். இந்தத் தண்ணியைத் தவளையின்ரை வயித்துக்குள்ளை விட்டால் தவளை செத்துப்போம். இந்தப் பழக்கத்தை விட்டிட்டியள் எண்டால்... உங்கடை நிறை பத்து றாத்தல் எண்டாலும் கூடும். சிகரெட் குடிக்கிறதிலை வாற சந்தோஷத்தை வேறை பொருத்தமான வழியளிலை தேட முனைய வேணும்..."

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

இவ்வாறு கூறும்போது, இவரது வாழ்வின் விரக்திக்கு என்ன காரணமாயிருக்கும் என்று கற்பனை செய்ய முயன்றாள். அவராக விரும்பிச் சொல்லாதவிடத்துத் தானாகக் கேட்பது முறையில்லை என்று நினைத்துத் தொடர்ந்து அதுபற்றி எதுவும் கேட்காமலே,

"உங்களுக்கு என்னிலை நம்பிக்கை இருக்கா?" என்று கேட்டாள்.

"புரியவில்லை" என்பது போல் விழிகள் விரிய நிமிர்ந்து நோக்கினார் அவர்.

"உங்களை ஒரு 'ஹிப்னோடிக்' நிலைக்குக் கொணந்து உங்கடை அடி மனதிலை பதியக்கூடியதாச் சில விஷயங்களைச் சொல்லலாம். அதுக்கு... உங்களை 'சைக்கியாற்றிக் வாட்'டுக்கு மாத்தி ஒரு ஹிப்னோடிஸ்ற்றைக் கூப்பிடலாம் எண்டு யோசிக்கிறன். உங்கடை நன்மைக்குத்தான் இந்த 'ட்ரீற்மென்ற்' செய்யிறம் எண்டு நீங்கள் பூரணமா நம்ப வேணும். இல்லாட்டி... இது வேலை செய்யாது..."

"ஓ... அதுக்கென்ன? எனக்கு உங்களிலை பூரண நம்பிக்கை இருக்கு..."

வெளி மதிலில் செஞ்சிலுவைச் சின்னம் போட்ட சுவரொட்டி ஒன்று தெரிகிறது. "அநியாய உயிரிழப்புகளைத் தவிர்க்க நாம் அனைவரும் முதலுதவிச் சிகிச்சைகளை அறிந்துகொள்வோம்" என்று அதில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

உணவுப் பஞ்சம் ஏற்படாமல் உற்பத்தியில் ஈடுபட ஒன்று.

பதுங்கு குழி அமைக்க மற்றொன்று.

பல்கலைக்கழக 'ராகிங்' நிறுத்த இன்னொன்று.

ஆபாச மினி சினிமாக்களைத் தடுக்க ஒன்று.

எல்லாமே நல்ல மாற்றங்கள்தான்!

வானொலியும், தொலைக்காட்சியும், புதினப் பத்திரிகைகளும் செய்ய முடியாத மாற்றங்களைச் சுவரொட்டிகள் செய்துவிடும் அதிசயத்தை நினைத்து அவள் உள்ளுக்குள் வியந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக் கூட்டம் அடங்கித் தன் வழமையான முகத்தை அடைய ஆரம்பித்திருக்கும் தெரு.

ஐந்து நிமிடத்திற்கிடையில் மினிபஸ் ஒன்று வந்தது. இப்போதெல்லாம் இந்தப் பிரதான வீதியில் ஏழு நிமிடத்திற்கு ஒரு மினிபஸ் வருகிறது. அதுவும் நேரம் ஒரு நிமிடம் கூடத் தவறாமல்!

கல்யாணி ஏ.எல் படிக்கும் மாணவியாய் இருந்த காலத்தில் இந்த வீதியில் ஒரு மணி நேரத்திற்கு ஒரு இ.போ.ச பஸ் வரும். அதுவும் சில சமயம் 'பிறேக் டவுண்' என்று நிற்கும். இன்னும் சில சமயம் அரை மணி நேரம் 'லேட்'டாக வரும். பஸ்ஸுக்குக் காவல் நிற்பதே மிக அலுப்புத் தரும் போராட்டமாக இருக்கும் வாழ்வில்! இப்போது வேறு வகையான போராட்டங்கள்.

மினி பஸ்ஸினுள் ஏறினாள்.

பாடசாலைக்குப் போகிற ஓரிரு ஆசிரியைகளும் ஏறிக்கொண்டார்கள். உள்ளே மூச்சு விட முடியாத கூட்டந்தான் - வழமைபோல!

அந்த ஆசிரியைகளுக்கு யாரோ இரண்டு மாணவிகள் எழுந்து இடம் கொடுத்திருக்க வேண்டும். அவர்கள் அமர்ந்து விட்டார்கள். சக்கரங்களிடை தார்வீதி வழுக்கி ஓடுகிறது.

பூரணியைக் காணும்போது, "மினிபஸ்ஸுக்குள்ளை உங்கடை மதிப்பு டொக்ரேஸ்ஸை விட அதிகம்..." என்று சொல்லிச் சிரிக்கலாம்.

இவளுக்கு முன்னால் இவளைப் பார்த்தபடி மினிபஸ்ஸின் கூரைக் கம்பியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்த ஒரு கிழவர் கேட்டார்,

"பிள்ளை, நீங்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலை படிப்பிக் கிறியள்?" தன்னிடம் காணப்பட்ட எந்தத் தன்மை தன்னை ஒரு ஆசிரியர் என்று அவரை நினைக்க வைத்தது என்று சிந்தித்துப் பார்த்தாள். பதில் ஏதும் புலப்படவில்லை.

"நான் ஒரு ரீச்சர் இல்லை..." என்று சுருக்கமாய்ச் சொன்னாள். அதற்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த போஸ்ட் மாஸ்டரின் மனைவி சிரித்துவிட்டு, "அவ கவுண்மென்ற் ஆஸ்பத்திரியிலை டொக்டர்..." என்றாள்.

"ஆ... ஆ... அப்பிடியே? எனக்குத் தெரியாது" என்று வாயைப் பிளந்தார் கிழவர்.

பாடசாலைக்கு முன்னால் இறங்கி உள்ளே நுழைந்தாள். அதிபர் அவளை வரவேற்று முதலுதவி வகுப்பு நடைபெறும் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தில் முறைசாராக் கல்வி அதிகாரி ஒருவர் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். மண்டபம் நிரம்பியிருந்தது. பெரும்பாலும் பெண்கள் - பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட பெண்கள் - இளவயதினர்!

"நோய் காவிகளிடத்தில் காணப்படும் நோய்க்கிருமிகள் கெரில்லா முறையில் போர் புரிகிறார்கள். மறைந்திருந்து தாக்குகிறார்கள். ஆகவேதான் அவர்களை வெற்றி கொள்வது மிகக் கடினமாக இருக்கிறது. நோயாளர்களிலே நோய்க்கிருமிகள் நேருக்கு நேர் வெளிப்படையாகப் போர் நடத்துவதால்... நாங்கள் அவர்களை வெற்றிகரமாக அணுகலாம்..."

பேசிக்கொண்டிருந்தவரையும் சபையையும் ஒரு முறை ஆழ்ந்து கவனித்துவிட்டுத் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். இவள் அமர்ந்த அந்தக் கதிரையில் வருஷங்கள் கனமாக உட்கார்ந்திருந்தன. பழங்காலத்து வேலை - சிறப்பான உறுதியான வேலை!

உரை நிகழ்த்திக்கொண்டிருந்தவர் இவளைக் கண்டவுடன் "இப்போது வைத்திய கலாநிதி கல்யாணி அவர்கள் போர்க்காலத்தில் தேவைப்படும் முதலுதவி முறைகள் பற்றி விரிவுரை ஆற்றுவார்." என்று கூறிவிட்டு அமர்ந்துவிட்டார்.

மண்டபத்திற்கு வெளியே சில இளைஞர்கள் மண்வெட்டியால் ஏதோ வெட்டிக்கொண்டிருப்பது தெரிந்தது. இவள் அதை உன்னிப்பாகக் கவனிப்பதை அவதானித்தவர், "எங்கடை சுகாதாரக் குழுப் பெடியங்கள்... பள்ளிக்கூடச் சுற்றாடலிலை பதுங்கு குழி வெட்டிறாங்கள்... ஹெலி வந்து சுடுற நேரம்... அந்தரிச்சுப் பயந்து அழுற பிள்ளையளை இதுக்குள்ள விடலாம்..." என்று விளக்கம் தந்தார். தொடர்ந்து "இஞ்சை பாருங்கோ... அண்டைக்கு "ஆட்லரி ஷெல்" அடிச்சதிலை... இந்தக் கூரையும் யன்னல்களும் பட்டிருக்கிற பாட்டை..." என்று நிமிர்ந்து அந்த மண்டபத்தின் கூரையைக் காட்டினார்.

கல்யாணி எழுந்தாள். "நான் இதை விரிவுரை வகுப்பாய் இல்லாமல் செயல்முறை வகுப்பாய் நடத்த விரும்பிறன்..." என்று ஆரம்பித்துத் தனக்குத் தரப்பட்ட இரண்டு மணி நேரத்தில், தன்னால் முடிந்தவரை, செயற்கைச் சுவாசம், இதயப் பிசைவு, கட்டுகள் ஆகியவற்றைத் தான் செய்து காட்டி வகுப்பிற்கு வந்திருந்த ஒவ்வொருவரையும் கொண்டு செய்வித்தாள். வகுப்பு முடிந்து திரும்பிய போது, ஏதோ தன்னால் செய்ய முடிந்ததைத் திருப்திகரமாகச் செய்த நிறைவு - எமது மக்களின் ஆறுதலுக்காகச் செய்த நிறைவு இருந்தது மனதில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்கு வந்து சாப்பிட்டாள். அன்றைய தாக்குதலுக்குத் தாக்குப் பிடித்துவிட்ட வீடு! அம்மா கோவிலுக்குப் போய்விட்டார். இந்த நெருக்கடியான சூழலிலும் இறைவன்தான் எம்மைக் காப்பாற்றி வைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் நிம்மதியாக வாழும் அம்மா! அப்பாவையும் காணவில்லை. ஒரு வேளை சனசமூக நிலையத்தில் பத்திரிகை படித்துக் கொண்டிருப்பார்.

அவர்களின் வாழ்வு இனிமையானது. அப்பா எதைச் சொன்னாலும் அம்மா செய்துவிடுவார். சரியோ பிழையோ என்று சிந்திக்க மாட்டார். நடக்க முடியாதவற்றுக்காக அம்மா போராடுவதில்லை. அதனால் அமைதியாக இருந்தார். ஆனால், அவர்களின் பிள்ளைகளுக்கு - இவளுக்கோ அல்லது இவளின் அக்காவிற்கோ அதேபோன்ற இனிமையான வாழ்வை அமைத்துத்தர அவர்களால் முடியவில்லை. இவளுக்கு வந்த எத்தனை திருமணங்கள் குழம்பிப் போய்விட்டன! ஏன் அப்பா இதில் தோல்வி அடைந்தார்?

தனிமை! சட்டென்று எல்லாம் பிடுங்கி எறியப்பட்டது போன்ற ஒரு தனிமை திடீரென இவளுக்குள் நிரம்பியது. சாப்பிட்டு உடை மாற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போகலாம் என்று நினைத்தாள்.

◆❖◆

மன நோயாளர் 'வாட்'டை நோக்கி நடந்தாள், டொக்டர் முரளிதாசன் முன்னால் வந்தார்.

சொறியல் முரளி!

இவளைக் கண்டவுடன், "ஹலோ, கல்யாணி! எங்கை காலமை கிளினிக்கிலை உங்களைக் காணேல்லை?" என்று கேட்டபடி மிக அருகில் வந்தார். இவள் சற்றுப் பின்னே விலகி அந்த - அவரது தொடமுனையும் செயற்பாட்டைத் தவிர்த்துக்கொண்டாள். எந்தப் பெண்ணோடு எப்போது கதைக்க நேர்ந்தாலும், குறைந்த பட்சம் ஒரு முறையாவது அவளைத் தொட்டுக் கதைக்க முனையும் முரளி... அதுதான் ஆஸ்பத்திரியில் அவர்கள் வைத்த பட்டம்... சொறியல் முரளி!

கோட்டையில் இருப்பவர்களுக்கு உண்மையாகவே 'சொறி' ஏற்பட்டிருந்த விடயத்தைக் காலைப் பத்திரிகைச் செய்தி கூறியது.

முரளியுடன் பேசவேண்டாம் என்ற முகமும், ஏதோ பதில் சொல்ல வேண்டுமே என்ற முகமும் போராடி முதல் முகம் வெற்றி பெற்ற நிலையில் ஒரு சிரிப்புடனே முரளியைத் தாண்டி முன்னேறினாள்.

முரளிக்கு வீட்டிலே மனைவி, குழந்தைகள் எல்லாம் உண்டு. பிறகும் ஏன் இந்த ஆசை? இது மனநோயில் எந்த வகை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாட்டின் நுழைவாயிலில் 'உளமருத்துவத்தின் தந்தை' எனக் கருதப்படும் 'சிக்மண்ட் புரோயிட்டின்' படம் ஒன்று! சொல்ல முடியாத நம்பிக்கை அந்தப் படத்திலிருந்து வழிவதாக இவளுக்குத் தோன்றியது.

வாட்டில் ஒரு வைத்தியர் இருந்தார்.

அவருக்கு முன்னே ஒரு பெண் நோயாளி அமர்ந்திருந்தாள். முகம் இறுகியிருந்தது. கதிரையின் நுனியில் அமர்ந்திருந்தாள். யன்னல் காற்றுக்கு அடித்த சத்தம் கேட்டவுடன் துள்ளி எழுந்தாள். பின்னர் அமர்ந்தாள். கைவிரல்களை விரித்துக் காட்டுமாறு வைத்தியர் கேட்டார். விரிக்கப்பட்ட விரல்களில் நடுக்கம் தெரிந்தது. கண்மணிகள் விரிந்திருந்தன. தனது சொண்டை அடிக்கடி நாவினால் நக்கி ஈரப்படுத்திக் கொண்டிருந்தாள். வைத்தியரின் கேள்விகளுக்கு மிக அவசரமாகவும் விரைவாகவும் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். கைவிரல் நுனிகளில் நீலநிறம் தெரிந்தது.

"உங்களுக்கு என்ன செய்யுது?"

"கடுமையாத் தலை இடிக்குது. முதுகு, கழுத்து, கை, கால் எல்லாம் நோகுது. நெஞ்சு படபடவெண்டு இடிக்குது. பசி இல்லை..."

அந்த நோயாளியை அனுப்பிவிட்டு வைத்தியர் இவளிடம் சொன்னார், "இது ஒரு 'ரிப்பிக்கல் அங் சைற்றி ஸ்ரேற்', மகன் ஒருத்தன் காணாமல் போயிட்டான். அப்ப தொடங்கினது... இப்ப பொம்பர் தாக்குதலோடை கடுமையா வந்திட்டுது..."

"எல்லாருக்கும் சோதினைக் காலந்தான்"

அவளுக்குள் ஓர் உணர்வு மறுகியது.

"உங்களைப் போலை அகமுகியளுக்கு 'அங்சைற்றி' வாற சந்தர்ப்பம் அதிகம். கவனமாயிருக்க வேணும்..."

வைத்தியர் இவளைப் பார்த்துக் கூறினார் சிரித்துக்கொண்டு.

"ஏன் என்னை 'அகமுகி' எண்டு நினைக்கிறியள்?"

"நீங்கள் வலு 'கொன்சவேற்றிவ்! மற்றவையோடை கலந்து பழகிறது குறைவு. தனிமையை விரும்பிறது கூட... நான் அவதானிச்சிருக்கிறன். உங்களுக்கு "ஃபிரண்ட்ஸும்" குறைவா இருக்கும்..."

உண்மைதான்! பூரணியைவிட... தனக்கு நெருங்கிய சிநேகிதி என்று வேறு யாரும் இல்லை என இவள் நினைத்துப் பார்த்தாள்.

காண்டீபன்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டீபன் எழுதித் தயாரித்த நாட்டிய நாடகம் ஒன்றில் இவள் ஆடிய போதுதான் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. இந்த நட்பைப் பற்றிப் பூரணிக்குத் தெரியாது. இரகசியமாக இருந்தது. ஒரு வகையில் நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால்... சுய கௌரவம்...?

இப்போதைய இளைஞர்கள் காதலிப்பதும் கைவிரிப்பதும் மிகச் சாதாரணமாய் இருப்பது போல... இவளும் அப்படித்தான் என்று பூரணி நினைப்பாள்.

காண்டீபனுடைய அந்த நட்பு இறுதிவரை நிலைக்கக் கூடிய நட்பாக இருக்கும் என்றுதான் இவள் நம்பியிருந்தாள். ஆனால்... நடனத்தை, நாடகத்தைப் பொழுது போக்காகக் கொள்பவர்கள் உண்மையான இன்னல்களையும் இடையூறுகளையும் நம்புவதிலோ, ஏற்பதிலோ பிரியம் இல்லாதவர்கள் என்று எங்கோ வாசித்ததே உண்மையாக முடிந்து விட்டது.

அடிக்கடி நகத்தைக் கடிக்கும் காண்டீபனுடைய பழக்கம், பெண்களைக் கண்டவுடன் வெட்கப்படும் அவனுடைய தன்மை - இவையெல்லாம் அன்று அவளுக்கு மிகவும் பிடித்தமானவையாக இருந்தன. ஆனால்... அவையெல்லாம் அவனது திண்மையற்ற உள்ளத்தைக் காட்டும் அறிகுறிகள் என்று இப்போதுதான் தெரிகிறது!

எத்தனையோ வருடங்களாய் முற்றாகவே மறக்கப்பட்டுவிட்ட காண்டீபனுடைய நினைவு... இப்போது ஏன் வந்து தொலைக்கிறது? எங்கோ ஒரு வெளிநாட்டில் ஏதோ ஒரு வைத்திய சாலையில்... உயர் பதவியில் இருக்கக் கூடிய காண்டீபன்! உண்மையாகவே எங்கே என்று இவளுக்குத் தெரியாது. தெரியவேண்டிய அவசியமும் இல்லை. அந்த ஏமாற்றம்... இவ்வளவு காலமாய் இவள் மனம் திருமணச் சிந்தனைகளில் ஈடுபடாதமைக்கு அதுவும் ஒரு காரணமாகலாம்!

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7

"ஹைற், உங்கடை "பேசண்டை"ப் பாப்பம். அவரை அறைக்குக் கூப்பிட்டுக் கதைப்பம்!"

மிகக் கஷ்டப்பட்டு இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்த 'ஹிப்னோடிஸ்ற்' கூறிய சொற்கள் அவளைக் கனவில் இருந்து மீட்டன.

அடுத்த நாள்!

அறையில் இருந்த கட்டிலில் சிவநேசன் நீட்டி நிமிர்ந்து படுக்க வைக்கப்பட்டார். கை, கால்களைத் தளர்த்தி, தசைகள் எதையும் விறைப்பாக விடாமல், இலேசாக வைத்திருக்கும்படி நிபுணர் கூறினார்.

கூரையில் ஒரு குறிப்பிட்ட புள்ளியைத் தொடர்ந்து பார்க்கச் சொன்னார்.

"இப்ப உங்களுக்கு என்னுடைய குரல் மட்டுந்தான் கேக்கும். நீங்கள் முழுதா ஓய்வு நிலையிலை இருக்கிறீங்கள். உங்கடை கால்கள் தளர்வாய் இருக்கு. உங்கடை வயிற்றறையும் நெஞ்சறையும் தளர்வாய் இருக்கு. உங்கடை கழுத்தையும் கைகளையும் தளர்த்திக் கொள்ளீங்க. இப்ப உங்கடை தலையும் முகமும் தளருது... கண்கள் ஓய்வுக்கு வருது. உங்களுக்கு மெதுவா நித்திரை மாதிரி வருது. ஆனா நித்திரையில்லை. உங்களுக்கு என்ரை குரலைவிட வேறை ஒண்டும் கேக்கேல்லை. நீங்கள் இப்ப ஆழ்ந்த நித்திரைக்குப் போயிட்டீங்கள். உங்களாலை இப்ப கண் முழிக்கவே முடியாது..."

சிவநேசன் "ஹிப்னோடிக்" நித்திரைக்குப் போய்விட்டாரா என்று அறியக் கைவிரல்களை நிபுணர் அவரது முகத்துக்கு மேலே அசைத்துப் பார்த்தார். முகத்தில் எந்தவித மாற்றமும் காணப்படவில்லை. மிக இலகுவாகவே அவர் "ஹிப்னோடிக்" நிலைக்கு வந்துவிட்டார்.

இவர் பொதுவாகவே மற்றவரை இலகுவில் நம்பிவிடும் ஆளுமை உள்ளவராக இருப்பார் என்று கல்யாணி நினைத்தாள். அதனாலேயே இவர் வாழ்வில் ஏதும் பெரிய பிரச்சினைகளைச் சந்தித்திருத்தல் கூடும்.

ஆனால் காண்டீபன் அப்படி இல்லை. யாரையும் எளிதில் நம்பிவிட மாட்டார். எவரையும் சந்தேகப்படுவார். கலகலப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டீபனும் இரட்டைப் பிறவிகள் என்று கூட நினைக்கலாம். இவளைக் காணும் போதெல்லாம் உடலில் உள்ள குருதி முழுவதும் முகத்துக்கு வந்த நிலையில் வெட்கப்படுவார். ஒரு ஆண் அவ்வாறு வெட்கப்படுவது அசாதாரணம். அந்த அசாதாரணமே அவளுக்குப் பிடித்திருந்தது. அதைக் காதல் என்று நினைத்தாள்.

அது காதல்தான் ஒரு வகையில். அது காதல் என்று நம்பித்தான் இவள் அவரது பெற்றோருடன் பேசிப் பார்க்கும்படி அவரது நண்பர் ஒருவரைத் தூது விட்டாள். பேச்சு வார்த்தை நடந்தது. அப்போதும் காண்டீபன் மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. பெற்றோர் ஒரு 'டொக்டர்' மாப்பிளைக்குத் தேவையான சீதனம் கேட்டனர். அவ்வளவு கொடுக்கும் வசதி இவள் வீட்டில் இல்லை. அதே நேரம் அந்தச் சீதனப்பேயை விரட்டிவிட்டு வரும் துணிவு காண்டீபனுக்கு இருக்கவில்லை. நடந்து வந்த - கடந்து வந்த - ஈரமான சுவடுகள்!

இன்றைய எமது மண்ணில் ஒவ்வொரு இளைஞரும் உயர்கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் பல வகையான பாரபட்சம் கண்டு மனம் நொந்து வாழ்வது போல்... இன்றைய தமிழ் மண்ணில் ஒவ்வொரு பெண்ணும் சீதனப் பிசாசின் கொடுமையான வாய்க்குள் அகப்பட்டு...

இவளும் அதற்கு விதி விலக்கில்லை. பெண்கள் திருமணம் செய்யாமல் இருக்க முடியாதா? முடியும் என்றுதான் இவள் நினைத்திருந்தாள். ஒரு பெண்ணின் உயர்கல்வி திருமணத்திற்குத் தடையாக இருக்கிறதென்றால் கல்வி கற்காமல் இருப்பதைவிடத் திருமணம் செய்யாமல் இருப்பது சிறந்தது என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால் இந்த மனம் - இந்த விருப்பம் - என்ன இது?

இனப்பெருக்கம் செய்யும் இயல்புள்ளது உயிரி. ஆகவே திருமணம் நடைபெறாத வாழ்வு, பிள்ளை பெற்றுக் கொள்ளாத வாழ்வு உயிரியல் ரீதியில் தோல்வியடைந்த வாழ்வுதானே!

தனது மன உணர்வு சரியானது என்று கூறிப் போரிட அறிவும் துணைக்கு வந்திருப்பது இவளுக்கு அதிசயமாக இருந்தது.

'ஹிப்னோடிக்' நிலையில் அவரது அடி மனதுக்குச் சில ஆலோசனைகளைச் சொல்ல இப்போது நிபுணர் ஆயத்தமானார்.

"இப்ப நீங்கள் ஆழ்ந்த உறக்கம் போன்ற ஒரு நிலையிலை இருக்கிறீங்கள். ஆழ்ந்த "ஹிப்னோட்டிக்" உறக்கம். உங்களுக்கு இப்ப என்ரை குரலைத்தவிர வேறை ஒண்டும் கேட்காது. நீங்கள் இண்டையோடை புகைக்கிற பழக்கத்தை மறந்திடுவீங்க. இதனாலை உங்கடை வாழ்க்கை ஒரு நல்ல திருப்பத்தை அடையுது. ஒரு கெட்ட பழக்கம் உங்களை விட்டிட்டுப் போயிட்டுது. அதனாலை நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமும், திருப்தியும், நிறைவும் அடையப் போறீங்க. இந்தப் பழக்கத்தை விட்டதாலை நீங்க எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டீங்க. நீங்க இந்த நித்திரையிலை இருந்து எழும்பினாப் பிறகு, உங்களுக்கு எதுவுமே ஞாபகம் இருக்காது. ஆனா... இந்தப் பழக்கம் ஒரு கெட்ட கனவாப் போயிடும். இப்ப... நீங்க படிப்படியாய் பழைய நிலைக்கு வாறீங்க... உங்கடை கண்களின்ரை பாரம் குறையுது. கண்ணை முழிக்கலாம் போல இருக்கு... சரி... இப்ப கண்ணை முழிக்கப் போறீங்க...!"

சிவநேசன் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தார். அப்போது அறையினுள் அநுமதி இன்றி நுழைந்த ஒரு 'சிசோபிறினியா பேசண்ட்', "ஐயா, எனக்கு ஊசி போட வந்தனீங்களா? ஹெலி இங்கிலாந்துக்குப் போக முதல் போடுங்கோ... நானும் போகவேணும். என்னை வரட்டாம்... குரல் கேக்குது..." என்றாள்.

"இவைக்குத் தனியா ஒரு இல்லம் அமைக்கிறது பற்றி நாங்கள் 'சீறியஸா' யோசிக்கிறம். எங்களுக்கு உதவிறதுக்கு யாரும் முன்வரவேணும்..." என்றாள் கல்யாணி. நிபுணர்,

"அது பெரிய புரொஜெக்ற்" என்றார். பின்னர் சிவநேசனைப் பார்த்து, "ஹௌ டு யூ ஃபீல்...?" என்று கேட்டார்.

"நல்ல நித்திரை கொண்டு எழும்பின மாதிரி இருக்கு!"

"வேறை என்ன ஞாபகம் இருக்கு?"

"நீங்கள் என்னை இதிலை படுக்கச் சொல்லி ஒரு புள்ளியைப் பாக்கச் சொன்னீங்கள். அப்பிடியே நித்திரையாயிட்டன் போல கிடக்கு..."

"றைற், குட்... இந்த மாதிரி இன்னும் இரண்டு மூண்டு நாள் செய்து பாப்பம்..."

"ஹிப்னோடிஸ்ற்" புறப்பட ஆயத்தமானார். "தாங்க் யூ... எப்பிடிப் போகப் போறீங்க? 'வெகிகிள்' வருமோ?"

"வராட்டிப் பரவாயில்லை. நான் பஸ்ஸிலை போவன்..."

"இண்டைக்கு பஸ்ஸிலை போக மாட்டீங்கள். பஸ்ஸெல்லாம் சரியான சனம் எண்டு கேள்வி..."

ஆய்வுகூடப் பக்கமாக இருவரும் நடந்து வந்து கொண்டிருக்கையில் அவர் கேட்டார்,

"ஏன்? என்ன விஷேசம்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மன்னாரிலை செத்தவைன்ரை சவம் வந்திருக்கும் போலை! சனம் அள்ளுப்பட்டுப் போகுது..."

"நான் காலைப் பேப்பர் பாக்கேல்லை..." நிபுணர் சிரித்துக் கொண்டார்.

நிபுணருக்கான வாகனம் வந்திருந்தது. அவர் வெளியேற இவள் ஆய்வு கூடத்திற்கு வந்தாள்.

ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர் ஞானசேகர் அந்த நோயாளியிடம் கேட்டார்,

"நீங்கள் எத்தினை மணிக்குச் சாப்பிட்டனீங்கள்?"

"பன்னிரண்டு மணிக்கு..."

"இப்ப மூண்டு மணியாகுது. உங்கடை சோதினைக்குச் சாப்பிட்டு இரண்டு மணித்தியாலத்தாலை இரத்தம் எடுக்க வேணும். இனி எடுக்க முடியாது..."

அறையில் இருந்து அந்தப் பெண் நோயாளி வெளியேறினார்.

கல்யாணி இந்த அவதானம் பற்றி எதுவும் கூறாமல், 'மெடிக்கல் வாட்'டில் ஒரு நோயாளியின் ஈ.எஸ்.ஆர் மிகவும் உயர்வாக இருப்பது பற்றி ஞானசேகரனுடன் கதைத்துக் கொண்டிருந்தபோது, வெளியேறிய நோயாளி மீண்டும் தன் மகனுடன் வந்தாள். அந்த மகன் சொன்னான்,

"அம்மா ஒரு மணிக்குத்தான் சாப்பிட்டவ. நீங்கள் இரத்தம் எடுங்கோ."

ஞானசேகரன் அவனைப் பார்த்த பார்வை எரித்துவிடுவது போல இருந்தது.

வைத்திய சாலையினுள் பலர் "சின்சியராக" நடவாதிருப்பதற்கு, தம்மையும் ஏமாற்றி மற்றவர்களையும் ஏமாற்றுவதற்கு அவர்களின் அறிவீனம் காரணமா, யுத்த நிலைமை காரணமா - அல்லது இன்னும் பல காரணிகள் இருக்குமா என்று இவள் சிந்திக்க முனைந்தாள்.

◆ ● ◆

மேற்கிலே ஒரு மாலை மடிந்து ஆமை போல இருள் வந்து நின்றதொரு வேளையில் மிஸ்டர் சிவநேசன் வீட்டு வாயிலில் கல்யாணியும் பூரணியும் வந்திறங்கினர். முற்றம் முழுவதையும் மூடி நின்ற மல்லிகைப் பந்தலின் முகப்பிலே கதலி வாழைகள் பல நட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடந்தன. பாட்டம் பாட்டமாய் வந்த வாடைக் காற்று மல்லிகை மலர்களைத் தழுவி வந்த போது, நறுமணம் நிறைந்து வந்தது.

சிறிய வீடுதான்! யன்னல்களில் சேலைகள் தொங்கவில்லை. முற்றத்தில் கோலம் போடப்படவில்லை. சுவர்களில் காணப்பட்ட 'கிறில்' களுக்கிடையில், ஒட்டறைகள் துடைக்கப்படவில்லை. 'ரீப்போ'வில் பூச்சாடி இல்லை. மொத்தத்தில் நீண்ட காலமாய் ஓர் இல்லத்தரசியை எதிர்பார்த்து நிற்கும் வீடு!

சாய்கதிரையில் படுத்திருந்த கிழவி - தாயாக இருக்க வேண்டும் - இவர்களைக் கண்டவுடன், "தம்பீ!" என்று குரல் கொடுத்தாள். சிவநேசன் உள்ளிருந்து வெளியே வந்தார். வழமை போலவே நல்ல தோற்றத்தைத் தரும் உடை 'ரிப்ரொப்' ஆக அணிந்திருந்தார். சிரித்தபடி,

"இருங்கோ..." என்றார்.

"வேறை ஆர் ஆர் 'பார்ட்டி'க்கு வரீனம்?"

"நேசன் பத்திரிகையிலை வேலை செய்யிற ஆக்கள் சில பேரை அழைச்சிருந்தன். அவை வந்து போயிட்டினம்..."

"ஹெவி ஸ்மோக்கரா" இருந்த நீங்கள்... ஒரு மாதமாய் சிகரெட்டைத் தொடாமல் இருக்கிறது பெரிய விஷயம். அதை நீங்கள் வடிவா... இன்னும் பெரிசாக் கொண்டாடியிருக்கலாம்..." இது கல்யாணி!

"நான் படுற கஷ்டம் எனக்கெல்லோ தெரியும்."

சிரிப்பை ஒத்த நடுக்கம் அவரது உதடுகளில் ஓடிற்று. பத்துப் பன்னிரண்டு நாட்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் பளிச்சென்று முன்னால் நிற்கும் சிவநேசனின் அந்த முகம், 'டிப்பிரெசன், விரக்தி, வேதனை' கலந்த அந்த முகம்!

ஆஸ்பத்திரியில் இருந்து விடுவிக்கப்பட்ட இரண்டு நாளிலேயே அவர் இவளைத் தேடி வந்து விட்டார். "என்னாலை ஏலாது டொக்டர்..." என்று கூறிய போது அவரது நிலை மிகப் பரிதாபகரமாக இருந்தது. இலையெல்லாம் உதிர்ந்துவிட்ட மரம் போல!

'வித்றோல் சிம்ப்ரம்ஸ்' என்று இவள் நினைத்தாள், ஒன்றும் கூறவில்லை.

"காலமை எழும்பிக் கண்ணாடியிலை முகம் பாக்கேக்கை... எனக்கு முகமே இல்லாத மாதிரி இருக்கு டொக்டர்..." என்று சொல்லும்போது, அவர் கண்கள் கலங்கியே விட்டன. மனதில் இருப்பதைக் கொட்டித் தீர்க்கட்டும் என்று அவள் பேசாமல் இருந்தாள். பின்னர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேசன் பத்திரிகையிலை நேற்றும் எடிரோறியல் நல்லா இருந்திது.." என்று கதையை வேறு திசையில் திருப்பினாள். ஆனால் அவர் திரும்பவில்லை. தனது எண்ணங்களுடனேயே நின்றார்.

"எனக்கு வாழ்க்கையிலை இருந்த ஒரே ஒரு ஆதாரம் இந்த சிகரெட்தான். இப்ப அதுகும் இல்லை. 'கான்சர்' வந்தால், வந்திட்டுப் போகட்டும் என்று மறுபடியும் பத்தத் தொடங்கியிருப்பன். உங்கடை வெறுப்பைச் சம்பாதிச்சிடுவேனோ எண்ட பயம் மட்டும் இல்லாமலிருந்தால்..."

அவளுக்கு மேலெல்லாம் வியர்த்தது. வியர்த்தபோதே விறைத்தது."என்ரை வெறுப்பைச் சம்பாதிச்சா என்ன...?" அவள் வேண்டுமென்றே கேட்டாள். அவர் அவளை நிமிர்ந்து பார்த்தாள். காற்றை உள்ளிழுத்து உமிழ்ந்தார். பிறகு சொன்னார்,

"நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டு மனம் வைச்சு எனக்கு வைத்தியம் செய்தீங்கள். "டொக்ரேஸ்" எல்லாம் வெளிநாட்டுக்கு ஓடிட்ட நிலையிலை, இஞ்சையும் ஓடி அங்கையும் ஓடி எவ்வளவோ வேலை செய்தீங்கள். எனக்கெண்டு சிறப்பா ஒரு 'ஹிப்னோடிஸ்ற்'றைக் கூப்பிட்டீங்கள். அது தோற்றுப் போறது உங்களுக்கும் வேதனையா இருக்கும். அந்த வேதனையை உங்களுக்கு ஏற்படுத்த நான் விரும்பேல்லை..."

கையைத் தூக்கி மேலே போட்ட குழந்தையின் நிலை மாதிரிச் சில வினாடிகள்! அவர் பார்வை அவளில் நிலைத்தது. அவள் வெளியே பார்த்தாள். 'அசோகமரம்' யன்னலூடாகச் சற்றேனும் அசையாமல் நின்றது. கொஞ்சநேரம் போன பிறகு எல்லோரும் இந்த வைத்திய சாலையை விட்டுப் போய்விட்டால், (போகமாட்டார்களென்று அதற்கு எப்படித் தெரியும். மனிதர்கள் எதுவும் செய்யக் கூடியவர்கள் என்றுதான் அது நினைக்கும்.) அந்த மரம் தனிமையில் காற்றுடன் சேர்ந்து ஓர் இனிமையான பாடலைப் பாட இருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

"நல்லது, உங்கடை 'டிப்பிரெசன்' குறையிறதுக்கு ஒரு குளிசை தாறன். இரவிலை போடுங்கோ. ஒரு மூண்டு மாதத்துக்குப் பிறகு அதை மெல்ல மெல்ல விட்டிடலாம். வாழ்க்கையிலை வேறை சந்தோஷங்களைத் தேடிக் கொள்ளுங்கோ. செல்லப்பிராணி ஏதும் வளக்கலாம். தோட்டம் செய்யலாம். விளையாடலாம். முக்கியமாகத் திருமணம் செய்து கொள்ளுங்கோ..."

அவர் அதற்குப் பதில் சொல்லாமலே எழுந்து போய்விட்டார். இந்த அபிப்பிராயத்தை அவளால் எப்படிச் சொல்ல முடிந்தது என்று சிந்தித்தாரோ? அல்லது ஏன் சொன்னாள் என்று யோசித்தாரோ? ஒருவேளை ஒன்றுமே சிந்திக்கவில்லையோ?

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8

"ஹெவி ஸ்மோக்கரா" இருந்த நான்... ஒரு மாதமாய் சிகரெட்டைத் தொடாமல் நல்ல பிள்ளையாய் இருக்கிறது பெரிய விஷயம் எண்டு அதைக் கொண்டாட நீங்கள்தான் இன்னும் ஒரு ஆளையும் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறீங்கள்..." என்று சிவநேசன் கூறிய பிறகுதான், தான் பூரணியை அவருக்கு அறிமுகம் செய்யவில்லை என்ற பிரக்ஞைக்குக் கல்யாணி வந்தாள்.

"ஓ... சொறி... இவ பூரணி. என்னுடைய "பெஸ்ட் ஃபிரண்ட்... ரீச்சர்..." என்று அறிமுகம் செய்தாள். பூரணி பக்கம் திரும்பி, "இவர் மிஸ்டர் சிவநேசன், 'நேசன் பத்திரிகை ஆசிரியர்' என்றாள்.

இருவரும் பரஸ்பரம் கைகூப்பி வணக்கம் தெரிவித்துக் கொண்டார்கள்.

சிவநேசனின் அம்மா தள்ளாத நடையுடனும் அவர்களுக்குத் தேநீரும், பிஸ்கற்றும் தந்தார்.

"அம்மா இருங்கோ" என்றாள் பூரணி.

"பார்ட்டி" என்றால் இவ்வளவுந்தானா?" என்று சிரித்தாள் கல்யாணி.

"அம்மாவாலை பலகாரங்கள் செய்ய ஏலாது. கடையிலை வாங்கிறதிலை எனக்கு இஷ்டமில்லை..." என்று சிவநேசன் இழுக்க, "அதிலை நீங்க மிச்சம் "சயன்ரிபிக்தான்" என்று பாராட்டினாள் கல்யாணி.

"பலகாரங்கள் செய்ய மட்டுமில்லை, உங்கடை வீட்டுக் கடமையள் முழுதையும் செய்யவும், நீங்கள் திரும்பி 'ஸ்மோக்' பண்ணாமல் அன்பாலை உங்களைத் திசை திருப்பவும் இந்த வீட்டிலை ஒரு பொம்பிளை கட்டாயம் தேவை" என்றாள் பூரணி.

சிவநேசனின் மெல்லிய புன்னகை அவர் அந்தக் கருத்தை மறுக்கவில்லை என்பதை நிறுவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் பொது நூலகம் நல்லூர் பிரதேச சபை

"அம்மா, உங்களை மகனுக்குப் பொம்பிளை பாக்கிற யோசனை இருந்தால், நான் "புரொக்கராத்" தொழிற்படலாம் என்று யோசிக்கிறன்" என்று அம்மாவைப் பார்த்தாள் பூரணி.

"நான் கேட்டு அலுத்து விட்டிட்டன் பிள்ளை. எனக்கும் வயது போட்டுது. என்னாலை ஒண்டும் ஏலுதில்லை. ஒரு மகாலட்சுமி இந்த வீட்டுக்கு வாற நாள் எப்ப எண்டுதான் நான் பாக்கிறன். அப்பிடி வந்திட்டா... நான் நிம்மதியாக் கண் மூடுவன்" என்றாள் அம்மா.

முற்றத்தில் வாகனம் ஒன்று வந்து நின்ற சத்தம் கேட்டது. சிவநேசன் எழுந்தார். ரஞ்சனி ராக்ஸியில் இருந்து இறங்கினாள்.

"மாமி!" என்று ஓடிவந்து சிவநேசனின் தாயைக் கட்டிக் கொண்டாள் ரஞ்சனி.

"எல்லாம் போயிட்டுது. உங்கட அப்பாவையும், அண்ணையையும் விட்டிட்டு மற்றவை வந்தீங்களா?" என்று கேட்டார் சிவநேசன்.

"அவை இரண்டு பேரையும் யமதர்மராஜன்ரை வீட்டை அனுப்பிட்டு நாங்கள் வாறம்" என்று ரஞ்சனி சொல்ல எல்லோரும் பெருங் குரல் எடுத்து அழுதனர்.

ஏதோ பெரிய விபரீதம் நடத்திருப்பது கல்யாணிக்குப் புரிந்தது.

"நான் அம்மாவையும் கூட்டிக்கொண்டு வந்து இந்த வீட்டிலை நிக்கிறன். நிண்டு இந்தக் குடும்பத்தின்ரை தேவையளைப் பாக்கிறன்... உங்களுக்குச் சம்மதம் எண்டா..." என்று கூறிச் சிவநேசனின் முகத்தைப் பார்த்தாள் கல்யாணி.

"நீங்கள் ஏற்கனவே செய்யிற பெரிய சேவையளோடை இதையும் செய்தா... நான் உங்களைக் கடவுள் எண்டு பாப்பன்..." என்றார் சிவநேசன்.

கல்யாணி ஒரு திடமான முடிவுடன் தாயைக் கூட்டிவரப் புறப்பட்டாள்.

"நல்ல நாளாப் பாத்து வா... அவசரப்படாதை..." என்றாள் பூரணி.

"வலது காலை எடுத்து வைச்சு வா மோனை" என்றாள் சிவநேசனின் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலமாய் இருந்த வானத்தின் கிழக்குத் திசையில் விடிவெள்ளி காலித்திருந்தது.

துஷ்பிரயோகத்துடன் கூடிய மனவடு, நாலு பிள்ளைகளின் படிப்பு, மூன்று முதியவர்களின் பராமரிப்பு, 'ஒருவரின் தங்கியிருத்தல் நிலை' என்ற பெருஞ் சுமையைத் தாங்கப் போகிறாள் என்பது உள்ளுணர்வாகத் தெரிந்திருந்தும் கல்யாணியின் மனதில் 'கல்யாண வசந்தத்தில் "கல்யாண வசந்த மண்டபத்தில் " என்ற கீர்த்தனை ஒலிக்க ஆரம்பமாவதை... இனி....? அமைந்த...

(முரசொலி நடத்திய குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது - 1987
செம்மையாக்கலுடன்)

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்பனை

1

வெள்ள நீர் நிரம்பி நின்ற குட்டையில் மாலைவெயில் முகம் பார்த்தது.

வைரவர் கோயில் முன்றிலில் அவர்கள் இருவரும் வந்து வெள்ளை மணலில் உட்கார்ந்தபோது நான் நிமிர்ந்து நின்றேன். காற்றுக்குச் சலசலப்பதை நிறுத்திவிட்டு இவர்கள் உரையாடுவதைக் கேட்கவேண்டும்.

"எப்பிடி அம்மா இண்டைக்கு இலக்கியக் கூட்டத்திலை சனம்?"

"குறைவு, பரிசு குடுத்த ஆக்களையும் பரிசு வாங்கின ஆக்களையும் விட்டிட்டு எண்ணிப் பாத்தாச் சரியான குறைவு..."

"பரிசு வாங்கின ஆக்களிலை எத்தினை பேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை"

"பரிசு பெற்ற நூல்களைப் பற்றி விமர்சனம் செய்தவையிலை எத்தினை பேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை"

"பரிசுக்குத் தகுதியான நூல்களை மதிப்பிட்டவையிலை எத்தினை பேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை"

எனக்குக் கோபம் தலைக்கேறியது.

அதைச் சற்றுக் குறைத்துக் கொள்வதற்காக 'ஐஸ்' குடித்தேன். எனது பக்கவேர் முனைகளில் சடைத்திருக்கும் வேர்மயிர்கள் நிலத்தில் இருந்து உறிஞ்சித்தரும் குளிர்நீர்தான் நான் குடித்த 'ஐஸ்'.

பெண்கள் தொடர்பான கருத்துக்கள், கொள்கைகளில் மனிதர்கள் ஒரு நேரம் ஓர் ஒப்பனை போட்டுக்கொள்ளக் கூடும். பேசும்போது ஒரு முகம், எழுதும்போது வேறொரு முகம், நடத்தையில் இன்னொரு முகம். ஆனால் எனக்கு எப்போதும் ஒரு முகந்தான். அது ஒப்பனைகள் ஒரேயடியாய்த் துறந்த முகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிக் கலத்தால் ஆக்கப்பட்ட என் வேர்மயிர்கள் வேகமாய் மண்ணீரைப் பரவல் முறையில் உறிஞ்சிக் காழ்க் கலங்களினூடாக மேலே அனுப்பிக் கொண்டிருந்தன.

மாலை நேரம் ஆகிவிட்டதால் வெளியே ஒளிச்செறிவும் வெப்பமும் குறைந்திருந்தன.

இருந்தும் காற்று வேகமாக வீசிக்கொண்டிருந்ததால் ஆவியுயிர்ப்பு வேகத்தைக் குறைய விடாமல் பார்த்துக்கொண்டேன்.

ஆவியுயிர்ப்பு ஈர்ப்பு விசையைப் பிரதான காரணமாய்க் கொண்டு, வேரமுக்கம், நீர் மூலக்கூறுகளின் பிணைப்பு விசை, மயிர்த்துளை எழுகை ஆகிய விசைகளின் உதவியுடன் நீர் மணிகள் என் இலைகளை அடைந்தபோது, என் கோபத்தின் வேகம் குறைந்துவிட்டது என்றாலும்...

பெண் என்றால் என்ன இவ்வளவு அலட்சியம்?

எங்களுடைய தாவர இராச்சியத்தில் பலர் ஆண், பெண் வேறுபாடு அற்றவர்கள். அவர்கள் மூளைக்கும் மனதுக்கும் இடையில் நடைபெறும் இந்தக் கயிறிழுப்புப் போட்டியில் சிக்குப்படத் தேவையில்லை.

எனக்குப் பக்கத்தில் நிற்கிறாரே இந்தக் கிழட்டு ஆலமரத்தார் - இவருக்கு இந்த ஊரின் கதைகள் பல தெரியும். ஆனாலும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் இவரது உணர்வுகளை அதிகம் பாதிப்பதில்லை. அவர் தனது பூக்களில் ஆண், பெண் சமத்துவம் காட்டி, வேறுபாடு தெரியாமல் 'அர்த்த நாரீஸ்வரப் பூ' வடிவம் கொடுத்துக்கொள்வார்.

எனக்குத்தான்...!

பெண்கள் எப்படியெல்லாம் வேதனைப்படுகிறார்கள் என்பதை அறிகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கறுத்து இறுகிய எனது உடல் மேலும் கறுத்துப் போகும்.

"ஏன் அம்மா? பொம்பிளையள் ஒருத்தரும் புத்தகம் எழுதேல்லையா?"

மகள் இன்னும் அந்தச் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை.

"எழுதியிருக்கினம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொம்பிளையள் படிக்கிறது எங்கடை நாட்டிலை குறைவோ? அவையின்ரை அறிவு குறைவு எண்டு சொல்லலாமோ?"

"இல்லை..."

பொம்பிளையளுக்கு ஆக்கத்திறன் குறைவெண்டு சொல்ல லாமோ?"

"நிரூபிக்கப்படேல்லை"

"அப்ப?"

"......................."

இவர்கள் சிக்குப்பட்டு விடையைத் தேடிக்கொண்டிருக்கட்டும். எனக்குத் தெரியும்!

இப்போது என்மீது குந்திக்கொண்டிருக்கும் இந்த 'ஆம்பிளைக் காகங்கள்' ஒரு நாளும் 'பொம்பிளைக் காகங்கள்' குந்திக்கொள்ள இடம் தரா என்று!

நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

"இந்தப் பரிசளிப்பு விழாவை நடத்தின இலக்கியக்காறரின்ரை மனிசிமார் கூட்டத்துக்கு வந்தவையோ?"

"இல்லை... அவை ஒருநாளும் வாறேல்லை."

"அப்ப... இவைக்குப் பொம்பிளையளிலை ஒரு பயம் இருக்கோ?"

"இடங்குடுத்தால் தங்களை விழுத்திப் போடுவினம் எண்டு..."

".....ம்......"

"இருந்தாலும் இருக்கும்..."

பல்கலைக் கழகத்தில் படிப்பதால் போலும் மகளின் சிந்தனை ஆய்வுரீதியாகத் திரும்பியது.

எனக்கு ஒரு நாடோடிக் கதை நினைவு வந்தது.

ஒரு அரசன் தனது மனைவியாகிய அரசிக்குச் சரியான பயமாம். அந்த நாட்டில் எத்தனை ஆண்கள் மனைவிக்குப் பயப்படாமல் வாழ்கிறார்கள் என்று அறிய அவர் மனம் விரும்பியதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்டில் உள்ள திருமணமான ஆண்கள் எல்லோரையும் அரசவைக்கு அழைத்தாராம்.

எல்லோரும் வந்து கூடிய பின்னர், "ஏதாவது ஒரு வகையில் மனைவியின் சொல்லுக்குப் பணிகிற எல்லாரும் அந்த மண்டபத்திற்குச் செல்லுங்கள்" என்றாராம் அரசர்.

ஒருவர் பின் ஒருவராகப் பலர் மறு மண்டபத்திற்குச் சென்று விட்டார்களாம். இறுதியாக ஒருவர் மட்டும் இந்த மண்டபத்தில் நின்றாராம்.

"அவரைக் கூப்பிட்டுப் பரிசு கொடுப்போம்" என்று அரசர் கூறியபோது, "அவர் போகாத காரணத்தைக் கேட்டுவிட்டுப் பரிசு கொடுப்போம்" என்றாராம் மந்திரி.

"நீர் ஏன் அந்த மண்டபத்திற்குப் போகவில்லை?" என்று அரசர் கேட்க,

"மற்றவர்கள் கூட்டமாக நிற்கும் இடத்திற்கு நீ போகக்கூடாது. தனியாக ஓரிடத்தில் நிற்க வேண்டும்" என்று மனைவி கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டவ" என்றாராம் அந்த மனிதர்!

இந்தக் கதையை ஒருநாள் சிதம்பரம்பிள்ளை உபாத்தியாயர் மண்ணெண்ணெய் மணியத்திற்குச் சொன்னவர்.

ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்துக்குச் சிறுபான்மை இனத்தில் எப்போதும் ஒரு பயம் இருக்கும். "இவங்களுக்கு எல்லா உரிமையும் குடுத்தால் இவங்கள் எங்களை நசுக்கிப் போடுவாங்கள்" என்று.

அதன் காரணமாகவே அது சிறுபான்மை இனத்தை அடிமையாக வைத்திருக்க முயலும்!

அதுதான் பெண்கள் விடயத்திலும் ஒருவேளை உண்மையாக இருக்கலாம்!

பக்கத்தில் நின்ற தென்னை மரத்தார் போட்டிருந்த புதுப்பாளையின் அடியில் இருந்த பெண் பூக்களைப் பார்த்துக் கேட்டேன்,

"உங்களுக்கும் ஆண் பூக்களுக்கும் என்ன வித்தியாசம்?"

"எங்களுக்கு முதலிலை இருந்தே சூலகம் வீங்கி இருக்கும். அவைக்குச் சூலகம் இல்லைத்தானே... அவை சின்னனா இருப்பினம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று இறங்கியிருந்த சினம் என்னுள் மீண்டும் கிளர்ந்தது.

"வண்டி வீங்கிறதுதான் வித்தியாசம். அதுதான் பொம்பிளையளுக்கு வேலையும் எண்ட மாதிரித்தான் உங்கடை கதை... விசர்க்கதை..."

மாறிமாறிப் படர்வு கொண்ட எனது சினம் கடைசியில் என்மீதே குத்திட்டு நிலைத்தது.

"நாங்கள் இப்பிடியே பேசாமல் பாத்துக்கொண்டிருந்தால் - இது நெடுக இப்பிடித்தான் இருக்கும்..."

இதை நான் எனக்குக் கீழ் அமர்ந்திருந்த அந்தப் பெண் விரிவுரையாளரிடம் உரப்பாகச் சொன்னேன். எனது மொழிதான் அவர்களுக்குப் புரிவதில்லையே! அவர்கள் தங்களுடைய கதை!

"அம்மா... அப்ப... பரிசுகள் குடுத்து ஊக்குவிக்கிறதிலை பொம்பிளையளை வேணும் எண்டு புறக்கணிக்கினம்... என்னம்மா?"

"உங்கடை பள்ளிக்கூடம் கட்டப்பட்டு இப்ப எத்தனை வருசம்?"

"கிட்டத்தட்ட எண்பது வருசம் ஆகுது..."

"இதுவரைக்கும் எத்தினை அதிபர்மார் இந்தப் பள்ளிக்கூடத்திலை வேலை செய்திருப்பினம்?"

"பத்துப் பேருக்கு மேலை..."

"அவையிலை எத்தினை பேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை"

"வைஸ் பிரின்சிப்பல்மாரிலை எத்தினை பேர் பொம்பிளையள்?"

"ஒருத்தருமில்லை"

"பொம்பிளையள் ஆசிரியர் வேலைக்கு வாறது குறைவோ?"

"இல்லையே, இப்பகூட எங்கடை பள்ளிக்கூடத்திலை பொம்பிளையள் தான் கூடப்பேர் ரீச்சர்ஸ் ஆய் இருக்கினம் எண்டு மாலா சொன்னவ"

"நீங்கள் படிக்கேக்கை...?"

"அப்பவும் அப்பிடித்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப ஏன் அவை ஒருத்தரும் அதிபராய் வரேல்லை?"

வெயிலின் சாய்வு விரைவாய் இருந்தது.

தாயும் மகளும் எழுந்து வயிரவப் பெருமானைச் சுற்றிவந்து வழிபட்டனர்.

கோயிலின் வடகிழக்கு மூலையில் ஒரு பூஞ்சோலை... அங்கே பூக்கள் அழகிய பல வண்ணங்களில்!

அதைப் பார்த்து ரசித்தபடி சில நிமிடங்களைப் போக்கினர். வைக்கோல் நிறத்தில் பரவியிருந்த மாலைவெயில் அந்தப் பூக்களின் அழகை அதிகரித்திருந்தது.

மலர்களை நோக்கிய மகள் ராஜியின் விழிகளை நான் உற்று நோக்கினேன். அதில் கொஞ்சம் கனவு, கொஞ்சம் கவிதை!

விரிவுரையாளர், விமர்சகர் திருமதி சரஸ்வதி விஜயராஜாவைத் தேடி அவரது இரண்டாவது மகன் ரம்யன் வந்தான்.

"அம்மா... உங்களிட்டை ஆரோ வந்திருக்கினம்"

"யார்?"

"யார் எண்டு தெரியாது..."

"கோயிலடிக்கு வரச்சொல்லு. ராஜி நீ வீட்டை போ..."

பிள்ளைகளை அனுப்பிவிட்டு அவள் தனிமையில் காத்திருந்தாள். இந்தக் கோயில் மணலில் இருப்பதில் ஒரு தனி விருப்பம்! சரஸ்வதி சிறு வயது முதலே ஓடித்திரிந்து விளையாடிய கோயில் வீதியும் மணலும்...

சீழ்ப்பிடித்த இந்தச் சமுதாயத்தில் பெண்கள் மிகக் கேவலமாய் அடக்கி ஒடுக்கப்படுவதை எந்தச் சிந்தனை மருந்தின் மூலம் செப்பனிடலாம் என்பது அவள் சிந்தனையாய் இருக்கலாம்.

எதிரே காணப்பட்ட சிறிய ஒழுங்கை ஒன்றினூடாகச் செம்மறியாட்டு மந்தைகள் வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்தன. அவற்றின் பின்னால் மூக்கில் சளி ஒழுக ஒரு சிறுமி - மாங்கண்டு. கையில் சிறிய தடியுடன் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தாள்.

தனியாக இருந்த சரஸ்வதியை நான் ஆராய்ந்தேன்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 2

சரஸ்வதியின் இதழ்களில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட சோகத்தின் பூச்சுத் தென்பட்ட போதிலும், புன்னகை கொலுவிருந்த ஒரு பொற்காலத்தின் தடயங்கள் இன்னும் அழியாமல்தான் இருந்தன. இருபது வருடங்களுக்கு முந்திய பொற்காலம்!

நான் மட்டும் கவிஞனாக இருந்திருந்தால் - இந்தப் பெண்ணின் கதையை ஓர் அமரகாவியமாய்ப் பாடித்தள்ளியிருப்பேன். நான்தான் வெறும் பனையாயிற்றே!

அதுவும் பெண் பனை!

சிறிது நேரத்தில் ஓர் இளைஞன் அவளிடம் வந்தான். அவனது தலைமுடி அங்கொன்றும் இங்கொன்றுமாக இளநரை காட்டத் தொடங்கி யிருந்தது.

"என்ரை பேர் பாலகுமாரன்..."

"ஓ... குட் ஈவினிங்... நீங்கள் எழுத்தாளர் பாலகுமாரன் இல்லைத்தானே...!"

"நான் எழுத்தாளர் இல்லை. நீங்கள் சில எழுத்தாளர்களின்ரை நாவல்களுக்கு அருமையா விமர்சனம் செய்யிறதை நான் பாத்திருக்கிறன். அண்டைக்கு ஒரு கூட்டத்திலை 'பாலநாதன்'ரை 'வெருண்ட வானம்' நாவலின்ரை முடிவு இயல்பாய் அமையேல்லை எண்டதை மிக அருமையாச் சொல்லி விளங்கப் படுத்தினீங்கள். கதாநாயகனை எழுத்தாளர் வலிந்துகட்டிக் கொலை செய்வதாய்ச் சொன்னீங்கள்..."

"ஓ..."

"நான் இப்ப ஒரு கதை சொல்லப்போறன். அதின்ரை முடிவை நீங்கள் எனக்குச் சொல்லவேணும். உங்கடை அறிவு, அநுபவம், சிந்திக்கிற ஆற்றல் இதுகளிலை எனக்கு நம்பிக்கை இருக்கிறதாலை உங்கடை முடிவு சரியா இருக்கும் எண்டு நம்பிறன்..."

"கேளுங்கோ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் இளைஞன் ஒரு யுவதியை விரும்பினான். பாடசாலை நாட்களிலை அவளை அவனுக்கு ஏனைய மாணவர்கள் கரும்பலகையிலை கலியாணம் செய்து வைப்பினம். பாடசாலைக் காலம் முடிஞ்சாப்பிறகு அவள் இயக்கம் ஒண்டிலை சேந்திட்டாள். அப்பவும் அவளின்ரை மேடைப் பேச்சுகள் அவனை அதிகமாய்க் கவர்ந்தன. அந்தக் காலத்திலை அவன் அவளிட்டைத் தன்ரை விருப்பம் பற்றிக் கேட்டான். சுதந்திரம் அடைஞ்ச பிறகுதான் அதைப்பற்றிச் சிந்திக்கலாம் எண்டு அவள் சொல்லிப்போட்டாள்.

இந்த மண்ணிலை யுத்தம் வந்திது. இயக்க உறுப்பினர்கள் கிழக்கெண்டும் மேற்கெண்டும் சிதறி ஓடிச்சினம். அவள் எங்கை எண்டு அவனும் கூடியவரை விசாரிச்சுப் பாத்திட்டான். ஒண்டும் தெரியேல்லை. மரணம் அடைஞ்சாளா, உயிரோடை இருக்கிறாளா ஒண்டும் தெரியேல்லை.

இளைஞனுக்கு மயிர்கள் நரை காணத் தொடங்கிட்டுது. அவனுக்கு இப்ப பல கலியாணங்கள் பேசப்படுது. இந்த நிலையிலை அவன் அவளுக்காகக்.....

காத்திருக்க வேணுமோ?"

வெளியே இருள் வாய்கள் பூமியை விழுங்கக் காத்திருந்தன.

வேலியோரத்தில் நின்ற தெருவுக்குக் கழுத்தை வளைக்கும் அடர்த்தியான பூவரசு மரங்கள் இந்த அறிவாளியின் பதிலுக்குக் காத்திருந்தன.

"அந்த இளைஞன் அவளுக்காகக் காத்திருக்க வேணும்"

"எவ்வளவு காலம்?"

"மரணம் வாற வரைக்கும்..."

தெற்குப் புறத்தில் இருந்த வெங்காயத் தோட்டத்தில் விரித்திருந்த பச்சைப் பாயை யாரோ சுருட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மஞ்சளைப் பூசிக்கொண்டு விழிக்கிறது அது!

திருமதி விஜயராஜாவின் பதில் மிகவும் வக்கிரந்தான்! அதில் சந்தேகமேயில்லை.

எனக்கு அந்த இளைஞனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. அவன் திரும்பவும் கேட்டான்,

"ஆனால்... அந்த இளைஞன் அவளுக்கு எந்த விதமான வாக்குறுதியும் குடுக்கேல்லை. உண்மையிலை சொல்லப்போனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனை விரும்பினாளோ அல்லாட்டி அது ஒரு பக்கக் காதல்தானோ எண்டது கூட அவனுக்கு நிச்சயமாத் தெரியாது."

திருமதி விஜயராஜா அந்த இளைஞனை ஒரு குத்துப் பார்வை பார்த்தாள்.

"ஆனால்.. அவன் அவளை விரும்பினான் எண்டு அவளுக்கு நிச்சயமாய்த் தெரியுமெல்லோ?"

"தெரியும்..."

"அப்ப... காத்திருக்கத்தான் வேணும்..."

மீண்டும் மிக உறுதியாய் அந்தப் பதில்!

அவன் இத்துடன் எழுந்து போய்விடுவான் என்றுதான் நான் நினைத்தேன். அவன் திரும்பவும் மிக மெதுவாய்த் தொடங்கினான்,

"பெண்களிலை இரண்டு வகையான பெண்கள் இருக்கினம். ஒண்டு குடும்பத்துக்கு உதவுற வகை, மற்றது சமுதாயத்துக்கு உதவுற வகை..."

"......ம்....."

"சமுதாயத்துக்கு உதவ வெளிக்கிட்டவை பிறகு குடும்பத்துக்கு உதவாயினம்..."

'ஓகோ... இது உமக்கு முந்தித் தெரியாதோ?"

"இல்லை... நான் சொல்றது என்னெண்..."

"போதும்..."

திருமதி விஜயராஜாவின் முகம் முழுக்கக் கோபம்.

"என்ரை கருத்..."

"பொறும்... ஆண்களிலையும் சமுதாய சேவை செய்ய வெளிக்கிட்ட எல்லாரையும் வீட்டை விட்டுக் கலைக்க வேணும்... மகாத்மா காந்தி தொடக்கம்... மண்டேலா வரை எல்லாரையும்..."

அவன் பதில் கூறவில்லை.

"ஆம்பிளையள் மட்டும் ஊரிலை உள்ள பொம்பிளையள் எல்லாருக்கும் சமூகசேவை செய்ய வெளிக்கிட்டாலும் பரவாயில்லை... காலமை ஆறு மணிக்கே வெளிக்கிட்டு எல்லாச் சேவையளும் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிச்சு இரவு பத்து மணிக்கு மேலை வீட்டை வந்து சேர்ந்தாலும் பரவாயில்லை... அல்லது இடைக்கிடை வீட்டை வராட்டிக்கூடப் பரவாயில்லை. அவையளை வீட்டிலை தெய்வமாக் கும்பிடவேணும். அப்பிடித்தானே?"

அவளது குரல் மிக உயர்ந்திருந்தது.

திருமதி விஜயராஜா ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறார் என்பது அந்த இளைஞனுக்குப் புரிந்திருக்காது. அவன் பார்ப்பது அவளின் 'விரிவுரையாளர், விமர்சகர்' முகத்தை மட்டுமே!

எனக்குப் புரிந்தது. திருமதி விஜயராஜாவின் 'பெண் முகத்தை - அல்லல்பட்ட பெண் முகத்தை' நான் பார்த்தேன்.

அவரின் சினம் சிறிது நேரத்தில் தானே தணிந்தது. அந்தப் பூங்கொல்லைப் பூக்களைக் காட்டி மீண்டும் அவரே பேசினார்.

"இந்தப் பூக்கள் பூத்திருக்கு. பூக்கிறபோதே, தாங்கள் ஆருக்கோ அர்ப்பணம் செய்யப்படுறதுக்காக ஒரு நல்ல மாலையாகவேணும் எண்டுதான் கவலைப்படுதுகளே ஒழிய, நல்ல வித்துக்களை உருவாக்கவேணும், நிலத்துக்குப் பசளையாகிப் பயன்படவேணும் எண்டு கவலைப்படுறதில்லை. அது ஒரு வகையிலை பூக்களின்ரை பிழையுந்தான்..."

இறுதியாக அந்தப் பிழையைத் தன்னில் ஏற்றிக்கொண்ட பிறகு அவர் சாந்தமடைந்தார்.

இளைஞன் எழுந்துகொண்டான்.

சில நிமிடங்கள் அவர்கள் இருவருக்குமிடையே சவ ஊர்வலம் செல்வது போன்ற அமைதி!

அந்தக் கிராமத்துச் செம்மண் அவனது செருப்புடன் உறவு கொள்ள முனைந்து வெற்றி கண்டது.

ஓங்கி உயர்ந்த நெடுவானில் மெல்ல ஓய்ந்து சரிந்து படுத்தது மேகம்.

வெள்ளை நிறப் பின்னணியில் மெல்லிய நீல நிறப் பூக்களைக் கொண்ட சேலை அணிந்திருந்த திருமதி விஜயராஜாவும் வீடு செல்ல எழுந்தார்.

"வெள்ளை நிறத்தை விரும்புகிறவர்கள் பொதுவாக நேர்மையானவர்கள்" என்று நான் நினைத்துக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சரஸ்வதி விஜயராஜாவின் தந்தையார்தான் சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர்.

அவர் இறந்து போவதற்கு முதல்நாள் கூட எனக்குக் கீழே வந்து நின்றார். தேவாரம் பாடினார். கணபதியை என்மேல் ஏற்றி 'நுங்கு' வெட்டுவித்தார். கணபதியை அவர் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்புவரை படிப்பித்தார். எனக்குக் கீழேயும் என் சகோதரர் நிழலிலும் பலநாள் நியமமில் கல்வி கற்பித்தார். கணபதிக்கு அவர்தான் கடவுள் போல!

அன்றும்... தேவாரம் பாடிக்கொண்டிருந்தார். திடீரென்று கணபதிக்குச் சொன்னார்,

"டே, கணபதி ஆங்கிலம் வாணிப மொழி. இத்தாலி காதலின்ரை மொழி. இலத்தீன் சட்டத்தின்ரை மொழி. பிரெஞ்சு தூதின்ரை மொழி. ஜேர்மன் தத்துவத்தின்ரை மொழி. தமிழ் எப்படிப்பட்ட மொழி தெரியுமே?"

"சொல்லுங்கோ வாத்தியார்..."

"தமிழ் பக்தியின்ரை மொழியடா. திருவாசகம் படிச்சால் உனக்கு விளங்கும்..."

அவர் என்னருகில் நின்று கணபதிக்கு அந்தக் கடைசிப் பாடத்தைப் படிப்பித்தபோதே நான் அவரை நெருங்கும் மரணத்தின் அரும்பு மயிர்களைப் புரிந்துகொண்டேன். வழக்கமில்லாத ஒரு மூச்சு... தொய்வு இழுப்பது போல... அன்று அவரிடம் காணப்பட்டது.

அடுத்தநாள் இந்த வேலி மூலையில், 'கிளிப்' கழற்றி எறியப்பட்ட 'கிரேனேட்' ஒலியுடன் அவர் இதயம் எழுபத்தொரு வருடம் தொடர்ந்து துடித்ததை நிறுத்திக்கொண்டது. அவருக்கு ஆண்பிள்ளைகள் இல்லை.

இறுதிச் சடங்கு செய்வதற்காக வருகை தந்திருந்த சைவக் குருக்களிடம் நாற்பத்தொரு வயதான சரஸ்வதி, அழுதபடி கேட்டார்,

"குருக்கள்... அப்பாவுக்கு ஆம்பிளைப் பிள்ளை இல்லை. என்னைத்தான் அவர் ஆம்பிளைப் பிள்ளை போலையும், பொம்பிளைப் பிள்ளை போலையும் வளத்தார்... நான் கிரியை செய்யப்போறன்..."

குருக்கள் நக்கலாகச் சிரித்தார். பிறகு சொன்னார்,

"உம்மடை அப்பா புண்ணிய ஆத்துமா. அவர் செய்த சேவையாலை அவற்ரை உயிர் நிச்சயமாச் சொர்க்கத்துக்குப் போயிடும். அதை ஏன் ஒரு பொம்பிளை இறுதிச் சடங்கு செய்து தடுக்க வேணும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்களுக்கு உபாத்தியாயரிடம் நல்ல மரியாதை உண்டு. அவர் உண்மையாகவே மனதில் பட்டதைத்தான் சொல்கிறார் என்று சரஸ்வதிக்குப் புரிந்திருக்கும். ஆனால்... அவருக்கு மகன் இல்லை. மருமகனும் இல்லை. மகளும் இறுதிச் சடங்கு செய்யமுடியாது என்றால்...

இனி ஒரு மூன்றாவது நபரைக் கேட்க வேண்டும். மௌனமாய் உள்ளுக்குள்ளே தெறிக்கும் ஊமை வலி!

அடர்த்தியாய் விரித்திருந்த இருட்டுக் கூந்தலுக்குள் அவளுடைய வெளுத்த முகம் மெதுவான சோகக் கண்களுடன் பதிக்கப்பட்டிருந்தது.

சிறிது நேரச் சிந்தனையின் பின் அவள் சொன்னாள்,

"அப்பாவுக்கு இறுதிக் கிரியை செய்யாமல் விடுறதிலை எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால்... மூண்டாவது குடும்பத்திலை இருந்து ஒரு ஆம்பிளை இறுதிச் சடங்கு செய்து அவர் சொர்க்கத்துக்குப் போறதைவிட நான் செய்து அவர் நரகத்துக்குப் போறது நல்லது..."

அவள் விடாப்பிடியாய் நின்றுகொண்டதில் குருக்கள் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

"இதுதானே... இந்தக் குடும்பம் இப்பிடிப் போனது. எல்லாத்துக்கும் பொம்பிளை மூப்பு..."

செத்தவீட்டிற்கு வந்திருந்த சில ஊர்வாய்கள் முணுமுணுத்துக் கொண்டன.

உலைவாயை மூடிவிடலாம் ஒருவேளை. ஊர்வாயை மூடுவது யார்?

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3

என் உயிரே,

இன்று உங்கள் பிறந்தநாள் இல்லையா? முதலில் நான் வாழ்த்தாமல் வேறு யார் வாழ்த்துவதாம்?

என் சரஸ்வதி! இன்று நீங்கள் என்னை நினைக்கவில்லையா? எனக்கு வடை, பாயசம், ஒன்றும் இல்லையா? ஆ... வாயில் போடுங்களேன். அதுவும் நீங்கள் சாப்பிட்ட மறுபாதிதான் வேண்டும்.

தாங்களேன் சரஸ்! தராவிட்டால் மூக்கைத்தான் கடிப்பேன், போங்கள்!

வேண்டாம்... இனி! இவ்வளவு நேரமும் தரவில்லை. இனி என்னத்துக்காம்?

கண்ணுக்குள்ளே... கண்ணாடியில் தோன்றும் உங்கள் கண்ணுக்குள்ளே என்னைப் பாருங்கள் தெரிகிறதா?

காதுக்குள்ளே என் வாழ்த்துக் கேட்கிறதா?

நீங்கள் எப்போது என் வீட்டுக்கு வருவீர்கள் என்று சொன்னால், உங்களைப் பற்றிய செய்திகளை நான் வீட்டில் சொல்லிவிடுவேன், சரஸ்! நீங்களும் உங்கள் வீட்டில் சொல்லி நல்ல செய்தியுடன் வாருங்கள். நீங்கள் தாமதித்தால்... நான் பயப்படுவது போல் ஏதும் நடந்துவிடலாம்.

ஆனாலும் என் விருப்பத்துக்கு எதிராக என் வீட்டில் எதுவும் நடக்காது. பயம் வேண்டாம்.

உங்கள்
எஸ்.கே.

ஆம்... நீங்கள் நினைப்பது சரிதான். இன்றைக்கு ஏறத்தாழ இருபது வருடங்களுக்கு முன்னர், நான் ஒரு சிறு வடலியாக இவ்விடத்தில் நின்றபோது, ஒருநாள் மாலையில் சரஸ்வதி இந்தக் கடிதத்தை இங்கே கொண்டுவந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம்மா... என்னமாதிரி ஒரு துள்ளலுடன் படித்தாள்! அவள் தனக்குள்ளே பல முறை திரும்பத் திரும்ப இதைப் படித்ததை நான் கண்ணகலப் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனதில் இசை வாசிக்கிற மாதிரி இருந்தது.

ஆனாலும், அப்போதே எனக்குள் ஒரு சந்தேகம்! தன்னுடைய சொந்தப் பெயரைக் கடிதத்தில் எழுதப் பயந்து... எங்கே அது ஒரு தடயமாகிவிடுமோ என்று தயங்கி... முதலெழுத்துடன் நிறுத்திக் கொள்பவன் காலம் முழுவதும் இந்தச் சரஸ்வதியைக் கண் கலங்காமல் பார்த்துக்கொள்வானோ என்று!

எஸ்.கே. என்கிற அந்தக் கணநாதனை நான் ஒரே ஒரு நாள் மட்டும் காண நேர்ந்தது. நேசிக்க வைக்கிற இளம் கறுப்பான முகத்துடன், பளபளவென்று ஓர் இளமை மினுமினுப்புடன் அந்த இளைஞனைக் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு வந்திருந்தாள் சரஸ்வதி. அவளது முகம் செம்மையிட்டிருந்ததில் இருந்தே அவன்தான் கடிதம் எழுதிய இளைஞனாக இருப்பான் என்று நான் ஊகித்தேன். வழக்கமாய்க் குபுக்கென்று குறும்பு மலராய் மலர்ந்திருக்கும் ஆர்வக் கண்களில் அன்று சிறிய பய உணர்வும் தென்பட்டது.

அப்போது சரஸ்வதி பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தாள். அவளது அறிவில் புதிய பிளேடின் கூர்மை இருந்தது. யாருடன் அவள் பேசினாலும் அதில் கல்வி, சிந்தனை, ஆய்வு ஆகிய சாயங்கள் தோய்ந்தே இருக்கும்.

அந்த இளைஞனை நான் அவளுடன் கண்ட நாளிலிருந்து அவள் ஒரு தோட்டம் போலக் கொத்துக் கொத்தாய்ப் புஷ்பித்தாள். அவனைப் பற்றிய நினைவுகள் இனிப்பாய் அவள் மனதில் உறைந்திருக்க வேண்டும். கோயிலின் மேற்கு வீதிக் கல் தொட்டியில் அமர்ந்து பல்கலைக் கழகப் பாடங்களைப் படிக்கிறபோதும், தலை நிறைய மல்லிகை வைத்திருப்பாள். அவளது அழகு என்னையே கூட 'என்னைப்பாரேன்' என்று கட்டியிழுக்கும். அவன் இழுக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை என்று நினைத்துக்கொண்டேன்.

காத்திருத்தல் என்பது மிகவும் அவஸ்தையான விடயம் என்பது எனக்குத் தெரியும். பக்கத்து மரத்தில் இருந்து வரும் மகரந்த மணிக்காகக் காத்திருப்பதே எனக்குப் பெரிய அவஸ்தையாக இருக்கும்! அந்த அவஸ்தை சரஸ்வதியின் புருவ மேடுகளிலும் பிரதிபலிக்கப் பார்த்திருக்கிறேன்.

அவனுக்கும் இவளுக்கும் நடந்த நிழல் யுத்தம் பற்றி எனக்குத் தெரியவில்லை. ஆனால் இறுதியில்... நான் அவனது கடிதத்தைப் பார்த்துப் பயந்த மாதிரியே நடந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய விருப்பத்துக்கு எதிராக அல்ல, அவனுடைய விருப்பத்தின் பேரிலேயே அவனது திருமணம் இன்னொரு பெண்ணுடன் நடந்து முடிந்தது.

அந்த நிகழ்வின் வேதனையை மேலும் வருடிக் கொடுப்பதாய்... அவள் வாழ்வில் இன்னொரு பயங்கரம் நடந்தது!

இந்த இரு நிகழ்வுகளினாலும் ஏற்பட்ட வடு... காயம் கூட இல்லை...

சுட்டுப் பொசுங்கிப் பிணநாற்றம் வந்து... காலத்தால் ஆற்றப்பட்டாலும், காயத்தால் ஆறாது... வடுவாகி நின்று நெஞ்சை அறுத்து,

இப்போதும் வருடிப்பார்த்தால் ரணப்பட்ட நேரங்கள் நெஞ்சில் மோதி... வலி நிரந்தரமாகிவிட்டது போலும்!

இவளது இளமையும், படிப்பும், அழகும், பல்கலைக்கழகப் பட்டமும் எல்லாம் வெறுங் காட்டில் எரிந்த நிலவாய்...

வெறும் மேல்மாடி வெயிலாய்ப் போய்விட்டது. ஆனாலும், இந்த ஆணவம் கொண்ட ஆடவர் கையில் பொன் விலங்கு பூட்டப்பட்டு ஆட்டப்படும் பாவையாய் இல்லாது போனதில் அவளுக்கு நிறைவே தவிரக் குறை இல்லை. அதை அவள் தன் பிள்ளைகளுக்கே சொல்லக் கேட்டிருக்கிறேன் பலமுறை.

வாழையிலை போய் முருக்கம் முள்ளில் குத்தினாலென்ன, முருக்கம் முள்ளுப் போய் வாழையிலையில் குத்தினாலென்ன, நட்டம் வாழையிலைக்குத் தான் என்பார் இரசிகமணி.

வாழையிலைதான் கவனமாய் இருந்திருக்க வேண்டும். சரிதான்! இது பீங்கான் வாழ்க்கை. இதன் பளபளப்பும் வழுவழுப்பும் ஒரு நாள் உடைந்து போகும் என்று தெரிந்துதான் இருக்க வேண்டும். சரிதான், ஆனால்,

சிறு வயதிலேயே தாயை இழந்துவிட்டுத் தாயும் தந்தையுமாய், தந்தையையே நம்பி வாழ்ந்த சரஸ்வதியை அந்தத் தனி இரவில்... சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் தனியே விட்டது எப்படிச் சரியாகும்?

இரவு ஒன்பது மணிவரை கிணற்றடிக் கல்லில் அமர்ந்து செம்பருத்திப் பூவோடு பேசிக்கொண்டிருந்த சரஸ்வதி, கணநாதனைப் பற்றிய நினைவுகள் பனிப்புஷ்பங்களை அள்ளிச் சொரிந்தாற் போல, உள்ளத்தைக் குளிர்மைப் படுத்தி, அதே நேரம் அமுக்கி விறைக்கச் செய்து நிலைக்கக் கவலை தொட்ட மலர்ச்சியான முகத்துடன் அறையில் உறங்கிப் போனாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை 'ஓ'வென்று பெரிதாய்ப் பொழிந்து கொட்டிக் கொண்டிருந்தது. வெளியே இருள் நரைத்த தலைமாதிரி உலகைக் கவிந்திருந்தது. அப்போது வெளி விறாந்தைக் கதவு மெலிதாகத் தட்டப்படும் ஓசை கேட்டது.

"பிள்ளை..." என்று ஒரு முறை கூப்பிட்ட மாதிரியும் இருந்தது. குரலை அடையாளம் காண முடியாதிருந்தபோதும், அந்த மழை கொட்டும் இரவில் அது சிதம்பரப்பிள்ளை மாஸ்டரைத் தவிர வேறு யாருமாய் இருக்கும் என அவள் எதிர்பார்த்திருக்கவும் முடியாதுதான்.

எல்லா நேரத்திலும் புத்திசாலியாய் இருப்பது என்பது மிகவும் அயர்ச்சி தரும் போராட்டம்!

நித்திரை முறியாத கண்களுடன் அவள் குடிகாரன் போல் சமநிலை இழந்த ஆட்டத்துடன் சென்று கதவைத் திறந்துவிட்டாள்.

உள்ளே நுழைந்தது அப்பா இல்லை.

விஜயராஜா...! (இந்திரன்?)

ஊரிலே சண்டியன் என்று பெயர் பெற்றிருந்த விஜயராஜா!

இந்தக் காலத்துக் கள்வர்கள் கதவு திறந்தவுடன் இடித்து விழுந்து விறுவிறென்று நுழைவது போலத்தான் அன்று அவனும் நுழைந்துவிட்டான்.

இவள் அதுவரை அறிந்திராத ஒரு கதியில் இதயம் பட்டாம் பூச்சி இறகு போலப் படபடத்தது. கண்கள் இரண்டும் ஒளிவிடங்கள் ஏதும் உண்டா என்று தேடின.

அவன் எதற்கு வந்திருப்பான்?

இப்போது நேரம் என்ன இருக்கும்? களவெடுக்க வந்திருப்பானோ? பொருள்களைக் களவெடுக்க வந்தானோ அல்லது...?

அம்மன் கோயில் சிலை மாதிரிச் செய் நேர்த்தியுடன் காணப்பட்ட சரஸ்வதிக்கு முன்னால் வருகிறவன், பொருள் களவெடுக்க வந்திருந்தால் கூடக் கண நேரத்தில் தன் நோக்கத்தை மாற்றிக் கொள்வான். அந்த நோக்கத்துடனேயே வந்தவன்...?

சில நிமிடப் போராட்டந்தான்! அதன் பின் அவள் வியர்த்துக் களைத்திருந்தாள். மனத்து வலிகள் அதிகமாயின. தலைப்பாரம் கழுத்தை வலிக்கச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே வானத்துக் கருமுகில் உடைந்து, மழை 'சோ' எனக் கொட்டியதால் நிலம் முழுதும் ஈரமாயிற்று. தொடர்ந்து இரவெல்லாம் வாடை மழை உலுக்கித் தீர்த்தது.

அன்று காயப்பட்ட அவளது 'ஈகோ'வுக்கு இன்னுந்தான் நன்மருந்து கிட்டியது என்று சொல்லமுடியாது.

சமூக சேவைக்கென... சிரமதானப் பணியின் தொடர்ச்சியெனப்... பாடசாலையில் தங்கிய சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் வீடு வந்தபோது...

அவரது வீட்டில் எப்போதுமே காசு வறுமை ஏற்படாமல் அவர் தன் சம்பளத்தைக் கவனமாய்ச் செலவழித்து வந்தார். அந்த நாளில் 'மனேஜ்மென்ற்' கொடுத்த நாற்பது ரூபாய் கூட அவருக்குத் தாராளமாய்ச் செலவு செய்யப் போதுமாயிருந்தது.

ஆனால்... அன்றிலிருந்து அந்த வீட்டில் நிம்மதி வறுமை உண்டாயிற்று.

உடம்பெல்லாம் செவியாயும், மனமெல்லாம் மூளையாயும் அவர் அந்த வீட்டில் வளைய வளைய வந்தபோதும், நடந்துபோன விடயத்தின் விபரங்களைச் சரஸ்வதி அவருக்குச் சொல்லவில்லை.

தாய் இருந்திருந்தால் சொல்லியிருப்பாள்!

தாய் இருந்திருந்தால் இப்படி ஏன் நடக்கிறது?

அவன் யார் என்பதை மட்டும் அவர் பலமுறை கேட்டுக் கேட்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் அறிந்துகொண்டார்.

"நான் படிக்கிறதுக்காக... ஆனந்தி வீட்டிலை படுக்கிறன் எண்டு கேக்க... பொம்பிளைப் பிள்ளையள் வேறை வீடுகளிலை படுக்கப்பிடாது எண்டு சொல்லிப் போட்டு... ஆம்பிளையள் எப்பவும் எங்கையும் படுக்கலாம் எண்டு நீங்கள் பள்ளிக் கூடத்திலை படுத்தியள்... ஓ... ஆம்பிளையள் எப்பவும் எங்கையும் படுக்கலாம்... என்னை ஏன் போட்டு என்ன பிள்ளை நடந்தது என்ன பிள்ளை நடந்தது எண்டு ஆக்கினைப் படுத்திறியள்... நான் தற்கொலை செய்யப் போறன்... உடனமே கிணத்துக்கை குதிச்சிருந்தால்... நீங்கள் வந்து பாக்கச்... சவமாய் மிதந்திருப்பன்..."

இடி இடித்து மின்னல் சீறிச் சிதம்பரப்பிள்ளை மாஸ்டரின் தலையில் இறங்கியது. அவர் பல கூறுகளாய்ச் சிதறிப் போனார். சிதறிப் போனது... அவரது மனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் செய்தது பிழைதான் பிள்ளை. உன்னை இஞ்சை தனிய விட்டிட்டு... நான் பள்ளிக்கூடத்திலை படுத்தது பிழைதான்... சிரமதானத்துக்கு எடுத்த மண்வெட்டியளும் கோடாலியளும் களவு போயிடும் எண்டு அங்கை படுத்தன்... ஐயோ இப்பிடி நடக்குமெண்டு ஆருக்குத் தெரியும்... இப்பிடி நடக்கப் போகுதெண்டு ஒரு அசுகை கூடத் தெரியேல்லை எனக்கு. வைரவர் கனவிலை கூடக் காட்டேல்லையே மேனை... முன்வீட்டு முத்தம்மா அக்காவையாலும் கூப்பிட்டு விட்டிட்டுப் போயிருப்பன்... கணவதிட்டைச் சொன்னால் கொட்டிலுக்கை வந்து படுத்திருப்பான். நான் பிழை விட்டிட்டன் பிள்ளை. இனி அதுக்கு என்ன செய்யிறது? உன்ரை காலிலை விழுறன் பிள்ளை... ஆரெண்டு சொல்லு மேனை... எங்களுக்குச் சரிவரக்கூடிய இடமெண்டால்... சரிப்பண்ணி விடுவம்..."

அவர் குழந்தை போல் விம்மி விம்மி அழுதார். அவளது கனவுகள் மட்டுமல்ல அவரது கனவுகளும் கூடத்தான் பச்சையாய் எரிந்து போயின. கரிந்து போயின.

இந்தக் கோயில் வீதியில் வந்து இருப்பதும் அழுவதுமே சரஸ்வதியின் முழு நேரத் தொழில் ஆயிற்று.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4

தொலைவிலே, பாலை வெளியில் விரல் நீட்டிப் பரிதவிக்கும் மொட்டை மரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பாள் சரஸ்வதி. அவள் இருக்கும் நிலையைப் பார்த்தே நான் நடந்துவிட்டதை ஊகித்துக் கொண்டேன்.

காற்றண்ணா கொண்டு வரும் மகரந்த மணிகளில் எனக்கு விருப்பமில்லை என்றாலும்... என சூலகத்தில் அதனை ஏற்றுக் கொள்ளாமல் எறிந்துவிட என்னால் முடியாது. அது என் விருப்பக் கட்டுப்பாட்டில் இல்லை. மகரந்த மணிகள் வெல்லக் கரைசலினால் கவரப்படும் இரசாயனத் திருப்பம் நிகழ்ந்தே தீரும். தம்பத்தினூடாக வளரும் மகரந்தக் குழாய் ஆண்கருக்களைத் தன்னுடன் காவிச் சென்று சூலகத்தை அடையும்.

நுங்கு உருவாகும், பனங்காய் பனம்பழமாகும். பனம் பழத்தை மாடு சிதைத்து அழிக்காவிட்டால் - அது மண்ணில் புதைந்து - புதிய வடலி உருவாகும்.

வானில் ஒரு பொட்டு மேகம் கிடையாது. வேட்டித் தலைப்பால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு சால்வையைத் தூக்கித் தலையில் கட்டிக்கொண்டு ஊர் முழுதும் விஜயராஜாவைத் தேடித் திரிந்தார் சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர். நாளை வரும் நாட்களுக்காவது நன்மை தேட வேண்டுமே என்று நாய் போல் அலைந்தார்.

அதிகாலை இறைப்பின் போது, துலா மிதிப்பவர்கள் வாயிலே கந்த புராணப் பாடல்களுக்குப் பதிலாய் விஜயராஜா உலாவித் திரிந்தான். காலை பத்து மணிக்குக் குஞ்சிக் கிழவியின் மிடுக்கான தலைமையில் ஓடி ஓடி நடந்து நடுகைக்குப் போகும் பெண்களின் நாவில் பாக்கு, வெற்றிலை சுண்ணாம்புடன் விஜயராஜாவும் குஷியாய்த் தங்கி இருந்தான். கொடுக்குக் கட்டும் பின்புறம் சொருகிய மண் விறாண்டியுமாய் வரிசையில் நிற்கும் கொத்துக்காரர் வாயில் 'கள்ளு' இறங்கியவுடன் விஜயராஜாவும் இறங்கினான். ஆனால்... ஊரிலே அவனைக் காணவில்லை!

சரஸ்வதி தன்னுடைய வாழ்வில் தேய்ந்துபோன பளபளப்பை அவள் மகன் ரம்யன் வாழ்வில் பார்க்கலாம் என்றொரு நம்பிக்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீற்றுடனேயே இவ்வளவு வருடங்களை மனத்திடத்துடன் ஓட்டி வைத்திருக்கிறாள்.

அதுவும்?

ரம்யன் அடிக்கடி கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே இருக்கிறான். பகல் சூரியன் மேகம் என்னும் துணியால் தன்னை மூட முயல்வது போல. ஒருவேளை இவன் பச்சைச் சட்டைகளுக்குப் பயந்துதான்... அடிக்கடி இப்படிச் செய்து கொள்கிறானோ என்றுதான் இவள் முதலில் சந்தேகித்தாள்.

ஒருநாள்... இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்தான், "தம்பீ... ரம்யன்... என்னடா பகலிலை கதவைப் பூட்டிக்கொண்டிருக்கிறாய்... மெய்யே...?"

என்று கேட்டாள்.

"................."

"என்னடா, நான் கேக்கிறது விளங்கேல்லையேடா?"

"நான்... நித்திரை கொள்ளப்போறன்..."

சின்னக் குரல்தான்!

"உள்ளுக்குப் புழுங்குமெல்லே... ராசா... வெளிக்கட்டில்லை படன்..."

"புழுங்கினா என்ன செய்யிறது... இஞ்சை என்ன ஃபான் அது இதெண்டு வாங்கிக் குவிச்சே வைச்சிருக்கிறியள்...?"

"............."

ஆடம்பரப் பொருள்களைச் சேர்த்து வைப்பது உதவாமல் போகும் சந்தர்ப்பங்களிலும்... தர்மம் செய்து வைப்பது உதவும் என்ற சரஸ்வதியின் நம்பிக்கை அடுத்த தலைமுறையில் வெறுப்புணர்வை உமிழ்கிறது!

சில நிமிட மௌன நழுவலின் பின்,

ஏதோ ஒரு மெல்லிய 'தும்மல்' சத்தம் போல் கேட்கவே, பூட்டப்படாமல் சாத்தப்பட்டிருந்த யன்னலை மெதுவாக விலக்கி உள்ளே பார்த்தாள் சரஸ்வதி.

அவன் சிகரெட் துண்டு ஒன்றின் உள்ளே... ஏதோ பவுடர் போல் ஒன்றை அடைத்துக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹீரோயின்!

அந்தச் சொல் அவள் மனதில் தோன்றியதும் அவள் உறைந்து போயிருக்க வேண்டும். மரணபயம் போல ஒரு நடுக்கம் அவளைத் தொற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

மெதுவாக யன்னலைப் பூட்டிவிட்டு விலகினாள்.

அமுதம் என நம்பியிருந்த பொருள் ஆலகால விஷம் ஆகுமா? சீதளம் நிறைந்த குளிர்சோலை, வெப்பம் மிகுந்த பாலைவனம் ஆகுமா?

கண்கள் நிலைகுத்தி வெகுதூரம் போய் வானத்து விளிம்பில் நின்றது.

இந்தப் புதிய பிரச்சினையை அவளது குடும்பம் எப்படி எதிர்கொள்ளப் போகிறது?

மனதினுள் பேச்சு ஓடிற்று.

வாலிப வயதில் எது தீயதோ அதைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்ற அவா இளைஞர்களிடமும் இளம் பெண்களிடமும் ஏற்படுவது உண்டும்தான்.

ஆனால், அந்த அவா எல்லோரிடமும் ஏற்படுவதில்லையே?

தன்னம்பிக்கை அற்றவர்களிடமும், மனோரீதியான சில குறைபாடுகள் உள்ளவர்களிடமுந்தான் இந்த அவா அதிகமாக ஏற்படுகிறதென்று வைத்திய நிபுணர்கள் கூறுவார்கள்.

ரம்யனுக்கும் மனோரீதியான குறைபாடுகள் எதுவும் இருக்குமோ?

ராஜி தந்தை மட்டும் இன்றி வளர்ந்தாள்!

ரம்யன் தாயும் தந்தையும் இல்லாமல்... படிக்கும்போது அவன் 'கெட்டிக்காரன்' என்ற பிரிவுக்குள்ளேயே அடங்கி வந்தான்.

அப்படியானால்...

இவன் எப்போது தன்னம்பிக்கை இழந்தான்? பல்கலைக் கழகத்திற்குப் போவதற்குத் தேவையான புள்ளிகளில் ஆறு புள்ளிகள் எடுக்க முடியாமல் போனபோதா? அதற்கு முன்னரா? பின்னரா?

வைரவர் கோயில் முகப்பில் இவர்களை எல்லாம் இருத்தி...

இரண்டாம் முறையோ... மூன்றாம் முறையோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களுக்கெல்லாம் கிளுவந்தடி முறித்து விளாசினானே? அப்போதா?

"வெளிநாட்டுக்குப் போகப்போறன் என்று கேட்டு அடம்பிடித்துக் "காணி வித்துத் தாங்கோ" என்று கேட்டபோது...

"ஆம்பிளைப் பிள்ளையளை வெளிநாட்டுக்கு அனுப்பிறதுதான் தமிழன்ரை லட்சியமாய்ப் போயிட்டுது. ஏஜன்சிக்காறனிட்டை ஏமாற நான் ஆயத்தமில்லை. வெளிநாட்டிலை அகதியாய்ப் போயிருந்து அந்த நாட்டு அரசாங்கம் தாற பிச்சைக்காசிலை நீ சாப்பிடுறதும் எனக்கு விருப்பமில்லை. பிளேற் கழுவிறதோ, பெற்றோல் ஊத்திறதோ... இஞ்சை செய்யாத வேலையளை அங்கை போய்ச் செய்யிறதை விட, இஞ்சை இருந்து தோட்டம் செய்யிறது நல்லது. இன்பமோ, துன்பமோ நானும் ராஜியும் உன்னோடை அநுபவிப்பம்..." என்று சரஸ்வதி ஒரு முடிவு போலச் சொன்னாளே! அப்போதா?

எப்போது? எப்போது?

எப்போதென்று சரஸ்வதி தன் மனச் சாட்சியைக் கேட்டாள். இயற்கை மனோநிலையை மாற்றி ஒரு செயற்கை மனோநிலையில் வாழ முனையும் இந்த அவா... நிரந்தரப் பழக்கமாகிவிட்டால்...?

பல இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டதாலேயே... எமக்குக் கிடைத்த பரிசு... இது!

அநுபவிக்கத்தான் வேண்டும்.

இங்கே பலருக்கு நிகழ்ந்த மரணம் போல இவனுக்கு நிகழ்ந்திருந்தால் கூட...

இறந்தபின் அஞ்சலி உரைகூட வழங்க முடியாத,

மரணச் சடங்கு செய்ய முடியாத,

இன்னும் ஐம்பது பேருடன் அவசரமாகப் புதைக்கப்பட வேண்டிய...

மரணமாக நிகழ்ந்திருந்தால் கூட மனம் தேறியிருக்கலாம். விதி என்று வேதனையை மறக்க முயன்றிருக்கலாம்.

அதைவிட மோசமாக, இப்படி ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டானே!

நித்திரையாகும்வரை இதே சிந்தனைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுருக்கம் விழுந்த முகம். தலை முழுவதும் வெள்ளை வெள்ளையாய்ச் சுருள் சுருளாய் அடர்ந்த தலைமயிர். கை, கால்கள் நிறைய உரோமம். அதுவும் நரைத்திருக்கிறதாம்.

நல்ல உயரம்! ஔவைப் பாட்டி மாதிரி வெள்ளைச் சேலையும் சட்டையும். சிவப்புக் கரை போட்ட மேல் போர்வை. கையில் குறுந்தடி!

நான் நிதானமாய்... அமைதியாய் நடக்கிறேன். நான் இப்போது ஔவைப் பாட்டி. வயது போய்விட்டாலும், வாலிபத்தின் மிடுக்கு எனக்குள் ஓடுகிறது. மகாவலி கங்கையா? வெறும் கங்கையா? அம்பன் கங்கையா? தொண்டைமானாறா? நிச்சயமாகவில்லை.

முன்னாலே ஒரேஞ்சு மேகம். சூரியன் உதிக்கிறானா? மறையப் போகிறானா? பளபளக்கும் சூரியன்!

கிளிகள் பச்சை பச்சையாய்ப் பறக்கின்றன.

மனம் சலனமின்றி இருக்கிறது. உள்ளே ஒரு நிறைவு. அந்த நிறைவு வயிற்றில் வந்து குவிகிறது.

திடீரென வயிற்றில் இருந்து சீனியுடன் கலந்த... இல்லை குளுக்கோசுடன் கலந்த குண்டூசிகள் குவியலாய்க் கீழே விழுகின்றன. "குளுக்கோசிலிருந்து குண்டூசியைப் பிரிக்க என்ன செய்யலாம்?" என்ற கண நேரச் சிந்தனை தோன்ற முதல், குண்டூசிகளை மளமளவென்று அள்ளி வாயில் போட்டு உமிழ்கிறேன். குண்டூசிகள் முறுக்குத் துண்டுகள் போல் மளமளவென்று முறிகின்றன. விழுங்கிவிடப் போகிறேன் என்று தோன்றுகிறது.

அவசரமாக அவற்றைத் துப்புகிறேன். வாய்க்குழியின் மூலை முடுக்கெல்லாம் நாவால் தடவி, தொண்டையுள் போனதை இருமிப் பார்த்து, எல்லாவற்றையும் வெளியேற்றிவிட முனைகிறேன்.

அரைக்கண் திறந்து பார்க்க... முறிந்த குண்டூசித் துண்டுகள் நிலத்தில்! ஒன்றிரண்டு வயிற்றினுள் சென்றிருக்கலாம் போல் ஒரு பயம் தோன்றுகிறது. போன துண்டுகள் என் வயிற்றறையைக் கிழித்து, உள்ளே குருதி பெருகி...

அந்தக் குருதியை ஒரு வைத்தியர் குழாய் போட்டு உறிஞ்சுவது போல் ஒரு கற்பனை மனதில் வருகிறது.

மறுபடி கண் மூட, இந்த ஊசிகள் இன்னும் தூளாகக் கடிபட்டிருந்தால்... இரும்புத் தூளாக வந்திருக்கும். அது என் வயிற்றை ஒன்றும் செய்திருக்காது என்று நினைக்கிறேன். கோபம் வருகிறது!

யாரிடத்தில் என்று தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யனிடத்திலா அல்லது... அல்லது...?

யார் இது...? என்ன அர்த்தமற்ற வார்த்தைகள்? எவரும் அருகில் இல்லை."

முன்பும் ஒரு முறை இந்தக் கனவு வந்தது.

மரங்களும் கனவு காணும் என்றொரு புதுக் கண்டுபிடிப்பா என்று நீங்கள் என்னுடன் சண்டையிட வருமுன், நான் ஓர் உண்மையைச் சொல்லி விடுகிறேன்.

இது சரஸ்வதி கண்ட கனவு! கனவுகளை ஒழுங்காக எழுதிவைக்கும் பழக்கம் சரஸ்வதிக்கு உண்டு.

கனவுகள் அடிமன விருப்பு வெறுப்புக்களின், ஆசாபாசங்களின் பிரதிபலிப்புகள் என்பதால்... அதன் மூலம் தன்னை அறியும் ஒரு விருப்பம்!

ஆகவே, இது கனவாக இருக்க முடியாது!

ஆ... ஆம்... அந்தப் புத்தகக் கடைக்காரனிடத்தில்தான் இவளுக்குக் கோபம்.

அவனுடைய வயிற்றை ஊசி குத்திக் கிழிக்க வேண்டும். ஊசியைக் கையில் எடுக்க... படாரென்று கனவு கலைந்துவிட்டதாம்.

விழித்துக் கொண்டாளாம்.

இன்று 'உண்டு அல்லது இல்லை' என ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமாம்.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



5

சூரியன் சீறிச் சினந்தபடி சிவப்புப் பந்தென எழுந்து வருகிறான். அந்தப் புத்தகக் கடைக்காரன் பற்றிச் சரஸ்வதி பார்வதி ஆச்சிக்குச் சொல்வது எனக்குக் கேட்கிறது. உங்களுக்கும் கேட்கும்.

இரண்டு வருடத்திற்கு மேல் அவன் சரஸ்வதிக்குப் பூச்சாண்டி காட்டுகிறானாம். அவள் சொல்கிறாள்,

"நான் 'மைக் டைசன்' ஆனேன், எண்ணத்தில்தான்!

பஸ் ஸ்ராண்டின் கிழக்குப் புறத்தில் பெட்டிக் கடை மாதிரி ஒரு சின்னன். பெரீய... ராஜா மாதிரி 'எழுப்பமான' பேர் மாத்திரம்! என்னுடைய விமர்சனப் புத்தகங்களில் ஒரு பதினைந்தைத் தெரியாமல் அவனிடம் கொடுத்து விட்டேன். நான் படும் பாடு... நாய் படாப் பாடு...!

நான் ஒன்றும் பெரீய பிரகாசமாய் வெளியே வந்துவிட்ட விமர்சகர் இல்லைத்தான்... அதற்காக...?

கடையில் ஒரு புத்தகமும் இல்லை. எப்போதோ விற்றுத் தீர்த்து விட்டான். எனக்குப் பணம் தராது 'உச்சிப் புழுக்காட்ட' அவன் நடிக்கும் நடிப்பு...!

ஒரு முந்நூறு ரூபாதான். பெரிய காசில்லை.

ஆனால்,

நூல் வெளியிடும் வெளியீட்டாளனை அவன் பார்க்கிற பார்வை.

அவனுக்கு இவன் தரும் மதிப்பு.

அவனுடன் இவன் கதைக்கும் தோரணை...

அவனுடைய வயிற்றை ஊசியால் குத்திக் கிழிக்க வேண்டுமென எனக்குக் கனவில் தோன்றிவிட்டது.

புத்தகம் விற்கிற ஒரு சின்னப் பெடியனைத் தவிர... இரண்டு பேர்தான் அந்தக் கடையில்... மாறி மாறி இருப்பார்கள்.

இவர் இருக்கும்போது போனால், கணக்குப் பார்க்க அவர் வரவேண்டும் என்பார். அவர் இருக்கும்போது போனால், இவர் வரவேண்டும் என்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நாள், "அவர் ஆஸ்பத்திரியிலை" என்றார் இவர்.

"இவருக்குக் கடையை வித்துப் போட்டனெல்லே!" என்றார் அவர்.

அக்டோபர் பிரச்சினையின் முன், "புத்தகம் வித்து முடியாமல் எப்பிடிக் காசு தாறது? இப்பிடி அவசரப்படுறியள்..." என்றார் அவர். பிரச்சினை சற்றுக் கொடூரம் தணிந்த பின்னர்,

"நீங்கள் அப்பவே வந்து காசை எடுத்திருக்க வேணும். இவ்வளவு காலம் கழிச்சு வந்தால் என்னெண்டு கணக்குப் பாக்கிறது?" என்று முறைத்தார் இவர்.

ஒருநாள், "உங்கடை புத்தகம் ஒண்டும் விக்கேல்லை. யார் இப்ப புத்தகம் வாங்கினம்? எல்லாம் வீட்டிலை கொண்டு போய்க் கட்டி வைச்சிருக்கு..." என்றார் இவர்.

"விக்காத புத்தகத்தைத் திருப்பித் தாரும்" எண்டுதானே நானும் கேக்கிறன். ஐ... சே..." என்று நான் ஓரடி முன்னுக்கு வர,

"புத்தகக் கணக்குத் துண்டைத் தந்து போட்டுப் போய் நாளைக்கு வாங்கோ... எல்லாம் கணக்குப் பாத்து வைக்கிறன்..." என்று தடம் போட்டார்.

நான் அவனிடம் புத்தகம் கொடுத்தமைக்கான ஒரே சான்று அந்தக் கைத்துண்டு. அதை நழுவ விட்டுப் பொறியில் அகப்படும் முட்டாள் எலியாக நான் இல்லை.

இவனுடைய சேட்டை (செட்டை) அடிப்பு எவ்வளவு தூரம் போகும்? பார்க்கலாம்!

இது... தீ மிதிச்சு... வரம் வாங்கிற விஷயந்தான்!

இறுதியாக நேற்று... நான் ஒரு முடிவுடன் போனேன். கூடிய வரை முயன்று பார்ப்பது, அவன் காசு தர மறுத்து விட்டால்...,

கடையில் ஒரு முப்பது நாற்பது புத்தகங்களை விறுவிறென்று அள்ளிப் பையில் போட்டுக்கொண்டு நடப்பது!

பின்னால் வருவான் - பறிப்பான் - கூட்டம் சேரும் - நியாயம் பிறக்கும்!

இப்படி நினைத்துக் கொண்டு போனது உண்மைதான் என்றாலும், அப்படிச் செய்யும் துணிவு வந்திருக்குமோ என்பது சந்தேகமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கென்று ஒரு கௌரவம் இருக்கிறது பார்...!

நான் புத்தகத்தை எடுத்துக்கொண்டு போக, அவன் பின்னால் வந்து அடித்துப் போட்டான் என்று வை...

அவனுக்கென்ன...?

ஆனால்... என்னுடைய கௌரவம்?

ஏதோ ஒரே குடுமிப்பிடியாய்ப் பிடித்து.

"இண்டைக்கு எனக்குக் காசு தரவேணும் அல்லது புத்தகம் திருப்பித் தரவேணும். தரும் வரைக்கும் நான் இஞ்சை மறியல்..." என்று கொஞ்ச நேரம் குந்திக்கொண்டிருந்து,

பஸ் நிலையத்தின் டீசல் எல்லாம் குடித்து....

தந்துவிட்டான்.

"அந்தக் காசைக் குடுத்தனுப்பு... போகட்டும்..." என்று அவன் பெடியனிடம் கூறி... பற்கள் கடித்து முகம் கடுமையாக்கிய முறை ஏதோ எனக்குப் பிச்சை போட்டது போல...!"

இதுதான் சரஸ்வதி! அன்றும் இன்றும்...!

எத்தனையோ பொருமல்களைத் தந்திரமாய்த் தன் மனதுக்குள்ளே தக்க வைத்துக்கொண்டு...

வெளியிலே ரோஜாப் பூச்செடி...!

அதற்காகவே இந்தச் சரஸ்வதிக்கு ஒரு மாலை போடலாம்.

இப்போதும் கூட... மகன் ரம்யனின் பிரச்சினை... உள்ளேதான்... வெளியில் இல்லை.

இளைஞர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் ஏற்படத் தொடங்கியதன் பின்பே, இங்கு இது பாவிப்பதற்கான முதல் அறிகுறிகள் தோன்றத் தொடங்கினவாம்.

அநேகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிப் பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் நடுக்கடலில் விடப்பட்ட இளைஞர்களே முதன் முதலில் இந்தப் பழக்கத்தை இங்கே ஏற்படுத்தினார்களாம்.

கருணாகரச் சாத்திரியாரும் ராமுப் பண்டிதரும் இந்த வழியால் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டு போவார்கள். இரண்டு பேருக்கும் செவிப்புலன் தொழிற்படுவது குறைவு. அதுதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவசர வேகத்தில் முன்னேறிய இப்பழக்கம் ரம்யன் போன்ற இளைஞர்களை ஏன் அடிபணியச் செய்தது?

வெள்ளை நிறத் தூளைச் சிகரெட்டில் அடைத்துப் பற்றிக்கொண்டு வந்தவன் இப்போது, ஓரிரு நாளாய் ஊசி மூலம் உடம்பிலே ஏற்றிக்கொள்கிறான் போலிருக்கிறது. நேற்று அவனுடைய மேசை இலாச்சியில் மருந்தேற்றும் ஊசி ஒன்றைக் கண்டு அதிர்ந்து விட்டாள் சரஸ்வதி.

அவனை மெல்ல அணுகினாள்.

"தம்பி..."

"ம்..... ம்....."

"என்ன செய்யிறாய்?"

"நான் இப்ப சந்தோஷமாய் இருக்கிறன். என்னைக் குழப்பாதேங்கோ அம்மா..."

அவன் அதன் பிடியில் இருந்தான்.

"இது ஒரு சந்தோஷமே ரம்யன்?"

அவனுடைய பார்வை சுவரோரம் தடவியது. சிரித்தான். அந்தச் சிரிப்பில் எவ்வளவு இனிமை இருந்ததோ, அவ்வளவு பொய்மையும் இருப்பது சரஸ்வதிக்குப் புரிந்தது. அவனுக்குப் புரியவில்லையே?

"இதுதான் சந்தோஷம்... என்ரை வேதனை எல்லாம் மறைஞ்சிட்டுது. ஞானியளும், தத்துவாசிரியர்களும் யுகக் கணக்காய்த் தேடின சந்தோஷம்... நிம்மதியின்ரை இரகசியம்... நீயும் எடுத்துப்பார் அம்மா... பிறகு விடமாட்டாய்..."

அவன் மீண்டும் சிரித்தான்.

'நீங்கள்' 'நீ'யாகிவிட்ட மாற்றத்தைச் சரஸ்வதி கவனித்தாள். அவன் மீண்டும் மீண்டும் சிரித்தான்.

சரஸ்வதி அழுதாள்.

"நான் கடவுளோடை ஒண்டாச் சேர்ந்தமாதிரி... ஐயோ... இந்த அநுபவத்தை... வார்த்தையாலை சொல்ல ஏலாது அம்மா... இன்பம்... அமைதி... புனிதம்... வெளிச்சம்... அண்ட வெளியில் பறப்பது மாதிரி... நேரம் தெரியாமல்... அம்மா... அம்மா... எனக்குத் திடீரெண்டு முழுதும் இருட்டா இருக்குதம்மா... நான் சாகப் போறன்....நான் சாவுக்குக் கிட்ட வந்திட்டன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்துக் கொண்டிருந்தவன் அழுதான்.

அழுது கொண்டிருந்த சரஸ்வதி மெதுவாய்ச் சிரித்தாள்.

"அது ஒரு பொய் உணர்வுதான் தம்பி... வெறும் பொய்... நீ சாகமாட்டாய்... படு... படு... இப்பிடி மெதுவா..."

படுத்தான்.

"நீயும் ஒரு டோஸ் எடுத்துப் பார் அம்மா... உனக்கும் நாப்பது நாப்பத்தைஞ்சு வயதாகுது... என்ன சுகம் தெரியும் உனக்கு?"

ஒழுங்கான முறையில் திருமணம் செய்தும், பல பிள்ளைகள் பெற்றுக் கொண்டும் சுகம் தெரியாத பல பெண்களைத் தெரியும் சரஸ்வதிக்கு!

ஆண்களைக் குளிர்விப்பதே பெண்களின் பணி என்று சமுதாயம் நம்பியிருக்கும்போது...?

இதையெல்லாம் சரஸ்வதி அவனிடம் எப்படிச் சொல்ல முடியும்?

பாக்கு நீரிணைக் கரை ஊடாக - இந்தப் பவுடர் தோணி மூலம் வந்து விடுவதாய்ச் சொல்லுகிறார்கள்.

ஒரு நண்பன் வீட்டில் இவன் இதை வேண்டிய நேரம் பெற்றுக் கொள்கிறான் போல் இருக்கிறது.

தொடர்ச்சியாக ஓரிரு நாள் 'இது' இவனுக்குக் கிடைக்க வில்லை என்றால்...

உளரீதியாக மாத்திரமல்ல... உடல் ரீதியாகவும் மிகவும் சோர்ந்து, விரக்தியடைந்து காணப்படுகிறான்.

❖❖❖

கொக்குவில் பொது நூலகம் நல்லூர் பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

நிலவொளி அவள் முகத்திற்கு விளக்குப் பிடிப்பது போல் நேரிடையாக அவள்மேல் படுகிறது.

மின்சாரம் தடைப்பட்டுப்போன தேசத்தில் விளக்குப் பிடிக்கத்தான் வேண்டும்!

சரஸ்வதியின் உடம்புதான் ஓய்ந்து போயிருக்கிறது. மண்டையுள் குதிரை ஓடிக்கொண்டிருக்கிறது.

இன்று காலையில்தான் இவனை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று வைத்திய நிபுணரின் பொறுப்பில் விட்டிருக்கிறாள்.

அங்கு தெரிந்த முகங்கள் பலவற்றைக் கண்டபோது, அவர்கள் "என்ன விஷயம்?" என்று விசாரித்தபோது, முகத்தையும் அதில் தடவப்பட்ட அவமானத்தையும் பல தடவை அழுத்தித் துடைத்துக் கொண்டாள் சரஸ்வதி.

எனக்கு எப்படித் தெரியும் என்று கேட்கக் கூடாது! இந்த ஊரில் எனக்குத் தெரியாத நடவடிக்கைகளே இல்லை.

இன்றும் சரி அன்றும் சரி!

வைத்திய நிபுணர் வெளிப்பார்வைக்குச் 'சிடுசிடு'.

தயக்கத்துடனே, "இவனைத் திருத்த முடியாதா டொக்டர்?" என்று கலங்கினாள் இவள்.

"முடியும்... மூண்டு மாதம் என்னோடை இருந்தா... முடியும். பதட்டப் படாதேங்கோ... வேதனைப் படாதேங்கோ..."

சில பதில்களை நிரூபிக்க முடியாது. 'என்னை நம்பு' என்று கேட்கிற போதே 'நான்' சந்தேகத்துக்கு உரியவனாகிறேன்!

ஆனாலும், அந்த நிபுணருக்குள்ளே ஒரு இதமான, சிநேகிதத் தன்மையான, நெகிழ்ச்சியான மனிதனைக் கண்ட ஆறுதலில்,

"என்ன செய்வீங்கள்?" என்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதனாலை வாற நச்சு விளைவுகளைக் கட்டுப்படுத்தப் பாப்பம்..."

"யெஸ் டொக்டர்..."

"உங்கடை மகன் என்னோடை ஒத்துழைக்க வேணும்..."

மகன்... மகன்தானா? அவன் உண்மையிலேயே மகனாக இருந்திருந்தால், இப்படி ஆகியிருக்க மாட்டானோ ஒருவேளை...?

இந்த விடயங்களில் பரம்பரை அலகுகளும் நிறமூர்த்தங்களும் குரோமற்றின் வலைகளும் எவ்வளவு பங்கு வகிக்கின்றன?

வாழ்க்கையில் சில கேள்விகளுக்கு வெளிச்சமான பதில்கள் என்றுமே கிடையாது. அதனால் பதில்கள் உண்மையானவை இல்லை என்று சொல்ல முடியாது.

'ரம்யன் சரஸ்வதியின் மகன்தானா?' என்ற கேள்வியும் அப்படிப்பட்ட ஒன்றுதான்.

கணவன் இன்றித் தனி மரமாய் வாழும் தனக்கு ஒரு ஆண்மகன் வேண்டும் என்ற சரஸ்வதியின் 'கெடு'வின் விடை இவன்... இந்த ரம்யன்!

அந்தக் 'கெடு' வராமலே இருந்திருக்கலாமோ?

மருத்துவ நிபுணரின் வாஞ்சை இன்னும் அவளுக்குள் சூடாய் ஒலிக்கிறது.

"ஒத்துழைப்பான் எண்ட நம்பிக்கையிலைதான் கொண்டு வந்து விட்டிருக்கிறன் டொக்டர்..."

நம்பிக்கையோடு இந்த நிலவொளியில் ஆஸ்பத்திரியின் வெளி முற்றத்தில்... தன்னுடைய மகனுக்காய்க் காவல் இருக்கிறாள் அவள்!

பாலகுமாரன் ஓரிடத்தில் சொல்வது போல், "பிரச்சினை களையே சந்தித்துச் சந்தித்துப் பழகியவன் பேசாமல் நகருவது என்பது முடியாத காரியம். பட்டயமும் கலசமும் ஏந்திய போர்வீரன் காவித்துணியுடனும் கமண்டலத்துடனும் நடப்பது இலட்சத்தில் ஒருவருக்குத்தான் முடியும். பளு தூக்கிப் பழகினவனுக்குப் பளுவின் எடை கூடிக் கூடிப் போவதே சந்தோஷம். பிரச்சினை இல்லை என்கிற போதுதான் போராடுபவனுக்குப் பயம் வரும்..."

பாலகுமாரனின் எழுத்துக்களில் ராஜிக்கு ஒரு வெறி - அவள் ஒருநாள் இங்கு வைத்து அவனை வாசித்தபோது நான் பொறுக்கியது இது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் போராடுகிறேன்! மண்ணரிப்புக்கு எதிராக...

சரஸ்வதியும் போராடுகிறாள் - வாழ்வின் போருக்கு எதிராக...

வெளியே திடீரென்று பனிக்காற்று அடிக்கிறது. திறந்திருக்கும் கோயில் கதவு வழியே தெருநாய் ஒன்று எட்டிப் பார்க்கிறது. இருட்டில் உட்கார்ந்திருக்கும் - மன்னிக்க வேண்டும் - நின்று கொண்டிருக்கும் - என்னைப் பார்த்து வால் ஆட்டுகிறது.

நேரம் அகாலம்! ஆனாலும் என்ன பயன்?

நாய்க்கு என்னால் என்ன பயன்?

என்ன? என் முகம் இப்படி இருக்கிறது என்கிறீர்களா?

எனக்கு முகம் எங்கே இருக்கிறது என்கிறீர்களா?

எனக்கு முகம் இல்லாவிட்டால் நல்லது!

முகம் இல்லாவிட்டால் முகமூடிகள் இல்லை!

முகமூடிகள் இல்லாவிட்டால் முகமூடிக் கலைப்புகளும் இல்லை!

ஆனால் எனக்கும் முகம் இருக்கிறது, மனதின் பாரந்தான் என் முகத்திலும் வந்து தோற்றமடிக்கிறது. சரஸ்வதியின் மனப்பாரமே என் பாரமும்.

அவளும் நானும் ஒன்றுதான் - சிலவேளை!

மகனை ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு நம்பிக்கையுடன் திரும்பி வந்தாளா,

அவன் அடுத்த நாளே வீட்டுக்கு வந்துவிட்டான்.

"என்னடா?"

"என்னாலை அதில்லாமல் இருக்க முடியாதம்மா..."

பகல் முழுவதும் அப்படி இப்படி அமைதியின்றி இருந்தவன், இரவு வந்ததும்...

பேணியில் சரஸ்வதி வைத்திருந்த சில பத்து ரூபா நோட்டுக்களை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

என்னதான் விரிவுரையாளராக இருந்தபோதிலும், அடிப் படையில் அவளிடம் ஒட்டிக்கொண்ட கிராமத்து மண்ணின் பழக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கங்கள்... அதில் ஒன்றுதான் இந்த - பேணியில் காசு வைக்கும் மரபு!

அவன் படியிறங்கி இருளில் மறைந்தான். அதன் பிறகு அவன் இன்னும் வீட்டுக்கு வரவில்லையாம்!

சரஸ்வதியின் ஏரோப்பிளேன் கனவுகள் கடலில் இறங்கியது, மகன் ரம்யனைப் பொறுத்தவரைதான் முதல்முறை என்றில்லைத்தானே!

எஸ்.கே என்கிற கணநாதனைப் பற்றிய அவளுடைய கனவுக் கப்பலும் இப்படித்தானே கடலில் அமிழ்ந்து போயிற்று!

கணநாதன் சொன்னானாம் தனக்குப் பெண்கள் உத்தியோகம் பார்ப்பது விருப்பமில்லை என்று...!

அதனாலே அவள் தனது பல்கலைக் கழகப் படிப்பை இடையில் நிறுத்தி... பிறகு திரும்பவும் படித்து...

எனக்குத் தெரியும்... "நீ செய்த பாவத்தினால்தான் பெண்ணாகப் பிறக்கிறாய்..." என்பதுதான் ஆண்கள் பலர் பெண்களைப் பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயம் என்று...!

ஆண்பிள்ளை பிறந்தால் எங்கள் ஊரில் கூரையில் தட்டுகிற கதை பற்றிக் கணபதி சொல்வான்.

வங்காளத்தில் மணப்பெண் திருமணத்தன்று மாப்பிள்ளையின் காலைக் கழுவியபின் அதைத்தன் தலை முடியினால் துடைக்க வேண்டும் என்று சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் சொல்வதைக் கணபதி ஆச்சரியத்துடன் கேட்பான்.

அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என்பது அவனுக்குப் புரியாது.

"உவையள் செய்த பாவத்துக்குத்தானே உவை பெட்டைக் குட்டியாப் பெத்துத் தள்ளியிருக்கினம்..." என்று குஞ்சிக்கிழவி சொல்வதைக் கேட்டால், இன்று வரை மாற்றப்படாத எமது சமுதாயக் கருத்துப் புரியும்.

"அவ காலமை இரண்டு புட்டும் அவிச்சவ... எனக்கும் மேனுக்கும் அரிசிப் புட்டு. தனக்கும் பெட்டைக்கும் கோதம்பை மாப்புட்டு" என்று மண்ணெண்ணெய் மணியம் புழுகிக் கொண்டு மாடுகளைக் கலைத்துக் கொண்டு வெள்ளைமணல் வாரிப் படிந்து கிடக்கும் இந்த நீண்ட ஒழுங்கைகள் வழியே போவது கண்டால்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குப் பின்னேரத்திலை அம்மா பால் தேத்தண்ணி தாறவ... உவளுக்கு வெறுந் தேத்தண்ணிதான்..." என்று கருணாகரச் சாத்திரியாரின் மகன் தனது தங்கையுடன் தனகுவது கேட்டால்...

"இந்தப் பிரச்சினை காலத்திலை... நாங்கள் எல்லாம் முசுட்டைச் சொதியும் சோறும் சாப்பிடேக்கை... ஆச்சி தம்பிக்கு மட்டும் பருப்பு வைச்சுக் குடுக்கிறவ..."

முத்தம்மா அக்காவின் சின்ன மகள் சொல்வதன் உண்மை புரிந்தால்...

"தம்பிக்குச் சைக்கிள் பழக்கேக்கை எனக்குச் சம்பல் அரைக்கப் பழக்கினவை வீட்டிலை..." என்று சைவக் குருக்களின் புத்திரி நினைப்பது விளங்கினால்...

சரஸ்வதிக்கு யாரும் சைக்கிள் பழக்கவில்லை. பழக்கி யிருந்தால் இன்று அவளுடைய வேலைகள் பலவற்றை அவள் மிக இலகுவாகச் செய்து முடித்திருக்க முடியும்.

இன்றைய மகள் ராஜியைப் பார்க்கத் தாய்க்கே பொறாமையாக இருக்கிறது! அவளால் எந்த வாகனமும் ஓட முடியும். சைக்கிள் - ஸ்கூட்டர்-கார்...

பொறாமை என்பது ஐதராவின் தலையைப் போன்றது. ஒன்றை வெட்டினால் இரண்டாக முளைக்கும். ராஜியைப் பார்த்துப் பொறாமைப்படப் பல விடயங்கள் உண்டு சரஸ்வதிக்கு!

சரஸ்வதி இனிமேல் சைக்கிள் பழக முடியாதா?

பழகலாம்...

இனிமேல், சேலையும் உடுத்திக்கொண்டு - நாற்பத்திரண்டு வயதிற்கு மேல் சைக்கிள் ஓடுவது - விரிவுரையாளர் விமர்சகர் என்ற அவளது கௌரவத்தைக் குறைத்து விடுமோ என்று ஒரு சின்னப்பயம்!

இல்லை - அது பொய் - சமுதாயம் சிரிக்கும் என்ற பயம்!

ஆண் எப்படியும் அட்டகாசமாய்ச் சிரிக்கலாம்.

"பொம்பிளை சிரிச்சாப் போச்சு!"

யாரையும் பார்த்துச் சிரிக்காமலே... போய்விட்ட சரஸ்வதியின் வாழ்வு! பெண் கடைசி வரைக்கும் பொதி சுமக்கும் கழுதையாகச் சிரிக்காமல் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி எல்லாம் பல்கலைக்கழக மாணவியான சரஸ்வதி பிரக்ஞை அற்றவளாக இருந்தாள் என்று கூறமுடியாது. ஆனால், காதல் அவளுடைய கண்ணை மறைத்தது.

சின்னச் சின்ன விடயங்களுக்கெல்லாம் சண்டை பிடிப்பதும் பிறகு சமாதானமாகி மகிழ்வதுமாயிருந்த அந்த நாட்களில்...

அவனுடைய விருப்பத்திற்கு விட்டுக்கொடுத்தல் என்பது பெரீய தியாகம் என்பது போல் அவள் படிப்பை இடைநிறுத்தியதை இன்று நினைத்தால்... நம்பக்கூடக் கஷ்டமாக இருக்கும்.

ஆனால் அது நடந்தது.

வீட்டில் இருக்கும்போதே... முகமெல்லாம் பவுடரைப் பூக்கவிட்டுக் கொண்டு...

இரவு நேரங்களில் வெளியே நிலவு நகர்ந்தபடி இருப்பதை ரசித்துக் கொண்டு...

அவனது கடிதங்களில் ஒரு சின்னத் தூறலாய் அன்பு கொட்டுவதை விழுங்கி ஆனந்தித்துக் கொண்டு...

அடிவானத்தின் பலவர்ணப் பஞ்சொற்றல்களை மாலை நேரங்களில் பார்த்து மயங்கிக்கொண்டு...

அந்தச் சில மாதங்களில் சரியும் தெரியாமல் பிழையும் தெரியாமல் இருந்ததன் சாபம் போல...

விஜயராஜா வந்து சேர்ந்தான்.

பெரிய வட்டத்தினுள் ஒரு சின்ன வட்டம்...

நாட்டிலும் அடிமை, வீட்டிலும் அடிமை!

பெரிய பரப்பிலும் எங்கள் மன ஆவல்கள் நிறைவேற்றப் படவில்லை. சின்னப் பரப்பிலும் அப்படியே என்று ஏங்கிக்கொண்டு...

இப்போது ராஜி அப்படி இருக்கிறாள்!

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 7

வீட்டைவிட்டு வெளியேறிவிட்ட ரம்யனை...

சரஸ்வதி தன் மனதுப் பெருவெளியில் இருந்து துரத்த முடியாமல் இருப்பது போலவே... கணநாதனையும் விஜயராஜாவையும் கூடத்தான் துரத்த முடியவில்லை.

அறிவு பூர்வமாய் அவள் துரத்திவிடவே விரும்புகிறாள். ஆனால் உணர்வு அவளை வென்றுவிடுகிறது.

அந்த அநுபவங்கள் இரண்டும் அவளை மிகவும் பாதிக்கின்றன. அவளுடைய மென் உணர்வுகள் பாதிக்கப்பட்ட தன்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமாயின், இந்த ஊர் பற்றி - அதன் அமைப்புப் பற்றி - அதன் உறவுகள் தொடர்புகள் பற்றி உங்களுக்குத் தெரியவேண்டும்.

பட்டினத்தில் இருந்து வெகுதூரம் உள்ளே இருக்கிற கிராமம் என்பதால், நிழலுக்கும் எங்கள் ஒழுங்கைகளுக்கும் நெடுங்காலமாகக் காதல்!

நூறு முறை வளைந்து, பிரிந்து, திரும்பி வருகிற எங்கள் ஒழுங்கைகளினூடாக ஒரு முறை மட்டுமே வந்தவர்கள் கிராமத்தை விட்டுச் சுலபமாக வெளியேறிவிட முடியாது. கிராமவாசி ஒருவரின் துணை இல்லாது போனால், "சுத்திச் சுத்திச்சுப்பற்றை கொல்லைக்கைதான் நிக்க வேணும்".

மறைந்து வாழ விரும்புகிறவர்களுக்கு மகத்தானதோர் இடம் இந்தக் கிராமம்.

அந்தப் பக்கத்தால் வந்தால் இந்தப் பக்கத்தால் ஓடித் தப்பலாம். இந்தப் பக்கத்தால் வந்தால் உந்தப் பக்கத்தால் நழுவி விடலாம்.

தனது வெப்பத்தை மனிதர்களில் ஏற்றுவதற்காக இரண்டு கை நிறைய அள்ளிக்கொண்டு வேகமாக வரும் சூரியன் எங்கள் கிராமத்திலே தோற்றுப் போய்விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் பெரும்பாலும் வெற்றிலை, செவ்வாழை, கருவாழை, மாதுளை, பலா, கறுத்தக் கொழும்பு மா, தோடை இவற்றோடு நட்பாய் இருந்து கொள்வார்கள்.

அவர்களின் அதிக கவனிப்பைப் பெறாத காணிகளில் நாங்கள் கூட்டமாய் நெடி துயர்ந்து நிற்கிறோம்.

சூரியன் தோற்றுப் போனதாலோ என்னவோ... இங்கு வாழ்பவர்கள் பலர் மென்மையானவர்கள். உடற்கட்டில், நிறத்தில், மனத்தில் எல்லாம்தான்.

பக்கத்துக் கிராமத்தவர்களுடன் சண்டை சச்சரவு வந்தாலும் (அடிக்கடி வருந்தானே) மெதுவாக விட்டுக்கொடுத்து விலகிவிடக் கூடியவர்கள். சண்டை, சரச்சரவு, அடி, தடி, பொல்லு, கத்தி, வெட்டு, கொத்து, பொலிஸ், இராணுவம், கொலை என்பதெல்லாம் இவர்களுக்கு அதிகம் பழக்கமில்லாத சொற்கள்.

கிராமத்துப் பூங்கன்றுகள் தமது உச்சிக்கிளைகளில் வைத்துக் கொள்கிற பூக்கள் கூட அதிகாலையில் கோயில் கூடைக்கு இடம்பெயர்ந்து விடும்.

போகுமிடம் தெரியாமல் புறப்பட்டுத் தடுமாறும் நகரத்துச் சாக்கடைகள் இங்கு மருந்துக்கும் இல்லை.

வீடுகளின் முற்றத்தில் போடப்படும் மார்கழிக் கோலங்கள் சரியாக வரவில்லை என்றால்... அது கோல மாவிலே அதிகாலைப் பனி பட்டுப் பிசிறு தட்டுவதாலே மட்டுமாகத்தான் இருக்கும்!

தேவாரங்களை முறையாகப் பண் தெரிந்து பாடுகின்றவர்களின் குரல் - ஞான வைரவர் கோயிலில் இருந்து வெள்ளிக்கிழமைகளின் மாலைகளை அமிர்த தாரையால் அலங்கரிக்கும்.

பாம்பு, கொடுக்கன், தேள், திருநீலகண்டம் எதைக் கண்டாலும் 'ஓடு' என்று துரத்திவிடுகிற மாமா ஒருவர் இப்போதும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உணவென்று வரும்போது ஆடு, கோழி, முட்டை, மீன் எல்லாம் 'அவுட்'.

தேநீர் குடிக்கும்போது, ரம்ளரை வாயில் வைத்து உறிஞ்சுவதுதான் உடல், உள நலத்துக்கு நன்மையானது என்று அண்மையில் உளவியலாளர்கள் கண்டு பிடித்தது... இவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லைத்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதியின் அப்பா - சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயருக்கு யாரும் 'கிளாசில்' தேநீர் கொடுத்துவிட்டால், தன்னை அவமதிப்பதாகவே அவர் வாழும் வரை நினைத்துக் கொண்டிருந்தார். அவர் இருக்கும் வரை ஆளுக்கொரு மூக்குப் பேணிகளும் அந்த வீட்டில் குந்திக்கொண்டிருந்தன.

கடந்த காலத்தை நோக்கி உங்களைக் கடத்திச் சென்றால்... 1840ம் ஆண்டளவில் அருளம்பலச் சட்டம்பியார் என்றொருவர் இந்தக் கிராமத்தில் ஒரு பாடசாலையை நிறுவினார். சிவனருள் வித்தியாசாலை என்று அதற்குப் பெயர்! பதிவு செய்யப்படாமலே இருபத்தைந்து வருடத்திற்கு மேல் இயங்கி வந்த இப்பாடசாலையை - ஐம்பதுகளில் அயல் கிராமத்தவர் தமது பாடசாலை ஆக்கிக்கொண்டு... பெயர் மாற்றம் செய்து கொண்டபோதும், இந்தக் கிராமத்துப் 'பூச்சி'கள் எதுவும் போர்க்கொடி உயர்த்தவில்லை. அது போயே விட்டது!

இந்தப் பரம்பரை அலகுகள் சரஸ்வதியிடமும் கடத்தப் பட்டிருக்குந்தானே!

இல்லாவிட்டால்... கணநாதனுக்குப் பெரிய சீதனத்துடன் பெண் பேசப்பட்ட போதும், அவன் இவளுக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்தி மெதுவாக நழுவ முனைந்த போதும்...

குறைந்த பட்சம் ஒரு மொட்டைக் கடிதமாவது கணநாதனின் மனைவிக்கு இவளால் எழுத முடியாமல் போனதை... எப்படி விளக்கலாம்?

ஆனாலும் இன்னும் கூட இந்த மென்மையிலே சரஸ்வதிக்கு விருப்பம் உண்டு.

ரம்யனுக்கும் இந்த மென்மைக்கும் வெகுதூரம்!

கவிஞர்களுக்கு எங்கள் சமுதாயத்தில் இருந்து ஒரு கௌரவம் கொடுக்கப்படுகிறது.

ஆனால்... உண்மையில் இவர்களில் பலருக்குக் 'கவிஞர்கள்' என்று சொல்லிக்கொள்ளத் 'தகுதி' இல்லை என்பதே சரஸ்வதியின் கணிப்பு.

Talents alone cannot make a writer.

There must be a man behind it. என்பது இவள் அடிக்கடி உபயோகிக்கும் கொள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையிலே கலையம்சம் இருக்கிறதா? உள்ளடக்கத்திலே முற்போக்குச் சிந்தனை இருக்கிறதா? காதலைப் பற்றி எழுதுவது முற்போக்கா பிற்போக்கா? உலகத் தரத்துக்கு எழுதக்கூடிய கவிஞர் யார்? (டொக்டராய் வரக்கூடிய பிள்ளை எது என்று நேர்சரி வகுப்பிலேயே சண்டை போடுவது போல) என்பது பற்றி எல்லாம் இங்கு ஏகப்பட்ட சண்டை நடக்கும்.

இலக்கியக் கூட்டங்களுக்கு வரும்போது நாம் என்ன பேசுவது என்று சற்றேனும் சிந்திக்காமல் வந்து... தனக்கு முன்னால் பேசியவர்களின் வாலைப் பிடித்துத் தொங்குகிற... அல்லது தனக்கு முன் பேசியவர்களின் கருத்துப் பிழை என நிரூபிக்க முனைந்து வால் அறுந்து தொங்குகிற... மேதாவிக் கவிஞர்கள் இங்கு மிக அதிகம்!

எழுதுகிற எல்லோருக்கும் 'எழுத்தாளன்' என்ற பெயரைப் பாவிக்கும் உரிமை வழங்கப்படக் கூடாது என்பது சரஸ்வதியின் கட்சி. என் கட்சியும் அதுதான்?

சொந்த வாழ்வில் 'மனிதனாக' வாழத் தெரியாதவனுக்கு, என்ன மண்ணாங்கட்டிக்கு 'கவிஞன்' என்ற பட்டம்?

நாங்கள் யார் 'பனை' போல வாழாமல் 'குரங்கு' போல வாழ்கிறோம்?

மனிதனுக்கு மட்டும் ஏன் 'மனிதன்' போல வாழத் தெரியவில்லை?

தன்னால் சொல்லப்பட்ட 'சொல்காக்க'த் தெரியாதவன்...

லஞ்சம் வாங்கி பணமோசடி செய்து மாடி வீடு கட்டுகிறவன்...

பொய்ம்மையை மெய்யாக்கி விடும் புத்திசாலி...

மனிதக் கொலைகளையே இலகுவாகச் செய்கிறவன் அல்லது செய்விக்கிறவன்...

இதுகளெல்லாம் 'கவிஞன்' என்ற முகமூடியைப் போட்டுக்கொண்டு சமுதாயத்தை முன்னேற்ற வந்து நிற்கின்றன வரிசையாய்!

கணநாதன் ஒரு இளங் கவிஞனாக இருந்து கவி அரங்க மேடைகளில் கனல் பொறிக்கக் கத்தியதுதான் - சரஸ்வதி அவனை நோக்கி ஈர்க்கப்பட முக்கிய காரணமாய் அமைந்தது.

தன்னை ஒரு பெரிய ஹீரோவாகக் காட்டிப் பல பெண்களைப் பின்னால் வரச் செய்ய... முக்கிய புள்ளிகள் சிலரை வால் பிடித்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது சொந்த அலுவல்களை முடித்துக்கொள்ள... அவனுக்குப் பெரிதும் உதவிய 'கவிஞன்' பட்டம், அவனை ஒரு 'மனிதனாக' மாற்ற உதவவில்லை!

கணநாதன் சரஸ்வதியை... இன்னும் சில பெண்களை ஏமாற்றியதற்காக மட்டும் நான் நெருப்பைக் கக்குகிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

பண்டிதர் 'கவீ'யின் மொழியில் சொன்னால்,

'அவமான வாழ்வும், அறியாமை நோயும் அவலங்களும்' கொண்டு திரிகிற மனிதர்களைப் பார்த்துப் புழுங்கிப் பேசுகிறேன்.

கணநாதனும் அவனுடைய பெற்றோரும் எதிர்பார்த்த சீதனத்திற்கு... சரஸ்வதியின் தந்தையார் முயல் வேகத்தில் வாழ்க்கை முழுதும் ஓடினாலும் சம்பாதித்திருக்க முடியாது.

அவருடைய 'தமிழ் உபாத்தியாயர் சம்பளம்' வெறும் தவளைப் பாய்ச்சல்தான்! அவர் வீட்டில் இருந்த சிறு வெற்றிலைத் தோட்டம் - வெறும் நத்தை நகர்வு!

ஆனால்,

All was fair in love and war.

சரஸ்வதி போட்டியிடப் போகவில்லை.

மாடி வீடொன்றையும், பளையில் பல தென்னந் தோட்டங்களையும் சீதனமாய்க் கொண்டுவந்த ஒருத்தி...

மாமரக் கிளையில் பாவமாய் அமர்ந்து மெதுவாய்ப் பாடிக் கொண்டிருந்த இந்தப் பூங்குயிலைக் கொத்தித் துரத்திவிட்டு... அண்டங் காகமானாள்.

சரஸ்வதி போர்க்கொடி உயர்த்தவில்லை என்று சொன்னேனா?

"அந்த 'அண்டங்காகத்தை' ஏற்றுக்கொள்ளலாம் என்று 'அது' எப்போது நினைத்ததோ... அப்போதே 'அது' என்னால் விரும்பப்படும் தகைமையையும் இழந்துவிட்டது"' என்றுதான் சரஸ்வதி நினைத்திருப்பாள். எனக்கு அவளை மிக நன்றாகவே தெரியும்.

பிறகு எதற்குப் போர்?

தனது கணவன் ஒரு 'புகழ் பெற்ற' கவிஞன் மட்டுமல்ல - தனக்கும் ஒரு 'இராமபிரான்' என்று 'அண்டங்காகம்' இன்றுவரை நினைத்துக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுலகின் அந்த நிரந்தரப் பிரஜையை நாங்கள் ஏன் தட்டி எழுப்ப வேண்டும்?

ஒரு ஆண்துணை இல்லாமற் போய்விட்டதே என்று இவள் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. வாழ்வை ஆண்துணை இன்றி அமைதியாக எடுத்துச் செல்லத்தக்க ஆளுமை அவளிடம் இருந்தது.

ஆனால், வாழ்வில் 'ஏமாற்றப்படத்தக்க ஆளுமை' உள்ளவளாகவும் 'எதிர்த்துப் போரிடும் வலிமையற்ற ஆளுமை' உள்ளவளாகவும் இருந்துவிட்டதன் விடையே இந்த அவளது வாழ்வு!

"ஒரு முறை ஒருவன் உன்னை ஏமாற்றினால் தவறு அவனுடையது. இரண்டாம் முறையும் ஒருவன் உன்னை ஏமாற்றினால் தவறு உன்னுடையது".

ஆகவேதான் - அதன்பிறகு ஆண்களை அவள் சரியான தூரங்களில் நிறுத்திக் கொண்டாள்.

சில ஓவியங்களுக்கு மனிதர் அளவுக்கதிகமான வர்ணம் தீட்டி அழகு பார்க்க விரும்புவார்கள். ஆனால் ஓவியங்களுக்கு அவ்வளவு தகுதி இருப்பதில்லை.

சில ஆண்களும் அப்படியான ஓவியங்கள்தான்! சரியான தூரங்களில் ஆண்களை நிறுத்தியதே... அடுத்த விபத்தின் கால்கோளாக அமைந்து விட்டது.

◆❖◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8

ஊரடங்கிவிட்ட முதிர்ந்த இரவுகள் பலவற்றில் சரஸ்வதி கோயிலுக்குத் தனியாக வந்து கண்ணீர் சொரியச் சில நிமிடங்கள் அமர்வதுண்டு.

"சைக்கிள் வருது - விலத்தி நில்லுங்கோ..."

"நீங்கள் இண்டைக்கு நல்ல வடிவா இருக்கிறீங்கள்..."

என்பது போன்ற விஜயராஜாவின் சிறிய சிறிய விமர்சனங்களுக்கு... ஊரின் ஒழுங்கை வளைவுகளில்... இவள் ஒரு சிறு புன்சிரிப்பையாவது பதிலாகத் தந்திருந்தால் அந்த விபத்து ஒருவேளை நிகழ்ந்திருக்காது.

முற்றாகவே கிடைக்காது போயிருக்கும் ஒன்றில்... விபரிக்க முடியாத வெறி ஏற்படுவது ஆச்சரியப்படத்தக்கதில்லை.

"அப்பா பள்ளிக்கூடம் போட்டாரோ?"

அன்று காலையில் கூட அவன் கேட்ட கேள்வி!

கோபம் கன்னங்களில் குறுகுறு...

சிரிப்பு மருந்துக்கும் இல்லை.

கருணாகரச் சாத்திரியார் புளியமர வளைவில் வரும் தலைக்கறுப்புக் கண்டு... சைக்கிளை இறுக்கி மிதித்துக் கொண்டு போயேவிட்டான் விஜயராஜா.

'குப்பிட்ட' நெற்றியைத் துடைத்துக் கொண்டே போனபோதும் அதன் பயங்கரம் அவளால் உணரப்படவில்லை.

சீ...! மனித வாழ்க்கையே பொதுவாக வெட்கம் கெட்டுப் போய்விட்டதா?

சில நாட்களுக்குப் பின் தன்னை அழுத்தும் யோசனையில் இருந்து சிரமத்துடன் விடுவித்துக் கொண்ட சரஸ்வதி... விஜயராஜா என்ற பெயரைச் சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயரிடம் சொன்னாள். அமைதி, சந்தோஷம் என்ற வார்த்தைகள் அடையாளம் கூடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடியாத அபூர்வப் பொருள்கள் ஆகிவிட்ட நிலையிலும், விஜயராஜாவைத் திருமணம் செய்யச் சரஸ்வதி சம்மதிக்கவில்லை.

பெண்ணின் இயலாமை என்பது ஆணின் வெற்றியாக மாற விடக்கூடாது.

அவள் மிக உறுதியாக இருந்தாள்.

தீர்மானம் எடுத்த பின் வரும் ஓர் அமைதி தன் அகன்ற சிறகுகளை விரித்து அவள் மேல் இறங்கியது.

ஓர் ஆணுக்குப் பிள்ளை பெறும் இயந்திரமாக அவனுடைய இச்சையைப் போக்கும் கருவியாக... தான் வாழவில்லை என்பதில் சரஸ்வதிக்கு இப்போதெல்லாம் ஒரு நிறைவு கூட இருக்கிறது.

"At the time of menopause a woman often experiences a heightening of sexual desire"

என்பதில் சரஸ்வதிக்குக் கொஞ்சம் பயம் இருந்தது. ஒருவேளை அந்தக் காலத்தில் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டி வருமோ என்று இளமையில் நினைத்ததுண்டு.

இப்போது... அந்தக் காலத்தையும் வெற்றிகரமாகக் கடந்துவிடலாம் என்று தோன்றுகிறது.

சிகரெட், புகையிலை, கள், சாராயம் ஏன் வெற்றிலை, பாக்கு இவர்கள் யாருடனும் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளாத சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர்!

'ஒழுக்கம்' என்பவருடன் நெருக்கமான பிணைப்புக் கொண்டு வாழ்ந்த சரஸ்வதி - அவரது மகள்!

ஹீரோயின், ஓபியம், எல்.எஸ்.டி, பெதடின் போன்றவர்களுடன் ஒன்றாகவே இணைந்துவிட்ட ரம்யன்!

சரஸ்வதியின் மகன்!

மகனா? இல்லையே? அதுதான் பிரச்சினை.

மண்ணில் இறங்குவதும், மண்வெட்டி பிடிப்பதும் வெட்கம் என்று வாழ்ந்த ஆங்கிலேயர் ஆட்சியின் தாக்கம் கொண்ட சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர்.

அவருக்குக் காணிகள் இருந்தன. அவற்றை எல்லாம் அவர் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். அதுதான் அவருக்கும் கணபதிக்கும் நெருக்கமான உறவை ஏற்படுத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை விட்டுப் புறப்படும்போது மினுக்கிய நிலையில் பவனிக்கு வரும் அவரது வெள்ளை வேட்டியும் சேட்டும் சால்வையும் ஒரு நாள் கூடத் தவறாமல்... அதே புனிதத்துடன் வீட்டுக்கு வந்துவிடும்.

அவரது வாழ்வில் அவர் காற்சட்டை அணிந்ததில்லை!

சரஸ்வதிக்கு நிகழ்ந்த விபத்தின் பின் அவரது மனம் மௌனமாயிற்று. அந்த மௌனம் நாளடைவில் கடினமாயிற்று.

"வாத்தியார் வர... நாம் உதைப்பற்றி உந்தளவு கவலைப்பட்டு... வருத்தம் வரப் பண்ணப் போகுது. நாம் அடுகிடை படுகிடையாக் கிடந்தா... எக்கணம் ஆராக்கும் நம்மைப் பாக்கிறது" என்று கணபதி கவலைப்படுவது நடிப்பு என்று சொல்ல முடியாது. அவனுக்கு அவர் குரு மட்டுமல்ல. விவசாயத்திற்கும் குடில் போட்டு வாழவும் காணி கொடுத்த தெய்வம்!

வயிற்றிலே பிள்ளை உருவாகியிருந்த காலத்தில்... சரஸ்வதி அநேகமாய்... சுவரோடு கதைத்துக் கொண்டிருப்பாள்...

அவளுக்குள்ளே ஒரு மெல்லிய பய உணர்ச்சி எந்த நேரமும் ஆடிக் கொண்டிருந்தது.

பயம் ஓர் ஆரோக்கியமான உணர்ச்சி. உயிரை வாழச் செய்யும் மருந்தே பயம்.

கொல்லும் போல ஓர் அசதி சரஸ்வதிக்குள் இருந்து கொண்டேயிருந்தது. அது அவளைக் கொல்லவில்லை. அவளாலும் தன்னைக் கொல்ல முடியவில்லை.

தன் குரலாகத் தனக்குள்ளே வளரும் குரலைத் தானே கேட்டுக் கொண்டு பேசிக்கொண்டிருப்பாள் சரஸ்வதி.

ஒரு பெண்ணுக்குத் தன் உயிரின் தொடர்ச்சியாய் ஒரு பிள்ளை வருவது மிகப்பெரிய இன்பம்.

இங்கு அந்த மகிழ்ச்சியே ஒரு துன்பமாய்... அந்தத் துன்பமே ஓர் இன்பமாய்...

அந்த இன்பத்திலும் துன்பத்திலும் ஓரளவு சகதுணையாய்ப் பங்கெடுத்தவள் மாங்கண்டுவின் தாய் நாகு.

ஞான வைரவர் கோயிலில் இருந்து 'திருச்சிற்றம்பலம்' என்ற ஒலியைத் தொடர்ந்து தேவாரப் பண் கேட்கத் தொடங்கிவிட்டது.

இப்போது நேரம் சரியாக மாலை மூன்று மணி! இந்தப் பண்ணைக் கேட்கும்போது, இந்தச் சிறிய கிராமம் தன் செந்நிற வாயைத் திறந்து சிரிப்பது போலிருக்கும் எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சின்னக் கிராமந்தான். ஆனால் அதற்குள்ளே ஒரு புனிதம் இருக்கிறது.

இந்த மாவட்டத்தில் பல கிராமங்களில் சாதிப் பிரச்சினைகள் மிக உக்கிரமாக நடைபெற்ற கால கட்டத்திலும் நான் இதே இடத்தில்தான் நின்று கொண்டிருக்கிறேன் - சிறு வடலியாய்!

அப்போது சரஸ்வதி பாவாடை கட்டி ஓடித்திரியும் சிறுமி! பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகள் கொழுத்தப்பட்டன. பெண்களின் தலைமயிர்கள் அரியப்பட்டன. கிணறுகள் நஞ்சூட்டப்பட்டன. அடிபாடுகள், வெட்டுக் கொத்துகள், மறியல்கள், வழக்குகள் - எல்லாம் நடந்தன.

எழுச்சியின் அலைமோதல் தாங்கமுடியாத நேரம்!

அந்தக் காலத்திலும், அப்படியான ஒரு பிரச்சினை இந்தக் கிராமத்தில் நடந்ததாய் வரலாறு இல்லை.

ஏதோ ஒரு வகையில் ஒரு சுமுகமான உறவு...!

இதோ முருங்கைக் காய்க் கட்டைத் தலையில் கொண்டு வரும் பூதிக் கிழவியைக் கவனியுங்கள்...

இறைப்பற்று வெறும் 'புலோவாய்' விடப்பட்டிருக்கும் காணிகளில் முருங்கைக்காய் எண்ண முடியாமல் தொங்கும்.

சரஸ்வதியிடம் வருகிறாள் பூதி.

"காய் வேணுமே நாச்சியார்?"

"தாவன்... என்ன விலை போகுது இப்ப முருங்கைக்காய்?"

"நான் தெருக்குப் போகேல்லை. தாங்கள் விரும்பினதைத் தரவன்..."

அந்த நேரத்தில் பூதிக்குத் தலையில் பேன் கடிக்கிறது.

"எனக்குச் சந்தை நிலைவரம் தெரியாது பூதி. பொருள் விக்கிற ஆள்தான் விலை சொல்லவேணும்..."

ஈ என்று வெளுத்த, களங்கமில்லாத சிரிப்பு ஒன்று பூதியிடத்தில் மலரும்,

"இதென்ன புது நாணயமான கதை - நான் தங்களிட்டைக் காசு சொல்லி வாங்கிறது... பாத்துத் தர..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எடி... நீ... யென்னடியப்பா போன நூற்றாண்டிலை நிக்கிறாய்? உங்கடை ஆக்கள் எல்லாம் படிச்சு... பெரிய பெரிய உத்தியோகங்களிலை இருக்கினம்..."

அவிழுகின்ற குறுக்குக் கட்டை அவள் சரி செய்துகொள்வாள்.

"அதுக்கு எனக்கென்னவாக்கும்? நான் தங்கடை அப்பாட்டைப் படிச்சனானாக்கும்..."

ஆசிரிய மாணவ உறவின் புனிதம் மனதை உலுக்கும்.

இப்போது.

"இந்த வாத்தி ஏன் தேவையில்லாத விஷயங்களிலை தலையிடுது... வந்தாப் படிப்பிச்சப் போட்டுப் போறதுக்கு..." என்று மாணவர் கேட்கிற காலம். அந்த மாணவர்களுக்குப் பூதியைப் புரிந்துகொள்வது கடினம்.

"அவரில்லாட்டில் எனக்கு மேலே புல்லு முளைச்சிருக்கு மாக்கும்..." அவர் செய்த உதவிக்கு அவரது பரம்பரைக்கே நன்றியுடன் இருக்கும் குணம்!

இதிகாசங்களும் புராணங்களும் தந்த 'அறவாழ்வு' பற்றிக் கொஞ்சமாகவேனும் படித்ததால் விளைந்த அறுவடை.

இப்போது... விஞ்ஞானமும் கணிதமும் கம்பியூட்டர் கல்வியும் போதித்து முடித்த கெட்டித்தனத்தில்... சமுதாய அறுவடையை நேரிடையாகத் தரிசிக்கிறோம்.

"அப்ப... இந்தா... காய்க்கு ஒரு ரூவாப்படி தரட்டே?"

"கூடிப் போச்சாக்கும்... முக்கால் ரூவாப்படி தரவன்..."

"என்ன...? ஒம்பது காய்... முக்கால் ரூவாப்படி... சரியோ கணக்கு?"

"எனக்குத் தெரியுமே? தாங்கள் என்னைப் பகிடி பண்ணுதாக்கும்... தாங்கள் தந்தாச் சரியாத்தானே இருக்கும்..."

"அப்பா உனக்குக் கணக்குச் சரியாப் படிப்பிக்கேல்லை..."

"நான் இரண்டாம் வகுப்போடை நிண்டிட்டன் வீட்டிலை..."

"நீ ஒரு ரூவாப்படி தர வேண்டாமெண்டிட்டாய்... ஒரு ரூவா எண்டால் கணக்குச் சுகமெல்லே...?"

மனதில் சுரக்கும் எண்ணச் சுமைகளுடன் இருவரும் முற்றத்தில் குந்திக் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பூதி? இண்டைக்கு உன்ரை முகம் அவ்வளவு சரியில்லை?"

அந்த மனுசன் குடிச்சு வெறிச்சுத் திரியிறதைப் பற்றி அவள் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

பெடியன் வெளிநாட்டுக்குப் போன கடனைக் குடுக்க முடியாமல் இருக்கிறது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

"மரகதத்தம்மா வீட்டு மண்வெட்டியைக் காணேல்லை எண்டு என்ரை பெடியனைப் பேசினது" பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

இடையில் யாரும் போனால் இருவர் கண்களும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

அந்த அன்பும், புரிந்துணர்வும், ஒத்துணர்வும், சிநேகமும்...

சாதிப்பிரச்சினை இன்னும் பூதாகாரமாய் இருப்பதாய்ச் சொல்லப்படும் இந்த மண்ணின் கிராமத்தில்தான்!

உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கு இப்படி ஒரு 'பனை'யும் நட்பாக இல்லையே... என்பதில் பெரிய பொறாமை!

எங்கள் ஊர்க் கோயில்களில் உள்ளே போகப் போகிறேன் என்று பூதி கேட்கவில்லை. போகவுமில்லை. அவளுக்கு அது ஒரு பிரச்சினையே இல்லை.

"கோயிலுக்குள்ளே போய்ப் பூஜை செய்யப் போகிறேன்" என்று சரஸ்வதியும் பிராமணர்களைக் கேட்கவில்லை!

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 9

உரிய நேரத்தில் நினைவு மாடத்தில் முக்கிய நிகழ்வுகள் எல்லாம் தத்தமது தழும்புகளோடு தமது இடத்தில் ஒதுங்கியுள்ளன.

"பூதி என்ன உடது மடிக்கை?"

"அது... நாச்சியார் ஐஞ்சாறு பனங்காக் காய்... பிள்ளைக்குக் குடுக்க..."

பூதியின் மடி அவிழ்ந்து வெளியே வந்த பனங்காய்க் காய்களைச் சரஸ்வதி மகிழ்வுடன் பெற்றுக்கொண்டாள்.

"அது என்னவோ தெரியேல்லை. நீ செய்யிற பனங்காய்க் காயிலை ஒரு வித்தியாசமான ருசி. நானும் செய்து பாத்தன். இது மாதிரி வராதாம்..."

பூதியின் முகத்தில்... நள்ளிரவில் பட்டைவீசும் நிலாப் போலப் பற்கள்!

"நான் செய்யிறதிலை ஒரு எய்யாம்போலை எண்டாலும்... பிள்ளைக்குத் தரவேணும் எண்டுதான் கொணந்தனான்..."

இது பின்தங்கிய கிராமமா? பிருந்தாவனமா?

பின்தங்கிய இந்தக் கிராமத்தில் காணப்படும் ஒற்றுமையும், புரிந்துணர்வும் அப்படியே வெகு இயல்பாய் மாவட்ட மட்டத்திற்கு விரிந்து... நாட்டிற்கும் பரவி இருந்தால்...?

இவர்களின் வாழ்வில் அமைதியுடன் நிலவும் சமநிலை எப்போது எங்கே குழம்பிப் போயிற்று?

தவறு எங்கே நேர்ந்தது?

தவறுகள் இங்கே நேர்ந்துள்ளன.

முற்றத்து மல்லிகை கூடத் தென்றலுடன் சிநேகிக்க மறந்து பயத்தில் விறைத்து நின்ற ஒரு காலைப் பொழுதில் மந்தைகள் எல்லாம் இந்த வயிரவர் கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டு அடைக்கப்பட்டன அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரவு!

குருவிகள் கூடத் துயில மறந்து ஏங்கிக் கிடந்த அந்த இரவில் தவறுகள் நடந்தன.

கோயிலுக்குள்ளே சிலர் - வெளியே உள்ள வெண்மணல் பரப்பில் பலர் - படுத்து உறங்க முயலுகிறார்கள்.

தயை, தாட்சண்யம் சற்றும் இல்லாத இந்த யுத்தம் மழைகாலத்தில் அல்லவா வந்து தொலைந்தது!

திடீரென்று மழை பொழியத் தொடங்கியது.

உள்ளே படுத்திருந்தவர்கள் - காலை மடக்கி - கையை ஒடுக்கி - நகர்ந்து வெளியே இருந்து உள்ளே வர முனைபவர்களுக்கு இடம் கொடுத்திருப்பார்கள் என்றுதானே என்னைப் போன்ற அறிவற்ற மரங்கள் கூட நினைத்திருக்கும்?

ஏமாற்றந்தான்.

உள்ளே படுத்திருந்தவர்கள் இன்னும் காலை நீட்டிக் கையை விரித்துத் தங்கள் 'உறுதிகளை'ப் பலப்படுத்திக் கொண்டார்கள்.

இவ்வளவுக்கும் வெளியே படுத்திருந்தவர்கள் ஒன்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை.

உள்ளே இருந்தவர்களின் உறவினர்கள்தான். இதுதான்... இந்த ஊருக்கும் எங்கள் நாட்டுக்கும் வந்த நாசம்!

புரண்டு படுத்திருந்த பூமிகூட இந்த மனிதர்களைப் பார்த்துப் புன்சிரிப்புப் பூத்திருக்கும்.

சரஸ்வதியும் மகளும் வீட்டுக் கதவுகளை எல்லாம் உட்புறம் தாளிட்டுச் செவிகளை மட்டும் வெளியே வைத்துக்கொண்டு - உறைந்து போயிருந்த ஓர் ஊரடங்கு நேரம்...

வெளியே கதவைத் தடதடவென்று தட்டும் சத்தம்... பயத்துடன் பதுங்கிச் சென்று திறந்து பார்த்தால்...

வேறு யாரும் இல்லை... இவன் ரம்யன்!

இவர்களுக்கும் அவனுக்கும் இடையில் கண்களுக்குப் புலப்படாத சில கோடுகள் போடப்பட்டு விட்டதுபோல் ஒரு தோற்றம்.

யார் அந்தக் கோடுகளைப் போட்டது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாமையின் எல்லையில் மௌனமான அழுகையுடன் சரஸ்வதி நிற்கையில், அவனே அவசரமாய்ச் சொன்னான்,

"நான் இவன் மொஹிடீன் வீட்டிலை நிக்கிறன். அதிலை பிரச்சினையில்லை..."

"அந்தப் பழக்கத்தை மெல்லவா விட்டிடு தம்பி..."

"விடுகிறதோ? இப்ப எனக்குத் தேவையான பவுடரின்ரை அளவு கூடிட்டுது..." அவனது குரல் மிக உரப்பாய்!

அயல் வீடுகளில் இருந்து பல முகங்கள் பொந்துப் பாம்புகளாய்த் தலை நீட்டிப் பார்த்தன.

சரஸ்வதி அவனைத் தலையில் இருந்து கால்வரை தீர்க்கமாய்ப் பார்த்தாள். கையில் ஓர் இடத்தில் சீழ் கட்டியிருந்தது.

"என்னடா இது?" கதறினாள்.

"ஊசி குத்தின இடத்திலை புண் வந்திட்டுது..." அவன் மிகச் சாதாரணமாய்ச் சொன்னான்.

"நான் போகவேணும். எனக்கு அவசரமாய்க் காசு வேணும்..."

அவனிடத்தில் ஓர் அமைதியின்மையும், பீதியும், சோர்வும் காணப்பட்டன. அது ஒரு பரிதாப உணர்வைத் தந்தாலும், சரஸ்வதி விட்டுக் கொடுக்கவில்லை.

"என்னட்டை இப்ப ஒரு சதமும் இல்லை..."

அவளது தாய்மைக் குரலில் மெல்லிய வெறுப்பு மிதந்திருக்கலாம். அவன் கிட்ட வந்தான்.

"என்ன? எனக்குக் காசு தாறியோ இல்லையோ?"

மிரட்டுவது போல் கேட்டான்.

"இல்லை..."

"அப்ப என்னத்துக்கு என்னைப் பெத்தனி...?"

"நான் உன்னை எங்கை பெத்தனான்? எனக்குக் கொள்ளி வைக்க ஒரு ஆம்பிளைப் பிள்ளை வேணுமெண்டு... விலை குடுத்து வாங்கினனான்... இப்பவே வைச்சிட்டுப் போறாய்... போடா..."

சரஸ்வதி உடைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் மூன்றாவது தடவையாய்!

இவள் தன்னைப் பெற்றாளா, அல்லது விலை கொடுத்து வாங்கினாளா என்று கவலைப்படும் நிலையில் அவன் இருக்கவில்லை.

ராஜிதான் ஒரு சின்ன அதிர்வுடன்... துயரத்தின் சிற்றுருவாய் நின்றாள். அப்படியானால் தம்பி... உண்மையில் அவளது தம்பி இல்லையா? அம்மா இதை ஏன் இவ்வளவு நாளும் அவளிடம் சொல்லவில்லை?

கஷ்டம், வருத்தம், கசப்பு, ஏமாற்றம்... முதல் முறை வந்து இருபது வருடங்களா? என்ன ஓட்டமாய் ஓடுகிறது காலம்?

சரஸ்வதி அறைக்குள் சென்று கட்டிலில் படுத்துக் கொண்டாள். வெளியெல்லாம் இருள். உள்ளெல்லாம் இருள். உள்ளத்திலும் இருள்.

விறுக்கென்று வீட்டினுள் நுழைந்தான் ரம்யன். எதையோ எடுத்துக் கொண்டு அதே வேகத்தில் வெளியேறிவிட்டான்.

அவன் போன சில நிமிடங்களில் பின்தான் மறைந்த பொருள் தன் மணிக்கூடு என்று தெரிந்தாள் ராஜி.

கோயில் சிறைவைப்பின் போது, இன்னும் பல பொருள்களுடன் சரஸ்வதியின் மணிக்கூடும் மறைந்து போனது இறந்த காலக்கதை. இது நிகழ் காலக்கதை!

சரஸ்வதி மீண்டும் தன்னை உணர ஆரம்பித்தாள். தன்னை உணர்ந்து தன்னை உணர அஞ்சவும் ஆரம்பித்தாள்.

ராஜி சரஸ்வதியின் வயிற்றில் வளர ஆரம்பிக்கையில் அவள் தன் மனக் கனவுகளைப் பாடுவதும் கிறுக்குவதும் கிழிப்பதுமாக இருந்தாள்.

உடலும் மனமும் துன்பத்தின் கூர்மையில் தீட்சண்யப்பட்டு வளர்ந்து கொண்டிருந்தன.

இயற்கை அவளுக்குத் தன் பரிபூரண கிருபையை வருஷித்தது.

ஒருநாள் சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் ஒரு வாடகைக் காரும் விஜயராஜாவும் ரிஜிஸ்ராருமாய் வீட்டுக்கு வந்தார். “இதிலை ஒரு கையெழுத்துப் போடு பிள்ளை...” என்றார். அவள் மறுக்கவில்லை. தன் குழந்தைக்குத் தகப்பன் தேவையில்லாவிட்டாலும் தகப்பன் பெயர் தேவை என்று அவளுக்குத் தெரியும். கையெழுத்துப் போட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அடியும் எத்தனையோ மைல்கள் போல்...

ஒவ்வொரு செக்கனும் எத்தனையோ யுகங்கள் போல்...

சரஸ்வதி அவனை நிமிர்ந்தும் பார்க்கவில்லை. ஒரு நாளில் தன் வெறிக்குப் பலியாகிப் போன காரணத்தால் அவள் தன் வாழ்வு முழுதும் அவனுக்கு அடிமையாகிப் போனாள் என்று அவன் நினைத்திருந்தால்... அது நினைப்பாகவே இருக்கட்டும்!

சட்டென ஒரு நூலை இழுத்ததால் சிக்கே பிரிந்தாற்போல ஒரு தெளிவு - சரஸ்வதியின் மனதில்!

"பிள்ளை..." என்றார் சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர்.

"கையெழுத்து வைத்து முடிந்தால் போகலாம்..." என்றாள் சரஸ்வதி. அவன் போய்விட்டான்.

போகும்போது... சரிந்த கட்டிடம் ஒன்று போவது போலத்தான் இருந்தது.

இரவில்லை... பகலில்லை... வேதனை அலைகளை அவள் வரவேற்காத நேரமில்லை.

ஆனால் ஆண் மகன் ஒருவனை அவள் எப்போதும் வரவேற்றதில்லை. நாற்பத்தைந்து வயதுவரை அந்த மனத்துணிவும், தைரியமும்...

தன்னால் எப்படி வாழ முடிந்தது என்று இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

ஒரு முழு விழிப்பு முழுத் தெளிவுடன் வந்தபோது... அவள் வைத்திய அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்துவிட்டு - மீண்டும் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கொண்டாள்.

குழந்தை ராஜி நாளொரு கஷ்டமும் பொழுதொரு துன்பமுமாக வளர்ந்தாள். நாகுவின் கையில்!

உயிர் நீடிக்கவே கஷ்டந்தான் காரணம். எல்லாம் நிறைவாக இருந்தால் - உயிரோடு இருக்க வேண்டிய தேவை என்ன?

சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர் அதிக நாள் உயிரோடு இருக்கவில்லை. உயிரற்ற பிண்டம் போலவே அவரது நடமாட்டம் இருந்தது.

தொண்டையில் உட்சுவர் ஒட்டிக்கொள்கிற மாதிரி. அப்படி ஒரு வரட்சி அவருக்குள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலில் - மாலையில் - கால் போன வழி அவர் வழி போகும்.

மௌனம் அவரை மெத்தென நெடு நே...ஏ...ரம்... அணைத்திருக்கும். அவரது மௌனம் இவளிடமிருந்து சொல்லைக் கட்டாயப்படுத்தும்.

"அப்பா... ராஜியை ஒருக்காப் பிடியுங்கோ... வாறன்..." அவர் குழந்தையை வாங்கிக் கொள்வார்.

காற்றுக்கு மூச்சு நின்று போய்விடும். இலைகள் அசையாது. "ஒரு பட்சி வழிதப்பி எங்கோ அலைந்து கொண்டிருக்கிறது. உருவம் தெரியவில்லை. அதன் கூவலில் ஏக்கம் மட்டும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது..."

இந்தக் கனவு மட்டும் மீண்டும் மீண்டும் சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயரின் நித்திரையில வந்து போய்க் கொண்டிருந்தது.

வாழ்க்கை இருக்கும்வரை அதை வாழ்ந்தே ஆகவேண்டும் என்பது சரஸ்வதிக்குப் புரிந்தது. அப்பா அவளுக்கு அதிக உதவி செய்ய முடியாத அளவுக்குத் தொய்ந்து போய்விட்டார். அப்பாவுக்குப் பிறகு அவளுக்கு ஒரு ஆண் துணை இல்லை.

இதை எண்ணி எண்ணி மார்பே புண்ணான நிலையில்தான்... ஒரு ஆண் குழந்தையைத் தத்தெடுக்கும் எண்ணம் அவளுக்குள் மெல்ல எழுந்தது.

அந்த எண்ணத்தைக் கேட்டபோது சிதம்பரப்பிள்ளை உபாத்தியாயர் சிரித்தார். சிரிப்பின் கசப்பில் உதடுகள் சுருங்கின. அவருக்குத் தத்தெடுக்கும் குழந்தைகளில் நம்பிக்கையில்லை.

நடந்ததெல்லாம் நடப்பதற்கு முன்னால் என்றால் அவர் நிச்சயமாய் இதை மறுத்திருப்பார். ஆனால் நடந்ததெல்லாம் நடந்த பின்னர் சரஸ்வதியின் விருப்பம் எதுவோ அதுவே தன் விருப்பமாயும் அவர் மாறிக்கொண்டார்.

இசைந்தார். கொழும்பில் ஒரு 'பிறைவேற் நேர்சிங் ஹோமில்' இருந்து ரம்யனைச் சட்டப்படி எடுத்துவரச் சரஸ்வதிக்கு உதவினார்.

அவன் தாய்ப்பால் குடிக்காமலே நாற்பது நாளுக்கு மேல் இருந்த பிள்ளை.

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10

பயம் ஒரு மேகம் போல் கறுத்துக்கொண்டு மேலே கவிய ஆரம்பித்தது.

"அம்மா? ரம்யன் உங்கடை பிள்ளை இல்லையா?" ராஜி புதிதாய்க் கேட்டாள்.

"இல்லை" சரஸ்வதி முதன்முதலாய் உண்மையைச் சொன்னாள். அவளது கீழ் உதடு இலேசாகப் பிதுங்கிற்று. இளநகையா? அடிக்கசப்பா?

"அப்ப, அவனை அவன்ரை உண்மையான தாய் தேப்பனிட்டை அனுப்பி விடுவம்..." பிரச்சினை ஒன்றின் தீர்வை இலகுவாய்க் கண்டுகொண்டவள் போல் ராஜி!

"இல்லை. அவனை அப்பிடி அனுப்பேலாது. நான் சட்டப்படி அவனைத் தத்தெடுத்தனான்... ஆஸ்பத்திரிலை போய்.. மூண்டு நாலு குழந்தையள் பாத்து... இவன்ரை நிறத்தையும் தலைமயிர்ச் சுருளையும் பாத்து ஆசைப்பட்டு... முழு உரிமையோடை வாங்கிக்கொண்டு வந்தனான்... இனிக் குடுக்க முடியாது..."

நட்சத்திரங்கள் விம்முகின்றன. கேட்கிறது!

"அப்ப... அவன்ரை தாய் தேப்பன் இப்ப எங்கை...?"

"எங்கை எண்டு எனக்கும் தெரியாது. தெரிந்துகொள்ள நான் விரும்பேல்லை..."

"அவை ஒரு நாளும் வந்து இவனைப் பாக்கேல்லையோ...?"

"இல்லை... நான் கொணந்த பிறகு... அவைக்கும் நான் இருக்கிற இடம் தெரியாது. தெரியிறதை நான் விரும்பேல்லை. அவன் என்ரை பிள்ளைதான்..."

ஒரு நேரம் தனது பிள்ளை என்கிறாள். ஒரு நேரம் விலைக்கு வாங்கின பிள்ளை என்கிறாள். ராஜிக்கு ஒன்றும் புரியவில்லை.

புரியாத புதிராக இருப்பதுதான் வாழ்வின் நியதியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்பனை இவள் ஆஸ்பத்திரியில் வைத்துப் பார்த்தபோது அவன் சிரித்தான். அந்தக் குஞ்சிரிப்புக் கவர்ச்சியாக - ஆனால் மழை காலத்துப் பிறை போல் தெம்பில்லாமல் இருந்தது. அந்தச் சிரிப்பே அவனை வாங்கச் செய்தது.

இன்று அவன் ஊர் பார்த்துச் சிரிக்கும்படி...

சரஸ்வதிக்கு அன்றிரவு 'அஸ்த்மா' வந்துவிட்டது. 'காடியாக் அஸ்த்மா!' 'பிரெஸ்ஸரும்' உயர்ந்திருக்க வேண்டும். நித்திரை வரவில்லை.

சரஸ்வதியின் பரம்பரையில் 'அஸ்த்மா' இருந்ததுதான்! சரஸ்வதியின் அம்மம்மாவின் அக்கா... அவவை இவர்கள் 'அத்தா' என்றுதான் அழைப்பார்கள்.

சொல்லத் தெரியாத ஓர் அமைதியின்மையுடன் அவ ஊசி முனைப் புழுவாய் அஸ்த்மாவில் துடித்த சில நாள்களைச் சரஸ்வதி தன் சிறுவயதில் பார்த்த நினைவு.

மெலிந்து வெளிறிய உடலில் குறுக்குக் கட்டுத்தான் உடுப்பு! முகத்தில் நோய் தாக்கிய கீறல்களுடன் பொல்லும் ஊன்றிக்கொண்டு கூனிப் போய் அவ வர அம்மா, "பெரியாத்தை வாணை..." என்று வரவேற்பது மிக ஐதாய் நினைவுக்கு வருகிறது.

ஆத்தை அப்பு.

பிறகு ஐயா, ஆச்சி

இன்னும் பிறகு, அப்பா, அம்மா.

இப்போ டடி, மம்மி!

இதுவும் ஒரு முன்னேற்றம்!

தானே நனைந்து துவண்டு கிழிந்து போன ஒரு கந்தலாடை ஆகிவிட்டது போன்ற அத்தாவின் தோற்றத்திலும்...

அந்தக் கடுக்கன் ஒரு அழகுதான்...

இப்போதைய 'ஜிப்சி' போல... ஒன்றல்ல.. ஐந்து...!

நீள்வட்டமாய், நடுவில் மொத்தமாய்... ஐந்து பெரீய வளையங்கள்! அவ்வளவு பாரத்தையும் தாங்கித் தாங்கி, இப்போது அறப்போவது போல் பெரிய துவாரத்துடன் அசையும் காது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலும் பெரிய பெரிய பாரங்களைச் சுமந்திருப் பார்கள். யாருக்குத் தெரியும்?

மின்னல் விழுந்தாற்போலக் கோடு கோடாகப் பல பள்ளங்களை மனதில் ஏற்படுத்திப் பின்னர் அவை மறைந்து போயிருக்கும்.

ஏடும் எழுத்தாணியும் பிடித்தவர்கள் பெரும்பாலும் ஆண்களாய் இருந்ததால், இவர்களின் கவலைகள் காற்றோடு பேசியிருக்கும்.

சரஸ்வதி 'அத்தா'வின் கைத்தோலைத் தடவிப் பார்ப்பாள். மெது மெதுவாய்ச் சுருக்கம் விழுந்து அருமையாய் இருக்கும்.

அத்தாவுக்கு 'அஸ்த்மா' இருந்தது அம்மம்மாவுக்கு இல்லை. அம்மாவுக்கு இல்லை. இப்போது சரஸ்வதிக்கு... ராஜிக்குந்தான்!

"Worry is the cause" என்கிறார் டொக்டர். அம்மாவும் அம்மம்மாவும் கவலை இல்லாமல் வாழ்ந்தார்களா? எரிச்சல் வருகிறது!

மண்டை கிர்... ர்... ர்... ர்...

கனவில்... நித்திரையும் விழிப்புமற்ற ஒரு நிலையில்... வீதிகளெல்லாம் அவளுக்கு விடுகதை போட்டன. அந்த ஊரின் வீதிகள் தோறும் அவள் அலைந்து திரிந்தாள்.

அப்படிப் பல இரவுகள் கழிந்தபின் ஒருநாள்...

போராட வந்த புயல் இறுதியாக வீடு நோக்கி வந்தது.

அதற்கு முந்திய இரவு கொஞ்சம் அழகிய இரவு.

அழகிய இரவின், அதனிலும் அழகிய அமைதி.

கண்ணுக்குச் சட்டெனத் தெரியாத ஒரு நுண் அழகுடன் ராஜி இருந்ததாகத் தெரிந்தது.

"அம்மா...?"

"என்ன ராஜி?"

"ரஜீவன் நாளைக்கு இங்கை வாறதெண்டு சொன்னார்!"

"யார் ரஜீவன்...?"

"..............."

வாடைக் காற்றின் ஜிலு ஜிலு "தலை" தலை மயிர்க் கால்களினூடே நெற்றி, கண், இமைகளை, கழுத்தை ஒற்றி எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதிக்குப் புரிந்தது. ரஜீவனைப் பற்றி. அவள் இடைக் கிடை கூறிய நினைவை இரைமீட்டாள்.

அவள் அடக்கப் பார்த்தும் மீறும் ஒரு துன்பம் - துன்பத்துடன் ஒரு மகிழ்ச்சி.

மத்தியான வெயிலில் இந்த வீட்டில் இருந்து கோயில் மணலைப் பார்த்தால்... கொல்லைப் புறத்தில்... அதையும் தாண்டி மரங்களில்... கிளைகளில்... இலைகளில்... மணல் பரப்பில் கானல் நடுங்கும்.

வாழ்க்கையும் அப்படித்தான், அது ராஜிக்கு இப்போது புரியாது.

தன் முழு மகிழ்வில் விரிந்த கண்களோடு அவள்.

"என் உயிரே" என்று தொடங்கிக் கடிதம் எழுதியிருப்பான்.

"கண்ணாடியில் தோன்றும் உன் கண்ணுக்குள்ளே என்னைப் பார்" என்று கவிதை புனைந்திருப்பான்.

ஒரு பட்சிக் கூட்டம் வைதுகொண்டு மரத்தை விட்டுக் கிளம்பிச் சிதறுண்டது.

அடுத்த நாள் ரஜீவன் வந்தான்.

"தம்பீ... இருங்கோ... ராஜி வருவா..."

"Thank you..."

"உங்கடை அப்பான்ரை பேர் என்ன?"

"கணநாதன்"

இந்த மரங்கள் எல்லாம் சரஸ்வதியை நெருக்குவது போல் எப்படி இப்படித் திடீரெனக் கிட்ட வந்தன?

ஒருவேளை இது வேறு கணநாதனாக இருக்கும்!

ஆம்... எத்தனையோ விஜயராஜாக்களும் இருப்பார்கள்.

அதற்குப் போய்... ஏன் மார் வெடிக்க அழுகை பீறிட வேண்டும்?

பார்த்ததும் மனதை ஜிவ்வும் கணநாதனின் எடுப்பான மூக்கு, அந்த மூக்கு ரஜீவனிடமும் இருப்பது போல ஒரு கற்பனை.

மூக்கு எல்லாருக்குந்தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஜீவன் ராஜியுடன் பேசிக்கொண்டிருப்பது சரஸ்வதிக்குக் கேட்கிறது.

அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே கேட்டுக் கேட்டு இவளுக்கு மறந்து போய்க்கொண்டே வருகிறது.

வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி என்பது இல்லை. என்றும் எங்களுக்கு விடுதலை இல்லாமல் எங்களைத் தங்களுடன் கௌவிக் கொண்ட எங்கள் நிழல்கள்!

ஆண்கள்!

நாவல் பழம்போல் ராஜியின் விழிகள் கறு கறுவென உள்ளத்தைத் துருவுகின்றன.

வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம் அர்த்தத்துடன் பார்த்துக் கண் சிமிட்டுகிறது.

சரஸ்வதியின் கன்னங்களில் கண்ணீர் சுடுகிறது. பற்றி எரிகிறாளா? எரிநீரில் மூழ்குகிறாளா?

அந்த இரவுதான் ரம்யனும் வந்தான்.

அவனைப் பார்த்தவுடன் இருண்டு போனது நேரமா? சரஸ்வதியின் கண்களா?

மனதின் ஓவியங்கள் விதவிதமாய் மாறும் வேகம் கணிக்கப்பட முடியாதது.

கலர் கலராய் கனவுகள் காணும் வயதில் கலர் கலராய் 'கலூசினேசன்ஸ்' கண்டுகொண்டு!

அடிக்கடி கண்ணாடி பார்த்து ஆயிரம் மலர்களே மலருங்கள் முணு முணுக்கும் பருவத்தில் ஆயிரம் 'இலூசன்ஸ்' பார்த்துக்கொண்டு...!

வேகமாய் வந்தான்.

"அம்மா... உன்ரை சங்கிலியைத் தா...!" அதிகாரக் குரல்.

"ஏன்?"

"எனக்கு அவசரம் காசு வேணும், கனக்க வேணும்..."

"என்ரை சங்கிலி ராஜிக்கு... பொம்பிளைப் பிள்ளைக்கு... உனக்கில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தரப்போறியோ இல்லையோ?"

சரஸ்வதி குஞ்சினைக் கொத்திக் கலைக்கக்கூடிய குருவி இல்லை.

காவோலையில் வந்தமர்ந்த இரு குஞ்சுகளையும் நான் வாத்சல்யத்துடன் அணைத்துக்கொண்டேன். காவோலை விழும்வரை தானே...! பரவாயில்லை.

**(1990இல் எழுதப்பட்டது - செம்மையாக்கலுடன்)**

❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தனச் சிதறல்கள்

## 2018 இல்.....

01.07.2018

அன்பு நிறைந்த கல்யாணி,

எனது மெயிலுக்கு நீ பதில் எழுத மாட்டாய்... உனக்கு நேரமிருக்காது என்று நிச்சயமாய்த் தெரிந்த போதிலும் ஒரு எதிர்பார்ப்பு...!

சிலவேளை ஏதோ ஒரு கணப்பொழுதின் வெளிச்சத்தில் எழுதிவிடுவாயோ என்று...!

பலவீனந்தான்...! ஏற்றுக்கொள்கிறேன்...!

நானும் ஒரு மனிதப் பெண்தானே!

கனவிலே உன் பதில் உருப்புரியாத மின்காந்த அலைகளாக வந்து என் செவிப்பறைகளைத் தாக்குவது போல...?

மின்காந்த அலை எப்படிச் செவிப்பறையைத் தாக்கும் என்கிறாயா? அதுதான் 'கனவு' என்றேனே!

போகட்டும், நனவு நிலைக்கு வருவோம். "என்ரை பிள்ளையள் வீட்டிலை ஒரு நிமிஷம் இருந்து படிக்கிறேல்லை. பக்கத்து வீட்டுச் சுகந்தின்ரை பெடியன் இராப்பன்ரண்டு, ஒரு மணி வரைக்கும் மேசையிலை இருந்து சப்பு சப்பெண்டு சப்பினபடி...!"

தன்னுடைய மகன் படிக்காமலே 'யூனிவசிற்றி'க்குப் போயிட்டான் என்றும், பக்கத்து '·'.பிளாட்ஸ்' பையன் 'சப்பித்தான்' அந்த 'றிசல்ற்ஸ்' எடுத்தான் என்றும் பலரிடமும் சொல்லிக்கொள்வதால், தன்னுடைய மகன் சுகந்தியின் மகனைவிடக் கெட்டிக்காரன் என்று நிரூபிக்க முனையும் இந்திரராஜா. இதை 'ஆ' என்று வாய் பிளந்து கேட்கும் பரமசாமி...!

சிங்கப்பூரில் மாடி மனைகளின் உயரம் அதிகம் என்றாலும் மனங்கள் இன்னும் இப்படித்தான். இவர்களுக்கு அருகில்தான் நானும் எனது மகனும், இரண்டு வயதில் உன்னிடம் காய்ச்சலுக்குத் தூக்கிக்கொண்டு ஓடி வந்தது நேற்றுப் போல் இருக்கிறது. முப்பது நீண்ட வருடங்கள் ஓடிவிட்டன.

அவன் 'எஞ்சினியராக' வேலைக்குப் போன முதல்நாள் உனது ஆசீர்வாதம் மெயிலில் வந்தது. அவனது திருமணத்துக்கு முன் உன்னை நேரில் பார்த்து அவன் ஆசி பெற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஒரு விசேட ஏற்பாடு செய்வது பற்றி எனது முதல் மெயிலில் குறிப்பிட்டிருந்தேன். இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்தின் பிரபல பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் ஒன்றாக ஓ.எல் அல்லது ஏ.எல் எழுதியவர்கள் கதைத்துப் பேசி ஒரு காலத்தில் ஒன்றாக உலகம் முழுவதிலுமிருந்து வந்து கூடுகிறார்கள். தமது ஆசிரியர்களைக் கூப்பிட்டு விருந்து கொடுத்து, நன்றி கூறி, வீடியோ எடுத்து, தாங்களும் உல்லாசம் அநுபவித்துத் திரும்புகிறார்கள்.

நாங்கள் "காங்கேசன்துறை' ஊரைச் சேர்ந்தவர்கள் இன்னும் இரண்டு வாரத்தில் அங்கே ஒன்றுகூடுகிறோம்.

அவுஸ்திரேலியாவில் இருந்து மேரியும், இங்கிலாந்தில் இருந்து வேலு, மஞ்சு குடும்பத்தினரும், இந்தியாவில் இருந்து சரஸ்வதி விஜயராஜாவும் அவரது பிள்ளைகளும் கட்டாயம் வருகிறார்கள். வேறு யார் யார் வருகிறார்கள் என்பதை நான் விரைவில் உனக்கு அறிவிப்பேன். சிங்கப்பூரில் இருந்து அவர்களின் போக்குவரத்து ஏற்பாடுகளையும், யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும் ஏற்பாடுகளையும் நான் செய்துவிட்டேன்.

அங்கே வந்த பிறகு நாங்கள் எங்கே, எப்போது சந்திப்பது, கலந்துரையாடுவது என்பது தொடர்பான ஏற்பாடுகளும் முடிவுகளும் உன்னைச் சார்ந்தது. நான் வேறு யாரை உரிமையுடன் கேட்க முடியும்?

உலகம் முழுவதிலும் கொங்கிறீற் காடுகளுக்குள் வலம் வந்து கொண்டிருக்கும் 'தமிழன்' என்ற வெறிபிடித்த விலங்குக் கூட்டத்தின் ஒரு பகுதி விரைவில் சந்திக்கப்போகிறது. உனது கணவர் சிவநேசன் இப்போது சுகமாக உள்ளாரா? உன் பதிலை உடன் எதிர்பார்க்கும்,

அன்புநிறை
பூரணி

இருளின் கனம் தேய்ந்து உலகம் துயில் கலைகிறது. யாழ்ப்பாண நகரில் வெவ்வேறு இடங்களில் தங்கி நின்ற அவர்கள் ஞாயிறு காலை 9.00 மணிக்குக் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஒன்று கூடுவதான ஏற்பாடு.

ஓய்வுபெற்ற பிறகும் நோயாளிகளுக்கு இலவச வைத்தியம் செய்து கொண்டிருக்கிற கல்யாணி எட்டரைக்கு முதலே அங்கே போய்விட்டாள். அவளோடு சிவநேசனும் வந்திருந்தார். சிவநேசனுக்கு வழுக்கை முக்கால் வாசித் தலை முடியைச் சாப்பிட்டுவிட்டது. மீதியையும் நரை வாடகைக்கு வாங்கி இருந்தது. வயது எழுபத்தைந்து ஆகிறது அல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து அங்கே வந்து சேரந்தது பூரணியும் அவளது என்ஜினியர் மகனும்! பாடசாலைச் சூழலில் ஆங்காங்கே பறவைகளின் சிணுங்கல்கள் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. பாடசாலை மண்டபத்தைப் பாவிப்பதற்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையில் இவர்கள் அனுமதி பெற்றிருந்ததால் அதிபர் நேரத்தோடு வந்து வாசலைத் திறந்து விட்டுக் கல்யாணியிடம் பொறுப்பை விட்டு நீங்கியிருந்தார்.

பூரணி ஓடி வந்து கல்யாணியைக் கட்டித்தழுவிக் கொண்டாள். ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும் என்று நீண்ட காலமாக இருந்த ஏக்கம் குமிழ் விட்டுக் கண்ணீராகப் பரவியது.

முகத்தில் சில்லென்ற காற்று வந்து தழுவியபோது, தன் அருகே யாரோ துணை நிற்பது போல் உணர்ந்து திரும்பிப் பார்த்தாள் பூரணி.

அறுபது வயதுக்குக் கிட்டிய நிலையிலும் 'பிற்சா'வும், 'சிக்கன் ரிக்கா' மசாலாவும், '.்.பிஷ் அண்ட் சிப்ஸூம்' சாப்பிட்டு மளமளப்பேறிய சருமத்தோடு உள்ளே வந்திருந்த சோடி வேலு, மஞ்சு அவளுக்கு அருகில் நின்றிருந்தனர். வேறும் பலர் இந்த இடைநேரத்தில் வந்து விட்டிருந்தனர். வேலு, மஞ்சுவைக் கண்டவுடன் கூட்டம் சிலிர்த்தது. உணர்ச்சி வசப்பட்டது. அது அந்த நேரத்தில் காங்கேசன்துறையில் ஒரு முற்போக்குத் திருமணம். அதனை ஏற்றுக்கொள்ள முடியாத மஞ்சுவின் அப்பாவின் இதயம் நின்று போய்விட்டதும், புதிய கூட்டுறவுத் தொழிற்சாலையைக் கொண்டு நடத்த முடியாத புறச்சூழலில் இவர்கள் இங்கிலாந்து போய்ச் சேர்ந்ததும் நீண்ட நெடுங்கதை. அது காங்கேசன்துறை மக்களுக்குத் தெரியும்.

படகு மூலம் அகதியாக அந்தரித்து இந்தியா போய்ச் சேர்ந்த சரஸ்வதி குடும்பம் இப்போது இங்கு மீண்டும் நிரந்தரமாகக் குடியேற அனுமதி பெற்று யு.என் உதவியுடன் வந்து சேர்ந்திருக்கிறது. மகனுடைய குடும்பம், மகளுடைய குடும்பம் என்று சரஸ்வதியைச் சுற்றிப் பலர் காணப்படுகிறார்கள். தனது எழுபத்து மூன்று வருட வாழ்வு அநுபவத்துடன் சரஸ்வதி விஜயராஜா எல்லோரையும் பார்த்துச் சிரிக்கிறாள். அதில் சோகம் ஒன்று ஆழமாக ஜரிகை கட்டி நிற்பது தெரிகிறது.

ஊறணி அந்தோனியார் ஆலயத்தில் முன்னர் அடிக்கடி எல்லோரையும் சந்திக்கும் மேரி, இப்போது கம்பீரமான ஐம்பது வயது டொக்டர் மேரியாகச் சரியாக ஒன்பது மணிக்கு உள்ளே வருகிறாள். தலை வெட்டும் உடை நேர்த்தியும் அவள் வளர்ச்சி அடைந்த நாடொன்றில் வாழ்வதை உறுதி செய்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் மிகச் சிறப்பாகச் சித்தியடைந்த மேரி, மிகக் குறுகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திற்குள்ளேயே, 'ஸ்கில்ட் மைகிரேசன்' மூலம் அவுஸ்திரேலியா போய்விட்டாள். இப்போதும் நியூ சவுத் வேல்ஸ் கம்பல்ரவுண் பொது வைத்தியசாலையில் பணியாற்றுகிறாள்.

அவுஸ்திரேலியாயில் இருந்து ஒரு வைத்தியர் வந்திருக்கிறார் என்ற விளக்கத்தோடு எல்லோரும் எழுந்து அவளுக்கு மரியாதை கொடுத்த நிலையில், உயிரோட்டத்துடன் விளங்கிய ஒரு சூழலில் தான் நடைப்பிணம் போல் நுழைந்ததாய் அவள் தனக்குள் உணர்ந்தாள். திருமணக் கனவை அவள் சுத்தமாக மறந்துபோய்க் கனகாலம் ஆகிவிட்டது. அவுஸ்திரேலியாவில் தனியே வாழ்வது என்பது ஒன்றும் பெரிய பிரச்சினையில்லை. என்றாலும் பிரச்சினைதான்!

ஊசியின் முனை நுழையக் கூடிய ஒவ்வொரு நாட்டையும் தேடித்தேடிப் போய் வாழ்ந்து கொண்டிருந்த காங்கேசன்துறை மக்கள் பலரும் ஒன்பது மணிக்குப் பிறகும் வந்து கொண்டிருந்தார்கள். "காங்கேசன்துறை விட்டாச்சாம்" என்பது பாரிஸின் ஈபிள் கோபுரத்துக்கு உரிமை கொண்டுவிட்ட மகிழ்வை அவர்களுக்குக் கொடுத்திருந்தது.

சரியாக ஒன்பது மணிக்கே கல்யாணி நிகழ்வுகளை ஆரம்பித்து விட்டாள். கல்லூரிக் கீதத்தைப் பாடசாலை மாணவர்கள் இருவர் பாடினர். அடுத்த நிகழ்வு, "உற்றுக் கேட்டலும் ஒத்துணர்வு வழங்கலும்" என்று கல்யாணி அறிவிப்புச் செய்தாள். "உங்களுக்கு மனதுக்குப் பிடித்தமான ஒருவரோடு நீங்கள் சோடி சேரலாம். இருவரும் இந்தப் பாடசாலையில் ஏதோ ஓர் இடத்தில் இரண்டு கதிரைகளில் அமரலாம். இந்த நீண்ட.... நீண்ட காலத்தின் மன உணர்வுகளை மனம் திறந்து பேசலாம். ஒருவர் பேசும்போது மற்றவர் உற்றுக் கேட்டு ஒத்துணர்வுப் பதில் வழங்க வேண்டும். ஒருவர் தன் மனதைக் கொட்ட அரைமணி நேரம் எடுக்கலாம். பிறகு, அடுத்த அரைமணி நேரத்தில் மற்றவர் சொல்ல முந்தியவர் உற்றுக்கேட்டு ஒத்துணர்வுப் பதில் வழங்கவேண்டும். சரியாகப் பத்து மணிக்குக் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் இந்த இடத்தில் கூடுவோம்".

எல்லோரும் தங்களுக்குப் பிடித்த சோடியுடன் விலகிவிடக் கல்யாணியும் பூரணியும் தவிர்க்க முடியாத சோடிகளாயினர்.

கல்யாணிக்கும் பூரணிக்கும் இடையில் 'ஈமெயில்' தொடர்பு இருப்பதால், கல்யாணி சிவநேசனை முறைப்படி திருமணம் செய்து கொண்டதும், அவளது பராமரிப்பில் இருந்த மூன்று முதியவர்களையும் வீட்டிலேயே வைத்துப் பராமரித்து அவர்களின் அமைதியான மரணத்திற்கு உதவியதும் பூரணிக்குத் தெரியும்.

ரஞ்சனி தமது காணிக்குள் வீடு கட்டிச் சென்று ஒரு பெண் தலைமைத்துவக் குடும்பத்திற்கான மாதிரியாகித் தனது இளைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களைப் படிப்பித்து நல்ல நிலைக்கு ஆக்குவதிலும் கல்யாணி வழி காட்டியிருந்தாள்.

"உலகத்தின் பிரஜைகள்" ஆகி ஒரு விஸ்தாரமான போர்வையுடன் வந்திருக்கும் காங்கேசன்துறையார் இனி என்ன செய்யப் போகிறார்கள் என்பது பற்றியே இருவரும் பேசினார்கள். உயிரூட்டும் சூரியனும் உவகையூட்டும் சந்திரனும் எல்லா நாட்டிலும் இருந்தாலும் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜேர்மனி இப்படி வளர்ச்சி அடைந்த நாடுகளில் இருந்து வருபவர்களிடம் இப்போது ஒரு வீம்பு - தன்னம்பிக்கையில் பிறந்த வீம்பு - ஸ்பஷ்டமாகத் தெரியாமல் இருக்கலாம். இலங்கையில் இன்னும் இருப்பவர்களிடம் அல்லது இந்தியாவில் இருந்து வருபவர்களிடம் அவர்கள் ஓர் அர்த்தமில்லாத அநுதாபம் காட்டப்பார்க்கலாம். கல்யாணியின் மருத்துவ, உளவியல் அறிவும், சிவநேசனின் அரசியல், ஊடக அறிவும் இந்த ஒன்று கூடலை அர்த்தமுள்ளதாக்கப் பயன்பட வேண்டும் என்று பூரணி வலியுறுத் தினாள்.

காங்கேசன்துறை இப்போது இருக்கும் நிலையைப் பார்த்து யாரும் துவண்டுவிடக் கூடாது என்பதை மட்டும் சொல்லி மீண்டும் பத்து மணிக்கு அவர்களை மண்டபத்துக்கு அழைத்தாள் கல்யாணி. அன்றைய தேநீர், மதிய உணவு ஆகியவற்றுக்கான செலவைத் தானே ஏற்றுக்கொள்வதாக மேரி அறிவித்தபோது மகாவலிநீர் யாழ்ப்பாணம் வந்துவிட்ட மகிழ்ச்சி எல்லோருக்கும்.

'மாசு இருக்கும் உலகிலே காசு இருப்பதிலும் பயனில்லை' என்பது மேரிக்கு மட்டும் தெரியும். கொஞ்சம் ஆறிப்போயிருந்த தழும்புகளை மறுபடியும் கீறிக்கொண்டு... அதேநேரம் ஆறும் என்ற ஆறுதலுடன் எல்லோரும் மெது மெதுவாய் மண்டபத்தை அடைந்தனர். பால் அருந்தினர்.

சிலரின் கண்களில் கண்ணீர் சுரந்து விளிம்பு கட்டி நின்றதைக் கல்யாணி அவதானித்தாள். எல்லோரையும் சப்பாணிகொட்டி, நிலத்தில் அமர வைத்து, ஆழமான சுவாசத்தில் ஈடுபட வைத்தாள். தொடர்ந்து,

"எங்களின் எண்ணம் மேலே செல்ல

பொங்கிடும் மகிழ்வு வருகிறது"

என்ற உச்சாடனத்தை மெதுவாகச் சொல்ல வைத்தாள்.

அதன் பிறகு, "உலகின் பல்வேறு நாடுகளிலும் பொதுவாகத் தமிழர் வாழ்வு எப்படி இருக்கிறது?" என்ற தலைப்பில் ஒரு பொதுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னாள் விரிவுரையாளர் சரஸ்வதி விஜயராஜா தலைமை ஏற்றார். பலரும் காத்திரமான கருத்துக்களை முன்வைத்தனர். நிறைவாக, "பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதில் தமிழர் கவனம் செலுத்தி ஓரளவு வெற்றி பெற்று, இங்குள்ள தமது உறவுகளைக் கவனித்தபோதும் எல்லோரும் ஒரு கலாசார அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர்" என்ற பொதுவான முடிவை அவர் தொகுத்துக் கூறி நிறைவு செய்ய எல்லோரும் மதிய உணவுக்கு ஆயத்தமாயினர்.

மாலை இரண்டு மணிக்குச் சந்தடி மிகுந்த சூழ்நிலை மீண்டும் அமைதி கண்டது.

காலை நேரக் கலந்துரையாடலுக்குக் கனதி சேர்த்த சரஸ்வதிக்கும், மதிய உணவுக்கு உபயம் எடுத்த மேரிக்கும் நன்றி கூறிய நளாயினி, வளர்ச்சி அடைந்த நாடுகளில் எம்மவர் காணும் வசதியான வாழ்க்கையின் பின்னால் மொழி மெல்ல மெல்ல அழிந்து வருவதையும், மொழி அழியும்போது இனம் அழியும் என்பதையும் மட்டும் சுட்டிக்காட்டி அடுத்த நிகழ்வுக்குச் சென்றாள்.

மதிய உணவின் பின் நித்திரை வராதிருப்பதற்காக, - பிரத்தியேக ருசியுடன் வடையும் பாயசமும் கொண்ட வாழையிலை உணவு - வேலுவின் வழிகாட்டலில் எல்லோரும் "வெயில் எறிக்கிறது" என்ற அரங்க விளையாட்டில் ஈடுபட்டனர். ஒரு பத்து நிமிடம்!

திரும்பவும் கல்யாணியின் பொறுப்பில் வந்தது சபை. காலையில் நடைபெற்ற சோடிகளின் கலந்துரையாடலின் பின்புலத்தில் ஒவ்வொருவரும் தமது இப்போதைய முக்கியத்துவம் பெறும் உணர்வுக்குப் பின்னால், அடிக்கடி மனதில் வந்து போகும் மறை எண்ணங்களை அடையாளங்கண்டு, ஒரு கடதாசியில் குறிக்குமாறு கேட்டுக்கொண்டாள்.

அவர்கள் அதைச் செய்யும்போது சிலர் முகத்தில் 'கைத்த சிரிப்பு' காணப்பட்டது. அவசரமாய் வந்தும் ரெயினைத் தவறவிட்ட முகம் சிலரிடம்! சிலரது முகத்தில் துப்புரவாகவே உணர்ச்சி தொலைந்திருந்தது. அவர்கள் எழுதி முடித்த கடதாசித் துண்டுகள் பெயர் இன்றியே அவளது கைக்கு மாறின.

மேலோட்டமாகப் பார்த்த இடத்தில் எல்லாரிடமும் ஒரு போதாமை வெளிப்பட்டது. "எவ்வளவோ விஷயங்களை இழந்திட்டம்", "இனிமேலும் தாங்க ஏலாது", "பழைய சந்தோஷமான காங்கேசன்துறை வரவேணும்", "நிலைமை மோசம்" இப்படியான வசனங்கள் கல்யாணியின் கண்களில் பட்டது.

தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில், அடுத்து வரும் சில தினங்களில் இவர்கள் அனைவரும் உள ஆரோக்கியம் தொடர்பான அறிகை முறைமைகள், ஏற்றுக்கொண்டு உன்னிப்பாயிருத்தல் முறைமைகள் தெரிந்த உளவளத் துணையார்களுடன் சேர்ந்து இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திப்பைத் தொடர்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இங்கே கண்ணாடித் தொழிற்சாலையைக் கைவிட்டு இங்கிலாந்தில் "சுப்பர் மாக்கற்" ஒன்றை நடத்துகிற வேலு, மஞ்சு தம்பதிகளே இந்த ஆலோசனைக்கு மிகவும் உற்சாகமான ஆதரவு கொடுத்தனர்.

காயப்பட்ட இருதயங்களைத் தடவிக் கொண்டு அனைவரும் மாலைத் தேநீர் அருந்தினர். காங்கேசன்துறையின் தென்னைமரத் தோப்புக்குள்ளே பார்த்த ஞாபகங்கள், மாமரத் தோப்புக்குள்ளே மண் விளையாடிய நினைவுகள், வெளிச்ச வீட்டைச் சுற்றி ஓடிய எண்ணங்கள் சுற்றிச் சுற்றி எண்ணச் சுழல் நிர்ப்பந்தமாய் வந்து போக, அந்தச் சூழல் முழுவதும் மாறிப்போய்விட்ட துன்பம் இயல்புக்கு மாறான கொடுமையாய்த் தென்பட, மாலையில் எல்லோரும் விடை பெற்றுத் தங்கள் தற்காலிகக் கூடாரங்களுக்குத் திரும்பினர்.

அடுத்து வந்த நாட்களின் சந்திப்புக்களில் அநேகமாக எல்லாரும் சிரத்தை எடுத்துக் கலந்துகொண்டனர். 'றிற்றேண் ரிக்கற்' நாள் வரை இந்தச் சந்திப்புகள் தொடர்ந்தன. வேலு, மஞ்சு தம்பதிகள், பூரணி என்று வளர்ச்சி அடைந்த நாடு எல்லாம் செலவுகளைப் பொறுப்பு எடுத்துக் கொண்டன.

பூரணியின் மகனுடைய திருமணத்திற்கு எல்லோரும் போய் ஆசீர்வாதம் வழங்கினர்.

மறை எண்ணங்களை மாற்றி அமைப்பதிலும், பரவலாக்கம் செய்வதிலும், கடந்த காலத்தையும் மாற்ற முடியாத விடயங்களையும் ஏற்றுக் கொள்வதிலும், விழுமியப் பண்பு கொண்ட எதிர்கால இலக்குகளைத் தீர்மானிப்பதிலும் இவர்களுடன் இணைந்து கொண்ட சில உளவளத் துணையாளர்கள் பெரிதும் உதவினர்.

ஒவ்வொருவரும் தமது வாழ்வின் 'கொடுப்பனவு'களை அட்டவணைப் படுத்திக் கொண்டனர். தமக்கு விருப்பமானவர்களுடன் பரிமாறிக் கொண்டனர். எல்லோரையும் விட அதிகமாக, இங்கே வாழும் கல்யாணி நூற்று அறுபத்தொரு 'கொடுப்பனவு'களைக் குறித்திருந்தாள்.

"வீட்டிலே தைப்பொங்கல் பொங்க முற்றம் இருக்கிறது", "எமது வீட்டு வளவின் வாழைப்பழங்கள், கொய்யாப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகியவை 'தூய பழங்களாக' எமது வீட்டின் பழத்தேவையைப் பூர்த்தி செய்கின்றன" என்பது போலக் கல்யாணி குறித்திருந்த விடயங்கள் அடுக்குமாடியில் ஏழாவது அடுக்கில் வாழும் பூரணியைச் சிந்திக்க வைத்தது.

ஒருநாள் கலந்துரையாடலுக்கு நன்றியுரை கூறிய ரம்யன், "போதை இழுக்க இழுக்க இன்பம் முதலில், வலிக்க வலிக்க மரணம் முடிவில் என்று உணர்ந்து போதையை முற்றாக விட்டுவிட்ட நான் 'ஏஏ' குழுவுக்கு இங்கே தலைமை தாங்கப் போகிறேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு நாள் தொகுப்புரை வழங்கிய ராஜி, "மாசும் தூசும்தான் நாசம் நமக்கு. மாசற்ற மனம் எனக்குள் ஏற்படுத்தல் "மாசற்ற வளி வெளியே உண்டாக்குதல் இவை எமது கூட்டு இலக்கு ஆக வேண்டும்" என்றாள். 'சீர் கேட்டுச் சீர் கெடுவதில்லை' என்பது எனது இலக்கு என்று மற்றொரு நாள் குறிப்பிட்டார் கண்களில் சதா எட்டிப்பார்க்கும் குறும்புடன் காணப்படும் மனோ - ரஞ்சனியின் கடைசித் தம்பி, அவர் பல்கலைக்கழகம் ஒன்றில் உதவிப் பதிவாளராகப் பணி புரிகிறார்.

இது கடைசி நாள் கலந்துரையாடல்!

நாளைக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜேர்மனி, பிரான்ஸ் எல்லாம் புறப்படும் நாள். இன்றைய நிறைவுரை, முகத்தில் அலாதியான கம்பீரமும் கண்ணியமும் கொண்ட புதுமாப்பிள்ளை, பூரணியின் மகன், புனிதனால் நிகழ்த்தப்படுகிறது. சங்கீதக் குரலும், சந்தன மேனியும் கொண்ட, வெளிநாட்டு மாப்பிள்ளையின் உல்லாச வாழ்க்கைக்காய் உவந்து மணம் புரிந்த புதுப்பெண் அருகிருக்க, அவன் கூறுகிறான், "நாங்கள் எல்லோருமாய் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். நாளைக்கு நாங்கள் போகிறோம். ஆயினும் இரட்டைப் பிரஜாவுரிமை எடுத்துக் கொண்டு திரும்பி வரப்போகிறோம். எல்லோரும் காங்கேசன்துறையில் எங்கள் உரிமைக் காணியில் குடியிருக்கப் போகிறோம். உலகத்தைத் தரிசித்த எங்களை இனிக் காங்கேசன்துறை தரிசிக்கப் போகிறது...".

குரலில் எவ்வித தயக்கமும் இன்றி வைரத்தால் கண்ணாடியை அறுப்பது போன்ற பிசிறற்ற தொனியில் பேசினான் அவன்.

தனது வயதையும் அந்தஸ்தையும் மறந்து மேடைக்கு ஏறிய மேரி, புனிதனுக்குக் கை கொடுத்தாள். "மகத்தான லட்சியம் இல்லாமல் தனிய வாழுற வாழ்க்கை அர்த்தமில்லாத வீண்" என்று புரிந்து கொண்ட நான் உங்கடை முன் மொழிவை வழி மொழிகிறேன்" என்றாள்.

மனதில் ஒரு சுபீட்சத்துடன் மனிதர்கள் விலகினர். விழிகளின் தீட்சண்யம்... கண்கள் கூசுமா?

நதி எங்கே போகிறது? கடலைத் தே...!

???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனவளக் கலை பற்றி அறிவதற்கு உண்மையிலேயே தம் ஆன்மாவை அதில் லயிக்க விட்டவர்களுக்கு மட்டுமே முடியும்.

ஒரு குறுநாவல் தொகுப்பிற்கும், உளவளத் துறைக்கும் என்ன தொடர்பு என நீங்கள் யோசிக்கின்றீர்கள். தொடர்பு இருக்கிறது. அதுதான் இந்தக் குறுநாவல்களை உருவாக்கி உயிர் கொடுத்த கோகிலா மகேந்திரனின் ஆளுமை.

தாட்சாயணி

ISBN 978-955-7973-06-7

9 789557 973067

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org